
# செல்வா சிலை மலர்



தந்தை செல்வா திருவுருவச்சிலை நிர்மாணிப்புக்குழு

மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வா சிலை மலர்

**தந்தை. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களது சிலை திறப்பு விழாவினையொட்டி வெளிவரும்**

## சிறப்புமலர் –2018

வெளியீடு :

தந்தை செல்வா திருவுருவச்சிலை நிர்மாணிப்புக்குழு,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title : Selva Silai Malar

Edition : 2018

Publication : Thanthai Selva
Statue Commuttee,
Batticaloa

Design : T.Shankar
Wanasinghe Printers

Printing : Wanasinghe Printers
496A, Trinco Road,
Batticaloa
T.P. 065 2227170

தலைப்பு : செல்வா சிலை மலர்

பதிப்பு : 2018

வெளியீடு : தந்தை செல்வா
திருவுருவச்சிலை
நிர்மாணிப்புக்குழு

வடிவமைப்பு : த. சங்கர்
வணசிங்கா பிரிண்டர்ஸ்,

அச்சுப்பதிப்பு : வணசிங்கா பிரிண்டர்ஸ்,
496A, திருமலை வீதி,
மட்டக்களப்பு
தொ.பே. 065 2227170



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆரம்ப கர்த்தா

# அமரர் "தந்தை" எஸ்.ஜே.வி செல்வநாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...


வாழ்த்துரைகள்

| | | |
|---|---|---|
| » | இரா. சம்பந்தன் | 5 |
| » | மாவை சேனாதிராசா | 10 |
| » | கி. துரைராசசிங்கம் | 12 |
| » | பொன். செல்வராசா | 15 |
| » | எம்.ஏ. சுமந்திரன் | 17 |
| » | ஞா. சிறிநேசன் | 18 |
| » | சீ. யோகேஸ்வரன் | 20 |
| » | தி. சரவணபவன் | 21 |

ஆக்கங்கள்

| | | |
|---|---|---|
| » | மலர்க் குழுவின் மனத்திரையில் | 23 |
| » | ஏற்பாட்டுக் குழுக்கள் | 25 |
| » | தந்தை படம் | 26 |
| » | நான் கண்ட தந்தை | 27 |
| » | மட்டக்களப்பு பிரதேச தேசியக் கவிஞர் | 42 |
| » | தந்தை வெளிப்படுத்திய முதுசொம் | 46 |
| » | இலங்கை அரசியலில் தந்தை செல்வா | 49 |
| » | தந்தை செல்வாவின் தீர்க்க தரிசனமிக்க அரசியல் ஞானமும் இன்றைய அரசியல்வாதிகளும் | 56 |
| » | நடந்தது என்ன | 61 |
| » | இப்படியும் ஒரு மனிதரா? | 65 |
| » | அன்று தந்தை செல்வா நேற்று தலைவர் பிரபாகரன் - இன்று சம்பந்தன் ஐயா | 69 |
| » | தந்தை செல்வாவின் சமூகநோக்கு | 74 |
| » | தந்தை செல்வா எதிர்கொண்ட சோதனைகள் | 81 |
| » | தந்தை செல்வாவின் ஒப்பந்தங்களும் அதன் வழிவந்த உத்தேச இடைக்கால அரசியலமைப்பு முன்மொழிவின் சமஷ்டி பண்புகளும் | 86 |
| » | ஒரு வழிப்பாதை | 96 |
| » | தந்தை செல்வா வழியில் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் | 97 |
| » | தந்தையே உன் பணி வாழ்க | 102 |
| » | இலங்கையின் ஒப்பற்ற தலைவர் தந்தை செல்வா | 103 |
| » | தந்தை செல்வா ஒரு தீர்க்கதரிசி | 107 |
| » | பாடசாலை மட்டப்போட்டிகளது விபரங்கள் | 111 |
| » | தந்தை செல்வா வழியில் நாம் | 113 |
| » | நன்றிகள் | 114 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆரம்ப கர்த்தா அமரர் 'தந்தை' எஸ்.ஜே.வி செல்வநாயகம் அவர்களை நினைவு கூரும் வகையில் மட்டக்களப்பில் நிறுவப்பட்டுள்ள அன்னாரின் உருவச்சிலை திறப்பு விழாவுக்காகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், இலங்கைப் பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவரும், திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமாகிய

# கௌரவ இரா.சம்பந்தன் அவர்கள் வழங்கும்

# ஆசிச்செய்தி



இலங்கையின் கிழக்கில் மட்டக்களப்பு வாழ் மக்களால் தமிழ் மக்கள் தலைவர், 'தந்தை' உயர்திரு.எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களது உருவச்சிலை திறந்துவைக்கப்படும் நிகழ்வை முன்னிட்டு இந்த ஆசிச் செய்தியை வழங்குவதில் மிகுந்த மகிழ்வும் பெருமையும் அடைகின்றேன்.

இலங்கைத்தீவின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களால் மட்டுமல்லாது ஏனைய சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களாலும் உலகின் பல பாகங்களிலும் பரந்துவாழும் தமிழ்பேசும் மக்களாலும் நன்கு அறியப்பட்டவரும், மதிக்கப்பட்டவரும், நேசிக்கப்பட்டவருமான மறைந்த தலைவர் உயர்திரு எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள். இலங்கையின் அண்மைக்கால அரசியல் வரலாற்றிலும், தமிழ்பேசும் மக்களின் உரிமைப் போராட்ட வரலாற்றிலும் மிகவும் உயர்ந்த இடத்தில் வைத்துப் பேசப்படும் ஒரு மகா புருஷராவார். இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்பிருந்தே தமிழ்பேசும் மக்களின் அரசியல் உரிமைகளில் அக்கறைகாட்டிச் செயற்பட்டுவந்த அவரின் அரசியல் சகாப்தம் 1949ல் அவர் இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்துத் தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தை முன்னின்று வழிநடாத்திச் செல்ல ஆரம்பித்த காலந்தொடக்கம் மக்களால் நன்கு அறியப்பட்ட ஒன்றாகும். ஒரு சட்டவாதியாகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்த அவர் இலங்கைத் தமிழ்பேசும் மக்களுக்கான அரசியல், கலாசாரம், பொருளாதாரம், வாழ்நிலம் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட உரிமைப்பிரச்சினைகளை முன்வைத்துப் பல போராட்டங்களையும், அரசியல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு அவற்றிற்கான தீர்வுகளைப் பெறுவதில் உறுதியுடனும், உணர்வுடனும், தீர்க்கதரிசனத்துடனும் செயற்பட்ட உன்னத தலைவராவார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி வடக்கில் தோற்றம் பெற்றாலும் கிழக்கில் வாழும் தமிழ்பேசும் மக்களையும் அரவணைத்துக்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொண்டு உரிமைப் போராட்டத்தை உத்வேகத்துடன் முன்னெடுத்துச் செல்வதற்காக அன்று கிழக்கில் வாழ்ந்த தலைவர்களாகிய திருவாளர்கள் என்.ஆர்.இராஜவரோதயம் (திருமலை) பொ. மாணிக்கவாசகம் (கல்குடா), செ.இராசதுரை (மட்டக்களப்பு), சி.மு.இராசமாணிக்கம் (பட்டிருப்பு), 'அறப்போர்' அரியநாயகம் (பொத்துவில்) ஆகியோரையும் மற்றும் பல முஸ்லிம் தலைவர்களையும் தமிழரசுக் கட்சியுடன் இணைந்துக் கொண்டு செயற்பட்டார். அவரின் செயற்பாடுகளாலும், கருத்துக்களாலும் உரிமைப் போராட்டங்களாலும் கவரப்பட்ட நானும் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து அவருக்கு வேண்டிய ஆதரவைக் கொடுத்து வந்தேன்.

1950க்கு முன்பிருந்தே தோன்றிய எமது உரிமைப் போராட்டம் இன்றுவரை இறுதித் தீர்வின்றித் தொடர்கின்றது. எவ்வாறாயினும், தம்மை வழிநடாத்திய தலைவர் தந்தை செல்வா அவர்கள் மறைந்து பல ஆண்டுகள் கடந்துவிட்டாலும், அவர்மீது மட்டக்களப்பு மக்கள் கொண்டிருந்த மதிப்பும், அன்பும் காரணமாக அவருக்குச் சிலைவடித்து அவரை நினைவு கூர்வது பாராட்டப்படக் கூடியதும் காலத்துக்குப் பொருத்தமானதுமாகும். தமிழ்மக்கள் செறிந்து வாழும் பல பிரதேசங்களில் மக்கள் அவருக்குச் சிலை நிறுவி நினைவுகூர்ந்து வருகின்ற போதும், மட்டக்களப்பில் அவருக்குச் சிலை நிறுவும் செயற்பாடுகள் கடந்தகாலக் கலவரச் சூழ்நிலைகளால் தாமதமாகினாலும் இன்று அந்நிகழ்வு நிறைவேறுவது தமிழ் மக்களுக்கு மன நிறைவைத் தருவதாகும். இந்நிகழ்வு இனிதே நிறைவுபெற வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து எனது நல்லாசிகளையும், வாழ்த்துக் களையும் தெரிவிக்கின்றேன்.

அமரரின் நினைவுச் சிலையை நிறுவுவதில் அக்கறைகாட்டி அனுசரணை வழங்கிய அனைவர்க்கும், தந்தை செல்வா அவர்களின் வழிநின்று தமிழ் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவன் என்ற வகையில் எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி.

**இரா.சம்பந்தன்,** பா.உ

தலைவர் – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மற்றும்

பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும்
யாழ் - மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான

## கௌரவ மாவை. சோ.சேனாதிராசா அவர்களது

# வாழ்த்துச்செய்தி



**ஈழத்துக் காந்தி தந்தைசெல்வா சான்றோர் எனக் கேட்ட தமிழ்த்தாய்**

இலங்கைத் தீவுக்கு 1948ல் சுதந்திரம் கிடைத்தது. அந்தச் சுதந்திரம் இன்றுவரை தமிழ்ப் பேசும் மக்களுக்கு, தமிழனத்துக்குக் கிடைக்கவில்லை. அக்காலக்கட்டத்திலிருந்து தான் அரசியல் வரலாற்றில் தமிழர் வாழ்வில் ஒரு விடிவெள்ளியாக, கலங்கரை விளக்காகத் திரு.சா.ஜே.வே.செல்வநாயகம் விளங்கினார்.

1948 இறுதியில் இலங்கைப் பாராளுமன்றத்தில் இலங்கை இந்தியக் குடியுரிமைச் சட்டத்திற்கான பிரரேரணை அரசினால் முன்வைக்கப்பட்டது. 'அச்சட்டம் நிறைவேறுமானால் தமிழர்கள் பலம் வீழ்ச்சியுறும்: குறிப்பாக எட்டு இலட்சம் இந்திய இலங்கைத்தமிழ் மக்களின் வாக்குரிமையும் பிரதிநிதித்துவமும் பறிக்கப்படும், அடுத்து இலங்கையில் தமிழரின் மொழியுரிமையும் பறிக்கப்படும் ஆதலினால் இலங்கை இந்தியக் குடியுரிமைச் சட்டத்தை இப்பொழுதே எதிர்க்க வேண்டும்:' எனப் பாராளுமன்றத்திலே திரு.செல்வநாயகம் குரல் கொடுத்தார். எதிர்த்து நின்றார். அப்பொழுது அவர் அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் துணைத் தலைவராயிருந்தார். திரு.ஜீ.ஜீ. பொன்னம்பலம் இலங்கை இந்தியக் குடியுரிமைச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்தார். அமைச்சராயிருந்தார். இதனால் காங்கிரசிலிருந்து திரு.செல்வநாயகம் வெளியேறினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியை 1949 மார்கழி 19ல் ஆரம்பித்தார். 1956 ஆம் ஆண்டில் தனிச்சிங்களம் அரச கரும மொழியாகப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதற்கெதிராகச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தார். அப்பொழுதிலிருந்து திரு.செல்வநாயகத்தை மக்கள் 'தீர்க்கதரிசி' என அழைக்க ஆரம்பித்தனர். 1951லும் 1956லும் திருகோணமலையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சி மாநாடுகளில் தந்தைசெல்வா தலைமையில் நிறைவேற்றிய தீர்மானங்கள், இலங்கையில் சிங்களப் பேரினவாதத்தின் எழுச்சியையும், வடிவத்தையும், தீவிரத்தையும் வெளிப்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டின. அதற்கு எதிரான ஜனநாயக மற்றும் அஹிம்சை அறவழிப் போராட்டங்களையும் நடத்தி வந்தார். மக்கள் 'தந்தைசெல்வா' என்று அன்போடும், உணர்வோடும், பற்றோடும் அழைத்தனர்.

தந்தை செல்வநாயகம் தமிழரசுக்கட்சியின் முதலாவது மாநாட்டிலேயே தமிழ் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை உரித்துள்ளது போல முஸ்லீம் மக்களுக்கும் உரித்து உண்டு என்று கூறினார். வடக்கு கிழக்கு மாநிலம் தமிழ் மக்களினதும் முஸ்லீம் மக்களினதும் பாரம்பரிய வாழ்விடங்கள், தாயகம் என்றுரைத்தார். 1956 திருமலை மாநாட்டில், இலங்கைச் சமஷ்டி அரசில் 'ஓர் சுயாட்சித் தமிழரசு' என்றிருந்த கட்சியின் நோக்கத்தை 'சுயாட்சித் தமிழரசும், முஸ்லீம் அரசும்' என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. தமிழரசுக் கட்சியில் பெருமளவில் முஸ்லீம்கள் இணைந்தனர். பாராளுமன்றப் பிரதிநிதிகளாகவும், 'செனட்டர்'களாகவும் பொறுப்பு வகித்தனர். 1961 சத்தியாக்கிரகப் போராட்டங்களில் பெருமளவு முஸ்லீம் மக்கள் பங்கு பற்றினர்.

1956ஆம் ஆண்டு கொழும்பில் பாராளுமன்றுமுன் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டம் முதலில் நடைபெற்றது. சிங்களத் தீவிரவாதிகளின் வன்முறையால் தமிழர் இரத்தம் சிந்தப்பட்டது. 1961 சத்தியாக்கிரகப் போராட்டத்தால் இலங்கை அரசு நிர்வாகம் நான்கு மாதங்களுக்கு மேல் வடக்குக் கிழக்கில் நடைபெறவில்லை. அச்சத்தியாக்கிரகப் போராட்டம் அவசரகாலச் சட்டத்தினால், இராணுவ வன்முறையினால் நிறுத்தப்பட்டுத் தந்தை செல்வா உட்பட நூற்றுக்கணக்கானோர் இராணுவ சிறையில் அடைக்கப்பட்டனர். 1962ல் இலங்கைத் தொழிலாளர் கழகம் மன்னார் மாநாட்டுத் தீர்மானத்தின் படி மலையகத்தில் உருவாக்கப்பட்டது. ஆயிரக் கணக்கில் தொழிலாளர் இணைந்தனர். 1961 சத்தியாக்கிரகப் போராட்ட காலத்தில் ஆதரவாக மலையகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்களிலும் ஈடுபட்டிருந்தனர்.

1957 யூலை 26ல் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முன்னோடியாக பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் ஓர் இடைக்கால ஒழுங்கு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி,

1. பிராந்திய சபைகள் எல்லைகள் வரையறுக்கப்பட்டு சட்டத்திலேயே அட்டவணையாகச் சேர்க்கப்படும்,
2. வடமாகாணம் ஒரு பிராந்தியசபை, கிழக்கு மாகாணம் இரண்டு அல்லது கூடிய பிராந்திய சபைகள்,
3. பிராந்திய சபைகள் இரண்டு அல்லது மேற்பட்ட சபைகள் சேர்ந்து செயல்படவும், பிரிந்திருக்கவும் ஒழுங்கு.
4. பிராந்தியங்களுக்கான விடயங்கள், அதிகாரங்கள் வரையப்படும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

5. குடியேற்றத் திட்டங்களில் தமது அதிகார எல்லைக்குட்பட்ட குடியேற்றவாசிகளைத் தெரிவு செய்வதும் வேலைக்கு அமர்த்தப் படுவோரைத் தெரிவதும் பிராந்திய சபைகளிடமிருக்கும்.
6. பிராந்திய சபைகளுக்கு மத்திய அரசு மொத்தமாக நிதி வழங்கும்' என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அது போன்று 1965 'மார்ச்' 24ல் டட்லி - செல்வா உடன் படிக்கையில் முக்கியமாக குடியேற்றத் திட்டங்களில் காணி வழங்குவதில்

(அ) வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அம்மாகாணங்களிலுள்ள காணியற்றவர்களுக்கே வழங்கப்பட வேண்டும்.
(ஆ) இரண்டாவதாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ்ப்பேசும் மக்களுக்கே வழங்கப்பட வேண்டும்,
(இ) மூன்றாவதாக இலங்கையில் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ்ப்பேசும் இனத்தவர்களுக்கே முதலிடம் வழங்க வேண்டும்' என்று ஏற்பட்டமை முக்கியமான ஒரு இணக்கமாகும்.

1972 அப்போதைய அரசு ஓர் புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பொருட்டு பாராளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றியது. அச்சபைக்கு அரசியலமைப்பை உருவாக் கத்திற்கு எனத் தமிழரசுக் கட்சி சமஷ்டி அடிப்படையிலான மாதிரி அரசியலமைப்புத் திட்டத்தை முன் மொழிந்தது. 'இலங்கைச் சமஷ்டிக் குடியரசில் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களைக் கொண்ட மாநிலம் உட்பட்ட ஐந்து மாநிலங்களாக எல்லை வகுத்து அதிகாரங்கள் முழுமையாகப் பகிரப்பட வேண்டுமென்ற அடிப்படையில் அத்திட்டம் அமைந்தது. தந்தைசெல்வா தலைமையில் ஆராய்ந்து அந்தத் திட்டத்தை அப்பொழுது பாராளுமன்ற உறுப்பினராயிருந்த திரு. தர்மலிங்கம் அரசியல் நிர்ணய சபையில் சமர்ப்பித்தார். அப்பொழுது இருந்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. எதிர்த்தது.

1972 புதிய அரசியலமைப்பு தமிழர் கோரிக்கைகளை ஏற்கவில்லை என்பதால் தமிழரசுக் கட்சி சார்பில் தந்தை செல்வா தலைவர் என்ற முறையில் 1972 ஒக்டோபர் 2ல் காங்கேசன்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தார். அரசுக்குச் சவால்கள் விடுத்தார். 'இடைத் தேர்தலை நடத்துங்கள். உங்கள் புதிய அரசியலமைப்பைத் தமிழ் மக்கள் நிராகரிக்கிறார்கள் என்பதை நிரூபிப்போம்' என்று கூறிப் பதவியைத் துறந்தார். 1975ல் தான் இடைத்தேர்தல் நடந்தது. காங்கேசன்துறைத் தொகுதியில் 25000க்கும் அதிகமான வாக்குகளால் அரசு வேட்பாளரைத் தோற்கடித்து பெருவெற்றி பெற்றார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

1958ல் இலங்கையில் தமிழினத்திற்கெதிரான இனக்கலவரம். 1971லும் இனக்கலவரம். 1972ல் தந்தை செல்வா இந்தியா சென்றார். அரசியல், சமூகத் தலைவர்களைச் சந்தித்தார். இலங்கைத் தமிழரின் அடிமை நிலையை எடுத்துக்கூறி இனவிடுதலைக்கு உதவுமாறு கேட்டார். 1960ல் கொழும்பு வந்திருந்த பாரதப் பிரதமர் ஜவர்கலால் நேருவைப் சந்தித்துப் பேசும் சந்தர்ப்பத்தைப் பெற்றிருந்தார். 1976 ஆம் ஆண்டு தந்தை செல்வா தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டை மாநாடு நடைபெற்றது. திருவாளர்கள் தந்தை செல்வா ஜீ.ஜி.பொன்னம்பலம், மலையகத் தலைவர் தொண்டமான் மூவரும் தலைவர்களாகத் தெரிவு செய்யப்பெற்றனர். ஜீ.ஜி.பொன்னம்பலம் மாநாட்டில் பங்குபெற்றிருக்கவில்லை.

'தமிழ்த் தேசிய இனத்திற்குரித்தான இறைமையின் அடிப்படையில் ஐரோப்பியரிடம் போரில் இழந்த சுதந்திரத்தை மீட்பதற்குப் போராட வேண்டும், தமிழீழ சுதந்திர அரசை மீட்க வேண்டும்' என்று தீர்மானம் நிறைவேற்றியது அம்மாநாடு.

அதற்கு எதிராக அரசு ('Trial at Bar") 'ட்ரயல் அற் பார்' நீதிமன்றில் வழக்குத் தொடுத்தது. தமிழ்த் தேசிய இனத்திற்கு உரித்தான இறைமை உண்டென்றும், தமிழர் அரசை நிறுவும் உரிமையை நிரூபித்தும் தந்தை செல்வநாயகம் தலைமையில் திருவாளர்கள் ஜீ.ஜி, மு.திருச்செல்வம் முதலான 67 வழக்கறிஞர் சட்டவாதம் செய்தனர். அந்த சிறப்பு நீதிமன்றம், 'தமிழர் தரப்பு வாதங்களுக்குத் தீர்ப்பு வழங்கும் சட்ட அதிகார வரம்பு தங்களுக்கு இல்லை' என்றது. இறுதியில் உச்ச நீதிமன்றத்தில் அரசு அவ்வழக்கை தொடர்ந்தது. ஆனாலும் வழக்கைத் திருப்பிப் பெற்றுவிட்டது அரசு.

1974ல் தமிழரசுக் கட்சி வெள்ளிவிழா கொழும்பு இராமகிருஸ்ணா மண்டபத்தில் பல்லாயிரம் மக்கள் மத்தியில் நடைபெற்றது. தந்தை செல்வாவுக்கு 'மூதறிஞர்' எனும் சான்றாண்மைப் பட்டம் சூட்டியது. தந்தை செல்வா உயிர் 1976 ஏப்ரல் 26ஆம் நாள் பிரிந்தது. அவர் எம்மிடம் விட்டுச் சென்ற உயில், 'தமிழ்த் தேசத்தின், தமிழ்ப் பேசும் மக்களின் விடுதலை, தம்மைத்தாமே ஆளும் உரிமை என்பது தான். அவர் ஆத்மா எம்மினத்துடன் வாழ்கிறது. தந்தை செல்வா 'பாகிற்சன்' (Pakistan) எனும் கொடிய நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். அந்நோயுடனும் சிங்களப் பேரினவாதத்துடனும் போராடினார். தன் வாழ்வின் இறுதி வரை நம் தமிழின விடுதலைக்காக, விடிவுக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துப் போராடினார்.

1950களில் தமிழரசுக் கட்சியின் தலைவரானார். வடக்கிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குத் தாயத்திலும் தந்தை செல்வாவை தம் தலைவனாக, மேய்பாளனாக ஏற்றுக்கொண்டபோது தான் தமிழினத்தின் தலைவனாக விளங்கினார் தந்தை செல்வா.

எனக்குப் பதினாறு வயது. பள்ளிக்கூட மாணவன். 1960ல் ஒரு நாள் எம்மூர் மேடையில் அவர் பேச்சைப் பலத்துப் பேசும் சந்தர்ப்பம். பின் அடுத்த கூட்டத்திற்குப் போகும்போது சொன்னார். 'நீர் அச்சொட்டாக எனது பேச்சைச் சொன்னீர்' என்று கூறியதை என் நெஞ்சில் கொண்டிருக்கிறேன். நான் சிறைகளிலிருந்து வெளியில் வருகின்ற சந்தர்ப்பங்களில் சந்திப்போம். மனதார வாழ்த்துவார். 1976ல் சிறையிருந்த இளைஞர்கள் கொழும்பில் உலகத் தலைவர்கள் அணி சேரா மாநாட்டுக்குச் செய்தி சொல்ல உண்ணாவிரதப் போர் முன்னெடுத்தனர். 21 நாட்கள் ஆகிய நிலையில் எமக்கு ஒரு கடிதம் அனுப்பினார் தந்தை செல்வா. 'நீங்கள் சிறையிருந்து உயிர்விட்டு விட வேண்டாம்.வெளியில் வந்து எம்மக்களோடிருந்து போராடுங்கள்' என்றார். அவை நெஞ்சில் நிறைந்தன. அவரின் ஆன்ம வேண்டுகோள் ஆத்மா எம்மை வழிநடத்துகிறது. தமிழர் தேசம் விடுதலை பெறவேண்டும். தமிழர் விடிவுற்று வாழ வேண்டும். தாமே தம்மை ஆளவேண்டும் என்பது தான் தந்தை செல்வாவின் உயிர் மூச்சு. நான் சிறையிலிருந்த காலத்தை விட ஏனைய காலமெல்லாம் தந்தை செல்வாவிடம் பழகினேன். அவருடன் அவர் செல்லும் இடங்களுக்குச் சென்றேன். கட்சிக் கூட்டங்களில் வாதிட்டிருக்கிறேன். இளைஞர் சமுதாயத்திலிருந்து தந்தை செல்வாவின் நெஞ்சில் ஓரிடத்தைப் பெற்றிருந்தேன்.

தந்தை செல்வாவுக்கு மலர் வெளியீடு உவகை தருகிறது. தமிழர் கிழக்குத் தாயத்தில், மட்டக்களப்பில் சிலை எடுக்கும் விழா மலருக்கு நாலுவரியில் வாழ்த்து அனுப்ப முடியவில்லை. நாலு பக்கம் முடியவில்லை. இருப்பினும் சில வரிகளாயினும் தந்தை செல்வா பற்றிச் சொல்லத் தந்த வாய்ப்புக்கு நன்றி.

**மாவை.சோ.சேனாதிராசா,** பா.உ

தலைவர்,

இலங்கைத் தமிழரசுக் கட்சி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும்
சிலைக் குழுத் தலைவருமான

# திரு. கி. துரைராசசிங்கம், அவர்களது

# செய்தி



தந்தை செல்வா. ஈழத்து தமிழர்களின் பெருந்தலைவர். அவருக்கு மட்டக்களப்பிலே திருவுருவச் சிலை. இத்தனை ஆண்டுகளின் பின்பா? என்பது இயல்பாகவே எழும் வினா. இருக்கட்டும், அப்படியொரு செயற்பாட்டைச் செய்ய எங்களுக்கு ஏற்பட்ட வாய்ப்பு மகிழ்ச்சிக்குரியதே.

சுதந்திர இலங்கை. இதிலே சுருங்கிக் கொண்டிருக்கின்ற சிறுபான்மை இனத்தினரின் உரிமைகள். அல்ல, அல்ல சிறுபான்மை ஆக்கப்பட்டோரின் என்று திருத்தி வாசிக்க வேண்டும். நாங்கள் தனியான அரசோடும், கொடியோடும், கோலோடும் வாழ்ந்தவர்கள். எங்கள் மறுபகுதியிலே இந்தத் தீவிலே மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட சிங்கள தேசங்கள் இருந்தன. தீவு முழுமையும் ஒரே ஆட்சியின் கீழ் ஆங்கிலேயரால் கொண்டு வரப்பட்டது.

கூடி வாழ்ந்தோம். உரிமைக்காக கூடிக் குரல் கொடுத்தோம். சுதந்திரத்தை அண்மிக்க அண்மிக்க பலருக்குக் குணம் மாறியது. பெரிது சிறிது பார்த்தார்கள். எண்ணிக்கையிலே தாங்கள் பெரிது என்றும் எனவே, பெரும்பான்மையினர் என்றும் கூறினார்கள். தொடர்ச்சியான நடவடிக்கைகளால் மண்டியிட வழிவகைகள் செய்தார்கள். மறுத்தோம் நாம். எங்கள் தலைவர்கள் எமக்கு வழிகாட்டினார்கள். அவ்வகையிலே சுதந்திர இலங்கையில் தமிழர் தம் சுதந்திரம் நோக்கி எம்மையெல்லாம் வழிநடத்தியவர் அமரர், மூதறிஞர், இராணி வழக்குரைஞர், சீமான் சா.ஜே.வே.செல்வநாயகம் அவர்கள். சகல தனது செயற்பாடுகளினாலும் ஈழத் தமிழரின் தந்தை என்ற இடத்தைப் பெற்றவர். அறவழியிலே உரிமை பெற அணி சேர்த்தவர். அவரும், அவரோடு இணைந்த முன்னணித் தலைவர்களும் உறுதியோடு உழைத்தார்கள். இதனால், தமிழ்த் தேசியத்தை நோக்கிய சிங்களப் பெருவெள்ளம் எங்களை வந்த வீச்சிலே அடித்துச் செல்ல முடியவில்லை. சத்தியாக்கிரகங்கள், சட்டமறுப்புகள், கடையடைப்புகள், ஒத்துழையாமை, புறக்கணிப்புகள் என்கின்ற சாத்வீக வழிகளிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இனம் அசையாத தன் இலக்கு நோக்கி நடந்து கொண்டிருந்தது. தந்தையின் தலைமையில் வழக்காடு மன்றத்தில் கூட நீதி கேட்டோம். வென்றோம். எனினும், பேரினவாதம் குரோதத்தை நீக்கிக் கொள்ளவில்லை. தொடர்ந்தும் அதே செயற்பாடுகள். பாக்கிங்சன் நோயோடு போராடிக் கொண்டே அறவழிப் போராட்டத்திற்கு தலைமை தாங்கிக் கொண்டிருந்தார் தந்தை. காலம் மேலும் அவரை அனுமதிக்கவில்லை. 1977 சித்திரை 26ல் அவர் இறையடி சேர்ந்தார். காட்சிகள் மாறின, கரைபுரண்டது சிங்களக் காட்டாறு. அது 2009 மே 18ல் முள்ளிவாய்க்காலில் ஓய்ந்தது. வீழ்த்தப்பட்டோம், என்றாலும் எழுந்தோம். தந்தையின் கொள்கைகளில் தடம் கண்டோம் தொடர்கின்றோம். அவரது கொள்கைகள், அவரது வழிமுறைகள், அவர் விட்டுச் சென்ற தலைமை எங்களை வழிநடத்துகின்து.

இத்தகைய பெருந்தலைவருக்கு எமது மட்டக்களப்பு மண்ணிலே திருவுருவச் சிலை நிறுவுகின்றோம். அந்த நினைவான மலர் இது. "செல்வா சிலை மலர்" ஆம், செல்வா சிலையாக மலர்ந்து நிற்கின்றார். இந்தச் சிலை ஒவ்வொரு தமிழனுக்கும் நீ யார் எனச் சொல்லும். அவனை வழிநடத்தும். தமிழித்தின் விடுதலைப் பயணத்திற்கு வழிகாட்டும், ஒளியூட்டும்.

இச்செயற்பாட்டைச் செய்து முடிக்க முன்நின்று உழைத்த செல்வா திருவுருவச் சிலை நிர்மானிப்புக் குழுவினருக்கு எனது நன்றிகள். கடமையுணர்வோடு வந்து திருவுருவச் சிலையைக் காட்சிப் படுத்திய பெருந்தலைவர் இலங்கைப் பாரளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் கௌரவ இரா.சம்மந்தன் ஐயா அவர்களுக்கு நன்றி. அவரோடு துணை வந்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் கௌரவ மாவை சோ.சேனாதிராசா அவர்களுக்கு நன்றி. சிலை நிறுவ இடம் தந்ததோடு, அதனைச் சிறப்புற நிறுவவும், இதன் பின்னரும் அமைவிடத்தை செப்பனிடவும் முன்வந்து உழைக்கின்ற மட்டக்களப்பு மாநகர முதல்வர் கௌரவ தி.சரவணபவான் அவர்களுக்கு நன்றி. மாநகரசபையின் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் நன்றி. இடத்திற்கான பிரதான அனுமதியை வழங்கிய வீதிப் போக்குவரத்து முன்னாள் அமைச்சர் கௌரவ லக்ஸ்மன் கிரியெல்ல அவர்களுக்கு நன்றி. இதனோடு சேர்த்து வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பளர் நாயகம் அவர்களுக்கும், பிராந்தியப் பணிப்பாளர் திரு. தருமரெட்ணம் அவர்களுக்கும் நன்றி. விழா ஏற்பாட்டின் அங்கங்களான போட்டிகள் நடத்துதல், சிலை அமைத்தல், நிதி சேகரித்தல், இறுதி நாள் விழாவின் எல்லா



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விடயங்களையும் செவ்வனே செய்து முடித்தல் என்பவற்றிலெல்லாம் செயற்பட்ட விழாக் குழுவினருக்கும் நன்றிகள். உணர்வாலும், செயற்பாட்டாலும் ஒத்துழைத்த எங்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் நன்றிகள். இன்னும் இச் செயற்பாட்டில் ஒத்துழைத்த எல்லா நல்லுள்ளங்களுக்கும் எனதும், சிலையமைப்பு மற்றும் விழாக் குழுவினரதும் நன்றிகள் உரித்தாகுக.

**திரு. கி.துரைராசசிங்கம்,** (சிலைக் குழுத் தலைவர்)
பொதுச் செயலாளர், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலங்கை தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட துணைத்தலைவரும்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும்,
திருவுருவச் சிலை நிர்மாணிப்புக்குழு ஆலோசகருமான.

## திரு. பொன்.செல்வராசா அவர்களின்

# வாழ்த்துச்செய்தி



தந்தை செல்வா அவர்களின் திருவுருவச்சிலை மட்டக்களப்பு மண்ணில் நிறுவப்படுவதை இட்டு நான் மனமகிழ்வு அடைகின்றேன் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை குறிப்பாக இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வுதான் நிரந்தர தீர்வாக அமையும் என்பதை கடந்த 1949ல் உணர்ந்த, தந்தை செல்வா இலங்கை தமிழரசுக் கட்சியை சமஷ்டிக் கொள்கையுடன் தோற்றுவித்தார்.

அவரின் அர்ப்பணிப்புடனும், செயல்திறனுடனும் கூடிய சமஷ்டிக் கொள்கையை வடக்கு கிழக்கு மாகாணம் தழுவிய ரீதியில் கட்டியெழுப்ப வேண்டும் என்ற உணர்வும், உண்மையும், உறுதியும் தந்தை செல்வாவுக்கு அடிமனதுடன் ஒன்றாக கலந்திருந்தது. அதனால் கிழக்கு மாகாணத்தில் அவரே நேரடியாக வருகை தந்து குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் நல்ல தமிழ் உணர்வாளர்களை இலங்கை தமிழரசு கட்சியில் உள்வாங்கி ஒரு பெரிய விருட்சமாக கட்சியை வளர்த்தார்.

வடக்கு கிழக்கு தமிழர்களின் தலை நகராக திருகோணமலையை இனங்கண்டு, அதுதான் எமது நிர்வாக மையம் என்பதை, இலங்கை தமிழரசுக்கட்சி நடத்திய முதலாவது மகாநாட்டில் கடந்த 1951 ஏப்ரல் 14ம் திகதி திருகோணமலையில் வைத்து பிரகடனப்படுத்தினார்.

அன்றில் இருந்து இன்றுவரை ஈழத்தமிழர்களின் தலை நகரம் திருகோணமலை என்பது எல்லோராலும் அங்கீகரிக்கப் பட்டுள்ளதை நாம் அறிவோம்.

அது மட்டும் அல்லாமல் வடக்கு கிழக்கு வாழ் மக்களை தமிழர் என்று மட்டும் அழைக்காமல் இஸ்லாமிய மக்களையும் இணைந்து தமிழ்பேசும் மக்கள் என்ற சொற்பிரயோகத்தை முதன் முதலாக உச்சரித்த தலைவரும் தந்தை செல்வா அவர்களே ஆவார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தந்தை செல்வாவின் கோரிக்கையை, அவர் மேற்கொண்ட அகிம்சை ரீதியான போராட்டங்களை, அவர் மூலமாக கொண்டு வரப்பட்ட ஒப்பந்தங்களை இலங்கையை ஆட்சி செய்த சிங்களத் தலைமைகள் ஏற்றுக் கொண்டிருந்தால் இன்று நாம் முள்ளிவாய்க்கால் போர் வலயத்துக்கு சென்றிருக்கமாட்டோம்.

இன்று பல இலட்சம் மரணங்களையும், அழிவுகளையும் தடுத்திருக்கலாம். தந்தை செல்வாவின் உறுதியான தமிழ் தேசிய அரசியலை நாம் ஒவ்வொருவரும் மனப்பூர்வமாக உணர்ந்துள்ளோம்.

கட்சியின் ஸ்தாபகரான தந்தைக்கு எமது மட்டக்களப்பில் அவரின் உருவச்சிலை அமைப்பதையிட்டு மனம் பூரிப்பு அடைகின்றேன். இந்த சிலை திறப்பு விழாவுக்கும் அதனூடாக வெளியிடும் மலருக்கும் எனது மனநிறைவான நல்வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

**பொன். செல்வராசா.** மு.பா.உ
சிரேஷ்ட துணைத்தலைவர், இலங்கை தமிழரசு கட்சி,
திருவுருவச் சிலை நிர்மாணிப்புக்குழு ஆலோசகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும்
யாழ் - மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான

## கௌரவ ம.அ. சுமந்திரன் அவர்களது

# வாழ்த்துச்செய்தி



தந்தை செல்வாவுக்கு மட்டுநகரில் சிலை எடுப்பது மட்டற்ற மகிழ்ச்சி கொடுக்கும் ஒரு செய்தியாகும். இலங்கை வாழ் தமிழ் மக்கள் ஒரு தேசம் என்பதையும் அத்தேசத்தின் நிலப்பரப்பு வடக்கும் கிழக்கும் என்பதையும் எமது அடிப்படை அபிலாசையாக பரிணமிக்க அடிகோலியவர் அவரே.

தந்தை செல்வா வடக்கு மூலையில் உள்ள காங்கேசன் துறையைப் பிரதிநிதித்துவம் செய்தாலும் கிழக்கின் மீதுதான் கூடுதலான கரிசனையுள்ளவராக இருந்தார். பல தடவைகளிலே இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமை கிழக்கிலிருந்து வருவதற்கு வழி வகுத்தார். கிழக்கு பறிபோவதைத் தடுப்பதற்காகவே இரண்டு பிரதமர்களோடு தான் செய்த உடன்படிக்கைகளில் முக்கிய கவனம் செலுத்தினார். அவர் டட்லியோடு செய்த ஒப்பந்தத்தில் காணி சம்பந்தமாக ஏற்படுத்திய இணக்கப்பாடுகளை இப்போதும் நாம் அரசியலமைப்புச் சட்டத்துக்குள் சேர்த்துக்கொள்ள முனைகிறோம்.

தந்தை செல்வாவின் கிழக்கிற்கான தீர்க்கதரிசனம் இந்த சிலையின் ஊடாக ஞாபகப்படுத்தப்படும் என்று நம்புகிறேன்.

**ம.அ. சுமந்திரன்** பா.உ
ஜனாதிபதி சட்டத்தரணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மாவட்ட
பாராளுமன்ற உறுப்பினரான



# கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன் அவர்களது

# வாழ்த்துச்செய்தி

**சிந்தையில் நிறைந்து நிற்கும் தந்தை செல்வாவை மறவோம்.**

இலங்கை தமிழர்களின் மனங்களில் மட்டுமல்லாது. உலகிலுள்ள சகல தமிழர்களின் மனங்களிலும் வாழ்ந்து கொண்டிருப்பவர்தான் தந்தை செல்வா அவர்கள். தோன்றிற் புகழோடு தோன்றுக என்கின்ற வள்ளுவ மொழிக்கிணங்க வாழ்ந்து மறைந்தும் மறையாமல் இருக்கின்றார் அவர்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக அல்லாமல், சமத்துவம் சமவுரிமை கொண்டவர்களாக கௌரவத்துடன் வாழ வேண்டும் என்று நினைத்து இறுதிவரை உழைத்திருந்தார் தந்தையவர்கள்.

நீதி, நியாயம், நேர்மை, உண்மை, அன்பு, அகிம்சை, தியாகம், அர்ப்பணிப்பு, தமிழ் தேசியம் போன்ற விழுமியங்களின் மொத்த வடிவமாக தந்தை செல்வா அவர்கள் திகழ்ந்தார்.

இவர் கொள்கை, கோட்பாடுகளுடன் கூடி வாழ்ந்தார். தமிழ் பேசுனர்களையும் அவ்வாறு வாழ வைத்தார். தமிழ் மக்களின் ஒட்டுமொத்த அரசியல் வழிகாட்டியாகவும் அவர் மிளிர்ந்தார். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் அமரர்.ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள். பிரஜா உரிமை விடயத்தில் இந்திய தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகவும், ஆளும் அரச கட்சியிற்கு சாதகமாகவும் செயற்பட்டு பிரஜாவுரிமை சட்டத்தினை நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்கியிருந்தார். ஜி.ஜியின் நிலைப்பாட்டினை முழுமையாக எதிர்த்த தந்தை செல்வா அவர்கள். அக்கட்சியில் இருந்து வெளியேறி 1949ஆம் ஆண்டில் தமிழரசுக் கட்சியினை உருவாக்கினார். தமிழ் பேசுகின்ற தமிழர்கள், முஸ்லிம்களை அரவணைத்து கொள்கை தவறாமல் தமது கட்சியினை வழி நடத்தினார். அன்றில் இருந்து இன்றுவரை இக்கட்சி தமிழ் மக்கள் மத்தியல் வேரூன்றி விருட்சமாய் நிற்கின்றது. இதற்கு காரணம் தந்தை அவர்களின் கொள்கையும், செயற்பாடுகளுமேயாகும்.

தந்தை செல்வா அவர்கள், மனிதனாக மட்டும் வாழாமல், புனிதனாகவும் வாழ்ந்து காட்டினார். பேரின அடிப்படைவாதிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது நேர்மையினையும், எளிமையினையும், தலைமையினையும் கண்டு வியந்தனர். சிலர் பாராட்டியும் இருந்தனர்.

தந்தை செல்வா அவர்கள் சிறந்த சட்டத்தரணியாகவும் தனவந்தராகவும் இருந்தார். இவர் கட்சியின் வளர்ச்சிக்காக தனது சொத்துக்கள், சுகங்களையும் இழந்திருந்தார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

கொள்கையுடன் செயற்பட்ட தந்தையவர்கள், கொள்கை யுடனேயே எம்மை விட்டு மறைந்தார். இவர் மறைந்தும், மறையாத மாமனிதராக இன்றும் உண்மைத் தமிழர்கள் மத்தியில் வாழ்கின்றார். இவர் அரசியலில் நேர்மை, தூய்மை, எளிமை, ஆளுமை மிக்க தலைமையின் இலக்கணமாக திகழ்ந்தார். தந்தை செல்வா அவர்கள் மறைந்து 40 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் அவரால் உருவாக்கப்பட்ட தமிழரசுக்கட்சி இன்றும் அவர் பாதையில் பயணிப்பதால் தமிழ் மக்கள் மத்தியில் நிலையூன்றி நிற்கிறது.

தமிழர் தந்தை செல்வா அவர்கள் ஜனனமாகி 120 ஆண்டுகள் கடந்து விட்டது. இன்றைய நிலையில், நாங்கள் அவருக்குரிய சிலையினை மட்டக்களப்பு மாநகரில் வாவிக்கு அண்மையில் நிலைநிறுத்துகிறோம். காந்திய செல்நெறியில் பயணித்த, அகிம்சை வழியினை எமக்கு காட்டிய அண்ணல் தந்தை செல்வா அவர்களை நாங்கள் ஒவ்வொருவரும் மனதில் பதிப்போம். அவர் வழியில் நடப்போம். அன்னாரின் அரசியல் தூய்மை, எளிமை, ஆளுமை, இன்றயை ஒவ்வொரு தமிழ் அரசியல்வாதிக்கும் படிப்பினையாக அமைய வேண்டும்.

சிந்தைகளைச் சீர்தூக்கிச் சிறப்பாக்க - அரசியலில்
தந்தை வழித் தடமே தமிழர் தடமாகட்டும்
மகத்துவம் மிளிரச் சமத்துவம் வேண்டும் - அதுவே
தந்தையவர்களின் தமிழ்த்துவ நிலையாம்
பிழைப்பு நிலை அரசியல் நிலைப்பதில்லை - அது
உழைப்புடன் முடிந்து ஊரினுள் வேரறும்
நிலையான கொள்கை, நீடித்த அரசியல்-விலை
போகாத் தந்தையின் தலைமையடையாளம்
நன்றி சார் நல்லொழுக்க அரசியல்-தந்தையின்
நின்று நிலைக்க வைக்கும் மார்க்கம்.

**ஞானமுத்து ஸ்ரீநேசன்** பா.உ
மட்டக்களப்பு மாவட்டம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்

# கௌரவ. சீ.யோகேஸ்வரன் அவர்களது வாழ்த்துச்செய்தி



மலேசியாவில் அவதரித்து மண்பற்றுடன் ஈழநாட்டில் தான்சார்ந்த வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் சகல உரிமையும் பெற்றுவாழ வேண்டும் என்ற உயரிய நோக்கில் தமிழ் தேசிய அரசியல் தலைவராக செயல்பட்ட உத்தமர்தான் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் என்ற தந்தை செல்வா ஆவார்.

அன்னார் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் 1944ல் இணைந்து செயல்பட்ட போதும், அந்த கட்சியை வழிநடத்திய தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் மலையக தமிழ் மக்களுக்கான பிரஜா உரிமைச் சட்டத்துக்கு இலங்கை அரசின கைபொம்மையாக செயல்பட்டதை உணர்ந்த 'தந்தை செல்வா' அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகி 1949ல் இலங்கை தமிழரசுக் கட்சியை உருவாக்கினார்.

இலங்கை தமிழரசுக் கட்சியை உருவாக்கிய போது அவர் வடமாகாணத்துடன் மட்டுப்படுத்தவில்லை. கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்களையும் அரவணைத்து, உள்வாங்கி வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டியை பெற்றுக்கொள்வதே எமது இருப்பை உறுதிப்படுத்தும் என்ற நோக்கில், கிழக்கு மாகாணத்திற்கு வருகை தந்து குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் செல்லையா இராசதுரை பட்டிருப்பு சீ.மூ.இராசமாணிக்கம் மற்றும் பொ. மாணிக்கவாசகம், திருமலை இராஜவரோதயம் ஆகிய தமிழ் தலைவர்களை உள் வாங்கி இலங்கை தமிழரசு கட்சியை ஒரு பெரும் விருட்சமாக கட்டி வளர்த்தார். தந்தை செல்வாவின் அந்த தீர்க்கதரிசனம் தான் இன்று வடக்கு கிழக்கு தமிழ் தேசிய அரசியலுக்கு மைல் கல்லாக உள்ளது. தந்தை செல்வா, நிறுவிய இலங்கை தமிழரசு கட்சியில் இன்று நான் பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதையிட்டு பெருமை கொள்கிறேன்.

அந்த பெருந்தகைக்கு எமது மாவட்டத்தில் ஒரு பூரணமான சிலை நிர்மானிக்கப்பட்டு திறப்பதை மனதார பாராட்டுவதுடன் நான் பாராளுமன்ற உறுப்பினராக பணிபுரியும் இந்த காலப்பகுதியில் சிலை திறக்கப்படுவதையிட்டு பூரிப்பு அடைகிறேன்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றிய சகலருக்கும் மலர் வெளியீட்டுக் குழுவுக்கும் நன்றிகளையும், பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சீ. யோகேஸ்வரன்.** பா.உ

இலங்கை தமிழரசுக் கட்சி,மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மாநகர முதல்வர்

## கௌரவ. தியாகராஜா சரவணபவன் அவர்களின்

# வாழ்த்துச்செய்தி



இவ் உலகில் வரலாறுகள் படைத்த தலைவர்களும் இருக்கிறார்கள். வரலாற்றைக் கொண்ட தலைவர்களும் இருக்கின்றார்கள். அந்த வரிசையில் தான் எம்மால் அன்போடும், உரிமையோடும் 'தந்தை' என்று போற்றப்பட்டும் எம் பெருந்தலைவர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்களும் இருக்கின்றார். தன்னையே அர்ப்பணித்து எம்மை வாழ வைப்பவர் 'தந்தை'. அந்த நற்பெயரால் எம் தமிழினத்தின் தலைமையை வழங்கியவர் அமரர்.எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களாவார்.

அமரர் தந்தை செல்வா அவர்களை ஒரு வருடத்தில் அவரது பிறந்த தினமாகிய பங்குனி 31ந் திகதியிலும், அடுத்து அவரது சிரார்த்த தினமாகிய சித்திரை 26ந் திகதியிலும் என இரு முறை நினைவு கூர்வதை நாம் வழக்கமாக்கிக் கொண்டுள்ளோம். எமது மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தமிழ் பேசும் மக்களாகிய நாம் அந் நினைவு நாட்களில் அன்னாரது உருவச் சிலைக்கு முன்னால் ஒன்றுகூடி மாலையிட்டு அஞ்சலி செய்யும் பாக்கியம் கிட்டாதவர்களாகவே இதுவரை காலமும் இருந்து வந்துள்ளோம். ஆனால் இன்று அது கைகூடுவதையிட்டு மட்டக்களப்பின் மாநகரபிதா என்ற வகையிலும், தமிழ் தேசியத்தின் பால் ஈர்க்கப்பட்டவன் என்ற வகையிலும் மகிழ்வுறுகின்றேன்.

அமரர் தந்தை செல்வாவின் மூன்றாவது சந்ததிக்குரியவனாகவே நான் இருக்கிறேன். அதனால் அவரைக் காணும் பாக்கியம் எனக்கு கிட்டவில்லை. இருந்தும் அவரது தமிழ் இனத்தின் மீதான அதீத பற்றினையும், ஆளுமைத் திறனையும் சான்றோர் பலர் பேசக்கேட்டும், நூல்கள் ஊடாக வாசித்தும் அறியும் பெரும்பேறு எனக்கு கிடைத்திருக்கின்றது. இதன்படி தந்தை செல்வா மிகவும் எளிமையான ஒருவராகவும், அனைவரையும் ஒரே குடையின் கீழ் அரவணைக்கும் திறன் கொண்டவராகவும் இருந்ததுடன், இன, மத, பிரதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதங்களையும், சாதிய நிலைகளையும் முன் நிறுத்தி பிரிந்து நின்ற மக்களை தமிழ் பேசும் சமூகம் என்ற ஓர் வரையறைக்குள் ஒன்றிணைக்கும் வல்லமையைக் கொண்டவராகவும் திகழ்ந்தார். வடக்கையும் கிழக்கையும் அதேபோன்று தமிழர்களையும் - இஸ்லாமியர்களையும், இணைக்கக்கூடிய ஓர் சக்திமிக்க தலைவராகவும் இவர் விளங்கினார்.

இலங்கைக்குள் வாழ்கின்ற சிறுபான்மையினரது உரிமைகள் வென்றெடுக்கப்பட வேண்டுமாயின் சிறுபான்மையாக வாழும் சமூகத்தினரிடையே ஒற்றுமை அவசியமானதாகும் என்பது அடிக்கடி அவரால் வலியுறுத்தப்பட்ட விடயமாக உள்ளது. அத்துடன் இடர்கொண்ட சூழலிலும் கூட நேர்மையாக அரசியல் செய்யலாம் என்பதை நிரூபித்துக் காட்டியிருந்தார்.

இவ்வாறான சாணக்கியமும், அரசியல் ஞானமும் கொண்ட அமரர் தந்தை செல்வாவின் அந்த அர்ப்பணிப்புடனான சோரம் போகாத நேர்த்தியான அரசியலையை நாமும் பின்பற்ற வேண்டும் என்பதை வினயமாக கேட்டுக்கொள்வதுடன், மறைந்த தமிழ் அரசியல் மேதையான தந்தை செல்வாவின் திருவுருவச் சிலையினை மட்டக்களப்பினில் நிறுவுகின்ற இன்நன்நாளில் வெளியிடப்படுகின்ற அவரது பெருமை கூறும் நூலிற்கு வாழ்த்துச் செய்தி வழங்க வாய்ப்பளித்தமைக்கு நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தியாகராஜா சரவணபவன்**

மாநகர முதல்வர்,

மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழுவின் மனத்திரையில்...

ஈழத்தமிழ் மக்களின் இணையற்ற தலைவர், வடக்கு கிழக்கு தாயகமே. தமிழ் பேசும் மக்களின் மரபுவழித்தாயகம் என்ற அசையாத சமஷ்டிக் கொள்கையுடன் இலங்கை தமிழரசு கட்சியினை கடந்த 1949 டிசம்பர் 19ம் நாள் உருவாக்கி மூன்று தசாப்த காலம் பல்வேறு பட்ட அகிம்சைப் போராட்டங்களை முன்னெடுத்த தமிழ் தேசியத்தின் தன்னிகரற்ற தலைவர் 'தந்தை செல்வா'.

அந்த உன்னத மகானுக்கு மீன்பாடும் தேனாடு. வீரம் விளைநிலம் என போற்றப்படும் மட்டக்களப்பு மாவட்ட மண்ணில் இதுவரை சிலை அமைக்கவில்லையே என்று மன ஆதங்கம் பலரின் மனதில் தொடர்ந்து இருந்தது.

அந்த குறையை இல்லாமல் செய்து 'தந்தை செல்வா' அவர்களின் திருவுருவ சிலை மட்டக்களப்பில் அமைக்கும் பொருட்டு எமது இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச்செயலாளரும் கிழக்கு மாகாண விவசாய, கூட்டுறவு, நீர்பாசன அமைச்சராக பதவி வகித்த கௌரவ கிருஷ்ணபிள்ளை துரைராசிங்கம் அவர்கள் கடந்த 2016ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17ம் திகதி இலங்கை தமிழரசு கட்சி மாவட்ட பணிமனையில் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்தார். இக்கூட்டத்தில் அன்னாரின் தலைமையில் தந்தை செல்வா திருவுருவச்சிலை மட்டுநகர் மாநகரசபை எல்லைக்குள் பொருத்தமான இடத்தில் நிறுவ வேண்டும் என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. அதற்கான செயல்பாட்டு குழுக்களும் தெரிவு செய்யப்பட்டன.

உரிய காலத்தில் எப்படியும் விரைவாக அந்த புனிதருக்கான சிலை அமைக்க முயற்சிகள் மேற்கொண்டோம். தற்போது ஏறக்குறைய இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் இன்றுதான் அது கைகூடியுள்ளது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தந்தை செல்வா சிலை திறப்பு விழாவுடன் பல்தரப்பட்ட நிகழ்வுகளை ஒன்றிணைத்து நடத்த வேண்டும் என்ற நல் நோக்கத்துடன் பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் கட்டுரை, பேச்சுபோட்டிகளையும் திறந்த போட்டிகளையும் நடத்தி இருந்தோம்.

'செல்வா சிலை மலர்' என்ற மலர் ஒன்றையும் பலதரப்பட்ட எழுத்தாளர்கள், கல்விமான்கள், பற்றாளர்கள், அரசியல் தலைவர்கள் ஆகியோரிடம் ஆக்கங்களாக பெற்று இதில் பிரசுரித்துள்ளோம்.

இந்த மலரில் வரும் சகல ஆக்கங்களுக்கும் அதை எழுதியவர்களே முழுப்பொறுப்பும் சாரும் என்பதை தெரிவிக்கின்றோம்.

தந்தை செல்வாவின் தீர்க்க தரிசனம் தான் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் ஒன்றிணைந்த தமிழ் தேசிய அரசியலுக்கு இணைப்பு பாலமாக இருந்தது என்பதை எவருமே மறுக்கமுடியாத உண்மையாகும்.

அந்த பெரும் மனிதர் எம்மண்ணைவிட்டு விண்ணுலகிற்கு சென்று சரியாக 41 வருடங்கள் கழிந்த பின்புதான் மட்டக்களப்பு மண்ணில் அன்னாருக்கு சிலை உருவாக்கப்பட்டுள்ளது. இது காலம்கடந்த செயல்பாடு என கருதினாலும், காலத்தால் அழியாத செயல்பாடு, தமிழ் தலைவர் தந்தை செல்வா அவர்களின் திருவுருவச் சிலையாக மட்டக்களப்பு மண்ணில் நிமிர்ந்து காட்சி தருவதால் இம்மண் புனிதமாகிறது என்பதை மலர் குழுவின் சார்பாகவும், தந்தை செல்வா திருவுருவச் சிலை, நிர்மானிப்பு குழு சார்பாகவும் மனநிறைவுடன் தெரிவிக்கின்றோம்.

'தமிழ் தலைவர்கள் சாகலாம், தமிழ் உணர்வுகள் சாகாது'

மலர்க்குழுவின் சார்பில்,

**பா. அரியநேந்திரன்.** மு.பா.உ

செயலாளர்,

தந்தை செல்வா திருவுருவச்சிலை நிர்மானிப்பு குழு

## தந்தை செல்வா திருவுருவச் சிலை நிர்மாணிப்பு குழ உறுப்பினர்கள்

ஆலோசகர்கள் :

**கௌரவ.சீ. யோகேஸ்வரன்** (பா.உ)

**திரு.பொ. செல்வராஜா** (மு.பா.உ)

**திரு.த. கனகசபை** (மு.பா.உ)

தலைவர் :

**திரு.கி.துரைராசசிங்கம்**

(முன்னாள் அமைச்சர் கிழக்கு மாகாணசபை, பொதுச்செயலாளர் இலங்கை தமிழரசுக் கட்சி)

செயலாளர் :

**திரு.பா. அரியநேந்திரன்** (மு.பா.உ)

பொருளாளர் :

**திரு.த. இன்பராசா** (ச.நீ)

உப தலைவர் :

**கௌரவ. ஞா.ஸ்ரீநேசன்** (பா.உ)

உப செயலாளர் :

**திரு.ந.துஷ்யனதன்**

நிருவாக குழு அங்கத்தவர்கள் :

**திரு.த. நடராஜா**

**திரு.கி. சேயோன்**

**திரு.ப. சிவநேசன்**

**திரு.கு. நல்லரெட்ணம்**

**திரு.த. கோபாலப்பிள்ளை**

கணக்காய்வாளர்கள் :

**திரு.மா. நடராசா**

(முன்னாள் உறுப்பினர், கி.மா.சபை)

**திரு.க. குருநாதன்**

## தந்தை செல்வா திருவுருவச் சிலை நிர்மாணிப்பு மலர் வெளியீட்டுக் குழு

**திரு.கி. துரைராசசிங்கம்** (தலைவர்)

**திரு.பா. அரியநேந்திரன்** (செயலாளர்)

**திரு.த. இன்பராசா** (பொருளாளர்)

**கௌரவ ஞா. ஸ்ரீநேசன்** (உப தலைவர்)

**திரு.பொ. செல்வராசா** (ஆலோசகர்)

**திரு.சிவம் பாக்கியநாதன்**

**திரு.த. கோபாலப்பிள்ளை**

**திரு.அ. சுகுமாரன்**

**திரு.க. குருநாதன்**

**திரு.கி. சேயோன்**

## தந்தை செல்வா திருவுருவச் சிலை நிர்மாணிப்பு போட்டி ஏற்பாட்டுக் குழு

**திரு.கி. துரைராசசிங்கம்** (தலைவர்)

**திரு.பா. அரியநேந்திரன்** (செயலாளர்)

**திரு.த. இன்பராசா** (பொருளாளர்)

**திரு.அ. சுகுமாரன்**

**திரு.த. கோபாலபிள்ளை**

**திரு.சா. இராசேந்திரன்**

**திரு.வே. தவராசா**

**திரு.பொ. நேசதுரை**

**திரு.வெ. இராஜேந்திரன்**

**திரு.இரா. ஜீவரெத்தினம்**

**திரு.ந. மோகனரூபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட் தந்தை. ஜோசப் மேரி
இயேசுசபை, மட்டக்களப்பு

# நான் கண்ட தந்தை

தந்தை S.J.V. செல்வநாயகம் அவர்கள் இறை பற்றும் மனித நேயமும் படைத்த ஓர் மாமாமனிதர். அவரை அறியாதார் யாரும் இல்லை என்றால் அது குறைபடக் கூறுதலாகும். இப் பெரியாரைத் தனியாகவும் பிறருடனும் சேர்ந்து பழகிய பாக்கியம் பெற்றவன் நான்.

தந்தை அவர்களை முதன்முதல் காணும்போது நான் புனித மிக்கேல் கல்லூரி மாணவன். அரசியல் அறியாதவன் அன்று அவர்களுடன் மேலுமாக ஐவர் மேடையில் ஒன்றாக இருந்தனர். அனைவரும் தமிழ் காங்கிரஸ் உறப்பினர். அது அரசியல் கூட்டம் 1950ம், 1951ம் ஆண்டு என்று நினைக்கின்றேன் பழைய விளையாட்டு மைதானத்தில் வின்சன்ற் மகளிர் கல்லூரிக்கு முன்னால் திட்டியும் திடலுமான மைதானம். மேடையில் விற்றிருந்தவர்கள் தமிழ் காங்கிரஸ் தலைவர் G.G. பொன்னம்பலம் ஐயா, செல்வநாயகம் ஐயா, கோப்பாய் வன்னியசிங்கம், *Doctor E.M.V.* நாகநாதனும் இன்னும் சிலரும், இளைஞராக சட்டக்கல்லூரி மாணவன் அமிர்தலிங்கம். இவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தைச் சோந்தவர்கள். அன்று தமிழர் எமக்குள்ள உரிமை, கடமை பற்றி ஆவேசப்பேச்சு முதலில் ஐயா *G.G.* என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகமான சட்டத்தரணி பொன்னம்பலம் அவர்கள் சில்க் பட்டுச் சால்வையை இடுப்பில் கட்டினார். மேடையில் அடித்துப் பேசினார். குண்டு சோடா போத்தல் (Glass) குவளை எல்லாம் கீழே விழுந்து உடைந்தன. பேச்சு இளைஞர் எம்மைக் கவர்ந்தது.

**தந்தை செல்வா**

அடுத்து வெள்ளை வேட்டி நீண்ட மேற்சட்டை (வாலாமணி) தோளில் இருபக்கமும் தொங்கிய சால்வை. பேச்சிலும் அவரது பாணியில் தொனியிலும் அமைதி பெரிதாக எம்மை ஈர்க்கவில்லை. தமிழ் இனம் எமக்கு இழைக்கப்படும் அநீதி பற்றியும், நாம் வடகிழக்கில் வாழும் தமிழரும் தமிழையே தாய் மொழியாகக்கொண்ட முஸ்லீம் மக்களும் ஒன்றாய் நிற்பது அவசியம் என்றும் கூறினார். ஏனையோரின் பேச்சும் கவர்ச்சியாக இருந்தன.

**தமிழ் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடன்.**

ஆனால் இக்கூட்டம் நடந்து இருவாரம் ஆகவில்லை. ஆவேசமாய்ப் பேசி இளைஞர் எம்மை உலுப்பிய G.G. பொன்னம்பலம் ஐக்கிய தேசியக் கட்சியில் சோர்ந்துவிட்டார். ஓர் அமைச்சர் பதவியும் பெற்றுவிட்டார். என்ற செய்தி நாளேடுகளில் பிரசுரமானது. எமக்கோ பெரும் ஏமாற்றம் ஐயா G.G. பிரிந்து போனால் மற்றையோரும் போய் விட்டால் எம்பாடு என்ன என்ற ஏக்கமும் கவலையும். ஆனால் ஆண்டவனே என்று அப்படி ஒன்றும் நடக்கவில்லை. இதுவும் அடுத்தடுத்து வந்த பிரசுரம் நாளேடுகளில்...

**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி.**

ஆகவே தான் தந்தையவர்கள் துணிந்து செயல் ஆற்றினார். அவர்களுடன் இணைந்து அன்று மேடையிலிருந்த அனைவரும் தந்தையோடு.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இல்லானும் கெடும்"

என்றார் வள்ளுவ நாயனாரும். அவ் வாக்கை ஒரு சொல்லுங்கோணாது உச்சிமேற்கொண்டு ஒழுகினார். இறுதிவரை தந்தை அவர்களும். பட்டம் பதவி தேடியவர் அல்ல. எம் தந்தை. தமிழ் இனம் தன்மானத்துடன் வாழவேண்டும் என்ற ஒன்றிற்காகவே தமிழ் காங்கிரஸ் தமிழ் மக்களைக் கைவிட கைகொடுத்த தெய்வமாக உதித்தது. தந்தையின் தலைமை யில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஆங்கிலத்தில் *The Federal Party* உதயமாகியது.

**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தந்தையின் தலைமையில்**

இவ்வாறான ஒரு உத்தமரை தனியாகவும் பிறருடனும் கண்டு கதைத்துப் பழகிய பெருமையும் நிறைவும் எனக்கு. அந்த அனுபவத்தை உங்களோடு பகிர்ந்து கொள்வதிலும் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தந்தையவர்கள் எமக்கென்று உருவாக்கிய தமிழ் அரசுக் கட்சி ஊடாக எம்மைச் சிந்திக்க வைத்தார். சிந்திப்பதோடு நின்றுவிடாமல் செயலாற்றவும் உறுதி ஊட்டினார். அவர்களே முன்னின்று வழிகாட்டினார்.

திருகோணமலையில் அமரர். இராஜவரோதயம். இ.த.க கண்டெடுத்த முத்தான முத்து. மூதூரில் அமரர் ஏகாம்பரம்.

மட்டக்களப்பில் படித்தவர்கள் பட்டம் பெற்றவர்கள் மூத்த சட்டத்தரணிகள் போன்றோர் தந்தையோடு இணைவதை விரும்பவில்லை.

செல்வமுடையோர் செல்வாக்குடையோரும் அதே போக்குத்தான். ஆள்தேடி அலைந்த தந்தைக்கு ஆண்டவன் அருளிய சக்தி வாய்ந்த பலமாக அமைந்தார். இளைஞர் இராசதுரை. படிப்போ குறைவு, மத்திய கல்லூரியிலிருந்து நீக்கப்பட்டவர். செல்வமும் இல்லை. செல்வாக்குமில்லை. தமிழ் ஆர்வலர், ஆழச் சிந்திக்கும் ஒருவர். சொல் வன்மை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மிக்கவர். தி.மு.க. பாணியில் அடுக்கு மொழியில் ஆவேசமாகப் பேசுபவர்.

திருகோணமலையில் அமரர். இராஜவரோதயம். மூதூரில் அமரர் ஏகாம்பரம். இ.த.க. ஊடாக பிரபல்யம் பெற்று அரசியல் வானில் ஒளிர்ந்து கொண்டிருந்தனர். அண்ணன் இராசதுரை காலப்போக்கில் என்னவோ கட்சி மாறினார். நம்பின மக்களைக் கைவிட்டார்.

**தந்தையின் மட்டக்களப்பு வருகை**

தந்தையவர்கள் மட்டக்களப்பிற்கு தேர்தல் விடயமாக வரும்போதெல்லாம் எம் மக்கள் தங்கள் வீட்டு வாசலில் நிறைகுடம் வைத்து, மாலை அணிவித்து அவர் பாதம் தொட்டு ஆசீர் கூறி முத்தமிடுவர். இது மட்டக்களப்பு மக்களின் ஒரு சிறப்பான பண்பாடென்றால் அது மிகையாகாது. இதற்கு சாட்சிகளாக உணர்ச்சிக் கவிஞர் காசியானந்தன் அவரின் சகோதரர்கள் என் சகோதரர் அல்போன்ஸ்மோரி, ஜோண்பிள்ளை, மாஸ்டர் சிவலிங்கம், மண்டூர் மகேந்திரன், பின்னால் மேயர் அம்பலவாணரும் சாட்சிகள்.

**தந்தையுடன் உறவு**

தந்தையவர்களை தனியாக சந்திக்கும் போது நான் ஒரு கத்தோலிக்க குரு இயேசு சபைத்துறவி கொழும்பில் *L.L.B* கற்றுக் கொண்டிருந்தேன். அந்நாட்களில் முன் அறிவித்தலின்றி அவர் வீடு செல்வேன். அமைதியாகப் பேசுவார். மட்டக்களப்பு மக்களின் நிலைப்பாடுபற்றிக் கேள்விகளைக் கேட்பார். அரசியல் ரீதியாகவும் பிறவும் இளைஞர்கள் பற்றி, பிள்ளைகளின் படிப்புக்கள் பற்றி இப்படிப் பலதும் அவர் கேட்டது இன்னும் எனக்கு ஞாபகம்.... "தனிநாயகம் சுவாமிகள் இப்போ எங்கே? உமக்கு Church தடை போடவில்லையா?" இல்லை ஐயா என்றேன்."

**அநீதியா? அரசியலா?**

என் குருத்துவப் படிப்பின் தத்துவ இயலை தமிழ் நாட்டில் செம்பகநூரில் படித்தேன். இவ்வேளையில் பேராசிரியர் அருட்தந்தை கிளம்ப் (CLUMP) எமக்கு சமூக இயல் பாடத்தை நெறிப்படுத்தினார். அவர் கூறிய வார்த்தை என் மனதில் ஆழமாகப் பதிந்தது. அவர் சொன்னார், "அநீதிக்கு எதிராக குரல் கொடுக்காதவன் கிறிஸ்தவன் அல்ல. அநீதி என அறிந்தும் பேசா மடந்தையாய் இருப்பதனால்தான் அநீதிப் பசாசு தலை விரித்து ஆடுகிறது. இதற்கு நீங்களும் பங்காளிகளா?" என்றார் என நான் தந்தையிடம் சொன்னேன். "ஐயா இந்த அறிவுறுத்தல் என்னை ஆழமாகத் தொட்டது. அப்போது நீங்கள் மேடையில் சொன்னவை அனைத்தும் நினைவிற்கு வந்தது"

பேராசிரியர் அருட்தந்தையுடன் ஈழத் தமிழினம் எமக்கு இழைக்கப்படும் அநீதிகள். மொழி வழி மட்டுமல்லாமல் தமிழ் நிலம் பறிபோகும் அரச குடியேற்றம் பற்றியும் *(State colonization)* அடிக்கடி கலந்துரையாடுவேன். தெளிவும் பெற்றேன். உங்களைப் பற்றியும் அவருடன் பேசுவேன். இப்படியாக நீங்கள் அடிக்கடி கூறிய திட்டமிட்ட வரலாற்றுத் திரிபுகள் கந்தளாய் பறிபோகின்றது சிங்களக் குடியேற்றத்தால், மட்டக்களப்பில் பட்டிப்பளை ஆறு கல் ஓயா எனப் பெயர் மாற்றம் பெற்றும், பாரிய சிங்களக் குடியோற்றம் இடம்பெறுகிறது. மேலுமாக, மலையகத் தமிழரின் குடியுரிமை பறிக்கப்பட்டதும் அல்லாமல் அவர்களுக்குரிய நாடாளுமன்ற அங்கத்துவமும் இல்லாமற் செய்த கொடுமையை அவருடன் உரையாடுவேன். ஆகவேதான் அநீதி செயல்கள் இறைவனுக்கு எதிரானவை. வெறுமனே அரசியல் அல்ல. என்ற வேதசத்தியம் தெட்டத் தெளிவாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைபணியாக இனப்பணி

"எனவே தான் இந்த அநீதிகளை எதிர்த்து நிற்கும் உங்கள் பணி இனப்பணி மட்டுமல்ல இறைப் பணியும் என உணர்ந்து உங்களோடு நிற்கின்றேன். ஐயா" எனக்கு இது அரசியலல்ல. தமிழ் அரசுக் கட்சி மேடை ஒரு சத்திய மேடை. உண்மையை ஊரறியச் சொல்லி அநீதியை எதிர்த்து நீதி கேட்கும் உன்னத மேடை" என்றேன். தந்தை என்னைத் தோள் தட்டி மெச்சினார். "கவனமாயிரும்" என்று ஆலோசனையும் தந்தார்.

## தமிழ் இளைஞரும் சிறைவாசமும்

மீண்டுமாகத் தந்தை அவர்களை 1970ம் ஆண்டுகளில் சந்திக்கின்றேன். வயது முதிர்ந்த தலைவராக சிறிமா அம்மையாரின் ஆட்சி. யாழ்ப்பாண மேயர் அல்பிறட் துரையப்பாவைச் சுட்டுவிட்டார்கள். யாழ், திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பிலிருந்து 40க்கும் அதிகமான இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வெலிக்கடையில் சிறைவாசம். ஆண்டுகள் இரண்டாகியும் நீதியுமில்லை நியாயமுமில்லை. கிழக்கில் மட்டக்களப்புக் கைதிகளாக உணர்ச்சிக் கவிஞன் காசியானந்தன், என் சகோதரன் அல்போன்ஸ் மேரி மண்டூர் மகேந்திரன் நாவற்குடா சேயன் போன்றோர் திருகோணமலையில் சிறி போன்றோர் யாழ்ப்பாணத்தில் சேனாதிராஜா, வண்ணை ஆனந்தன், தவராசா போன்றோர் இரண்டு ஆண்டுகட்கு மேலாக சிறைவாசம் அனுபவித்தது போதும்.! நீதி கேட்டு எங்கே செல்வது? இந்நாட்கள் போன்று அந்நாட்களில் மனித உரிமை மீறல் பற்றி முறையிட சபைகளில்லை.

## சிறைவாசமும் சத்தியாக்கிரகமும்.

எனவே, கைதிகள் தொடர் உண்ணா விரதம் இருப்பதென முடிவெடுத்தனர். இவர்கள் எல்லோரும் தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்தவர்கள். ஆகவே தந்தையின் உத்தரவு பெற்றே உண்ணாவிரதம் செய்வதென்ற முடிவு. இந்தச் செய்தியை தந்தையிடம் சொல்ல என்னை வேண்டினார்கள். என் சகோதரனூடாக... அன்று சனிக்கிழமை அச்செய்தியை (மடலை) நான் தந்தையிடம் சென்று கொடுத்தேன். அடுத்த நாள் ஞாயிறு போயா தினம். அன்று கைதிகளுக்கு மாதம் ஒரு முறை சாப்பாடு கொடுக்கும் நாள். நான் அவர்களைச் சந்திக்கப் போவதாகச் சொன்னேன் தந்தை சொன்னார்.

"நாளை காலை 8.00 மணிபோல் வாரும் விடை சொல்கின்றேன்." என்று அவரை நான் சந்தித்தபோது சனிக்கிழமை மாலை 5.00 மணி நான் திரும்பிக் கொண்டிருக்கும்போது தந்தையின் லிகிதர் (*Clerk*) '*Father, Father* என்று ஓடி வருகின்றார்." ஐயா உங்களை வரட்டாம்" நான் திரும்பி வீட்டு வாசலுக்கு வருகிறேன். பாவம் ஏலாப் பருவத்திலும் தந்தை படி இறங்கி வருகின்றார். பரிதாபம் எனக்கு "ஏன் ஐயா நானே வருவன் தானே" என்றேன். அவர் என்னை முற்றத்தில் சந்திக்கின்றார்.

## கண்ணீருடன் தந்தை

கண்ணீரண்டிலும் கண்ணீர் நானே அழுதுவிட்டேன் "சாகுமட்டும் சத்தியாக்கிரகம் செய்யட்டும். ஆனால் *No Suicide* தற்கொலை வேண்டாம் நாளை அவர்கள் எனது தலைவர்கள்" என்று கண்ணீர் துளிகள் முகத்தில் வடிய விடை தந்தார். இவர்தான் மா மாமனிதர் - தந்தை செல்வா அவர்கள்!

## மட்டக்களப்பு கைதிகளும் நானும்

மட்டக்களப்புக் கைதிகளுக்கும் நான் அந்தச் செய்திகளை எடுத்துச் சொன்னேன். என் சகோதரனூடாக அது போயா தினம் ஆகையால் காசி ஆனந்தனைச் சந்திப்பதற்கு அவருடைய சகோதரர்களும் வந்திருந்தனர். தமையனைச் சந்தித்து சாப்பாடு கொடுக்க காசியையும் என் சகோதரனையும் ஒருமிக்க சந்திக்க அது எனக்கு வாய்ப்பாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு அடுத்த வாரம் நான் வெலிக்கடைச் சிறைச் சாலைக்குச் சென்றேன். வழமைபோல் என் சகோதரனைச் சந்திக்க. அவர் அங்கு இல்லை. மகரை சிறைச்சாலைக்கு அனுப்பி விட்டார்கள். சென்று பார்த்தேன். அங்கு அறிந்த செய்தி? தமிழ் இளைஞர் தொடர் உண்ணாவிரதம் இருக்க எடுத்த முடிவை சிறை அதிகாரிகள் மோப்பம் பிடித்ததும் அனைவரையும் எதுவித தொடர்பும் இல்லாத அளவிற்கு வெவ்வேறாக நீர்கொழும்பு, கண்டி, காலி போன்ற பல சிறைச்சாலைகட்கு அனுப்பிவிட்டனர். இச்செய்தியை தந்தை அவர்கட்கு நானே சென்று அறிவித்தேன். "அப்படியுமா?" என்று ஒரு சில நிமிடங்கள் மூச்சுப் பேச்சின்றி கவலையே உருவாக தந்தை நின்றது இன்னும் என் கண்முன்! அது நேற்றுப் போல் இருக்கிறது!.

தந்தையவர்களை தனியாகச் சந்திப்பது என் வழக்கம் என்று சொன்னேன். அவ்வேளைகளில் அவர்கள் சாய்மானக் கதிரையில் ஓய்வெடுப்பார். நான் நாற்காலியில் அவர் அருகில் பத்தும் பலதும் விசாரிப்பார். விசேடமாக மட்டக்களப்பு அரசியல் நிலைமை பற்றி மிகவும் ஆதங்கமாக "இராசதுரை எப்படி உம்மோடு" என்று கேட்பார். என்னை எப்பாதும் Divine (டிவைன்) என்றே அழைப்பார்.

### தந்தையும் யோகப்பியாசமும்.

ஓர் நாள் மட்டக்களப்பு முன்னாள் மாநகரசபை முதல்வர் (Mayor) அம்பலவாணரும் என் சகோதரரும் நானும் தந்தையைச் சந்திக்கச் சென்றிருந்தோம். அது காலை நேரம் நாம் கண்ட காட்சி... ஒருவர் ஒருவரைப் பார்த்து பிரமித்துப் போனோம். ஆடாமல் அசையாமல், தந்தை அவர்கள் யோகாப்பியாசம் - சிரசாசனம்! அதாவது தலை கீழாக நிலத்திலும் கால்கள் மேலாக சுவரோடும். நின்றுகொண்டிருந்த காட்சி! நாம் திரும்பிவிட்டோம். தந்தையைப் புகழ்ந்து பேசிக்கொண்டு.

### அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம்

இன்னும் ஓர் நாள் தந்தையின் இல்லத்தில் நான் தனியாளாக தந்தையோ அறையினுள். நான் மண்டபத்தில் அங்கு வருகின்றார். "அடங்காத் தமிழன்" ஐயா அமரர் சுந்தலிங்கம். அவர் என்னிடம் ஆங்கிலத்தில்... *'Father tell Mr. Chelvanayagam to hand over the leadership to me. He is old....* இவ்வேளையில் தந்தையும் வந்துவிட்டார். இவர் சொன்னது தந்தைக்குக் கேட்டிருக்காது. நானும் அதையிட்டு அலட்டிக்கொள்ளவில்லை.

### தந்தையின் இல்லத்தில் தமிழ் இளைஞர் பேரவை

இன்னு ஓர் நாள் தமிழ் இளைஞர் பேரவை பெரும் திரளாகத் தந்தையின் இல்லத்தில் மாலை 7.00 மணி முதல் என்னையும் வரும்படி கட்டாயப்படுத்தினார்கள். அக்காலத்தில் கொழும்பில் இளைஞர் மத்தியில் குழப்ப நிலை. தந்தை விடை தர வேண்டும் தந்தையோ "அமைதியாய் இருங்கள். அவர்களும் வரட்டும். நல்ல முடிவு எடுப்போம்..." அவர்கள் தான் தமிழ் காங்கிரஸ் தலைவர் ஐயா அமரர் சிவசிதம்பரமும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் அண்ணன் அமரர் அமிர்தலிங்கமும். இவர்கள் பலாலியில் இருந்து வரவேண்டும். ஆனால் வீட்டில் எதுவிதக் கூக்குரலோ கூச்சலோ இல்லை. தலைவர்களில் நம்பிக்கை அற்ற மூச்சும்பேச்சும்தான். வெளியேறுவோம் என்ற உணர்வும் இளைஞர் மத்தியில் ஊசலாடிக் கொண்டிருந்ததை என்னால் உணரமுடிந்தது.

### தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் அமரர் தொண்டமானும்

பிரச்சனை இங்குதான். கூட்டணியில் அங்கம் வகிக்கும் மலையக மக்களின் தலைவர் தொண்டமான் அவர்கள். அரசுடன் இணையப்போவதாக செய்தி பரவிற்று. அவர் இணைந்தால் கூட்டணியும் அரசுடன் இணைந்துவிடும் என்ற பயம் இளைஞருக்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே இதனால் ஏற்பட்டது குழப்பம். எனவே தான் தந்தையின் இல்லத்திற்குத் இளைஞரின் படையெடுப்பு.

**தலைவர்களின் வருகை**

கூட்டத்தைக் கண்டு அச்சங்கொண்டது போல் "என்ன? என்ன?" என்று கேட்டவாறு தந்தையை அணுகினார்கள் இருவரும். நாம் எல்லோரும் அமைதியாய் இருக்கிறோம். தந்தையின் காதுக்குள் சத்தமாகப் பேசுகின்றார் அமிர்தலிங்கம். தொண்டமானைப் பற்றித்தான் பேச்சு.

"தொண்டமான் அரசுடன் சேர்ந்தால் சேரட்டும். நாம் தடைசெய்ய முடியாது. இது உண்மையென்றால் அவர் தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கத்தவராக அல்ல. அவரது கட்சி சார்பாக சேரட்டும் என்ற தந்தையின் முடிவைச் சபைக்கு அறிவித்தார் அமிர்தலிங்கம். மேலுமாக அவர் "இதுதான் தந்தையின் முடிவு. தமிழர் விடுதலைக் கூட்டணியின் முடிவு.

அரசுக்கும் எமக்கும் எதுவித தொடர்புமில்லை. கூட்டணியில் தொண்டமானும் இல்லை" என்று சொன்னதும் பெருமகிழ்ச்சியும் கரகோசமும் ஆரவாரமும். எங்கள் மத்தியில் இந்த நல்ல முடிவுக்காக தமிழ் இளைஞர் பேரவையினர் மாலை 5.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை தந்தையின் இல்லத்தில் தவம்போல் காத்திருந்து கலைந்தனர்.

**1977ம் ஆண்டு - தமிழ் ஈழம்.**

கிழக்கு, வடக்கு தமிழ் மக்கள் துணிந்து எடுத்த முடிவு. தமிழ் ஈழம் ஆகவே இந்த ஆண்டு நடந்த தேர்தலில் கிழக்கிலும் வடக்கிலுமாக பதினேழு (17) அங்கத்தவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில், உதய சூரியன் சின்னத்தில் நாடாமுமன்றம் செல்லத் தெரிவாகினர். இலங்கை வரலாற்றில் முதன்முதல் ஒரு தமிழர் எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். அவர்தான் அமரர் **அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்** அண்ணன் அவர்கள். அந்த வாய்ப்பும் அவரிடமிருந்து பறிக்கப்பட்டது. ஒரு தமிழன் என்பதற்காக இது சிங்கள அரசால் தமிழர்கள் எங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுந்துரோகம். இது புரிந்தும் புரியாததுமாக இருந்தார்கள். படித்தவரும் பாமரருமான எமது சகோதர இன சிங்கள மக்கள்.

**கத்தோலிக்க ஆயர் பேரவை.**

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை. ஆண்டில் ஒரு முறை மாசி மாதத்தில் நான்கு நாட்கள் ஒன்றுகூடி நாட்டின் அரசில் பொருளாதார இன, மத ஒற்றுமை நிலமை பற்றி அலசி ஆராய்ந்து அறிக்கை விடுவது வழக்கம். இதில் ஆயர்களோடு ஏனைய கத்தோலிக்க துறவறசபைத் தலைவர்களும் (இருபாலாரும்) கலந்து கொள்வர். .... தேவதத்தை *National Basilica* மண்டபத்தில் ஒன்றுகூடுவார்கள்.

**தமிழ் ஈழம்**

தமிழ் ஈழம் ஆயர்களுக்கும் கூட (சிங்கள ஆயர்கள்) புரியாத புதிராகவே இருந்தது. இதையிட்டுத் தங்களுக்கு விளக்கந்தர என்னை அழைத்திருந்தார்கள். தந்தையைப் பற்றிக் கூறவேண்டியது அவசியமாயிருந்தது. அவர் தன்நிகரற்ற தமிழர் தலைவர். சிங்கள மக்களின் தலைவர் அமரர் *S.W.R.D.* பண்டாரநாயக்கவோடு இங்கிலாந்தில் *Oxford* கலாசாலையில் ஒரே காலத்தில் பயின்றவர். பண்டார நாயக்கா போன்றோர் சிங்கள மக்களின் தலைவராவதற்கு அவர்கள் புத்த மதத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். எனவேதான் பண்டார நாயக்கா, டட்லி சேனனாயக்கா, ஜோண் கொத்தலாவலை போன்ற தலைவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தாலும் புத்த மதத்தைத் தழுவ வேண்டிய தேவை இருந்தது.

ஆனால் தமிழ் மக்களிடையே அந்தக் கட்டாயம் இருக்கவில்லை என்பதற்கு தந்தை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவர்களே பெரும் உதாரணம் என்று சொன்னேன். உதாரணமாக இந்த நிகழ்வையும் சுட்டிக் காட்டினேன். இது நான் கேள்விப்பட்டதே அன்றி கண்ணால் கண்டதில்லை என்றேன்.

**வீரசிங்க மண்டபத்தில் -**
**ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை.**

அன்று ஒரு நான் யாழ்ப்பாணத்தில் வீரங்கம் மண்டபத்தில் நடந்த ஒரு கூட்டம். கூட்டம் ஆரம்பத்தில் குருக்கள் வழிபாட்டை முடித்துவிட்டு மேடையில் அமர்ந்திருந்த வர்களுக்கும் தந்தை அவர்களுக்கும் பிரசாதத் தட்டை நீட்டிய போது.... "எனக் கூறிய போது *'Father excuse me...* என்னை மன்னியுங்கள்" என்று ஆயர் மண்டபத்திலிருந்த அமரர். பேரருட்தந்தை தியோகுப்பிள்ளை ஆண்டகையின் குரல்.

"அன்று அந்தக் கூட்டத்தில் நானும் இருக்கிறேன்" வீரசிங்கம் மண்டபத்தில் மேடையில் திருவாளர் செல்வநாயகம் அமர்ந்திருந்தார். *Father* கூறுவதுபோல் பிரசாதத் தட்டல்ல *'In a very feable voice, it was heard clearly through the mike, he said, I will not sell my religion for politics"* என்று சொன்னார் ஆயர் அவர்கள்.

தந்தையவர்கள் தமிழ் மக்களின் உணர்வுகளை ஆழமாக அறிந்த ஒருவர். அவரைச் சுற்றிச் சூழ்கின்ற தமிழ்ப் பிரதிநிதி களும் தொண்டரும் பெரும்பான்மையானோர் கிறிஸ்தவர்கள் அல்ல. இந்து மக்களே தந்தை அவர்களின் நேர்மை, உண்மைத் தன்மை, தியாகப் பண்பு அனைத்தையும் அவரது நம்பகத் தன்மையை முற்று முழுவதாக ஏற்று அவர் பின்னால் சென்றவர்கள்தான் தமிழ் பேசும் இந்து மக்களும் கிறிஸ்தவர்களும்.

**தமிழ் ஈழம் - நாடாளுமன்றத் தேர்தல் - 1977**

தமிழ் ஈழம் பற்றிக் கூறும்போது சிறிமா அரசு பல்கலைக்கழக நுழைவிற்கு அறிமுகம் செய்த இன விகிதாசாரம்பற்றியும் பேசினேன் புள்ளிவிபரங்களோடு. எப்படி எம் தமிழ் மாணவர் கலாசாலைக் கற்கை நெறியில் ஓரங்கட்டப்படுகின்றார்கள். இறுதி யில் இது ஆபத்தாக முடியும். காலப் போக்கில் தமிழ் இனம் என்ற ஒரே காரணத்திற்காக பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்ட மாண வர்கள் ஆயுதம் ஏந்தும் நிலையும் ஏற்படும். என்றேன். இது 1977ம் ஆண்டு மாசி மாதம். ஆனால் எம் தலைவர்கள் தீவிரவாதிகள் அல்ல. அவர்கள் மிதவாதிகள். இத்தலைவர்கள் காலத்தில் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகள் இல்லை என்றால் ஆயுதம் ஏந்தும் அளவிற்கு இளைஞர்கள் தள்ளப்படுவார்கள். நாடு இரண்டாகத் துண்டாடப்படும் என்றேன்.

ஏற்கனவே 1957ம் ஆண்டில் அமரர். பண்டாரநாயக்கா தந்தை செல்வாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை கிழித்தெறிந்தார். நாடாளுமன்றத்தில் சொன்ன தீர்க்கதரிசனம். *'Today you are tearing this pact a day will come when you will have to tear the country into two."* அது நடாவாதிருக்க ஒரே வழி இன அடிப்படையில் மாணவர்களின் கற்கை நெறியில் கை வைக்கக்கூடாது. *State Colonization* கைவிடப்பட வேண்டும். எம் மொழி உரிமை மதிக்கப்பட வேண்டும். ஏன், இன்னும் பல சொன்னேன்.

இந்து மக்கள் தமிழ் பேசும் தமிழர் மட்டுமே. புத்த மக்கள் சிங்களம் பேசும் சிங்களவர் மட்டுமே. இஸ்லாம் மதத்தவர் தமிழ் பேசும் முஸ்லிம்கள் மட்டுமே. ஆனால் கத்தோலிக்கர், கிறிஸ்தவர்கள் நாமோ சிங்களம் பேசும் சிங்களவர்களாகவும், தமிழ் பேசும் தமிழராகவும் உள்ளோம். ஆகவே எங்கள் கையில் பாரிய பொறுப்பு எளிதான பொறுப்பு. ஒரு நியாயமான தீர்வுக்கு நாங்களும் ஏனோ தானோ என்றிருந்தால் நிச்சயம் ஆயுதப்போர் உருவாகியேயாகும். என்று முடித்தேன். அனைவரும் நான் சொன்னதைக் கேட்டு வாய் விறைத்துப் போனார்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையோர்கள்: தமிழ் ஈழம் வந்தால் எப்படி எல்லை அமைப்பீர்கள்?

நான் : ஏன் ஜேர்மனியை எடுத்துக்கொள்ளுங்கள் ஒரே மொழி, ஒரே கலாச்சாரம், இரண்டு கட்சிக்கொள்கை. ஒரு புறம் ஜனநாயகம் - மேற்கு ஜேர்மனி, மறுபுறம் நாத்திகம் *Communist* கிழக்கு ஜேர்மனி இரண்டாகப் பிரிந்தார்கள். இரண்டு வேறு வேறு நாடுபோல் இலங்கை அரசு இரண்டு நாடுகளையும் ஏற்றுக்கொண்டுள்ளது. உயர்ஸ்தானிகள் உறவையும் ஏற்படுத்த வில்லையா! இரு நாடுகளுடனும் ஏற்படுத்த வில்லையா?

எமது நாடு சிங்களவர், தமிழர், பறங்கியர், முஸ்லிம் என சிங்களம், தமிழ் ஆகிய இருமொழி பேசும் நான்கு இனத்தவர்களைக் கொண்டுள்ளது. ஆகவே கிழக்கிலே எல்லையாக ஊவா மாகாண மலைகளும், வடக்கிலே வாழைச்சேனை, மாங்கேணி, வாகரை, வெருகல் ஊடாகத் திருகோணமலையும், வவுனியா ஊடாக மண் மூரும் யாழ்ப்பாணமும் இணைக்கப்பட்டு, மதில் சுவர் எல்லையின் அடையாளம் என்றேன்.

திகைத்துப் போனார்கள். எதிர்ப்புத் தெரிவித்தார்கள். "ஏன் ஆத்திரம்" என்று கேட்டேன். தொடர்ந்துமாக ஒரே ஜேர்மனி இரண்டாகப் பிரிக்கப்பட்டு குருஸ்சோவ் சுவர் எழுப்பவில்லையா? இலங்கை அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லையா?

**டொனமூர் ஆணைக்குழு**

*(Donoyghmore Commission)*

டொனமூர் ஆணைக்குழு முன் கண்டி நாட்டின் பிரமுகர்கள் *(Kandyan Chiefs)* முன்வைத்த பிரேரணைகளில் அவர்கள் கூற்று இப்படி இருந்தது என்றேன்.

கண்டி நாட்டைப் பிரித்தானியா ஆட்சியாளர் இலங்கையின் ஏனைய பகுதியுடன் இணைத்தபோது கண்டிப் பிரதேசத்தை ஏற்கனவே கண்டிய அரசு ஆட்சி புரிந்தவாறே அவர்களுடைய கலை கலாச்சார முறைப்படி அனைத்தும் நடைபெறும் என்று செய்துகொண்ட ஒப்பந்தத்தை பிரித்தானியா அரசு மீறியது என்றும், ஆகவே இதைச் சுமூகமாகத் தீர்த்து வைப்பதற்கு அவர்கள் *Kandyan Chiefs* டொனமூர் ஆணைக் குழுமுன் வைத்த பிரேரணை இலங்கை நாட்டை மூன்று பிரதேசங்களாகப் பிரிப்பது அதாவது.

1. தமிழ்பேசும் மக்கள் வாழும் வடக்குக் கிழக்கை ஒரு பிரதேசமாகவும்
2. கிழக்கு மேற்குக் கரையோரப் பகுதியை ஒரு பிரதேசமாகவும்.
3. கண்டியை ஒரு பிரதேசமாகவும் அமைப்பது.

மூன்று பிரதேசங்களுக்கும் தன்னாட்சி அளிப்பது. ஆனால் ஒரு பிரதேசம் ஏனைய பிரதேசத்தை அடக்கி ஆளும் சந்தர்ப்பத்தை தவிர்ப்பதற்கு இம் மூன்று பிரதேசங்களையும் ஒரு மத்திய ஆட்சியின் கீழ் அல்லது மத்திய ஆட்சியின் மேற்பார்வையின் கீழ் அமைப்பது இதற்குப் பெயர்தான் Federalism

## *FEDERALISM*

தமிழர் தாயகம் - ஆகவே வடக்கும் கிழக்கும் தமிழ்பேசும் மக்களின் தனிப்பிரதேசம், தமிழர் தாயகம் என்று கூறியது முதன் முதல் கண்டி நாட்டை ஆட்சி செய்த கண்டிப் பிரமுகர்களே. *(kandyan Chiefs)* இவர்கள் நல்லாட்சி நடாத்திய அனுபவமிக்கவர்கள். மூன்றாகப் பிரகடனப்படுத்தப்படும் மூன்று பிரதேசங்களையும் மத்திய அரசின் மேற்பார் வையில் அமைப்பது. ஆகவே ஒரு சமஸ்டி அதாவது *Federal* ஆட்சி என்று முதன்முதல் கூறியதும் கண்டி நாட்டின் சிங்களப் பிரமுகர்களே!

இவர்கள் வெறுமனே இன்றுபோல் கூச்சல்போடும் பெரும்பான்மை இனத் துவேஷிகள் அல்ல. கண்டி எனும் தனி நாட்டை ஆண்டு அனுபவமிக்க ஆட்சியாளர்கள். துவேஷிகள் அல்ல. இவர்களின் ஆட்சி கிழக்கிலே மட்டக்களப்பையும், வடக்கிலே திருகோணமலையை எட்டி இருந்தது. ஆனால் கொலோனித்துவம் *(Colonization)* அதாவது

திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற திணிப்புகள் நடாத்தவில்லை.

எங்கள் மட்டக்களப்புப் பகுதியில் இன்னும் சிங்களப் பெயருடைய (தகப்பன்) தமிழ்பேசும் குடும்பங்கள் ஒன்றிரண்டல்ல. அநேகம் உள்ளன. நான் பணிபுரியும் அம்பிளாந்துறை தூய நல்லாசீர் மாதா கோயில் நிலத்தை எமக்கு விற்றவர் பிரேமதாச என்பவர். இவருடைய தகப்பனார் சிங்களவர், குடும்பமோ பரம்பரைத் தமிழ் இந்து மக்கள்.

**பிரிவினை வாதிகள் அல்ல**

தமிழர் நாம் பிரிவினை வாதிகள் அல்ல. நான் என்ன சொல்கின்றேன் என்றால் தமிழர் தந்தை செல்வநாயகமோ, அவருடைய சீடர்களோ, தமிழ் மக்களோ நாங்கள் பிரிவினை வாதிகள் அல்ல. துவேஷிகளும் அல்ல. சிங்கள ஆட்சியாளர்களே அத்தனையும், எங்கள் உணர்வுகளை முன் கூட்டியே இலங்கை அரசு (பிரித்தானியருக்கும்) பின்னர் சிங்கள ஆட்சியாளர்கட்கும் எடுத்துக் கூறிய கண்டிய அரசப் பிரமுகர்களை என்னவென்று மெச்சுவது? நல்லாட்சிக்கு இதைவிட அர்த்தமான செயற்பாடு வேறு எது?
இப்படி எல்லாம் பலதையும் பலகோணத்திலும், பலதையும் பேசி முடித்து அமர்ந்தேன்.

**கண்டி ஆயர்.**

முன்னை நாள் கண்டி மேதகு அமரர். ஆயர் லீயோ நாணயக்கார ஆண்டகை நன்றி கூறிச் சொன்னது. நீண்ட நெடுங்காலமாக பல தடவைகளில் எமது ஆயர் பேரவையில் தமிழர் பிரச்சனையை செல்வனே தீர்த்து வைக்க இப்பிரச்சனையை ஆழமாக ஆராய்ந் தறிய ஒரு குழுவை எம் மத்தியில் நியமிக்கும் படி கூறிவந்தேன். ஆனால் அது செவிடன் காதில் ஊதிய சங்குபோல ஆயிற்று. ஆயினும்,

**பாராட்டு**

*'Today, I see in Father joseph Mary a well researched indepth analysis of the Tamil Herat Burns. I am sure Father you would not have had the support of your superiors nor the Blessings of us Bishops. Thank you father. Keep up this good work. Don't expect praises but Brickbats"* என்றார். மேதகு கண்டி ஆயர் அமரர் லீயோ நாணயக்கார ஆண்டகை அவர்கள். நன்றி கூறிய அனைத்தையும் குழுமியிருந்த மேதகு ஆயர்கள், குருக்கள் துறவற சபைத் தலைவர்கள் ஆண்பாலாரும், பெண்பாலாரும் அனைவருமாகச் செவிமடுத்து கேட்டனர். பெரு மூச்செறிந்தவர்களும் இருந்தனர். "இப்படியென்றால் நாமும் இப்படித்தானே செய்திருப்போம்" என்று முணுமுணுத்ததும் என் காதில்பட்டது.

**இறுதியாக சபைத் தலைவர்.**

இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கியவர். கண்டியில் அம்பிட்டிய எனும் இடத்தில் அமைந்துள்ள தூய சவேரியார் குருமடத்தின் முன்னாள் தலைவர் அமரர். அருட்தந்தை ஜோ டி மெல அவர்கள். கூட்டம் முடிவில் எனக்கு நன்றியும் சொல்லி, அவரின் இறுதி வார்த்தைகள்.
*'Father, I apologise to you and through you to this Tamil Community For The Callous Disregard We Have Had About This Problem."*

**தந்தையும் முஸ்லிம் மக்களும்.**

அது மட்டுமல்லாமல் தமிழ்பேசும் முஸ்லிம் மக்களையும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஓர் அங்கமாக அணைத்தவர் தந்தை அவர்கள். கட்சியின் ஆரம்ப காலத்தில் கல்முனைப் பகுதியிலிருந்து ஒரு முஸ்லிம் நபர் திருவாளர் *M.C.* அகமட் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதியாக நாடாளுமன்றத்திற்கு தேர்ந் தெடுக்கப்பட்டது மறக்கொண்ணா வரலாறு.

"மதத்தால் நாங்கள் இஸ்லாம். மொழியால் நாங்கள் தமிழர்." என்ற மூதூர் முன்னை நாள் நாடாளுமன்ற அங்கத்தவரும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*S.L.F.P* பிரதி அமைச்சரமான மஜீட் அவர்களின் கருத்துக்கிணங்க கல்முனை, காரைதீவு வாழ் தமிழர்களையும், அப்பகுதி வாழ் முஸ்லிம் மக்களையும் ஒன்றிணைத்த மாபெரும் தமிழ் அரசுக் கட்சி மகாநாடு கூட்டிய பெருமையும் தந்தையுடையதே. காலம் பல போனதும் தந்தை அவர்கள் புகழ் பாடி கவிதை நூல் வெளியிட்டதும், முஸ்லீம் மக்களின் ஒப்பற்ற தலைவர் அமரர் அஷ்றப் அவர்கள்.

அதுமட்டுமல்ல அமரர் தந்தை செல்வா நூற்றாண்டு தொடக்க விழா 31.03.1997ல் முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான சட்டத்தரணி றவூப் ஹக்கீம் ஆற்றிய உரை தந்தை செல்வாவின் செல்வாக்கை தன்நிகரற்ற தலைமைத்துவத்தை பறைசாற்றுகிறது. அவர் சொன்னார், "இந்த நாட்டில் இருக்கின்ற சிறுபான்மை இனங்களின் தானைத் தளபதியாக நாங்கள் எல்லோரும் அடையாளங்காணும் தந்தை செல்வாவைப் பற்றிப் பேசத் தெரியாதென்று சொல்லும் எந்த முஸ்லிமும் இந்த நாட்டிலே இருக்க முடியாதென்று நான் நினைக்கின்றேன். இந்த ஆரம்ப நிகழ்ச்சியிலே எனக்குச் சொற்பொழிவாற்றக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை என் வாழ்க்கையிலே ஒரு பொன்னான வாய்ப்பாகவும் நான் கருதுகிறேன்."

**முஸ்லிம்களுக்கு சுய நிர்ணய உரிமை**

"தந்தை செல்வாவும் முஸ்லிம்களும்" என்று சொல்லும்பொழுது, என் நினைவிற்கு ஆயிரமாயிரம் விடயங்கள் வந்துபோகின்றன. வரலாற்றிலே படிக்கும் விடயங்கள் நிறைய இருக்கின்றன. திரும்பத்திரும்ப பலரும் எழுதும் விடயங்கள் ஆயிரம் இருக்கின்ற. புத்தளத்துப் பள்ளிவாயிலே முஸ்லிம்கள் பொலிசாரினால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டபொழுது அவர்களுக்காக குரல்கொடுத்த ஒரேயோரு பாராளுமன்ற உறுப்பினர். என்று அடிக்கடி நாங்கள் எல்லோரும் நினைவுபடுத்திக்கொள்ளும் ஒரு தலைவராக மட்டுமல்ல, இந்த நாட்டிலே வாழும் முஸ்லிம்களுக்கும் சுய நிர்ணய உரிமை உண்டு என்பதைத் தாம் தமிழ் அரசுக் கட்சியை தொடங்கி வைத்து ஆற்றிய முதல் உரையிலேயே அழுத்தம் திருத்தமாக சொல்லிவைத்த தலைவர் தந்தை செல்வா என்பதை நாங்கள் பெருமையுடன் நினைவு கூருகின்றோம். அதுமட்டுமல்ல தொடர்ந்துவந்த தனது அரசியல் நடவடிக்கைகளின்போதெல்லாம் வடக்கிழக்கிலே வாழும் முஸ்லிம்களின் அரசியல் தனித்துவத்தையும், அவர்களின் அந்தத் தனித்துவத்தை அங்கீகரிக்கவேண்டிய அவசியத்தையும் அடிக்கடி பேசிவந்த அரும்பெரும் தலைவராகவும் நாங்கள் அவரைக் காண்கின்றோம்.

இந்த நாட்டிலே வாழுகின்ற முஸ்லிம்கள் "தமிழர்கள்" என்ற வரையறைக்குள் வரவேண்டுமென்று ஒரு சிலர் அடம்பிடித்துக் கொண்டிருந்தபோது "தமிழ்பேசும் மக்கள்" என்றவார்த்தைப் பிரயோகத்தை உபயோகித்து முஸ்லிம்களுக்கும் தனித்துவம் இருக்கிற தென்று அடையாளங் கண்டு, இந்த நாட்டு முஸ்லிம்களையும் அரவணைத்துக் கொண்டு அரசியலில் ஈடுபட்டுப் பெருமை கண்ட அரும்பெரும் தலைவராக நாங்கள் தந்தை செல்வாவைக் காண்கின்றோம்.

**ஒற்றுமைப்பிணைப்பு.**

தந்தையின் பாசறையில் வளர்ந்த பலர் இங்கு இருக்கின்றார்கள். என்னுடைய கட்சித் தலைவருங்கூட அடிக்கடி மிகவும் அன்புடனும் நெருக்கத்துடனும் தந்தை செல்வாவுடைய அரசியல் பாசறையைப் பற்றிப் பேசுவார். அந்தப் பாசறையில் வளர்ந்தவர்கள் இன்று எங்களுடைய கட்சியிலும் இருக்கின்றார்கள். அவர்களுடைய அனுபவங்களைப் பற்றி நிறைய என்னிடத்திலே பேசி இருக்கிறார்கள். பொதுக் கூட்டங்களில் சிறப்புரை ஆற்றியிருக்கிறார்கள்." மேற்கூறப்

பட்டவை தந்தை செல்வா அவர்களின் விழாவை யொட்டி 31.03.1997 கதிரேசன் மண்ட பத்தில் அமைச்சர் றவூவ் ஹக்கீம் அற்றிய உரை.

என்றாலும்கூட எல்லாத் தமிழ் மக்களும் தந்தையை விளங்கியவர்கள் என்று கூறுவதற்கில்லை. அவர்களின் தீர்க்கதரிசனக் குரலை அன்று உணர்ந்ததாகவுமில்லை.

**மாவட்ட அரசியல் அதிகாரி**
*(District Political authority)*

சிறிமாவோ அம்மையாரின் ஆட்சிக்காலம் மாவட்டங்கள்தோறும் அரசியல் அதிகாரிகள் நியமானம் பெற்றார்கள் *(Political Authority) S.L.F.P* கட்சியைச் சேர்ந்தவர்கள்.

மட்டக்களப்பில் அரசியல் அதிகாரி அமரர். ராஜன் செல்வநாயகம் நியமனம் பெற்றார். அச்சுறுத்தல், அட்டகாசம் ஆங்கங்கே குண்டர் படை தலை விரித்தாடிய காலமது. இக்காலத்தில் தேர்தல் பிரசாரத்திற்காக தந்தை அவர்கள் மட்டக்களப்பிற்கு வருவதாக இருந்தது. இதை அறிந்த அரசியல் அதிகாரி யும் சகாக்களும் இதற்குத் தடை திட்டம் போட்டுவிட்டார்கள். அதாவது புகையிரத நிலையத்தில் ஆர்ப்பாட்டம். கறுப்புக் கொடி யும் தந்தைக்கு அவமதிப்பும்! மட்டக்களப்பில் இதை அறிய வருகின்றோம். எம்மில் சிலர் இவர்களின் இரகசியக் கூட்டம் காரணம்? ஏற்கனவே முதல் நாள் மகா நாட்டிற்கு வந்தி ருந்த அமரர்கள் நாடளுமன்ற அங்கத்தவர் களான தங்கத்துரை, தர்மலிங்கம் மிரட்டப் பட்டனர்.

ஆகவே அந்நாள் மட்டக்களப்பு மாநகர முதல்வர் *(MAYOR)* அம்பலவாணர். என் சகோதரர் அல்போன்ஸ் மேரி முன்னாள் மாகாண அங்கத்தவர் மாசிலாமணி இன்னும் துடிதுடிப்பான இளைஞர் சிலரும் அவசர ஆலோசனை தந்தையின் மானம் காப்பாற்ற மாற்றுத் திட்டம் அதிகாலை 3.00 மணிக்கு வாழைச்சேனை புகையிரத நிலைய அதிகாரி யுடன் இரகசிய முடிவு. தந்தை அவர்களைக் கல்குடா புகையிரத நிலையத்தில் இறக்கி எடுப்பது ஆகவே சற்றுநேரம் அவ்விடத்தில் புகைவண்டி தாமதிப்பது.

அதற்கிடையில் கல்குடாவில் இயேசு சபைத் துறவியரின் தென்னந்தோப்பு *"Jesuit Fathers' Kalkudah Estate (Jfk Estate)* என்னும் இடத்திற்குத் தந்தையை கூட்டிப்போவது புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் தான் இந்த இடம். புகையிரத நிலையத் திலிருந்து வாகனம் ஊடாக தந்தையை முன்னாள் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற அங்கத்தவரான அமரர் மாணிக்கவாசகரின் இல்லத்தில் சேர்ப்பது. இப்பொறுப்புமிக்க தொண்டை ஆற்ற திரு. அல்போன்ஸ் மேரி பணிக்கப்பட்டார். அனைத்தும் போட்ட திட்டப் படி வெற்றியாக நடந்தேறியது.

**ஏமாந்த கும்பல்**

மட்டக்களப்பில் புகைவண்டியின் வருகையைக் காத்து நின்றவர்கள் ஏமாந்து வீடு திரும்பியதுதான் மிச்சம். என்றாலும் மேயர் அம்பலவாணரும் அல்போன்ஸ் மேரியும் வந்த *Folkswagon* வாகனத்தை குண்டர்கள் இடைமறித்துத் துரத்தியும் வாகன ஓட்டி மேயரின் மைத்துனன் சண்முகத்தின் சாதுரியத்தால் தப்பினோம் பிழைத்தோமென அமரர் அம்பலவாணரும் என் சகோதரரும் இந்த அனுபவத்தை அவர்கள் அடிக்கடி அனைவருடனும் பகிர்ந்து கொள்வார்கள்.

**தந்தையும் மலையக மக்களும்.**

தந்தை அவர்களின் அக்கறை கிழக்கு, வடக்கு வாழ் ஈழத் தமிழர் மட்டுமல்ல. நாடு கொழிக்க, செழிக்க நாளும் பொழுதும் வெயிலிலும் மழையிலும் மலையேறி இறங்கி கொழுந்து பறித்து வறுமைக்கோட்டின் கீழ் படாதபாடுபட்ட மலையகத் தமிழர் மேலும் என்றால் மிகையாகது. மலையகத் தொழிலாளர் சார்பில் இரண்டு துருவங்களாக முரண்பட்டு செயலாற்றிய இரு கட்சிகளில்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒன்று (C.W.C) இலங்கைத் தொழிலாளர் கட்சி அமரர் தொண்டமான் தலைமையில் இரண்டாவது அமரர் அசீசையும் தலைமை யாகக் கொண்ட இலங்கை ஜனநாயக தொழிலாளர் கட்சி. இவ்விரு துருவங்களையும் மட்டக்களப்பு மாநகர மண்டபத்தில் ஒருங்கி ணைத்த பெருமையும் தந்தையின் பெரும் சாதனையே.

பிரஜா உரிமை பறிபோன வேளையில் தன்னந்தனியாக அந்த அநியாயத்தை எதிர்த்து, பல் இன, பல் மத மக்கள் வாழும் இலங்கைத் திருநாட்டில் நூற்றாண்டு கலாமாக வாழும் ஏழை மக்களின் வாக்குரிமையை மறுப்பதும் பறிப்பதும் அடாத்தான செயல், அநீதியுமான செயல், ஆண்டவனுக்கு ஒவ்வாதது. என்று கூற்றை அவர் நாடாளு மன்றத்தில் இவ்வாறு எடுத்துரைத்தார்.

"இந்திய மக்கள் கோருவதும் ஏனைய மக்களைப் போன்ற குடி உரிமையையே அல்லாது கண்டி மக்களிலும் பார்க்க மேலான உரிமைகளை அல்ல. அது போல தங்கள் மொழி உரிமை முதலிய இன இயல்புகளைப் பேணிக் காக்கும் உரிமை எந்த இனத்திற்கும் எந்த சிறுபான்மை இனத்திற்கும் உண்டு. இவ்விதம் தன் தனித்தன்மையை காத்து ஏனையோரின் உரிமைகளில் அத்து மீறாத வாழ்க்கையையே அவர்கள் விரும்புகிறார்கள். இதையிட்டு சிலர் புகைச்சல்கொண்டு குடியுரிமை வழங்க மறுத்து நிற்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**குடியுரிமை மசோதா.**

இந்திய மக்களின் கோரிக்கை மேலதிக்கமானவை அல்ல. இவை மிகவும் நியாயமான கோரிக்கைகள் என்பதை இங்கு கூற விரும்புகிறேன். இவ்வித விடயங்கள் ஏனைய நாடுகளில் மிகவும் நியாயமான வழியில் தீர்க்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த வழிமுறை இங்கு நிராகரிக்கப்பட்டுள்ளது. **இந்தப் பாரிய அநீதி இந்திய மக்களுக்கு எதிராக நடாத்தப்படவில்லை. இது எல்லாச் சிறுபான்மை இனங்களுக்கும் எதிராக நடாத்தப்படும் அநீதியாகும்.**

இங்கு குடியுரிமைச் சட்டத்தைத் தொடர்ந்து இனி வரப்போவது மொழி உரிமைச் சட்டமாயிருக்கும். அப்போது எங்கள் நிலை என்ன என்பதை நாங்கள் மேலும் அறிவோம். அத்துடன்தானும் இந்தத் தொடர் நின்றுவிடப்போவதில்லை. எதுவாயினும் இங்கு இவ்வேளை நாடாளுமன்றத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புவது இந்தச் சட்டமானது இனங்களிடையே ஏற்படக்கூடிய வேறுபாடுகளையே, கஸ்டங்களையோ உயரிய கோட்பாட்டுடன் தீர்க்கவல்லதாக அமையவில்லை. இதன் காரணமாக இதனை நான் எதிர்க்கிறேன். இது இந்தியப் பாகிஸ் தானிய குடியிருப்போர் பிரஜா உரிமைச் சட்டம் 1950ம் ஆண்டுகளில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது தந்தையின் விவாதம்.

**தந்தையுடன் தெல்லிப்பளையில்**

சிறிமாவோ ஆட்சிக் காலத்தில் நாடாளுமன்ற அங்கத்தவரும் அரசியல் சட்ட நிபுணருமான திரு. கொல்வின் ஆர்.டி சில்வா போன்றோர் தலைமையில் இலங்கைக்கு புதிய அரசியல் திட்டம் தீட்டப்பட்டது.

அத்திட்டம் தமிழருக்கென சட்ட ரீதியாக இருந்த சிறிய பாதுகாப்பையும் 29ம் சரத்து நீக்கியதுமாய் வேறு உத்தரவாதம் எதுவும் அற்றதுமாய் அமைக்கப்பட்டு நாட்டின் புதிய அரசியல் திட்டமாக நாடாளுமன்றம் ஏற்றுக் கொண்டது.

இதை எதிர்த்து நாடாளுமன்றத்தில் தந்தை எழுப்பிய குரலும் வாதமும் செவிடன் காதில் சங்காகப் பலன் தரவில்லை. தந்தை உடனே தம் ஆசனத்தை இராஜினாமா செய்கிறார்.

மேலுமாக இதே அரசியல் திட்டத்தை முன்வைத்து தமது தொகுதியில் போட்டியிட்ட அரசுக்கு சவால் விடுக்கின்றார். இரண்டு மூன்று ஆண்டுகளாக இழுபட்டு இறுதியில் 1975ம் ஆண்டு மாசி மாதம் 5 அல்லது 6ல்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தேர்தல். தந்தையை எதிர்த்து அமரர் திருவாளர் ஜி. பொன்னம்பலம் Communist கட்சி சார்பில் அங்கு அவரது மேடையில் பீற்றர்கெனமன் கொல்வின் R.D.சில்வா N.M.பெரேரா போன்ற இடது சாரிகள்.

**தந்தையின் மேடையில் நான்.**

கடல் போல் மக்கள் வெள்ளம் நாமெல்லோரும் தந்தையோடு தந்தை நம்மோடு. என்ற உண்மையை ஆணித்தரமாக உலகுக்கு எடுத்துரைக்க தந்தையின் மேடை! அமரர்கள் உடுப்பிட்டி சிவசிதம்பரம், முல்லைத்தீவு செல்லத்தம்பி, கட்சியின் சிந்தனைச் சிற்பி கோப்பாய் கதிரவேற்பிள்ளை, தளபதி அமிர்தலிங்கம், அடலேறு ஆலாலசுந்தரம், சொல்லின் செல்வர் மட்டக்களப்பு இராசதுரை, அண்மையில் சிறை மீண்ட செம்மல் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், என் சகோதரர் இவர்களோடு மட்டக்களப்பைச் சேர்ந்த நானும், கத்தோலிக்கக் குரு. இயேசு சபைத் துறவி, (Jesuit) இயேசு சபைச் யோசப் மேரி சுவாமிகள், பேசுவதற்கு எனக்கு ஒதுக்கப்பட்ட பொன்னான நேரம் வந்தது. அலைபோல் திரண்ட மக்கள் வெள்ளத்தைப் பார்த்து பயம் ஒருபுறம் பெருமிதம் மறுபுறம் தந்தை அருகில் நான். நான் சொன்னேன்.

இது உங்கள் எல்லோருக்கும் இன்றியமையாத அரசியல் மேடை. நீண்ட காலம் நாம் நடக்குமோ நடக்காதோ என்று ஏங்கியிருந்த காலம். இன்று நிறைவுறும் பெரும் நாள். இதுதான் உண்மை. "என்றாலும் எனக்கு இது இன்று ஓர் சத்தியமேடை. அநீதிக்கு எதிராக குரல் கொடுக்கும் சத்தியமேடை" எனத் தந்தைக்கு சிரம் தாழ்த்தி மேடையில் வீற்றிருந்தோரை விழித்து பேராறாம் மக்களை வாழ்த்தித் தொடர்ந்தேன்." இது, எனக்கு அரசியல் மேடை இல்லை என்றேன். நீதி நிலைநாட்ட தமிழர் நாம் ஒன்றுகூடி அநீதியை ஒழி! நீதியை நிலைநாட்டு! எனக் கூறும் உண்மை மேடை இது" என்று ஆதாரமும் முன்வைத்தேன். அண்மையில் நடந்துமுடிந்த கத்தோலிக்கத் திருச்சபையின் 2ம் வத்திக்கான் சங்கப் பேரவையின் அறைகூவல். அகிலம் எங்கணும் மக்கள் சமாதானமாய், சந்தோஷமாய் வாழவேண்டும். இல்லாத பட்சத்தில் துணிவுடன் ஏன் என்று கேட்டு, நிவர்த்தி செய்யவேண்டும். என அறைகூவல் விடுக்கிறது. அகில உலக கத்தோலிக்க அதிகார பீடம். அதாவது,

மனிதனின் அடிப்படை உரிமைகளைப் பொறுத்தவரையில் பால், இனம், நிறம், சமூக நிலை, மொழி, சமயம் அகியவை காரணமாகப் பாகுபாடு காட்டும் எந்த முறையையும் வெறுத்து ஒதுக்கி வேரோடு களைய வேண்டும். இது கடவுளின் திட்டத்திற்கே எதிரானது

(இன்றைய உலகில் திருச்சபை - எண் 29. 2ம் வத். ஏடு)

என பாப்பரசருடன் அகிலம் முழுவதுமான கத்தோலிக்க ஆயர்கள் இரண்டாயிரத்து ஐநூறு பேருடன் மேலுமாக அவர்களின் ஆலோசகர்களும் இணைந்து எடுத்த முடிவுதான் நான் உங்களோடு பகிர்ந்து கொண்டது. இது 1965ம் ஆண்டில் வெளியானது. ஆனால் எங்கள் தந்தையோ இற்றைக்குப் பல ஆண்டுகட்கு முன்பே இவ்வுண்மையை நாடறிய நாநிலமறிய தீர்க்கதரிசனம் செய்து விட்டார் என்றேன். இனி இல்லை என்ற கரகோஷமும் குரல் ஒலியும் அதுமட்டுமல்லாது பல தடவைகள் சிறைசென்ற செம்மல்களின் செம்மலானவர் எம் தந்தை என்றேன் மீண்டும் பேரொலியும் கரகோஷமும்.

வாழ்க தந்தை... பல்லாண்டு
வாழ்க தந்தை.
காண்போம் தமிழ் ஈழம்
மீட்போம் தமிழர் தாயகம்

இவ்வேளை பரபரப்புச் செய்தி. அடுத்த மேடையில் படுபொய்! நீண்ட முடியும் காவிப் போர்வையுடனும்... அவர் கத்தோலிக்க குரு அல்ல! இராசதுரை தன் சகோதரனை அவ்வாறு வேடம் உடுத்தி மக்களை ஏய்க்கின்றார்!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இது என் காதுக்கு எட்டியதும் இதை நான் மறுத்தேன். என்பெயர் சொல்லி என் இனம் சொல்லி, என் மதம் சொல்லி, பணித் தளம் சொன்னேன். விலாசமும் சொன்னேன். என் மக்களுக்கல்ல, அடுத்த மேடைக்கு அவர்களின் காதுக்கு எட்ட! பொய்யைப் பொய் என்று சொல்ல!

அரசியல் மேடையல்ல. எனக்கு இது சத்திய மேடை! என்று சொன்னேன்.

**மேயர் துரையப்பாவும் வேட்பாளர் வி. பொன்னம்பலமும்.**

அடுத்த நாள் சிற்றூர் விளானில் அறிந்தவர் களைச் சந்திப்பதற்காகச் சென்று கொண்டிருந்தேன். வேறு இருவருடன் போகும் வழியில் விளான் சந்தியில் என நினைக்கிறேன். தந்தையுடன் போட்டியிடும் வி. பொன்னம் பலமும், மேயர் அலபிறட் துரையப்பாவும் சந்தியில், என்னைக் கண்டதும் என்னை அழைத்துச் செல்பவர்களைக் கூப்பிட்டு இன்று பிரசாரம் (Canvassing)செய்யமுடியாது. ஆயருக்கு அறிவிப்போம் என்று சொல்லி யுள்ளார்கள்.

அதற்கு இவர்கள் அளித்த பதில்.

"*Father* அவர்கள் இயேசு சபைக் குருவானவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். ஆயர் ஒன்றும் செய்யமுடியாது"

சிலகாலம் தாழ்த்தி இயேசுசபை மேலாளரின் அவசர அழைப்பு திருகோணமலையில் சீனக் குடாவில் புனித அந்தோனியார் ஆலயப் பங்குத் தந்தை நான். இரண்டு மூன்று நாட்கள் கழிந்ததும், இலங்கை இயேசு சபை மேலாளர் அருட்தந்தை *Vernon Byser* உடனே தன்னை வந்த கொழும்பில் சந்திக்க வேண்டும் என்றார். நானும் கொழும்பிற்குச் சென்றேன். இயேசு சபைத் தலைமைப் பீடம் பம்பலப் பிட்டியல் இருந்தது தந்தையவர்களைச் சந்திக்கின்றேன். யாழ்ப்பாணத்தில் என்ன நடந்தது என்று கேட்டார்.

உங்கள் உத்தரவோடுதான் போனேன். என்றேன். அதுதான் அங்கு என்ன நடந்தது. உம்மைப்பற்றி முறைப்பாடு வந்துள்ளது என்றார். ஆம் அங்கு தந்தை செல்வநாயகத்தின் தேர்தல் மேடையில் நானும் பேசினேன். என்றேன் நீர் என்னிடம் அப்படிச் சொல்ல வில்லை. பார்வையாளராகத்தான் போவதாகச் சொன்னீர் என்றார்.

ஆம் என்னை மன்னியுங்கள் *Father* என்றேன்.

தொடர்ந்துமாக அந்த மேடையில் நான் அரசியல் பேசவில்லை. நான் சொன்னது இது அநீதிக்கு எதிராக குரல் கொடுக்கும் மேடை உங்கள் எல்லோருக்கும் இது அரசியல் மேடை. எனக்கோ இது நீதி கேட்கும் சத்திய மேடை. அதுமட்டுமல்ல அண்மையில் 2ம் வத்திக்கான் சங்கம் வெளியிட்ட இன்றைய உலகில் திருச்சபை என்னும் ஆவணத்தின் பகுதியையும் படித்துக் காட்டினேன்.

அடுத்த மேடையில் என்னைப் பற்றிச் சொன்ன அவதூறையும் எடுத்துச் சொன்னேன் அதாவது நான் கத்தோலிக்கக் குரு இல்லை என்றும் மட்டக்களப்பு M.P. இராசதுரை தன்னுடைய சகோதரனை காவி போர்த்தி கத்தோலிக்க குரு போல் மேடையில் ஏற்றியிருக்கின்றார் என்பதுதான் அது. அதற்கு நான் மறுப்புத் தெரிவித்தேன் - ஊர் சொன்னேன் பெயர் சொன்னேன். கத்தோலிக்க இயேசு சபைக் குரு என்று சொன்னேன். எனக்குக் காதுகொடுத்த மேலாளர் அருட்தந்தை *Revend. Father Vernon* (வேணன்) என்னை மெச்சினார் இப்படியான சந்தர்ப்பம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. நீ நன்றாகச் செய்துள்ளாய். பயப்பாடதே. சொல்லெறி விழும், கல்லெறி விழும் அஞ்சாதே கத்தோலிக்கத் திருச்சபையின் கோட்பாட்டை விசேடமாக அநீதிக்கு எதிரான செயற்பாட்டை எதிர்த்து நில். தயங்காதே சென்று வா. *May God Bleess You. 'I admire your leader Mr. Chelvanayagam* என்று முடித்தார்.

**முல்லைத் தீவில் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை.**

சில காலம் தாழ்த்தி முல்லைத்தீவு ஆலய விழாவிற்கு சென்றிருந்தேன். அங்கு

ஆயர் அமரர் தியோகுப்பிள்ளை ஆண்டகை என்னைச் சந்திக்கின்றார். 1976ம் ஆண்டில் அவர் சொன்னது. நீர் எமது வயது முதிர்ந்த குருக்களை குழப்பிவிட்டீர் இங்கு நீர் வரலாம். ஆலய விழாக்கள் ஆன்மீக கருத்தரங்குகளுக்கு அரசியல் பேசுவதென்றால் வரவேண்டாம்."

எனவே புரிந்துகொண்டேன். ஆயர் அவர்கள் தான் என்னைப்பற்றி எனது தலைமை பீடத்திற்கு முறைப்பாடு செய்துள் ளார் என்று ஆனால் ஆயர் அவர்களின் பெருந்தன்மை என்னவென்றால் அதே ஆயர் அமரர் தியோகுப்பிள்ளை ஆண்டகைதான் 1977ல் றாகமை தேவதத்தையில் இலங்கை ஆயர் மன்றம் என்னை அழைத்தபோது, தந்தை அவர்களின் உண்மைத் தன்மை, தீர்க்கதரிசனம் பற்றி நான் அன்று பகிர்ந்து கொண்டபோது, யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஆயரும் கண்ணால் கண்டு காதால் கேட்டு தந்தையின் பெருமையை எடுத்துரைத்தது. பின்னர் யாழ்ப்பாணம் திரும்பியதும் நான் ஆற்றிய உரை பற்றி தமது குருக்களோடு பகிர்ந்து தந்தையின் பெருமையைப் பாராட்டியதுமன்றி எனது பகிர்வையும் பாராட்டியதாகக் கேள்விப்பட்டேன்.

### கூட்டாச்சிக்கு தந்தையின் அறைகூவல்

அன்று தந்தை அவர்கள் இலங்கை அரசுக்கு விடுத்த அறைகூவல் இன்றுபோல் உள்ளது. ஆனி மாதம் 14ம் நாள் 1956ம் ஆண்டு நாடாளுமன்றத்தில் அமைதியான அறைகூவல் நாமும் செவிகொடுப்போம்.

"கூட்டாட்சி அரசியல் இந்நாட்டுக்கு மிக உகந்த ஒன்றாகும். அந்த முறையை இங்கே மிக நன்றாகச் செயற்படுத்த முடியும். இந்த அரசியல் முறை பல நாடுகளில் திறமையாய் செயற்பட்டு வருவதைக் காண்கிறோம். ஜனநாயகத்தைத் தழுவிய இந்த முறையை நாடு பிரிவதற்கே இடமில்லை. நாடு பிரிவதென்றால் அவை இரண்டு தன் ஆதிக்கம் கொண்ட நாடுகளாகவே பிரியலாம். ஆனால் ஒரு மத்திய அரசின் கீழ் தங்கள் வித்தியாசங்களுக்கு நல்ல தீர்வைக் கண்டு ஒன்றுசேர்ந்து இருக்க முடியும்.

அப்படி ஒன்றுசேர்ந்து இருக்கும் போது, மத்திய அரசுக்கு என்று சில அதிகாரங்களும் மாநில அரசுக்கென்று சில அதிகாரங்களும் இருக்கும். நாட்டின் நலனைக் கருதி, இவைகளைப் பிரச்சனை இன்றித் தீர்த்துக்கொள்ளலாம். இப்படி மாநிலங்கள் ஒன்று சேர்ந்து ஒரே நாடாக இயங்குவதை நாட்டைப் பிரித்தல் என்று சொல்வது தப்பான தாகும். அப்படி ஒரு கூட்டாட்சி ஒற்றுமை நாட்டில் இருக்கின்ற சிறுபான்மையினரின் எத்தனையோ உரிமைகள் நன்றாகக் காப்பாற்றப்படுவதற்கு உத்தரவாதமாகும். இதனால் அந்நாட்டின் தன்னாதிக்கத் தன்மை ஒரு போதும் குறைக்கப்படுவதில்லை.

(இந்த அறைகூவல் அரச கரும மொழி மசோதா நாடாளுமன்றத்தில் சமார்ப்பிக்கப்பட்ட போது தந்தை ஆற்றிய பேருரை). இவ்வாறான ஒரு தந்தையை தமிழ் ஈழம் என்ன இலங்கைத் திருநாடே பெற்றதையிட்டு பெருமை கொள்வோம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பேராசிரியர். செ. யோகராசா

# மட்டக்களப்பு பிரதேச தமிழ்த் தேசியக் கவிஞர்கள்

ஈழத்தில் ஏறத்தாழ ஐம்பதுகளிலே தமிழ் உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டே தமிழ்த் தேசிய உணர்ச்சியின் முகிழ்ப்பு உருவானது என்பது அரசியல் ஆர்வலர் அறிந்த விடயமே. இத்தகைய மொழி உணர்ச்சியைத் தூண்டி வளர்த்ததில் கவிதைகளின் பங்களிப்பு கணிசமானது. இவ்வடிப்படையில் குறிப்பாக, (சென்ற நூற்றாண்டில்) ஐம்பதுகள், அறுபதுகள் காலப் பகுதி மிகமுக்கியமானது. இக்காலப் பகுதியில் முக்கியமான கவிதைப்போக்கு மொழி உணர்ச்சி என்பது இலக்கிய ஆர்வலறிந்த விடயமே.

இடைப்பிறவரலாக, இன்னுமொன்று ஈழத்தில் நாற்பதுகளின் பிற்பகுதியிலே நவீன கவிதை தோற்றம் பெற்றிருந்தாலும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மலையகம், மன்னார், வவுனியா என அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் முதன்முதலாக நவீன கவிஞர்கள் நவீன கவிதைத் துறையில் பிரவேசிப் பதற்குக் களமமைத்துக் கொடுத்ததும் இம்மொழி உணர்ச்சி வெளிப்பாடேயாகும்.

மேற்கூறிய விதத்தில் ஏறத்தாழ ஐம்பதுகள், அறுபதுகள் காலப்பகுதியில் யாழ்ப்பாணக் கவிஞர்களுள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சச்சிதானந்தன், தில்லைச்சிவம், மகாகவி, இ.முருகையன் முதலானோரும் திருகோணமலையிலிருந்து தாமரைத்தீவான், நிலா தமிழின்தாசன், அண்ணல், அற்புதராசா குரூஸ் முதலானோரும், மலையகத்திலிருந்து சக்தி அ.பாலையா, பரமஹம்சதாசன் முதலானோரும் வவுனியாவிலிருந்து வன்னியூர்க்கவிராயரும், மன்னாரிலிருந்து புலவர் குழந்தையும் மொழி உணர்ச்சிக் கவிதை எழுதியோருள் முக்கியமானவர்கள்.

மட்டக்களப்பை பொறுத்தவரையில், இராஜபாரதி, ஜீவா ஜீவரத்தினம், ஆரையூர் அமரன், நீலாவணண், எருவில் மூர்த்தி, திமிலைத் துமிலன், பாண்டியூரன். வாகரை வாணன், சி.மௌனகுரு, கல்முனை நோ.ராசம்மா, புரட்சிக் கமால், செ. குணரெத்தினம், ஆ.மு.சி வேலழகன், அரியநேந்திரன், அண்ணாதாசன், செங்கதிரோன், செ.சிவானந்ததேவன், செ. பத்மநாதன், மாலா ராமச்சந்திரன் என்றவாறு நீண்டு செல்லும் பட்டியலுண்டு.

தமிழரசுக் கட்சியின் தோற்றமும் சுதந்திரன் பத்திரிகையின் வரவும் ஒரு புறமும் சிங்கள மொழிமட்டும் சட்டமும் இனக் கலவரமும் இன்னொரு புறமும் பாரதிதாசன் முதலானோரின் கவிதைகள் பிறிதொருபுறமும் சத்தியாக்கிரகம், கச்சேரி சுற்றிவளைப்பு முதலான நடைமுறைச் செயற்பாடுகள் வேறொரு புறமுமாக மொழி உணர்ச்சி ஈழத்துக் கவிதைகளில் அக்கினியாக மூண்டெழ வழிவகுத்திருந்தன. அறுபதுகளிலே வெளிவந்த "தமிழ் எங்கள் ஆயுதம்" என்ற கவிதைத் தொகுப்பு நூலின் வரவு இத்தகைய கவிதைப் போக்கிற்கான உன்னத வெளிப்பாடு எனில் மிகையன்று.

மேற்கூறிய கவிஞர்கள் அனைவரதும் கவிதைகள் ஒத்த தரமுடையவன்று. அவ்வாறு அமையவும் இயலாது.

மேற்கூறிய மொழி உணர்ச்சிக் கவிஞர்களுள் கணிசமானோர் மட்டக்களப்பு பிரதேசக் கவிஞர்கள் என்பதும் போகிறபோக்கில் நினைவு கூறப்பட வேண்டியதொன்று.

இவ்வேளை வசதி கருதி மட்டக்களப்பு பிரதேசக் கவிஞர்கள் மட்டும் அவர்களை சிலர் மட்டுமே கவனத்திற்குள்ளாகின்றனர். ராஜபாரதி, நீலாவணன் ஆரையூர் அமரன், புரட்சிக்கமால், சி.மௌனகுரு, கல்முனை நோ.ராசம்மா, எருவில் மூர்த்தி, கவிஞர் காசி ஆனந்தன் என்போரே அவர்களாவர்.

இராஜபாரதியின் உணர்ச்சிக் கவிதைகளுள் (இன்று வரை தொகுப்புருப் பெறவில்லை) சில, ஈழம் முழுவதும் பிரசித்தமானவை எ-டு:

"கோடையிலே எரிவெயிலிற் காயும் போது
கொப்பளித்து தமிழ்வெள்ளம் தோய வேண்டும்
வாடை தரு மூதலிலே நடுங்கும் போது
வயந்த தமிழ்க் கதிரென்னைக் காய வேண்டும்!

பாடையிலே படுத்தூரைச் சுற்றும் போது
பைந்தமிழின் அழுமோசை கேட்க வேண்டும்
ஓடையிலே என் சாம்பர் கரையும் போது
ஒண்தமிழே சலசலத்து ஓட வேண்டும்!"

இதே பாணியிலான கவிதை கவிஞர் சச்சிதானந்தனாலும் பாடப்பட்டுள்ளது. யார் முதலிற் பாடியவரென்பது ஈழத்துக் கவிதையுலகின் சர்ச்சையாக இன்றுவரையுள்ளது. (முன்னாள் "மல்லிகை" சஞ்சிகையில் இதுபற்றிய விவாதம் அந்நாள் இடம் பெற்றிருந்தது. கவிஞர் யுவனும் (பொத்துவில்) பின்னாலே இத்தகைய பாணியிலான கவிதையொன்று எழுதியுள்ளார். எனினும் இம்மூவரது கவிதைகளும் சிறப்புடையன என்பது சர்ச்சைக்குரியனவன்று.

நீலாவணனின் மொழியுணர்ச்சி கட்டு மீறியது. (கவிதையின் தரத்தைக் கூட, கேள்விக் குள்ளாகுவது) உ+ம்:

"எண்ட எண்ட
எதிர்மான சிங்க(ள)மே
பண்டெங்கள் பட்டிருப்பின்
பாவத்தால் வந்துதித்த
கண்டாளி............"

எருவில் மூர்த்தியின் முக்கியத்துவம் இன்னொரு விதத்திலானது அவர் அக்கால மொழி உரிமைப் போராட்டத்தின் முதற்களப்பலி என்று கருதத்தக்கவர். அதாவது, அக்காலப் பகுதியில் தெருவில் (?) யதேச்சையாக ஏற்பட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பாக்கிச் சூட்டிலே கண்பார்வை இழந்தவரவர். குறிப்பாக, சிங்கள மொழி கற்பதற்கெதிராக அவரெழுதிய கவிதைகளால் ஈர்க்கப்பட்டு சிங் களமொழி கற்காது விட்டவர் பலருள்ளரென்பர்.

மொழியுணர்ச்சி இன, மத பேதமின்றி அக்காலக்கவிஞர் பலரையும் ஈர்த்திருந்து என்பதற்கு நல்லதொரு எ-டு: கவிஞர் புரட்சிக் கமாலாவார். அவரெழுதிய கவிதையின் ஒரு சிறு பகுதி, இது:

"புலிநிகர் இளைஞரின் பொன்னிலா மகளிர்
பொங்கி எழுந்து புயலெனக் கிளர்ந்து
எங்கும் உணர்வை ஏற்றுக, திரள்க"

இன்று பின்நோக்கிப் பார்க்கின்ற போது மேற்கூறிய மட்டக்களப்பு கவிஞர்கள், பலருள்ளும் தனித்துவ மாணவர்கள் இருவர். இவர்களுள் ஒருவர் ஆரையூர் அமரன். அவரது கவிதைகளுள் கணிசமானவை அன்று நடை பெற்ற ஊர்வலங்களின்போது மக்களால் பாடப் படுமளவிற்கு நன்கு பரவியிருந்தன. உ+ம்:

அழைப்பு
(வழி நடைச்சிந்து)

"புறப்படு-புறப்படு-புறப்படு
அறப்போர் செய்யப் புறப்படு
அணிவகுத்து நின்றிடு
இறக்க வேண்டி நேரினும்
ஈட்டி போலப் புறப்படு!
(புறப்படு)

வடக்கும் கிழக்கும் சேர்ந்தது
வலிவு பெற்று நிற்குது
அடக்கு முறையை அடக்கிட
ஆணும் பெண்ணும் சேர்ந்திடு!

படைகள் சீறிப்பாயினும்
தடைகள் நூறு போடினும்
மடை திறந்த வெள்ளமாய்
மக்கள் ஒன்று கூடிட
(புறப்படு)

திடுதிடுத்து வெடியது
திசைகள் எட்டும் பாயினும்
திடம் படைத்த நெஞ்சோடு
திரண்டு நின்று எதிர்த்திட!
(புறப்படு)

குண்டாந்தடி கொண்டு நம்
குருதிபாய அடிக்கினும்
தொண்டர் பொறுமை தாங்கியே
நின்று வலிமை காட்டி!
(புறப்படு)

மேற்கூறியவாறான பாடல்கள் அக்காலம் பிரசித்தி பெற்றிருந்த திரைப்படப்பாடல் மெட்டுக் களிலும் அமைந்திருந்தமை காரணமாக மக்கள் மத்தியில் பிரபல்யமாவதற்கு வாய்ப்பாக விருந்தமை குறிப்பிடடித்தக்கது. பின்வருவது அதற்கேற்ற உதாரணம்:

மெட்டு: காட்டுக்குள்ளே கண்ட பூ
"மோட்டார் தன்னில் போட்ட சிறி
நாட்டைக் கலக்குது - இந்த
நாட்டைக் கலக்குது - அதன்
சலசலப்பு வேசங்கண்டு
சந்தி சிரிக்குது - இந்த
சந்தி சிரிக்குது

உலையைப் போல உளமிருந்து
உறுமிக் கொதிக்குது - எங்கும்
உறுமிக் கொதிக்குது - மொழி
உணர்ச்சி மீறி உயிரைக் கொடுக்க
உளமும் நாடுது - எங்கள்
உளமும் நாடுது"

மொழியுணர்ச்சிக் கவிதைக் காலத்தில் குதித்த கவிதைகள் பற்றி அதிகமறிய முடியாத நிலையில் கல்முனை.நோ.இராசம்மா அக்குறை யைப் போக்குபவராக மிளிர்கின்றார் என்பதனை அண்மையிலே இனங்கண முடிந்தது. அக்காலப் பகுதியில் அவரெழுதிய கவிதையொன்றின், ஒரு பகுதி:

"எழுத்தார் செயல் புரிந்தார் - இனி
ஏது தடை எமக்கு
எழுந்தார் படை திரண்டார் - இனி
என்றும் இணை பிரியார்
கடந்த பகை மறந்து இனம்
காக்க வகை கண்டார்
கிடந்த குகை நிலை வாழ் தமிழ்
இனியே மொழி விழியே"

பாரதிதாசனின் வகுப்புக்குரிய "சீடரான" உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் புகழ்

ஈழத்தில் மட்டுமல்ல, தமிழகத்திலும் பரந்திருந்தது. அறுபதுகளிலேயே "தமிழ் ஈழம்" பற்றிக் கனவு கண்டவரவர். அவரது "தமிழன் கனவு" என்ற காவியத்திலிருந்து......:

"மண்ணில் அரசுடன் நிற்கவும் - தமிழ்
மக்கள் படையுடன் வாழவும்
விண்ணிடை ஊர்தி செலுத்தவும் - நம்
வில்கயல் வேங்கை பறக்கவும்
அன்னியர் கண்டு கலங்கிட - தமிழ்
ஆயுதச் சாலை விளங்கவும்
கண்ணிடைக் கண்ட கனவுகள் - என்
காலத்தில் இங்கு நடக்குமோ?

பின்நாளில் மாக்சிச நோக்குடையவராக மாறிய (பேராசிரியர்) சி.மௌனகுரு அந்நாளில் முக்கியமானதொரு மொழியுணர்ச்சி கவிஞர், இரத்தத் திலகமுமிட்டவர். அவ்வேளை அவரெழுதிய பட்டப்பகல் தன்னில் பாவலர்க்குத் தோன்றுவது என்ற கவிதை சுவாரஸ்யமானதொன்று. பாரதிதாசன் பாணியில் அவரெழுதிய கற்பனா ரீதியிலான "சரித்திரக்கதை" கொண்ட அக்கவிதையிலே பின்வரும் பகுதி இடம் பெறுகிறது.

"ஒன்றுண்டு சந்தேகம் வாழ்வதற்கு
எப்படியும் தமிழருக் கென்றோர் நாடு
இருந்தால்தான் இப்படியாய் வாழ்வோம்"

கவிஞர் காசி ஆனந்தன் "தமிழன் கனவு" காண்பதற்கு முன்னரேயே அதுபற்றி சி.மௌனகுரு கனவு கண்டிருந்தார் என்பதே முரண்சுவை பயப்பதாகும். சி.மௌனகுரு காலத்திலே பாட்டாளி பற்றிய கனவு கண்ட மாக்சியக் கவிஞரான புதுவை இரத்தினதுரை பின்நாளில் இனவழித்தமிழ் தேசிய உணர்ச்சி உருவான போது அத்தகைய கவிதைப் போக்கில் முக்கிய உதாரணமாகினார் என்பது இன்னொரு முரண் சுவையாகின்றது! (முற்தரப்பட்ட பட்டியல் முழுமையானதன்று என்பதையும் ஆண்டு ரீதியிலே ஓரிரு தவறுகள் கூட இருக்கலாமென்பதையும் மனங்கொள்க!)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.பத்மநாதன்
தகைசார் பேராசிரியர், வரலாற்றுத்துறை

# தந்தை வெளிப்படுத்திய முதுசொம்

காலனித்தவ ஆட்சியின் முடிவில் எல்லா நாடுகளிலும் வாழும் மக்களிடையே பொதுவாக எல்லாச் சமூகங்களும் சுதந்திரமான அரசியலிற் பங்குபெற்றன. கல்வியில் மிகுந்த முன்னேற்றமடைந்து, இலங்கையில் வாழும் சமூகங்களில் அத்துறையில் முதன்மை நிலை பெற்றிருந்த இலங்கைத் தமிழருக்கு நேர்ந்த கதி ஒரு புறநடையாகிவிட்டது.

அக்காலத்துத் தமிழரின் இயக்கங்களினதும் தலைவர்களின் பொறுப்புணர்ச்சியற்ற கோமாளித் தனங்கள் இந்த நிலை உருவாகுவதற்கு ஏதுவாயிருந்தன. அரசியலமைப்பில் 1947க்கு முன் திருத்தங்கள் ஏற்பட்ட பொழுது தமிழ் அரசியல்வாதிகளிடையிலே பழமைவாதிகள் சிறுபான்மையினருக்குக் காப்பீடாக மேலதிகமான பிரதிநிதித்துவம் என்ற கோட்பாட்டை வலியுறுத்தினார்கள். அது ஜனநாயக சிந்தனைகளுக்கும் நடைமுறைகளுக்கும் ஏற்புடையதாக அமையவில்லை. எனவே பிரித்தானிய ஆட்சியாளரும் சிங்கள அரசியல்வாதிகளும் எவ்வித சிரமமுமின்றி அத்தகைய கோரிக்கைகளை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நிராகரிக்க முடிந்தது.

முற்போக்குவாதிகள் என்று கருதப்பட்ட யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் முற்றிலும் வேறுபட்ட ஒரு அரசியலில் ஈடுபட்டனர். இந்திய சுதந்திரப் போராட்டம் அவர்களுக்கு முன்னுதாரணமாகவும் உந்து சக்தியாகவும் விளங்கியது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மகாத்மாகாந்தி முதலான இந்தியத் தலைவர்கள் மீது அவர்கள் அபிமானங் கொண்டனர். இலங்கை பூரண சுதந்திரம் பெறவேண்டுமென்று வாதிட்டனர். டொனமூர் ஆணைக்குழுவின் பரிந்துரைப்படி சட்ட நிரூபணசபை அமைக்கப் பட்டு அதற்கான தேர்தல் நடைபெற்ற சமயத்தில் வடமாகாணத்தவர் இளைஞர் காங்கிரஸாரின் வாதங்களைக் கேட்டுத் தேர்தலை முற்றாகப் பகிஷ்கரித்தனர். ஆனால் அதன் விளைவு பெருங்கேடாகி விட்டது. வடமாகாணத்தவரின் பிரதிநிதிகள் இல்லாத சட்டநிரூபணசபை *(State Council)* உருவாகி அரசாங்கத்தை நடத்தியது. வடஇலங்கைத் தமிழர், அரசியல் நிலைமையைப் புரிந்து கொண்டனர். இளைஞர் காங்கிரஸின் செல்வாக்கும் சுருங்கிவிட்டது.

இவ்வாறான ஒரு வெற்றிடத்தில் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் அரசியற் பிரவேசம் ஏற்பட்டது. அவர் ஆங்கிலத்தில் நிகரற்ற பேச்சாளர். அந்நாட்களில் வாதப்பிரதிவாதங்களில் அவருக்கு முகங்கொடுக்க வல்லவர்கள் எவரும் இங்கில்லை. அவரது தலைமையிலே தமிழர்கள் திசைமாறிச் சென்றனர். ஜனநாயக விரோதமான சம பிரதிநிதித்துவக் கோரிக்கையினை அவர் முன்வைத்தார். 50க்கு 50 என்ற கோஷம் வலுப் பெற்றது. சோல்பரி ஆணைக்குழுவினர் முன் பொன்னம்பலம் தனது கோரிக்கை தொடர்பாக நெடுநேரம் வாதம் புரிந்தார். அவருடைய மொழியாற்றலைப் பாராட்டிய ஆணைக்குழுவினர் கோரிக்கையை முற்றாக நிராகரித்தனர். அதிலிருந்து ஸ்ரீமான் பொன்னம்பலம் எதனை யுங் கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. 1970 வரையில் ஒற்றையாட்சி அரசியலமைப்பே இலங்கைக்குப் பொருத்த மானது என்பது அவரது சிந்தனையாகும். அதிகாரப் பகிர்வு பற்றிய சிந்தனை அவரிடம் காணப்படவில்லை.

துவேஷ மனப்பான்மையற்ற சிங்களத் தலைவர்கள் சிலர் பிரித்தானியாவில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திலே உயர்கல்வி பயின்று பட்டதாரியாகி, பின் சட்டத்துறையிலும் பட்டம் பெற்றவரான *S.W.R.D.* பண்டாரநாயக்க இளமைக் காலத்தில் இலங்கை விவகாரங்கள் பற்றிச் சுயமாகவும் நிபுணத்துவமாகவும் சிந்திக்கும் ஆற்றல் பெற்றிருந்தார். அவர், ஒரு முறை, பகிரங்கமான கூட்டமொன்றிலே மேல் வருமாறு கூறினார்

"கரையோர நாட்டுச் சிங்களவர், கண்டி நாட்டுச் சிங்களவர், இலங்கைத் தமிழர் ஆகியோர் ஆயிரம் வருடங்களுக்கு மேலாக தத்தமக்குரிய அரசியல், சமூக பண்பாட்டு மரபுகளைப் பேணிவந்துள்ளனர். எனவே ஒரு மத்தியமயமான ஆட்சிமுறை இந்நாட்டு மரபுகளுக்கு ஒவ்வாதது."

ஆயினும் இலங்கைத் தமிழர்கள் இக்கருத்துக்களைப் பொருட்படுத்தவில்லை. போதிய அரசியல் உணர்வும் வரலாற்றறிவும் இல்லாமையே அதற்கான காரணமாகலாம். மிகவும் கடினமான, துன்பமயமான அனுபவ உணர்வுகளின் விளைவாகத்தான் அவர்களால் நிலைமைகளை உணரமுடிந்தது. அதுவும் காலம் கடந்த உணர்வு.

50க்கு 50 கேட்டு தோல்வி கண்ட ஜி.ஜி. பொன்னம்பலம் மாற்றுவழிச் சிந்தனை எதுவும் இல்லாமையால் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தில் அமைச் சராகிவிட்டார். அதனாலே திசையறியாத, வழியற்றநிலை தமிழரின் அரசியலில் ஏற்பட்டது. அந்த நிலையிலே தான் *S.J.V* செல்வநாயகம் புதிய சிந்தனைகளையும் அவற்றை சாதனைப்படுத்தும் வழிமுறைகளையும் முன் வைத்தார். அதற்கென ஒரு அரசியலமைப்பையும் உருவாக்கினார்.

இலங்கைத் தமிழர் பற்றிய வரலாற்றா வணங்களைக் கற்று அவற்றின் மூலம் சில விடயங்களை உணர்ந்து கொண்டார். இலங்கையின் வட, கிழக்குப் பகுதிகளில் மூன்றிலொரு பகுதியான, ஒரு தொடர்ச்சியான நிலப்பகுதி தமிழ்பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வதிவிடம் என்பதை அறிந்து கொண்டு அதன் அடிப்படையில் தமிழ்பேசும் மக்களின் அரசியற் கோட்பாடுகளை உருவாக்கினார். சர்வதேச அரசியல் நியமங்களின்படி அங்கு வாழ்வோர் சுயாட்சியுரிமை கொண்டவர்கள் என்ற கருத்தை வெளிப்படுத்தினர். மக்களும் முன்னெவரும் சொல்லாதனவற்றை அவரிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருந்து அறிந்து கொண்டனர். அவருடைய கருத்துகள் மக்களின் சிந்தனைகளாகிவிட்டன. அந்தச் சிந்தனை மரபும் அவர்களின் அழிக்க முடியாத சொத்தாகிவிட்டது.

1949 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சிந்தனைகள் மக்களிடமிருந்து பறிக்க முடியாத பாரம்பரியமாகிவிட்டது. அடக்குமுறை, படுகொலை என்பவற்றாலும் அதனை அழிக்க முடியவில்லை. கொடூரமான 30 வருட கால யுத்தத்தினாலும் அது பலவீமடையவில்லை.

திரு செல்வநாயகத்தைப் போல வேறெந்தத் தமிழ்த் தலைவரும் தமிழ் மக்களின் அன்பினையும் அபிமானத்தையும் பெறவில்லை. அவரைப் பெயர் சுட்டாது தந்தை என்றும் பெரியவர் என்றும் குறிப்பிடுவது வழக்கம். அவர் மக்களிடமிருந்து பணம் பெற்று அரசியல் நடத்தவில்லை. சுகபோகங்களையும் அனுபவிக்க வில்லை. தான் தேடிய செல்வங்களையும் தனது வருமானங்களையும் தனது இயக்கத்திற்கே செலவளித்தார். அவை யாவும் ஒழிந்து விட்ட நிலையிற் சிரமங்கள் ஏற்பட்டன. 1970 களிலே திரு மு.திருச்செல்வம் கைகொடுத்து உதவினார். பெரியவர் தனது பிள்ளைகளை அரசியலுக்கு கொண்டு வரவில்லை. அவர்களுக்கென்று சொத்துகளையும் விட்டுச் செல்லவில்லை.

1. தமிழ் ஒரு ஆட்சி மொழியாக வேண்டும்,
2. இலங்கைத் தமிழர் சுயாட்சி பெறவேண்டும்.
3. அவர்களின் காணி நிலங்கள் பாதுகாக்கப் பட வேண்டும்
4. அரசாங்கத்தினால் வட கிழக்கு மாகாணங் களிற் பெரும்பான்மையினரின் குடியேற் றங்கள் நிறுத்தப்படவேண்டும்.
5. இலங்கையில் நெடுங்காலமாக வாழ்ந்த இந்திய வம்சாவழித் தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்க வேண்டும் என்பனவே பெரியவர் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதானமான கோட் பாடாகும்.

அஹிம்சாவழிப் போராட்டங்களினாலும் ஜனநாயக வழியாகவும் போராட்டங்களை நடத்தி, இவற்றை அடையவேண்டும் என்பது அவரின் உறுதியான நம்பிக்கை. சமுதாயமும் அவரது தலைமைக்குக் கட்டுப்பட்டிருந்தது. தென்னிலங்கையிலுள்ள நிலைகள் பற்றிய அனுபவத்தால் இக்கோரிக்கைகளைக் கட்டங் கட்டமாகப் பெறலாம் என்றும் அவர் கருதினார். அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு அவர் எப்பொழுதும் ஆயத்தமாக இருந்தார். பண்டா – செல்வா உடன்படிக்கை, டட்லி – செல்வா உடன்படிக்கை எழுத்து வடிவம் பெறாத (1960) சிரிமா – செல்வா உடன்படிக்கைகளிலே தமிழரின் கோரிக்கைகள் நியாயமானவை என்பது ஒப்புக் கொள்ளப்பட்டது. இலங்கைத் தமிழர் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் 1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை உடன்படிக்கை ஒரு வரலாற்று முக்கியத்தும் வாய்ந்த ஆவணமாகும். அதன் மூலமாகவே தமிழ் ஒரு ஆட்சிமொழிக்குரிய சட்டபூர்வமான நிலையை அடைந்தது. மேலும் அதில் வட, கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வதிவிடம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. அவ்விரு மாகாணங்களும் இணைந்த மாகாண சபை உருவாக்கப்பட்டது.

சந்திரிகா குமாரதுங்க அம்மையாரின் துணிகரமான தலைமையில், தென்னாபிரிக்காவில் உள்ளதைப் போன்ற, சமஷ்டி முறைக்கு ஒப்பான அரசியலமைப்பு நகல் திட்டம் பாராளு மன்றத் தெரிவுக்குழுவினால் 1995 இல் உருவாக் கப்பட்டது. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில், 2002இல் ஒஸ்லோ பிரகடனம் ஏற்பட்டது. பேச்சு வார்த்தை மூலம் சமஷ்டி அடிப்படையான தீர்வு எட்டப்படும் என்று சொல்லப்பட்டது. இவை யாவும் எட்டாக்கனிகளாகிவிட்டன. அதற்கான பொறுப்பை நம்மவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும்.

முள்ளி வாய்க்காலுக்குப் பின் எல்லாமே சூனியமாகிவிட்டன. எல்லாவற்றையும் மீண்டும் தொடங்க வேண்டிய மிகக் கடுமையான நிலை. பொறுமை, நிதானம் என்பவற்றைப் பேணுவது அவசியமாகிவிட்டது. உணர்ச்சி வசமான பேச்சு களுக்கு இப்போ இடமில்லை. பெரியவரின் வழியிற் சென்றால் மட்டும் ஏதாவது பெற்றுக் கொள்ளலாம். வேறு வழியைக் காண முடிய வில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி. சா.சத்தியபாமா**
ஆரையம்பதி - 2,
திறந்த போட்டியில் 1ம் இடம் பெற்ற கட்டுரை

# இலங்கை அரசியலில் தந்தை செல்வா

தமிழர்கள் நிறைந்த மனங்கொண்டு எங்கள் தலைவன் என்று பெருமையோடு பேசுகின்ற அமரர் சா.ஜே.வே. செல்வநாயகம் என்றால் மிகையில்லை! ஒப்பாரும், மிக்காரும் இல்லாத ஈடிணையற்ற தலைவனென்று வெறும் ஒப்புக்காகவோ, புகழ்ச்சிக்காகவோ அன்றி அவரது நேர்மை, தூய்மை, அரசியல் ஞானம், அவர் தமிழ்மக்களை நடாத்திச் சென்ற பாங்கு என அனைத்தையும் ஆராய்ந்தவர்களே தந்தையென செல்வாவை அப்படி அழைக்கிறார்கள். அவர் இன்றில்லையே என்று நினைக்கின்ற அளவிற்கு வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய பெருந்தகை, இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு முப்பதாண்டுகாலப் பக்கங்களைப் புரட்டினால் அது தெரிந்துபோகும். நெல்சன் மண்டேலா என்றால் தென்னாபிரிக்கா பெருமை பெறுகிறது. மகாத்மா காந்தியென்றால் இந்தியா பெருமை கொள்கிறது. ஆபிரகாம் லிங்கன் என்று அமெரிக்கா புகழ்பெறுகிறது. அப்படி அந்த வரிசையில் சா.ஜே.வே. செல்வநாயகம் என்றால் இலங்கை பெருமை பெறுகிறது! அவரது காலம் இலங்கையின் சுதேச வரலாறு தொடங்குகிறது என்று கூறலாம். அன்றிலிருந்து இன்றுவரை பல தலைவர்களை நாம் பார்த்திருக்கிறோம். பார்த்துக் கொண்டுமிருக்கிறோம். அவரைப்போல நேர்மையான கண்ணியமான தலைவன் தேசிய நோக்கில் பார்த்தால் இன்னும் தோன்றவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று உறுதியாக உரைக்கலாம். அரச பதவிக்காக, எப்படியோ அரசைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கிற்காக தப்புத் தாளங்கள் போடுகிறர்வர்களையே நாம் காண்கிறோம். அவர்கள் மத்தியில் தந்தை செல்வா நியாயத்தின் நிலையமாக வாழ்ந்தவர்!

மலேசியா அந்த மகானை நமக்கு ஈந்தது. ஈபோ என்ற நகரில் 31.03.1898ம் ஆண்டு அந்த சிவப்பு றோஜா மலர்ந்தது. ஈபோ என்றால் மலேசிய மொழியில் தூய்மை என்று பொருள். தூய்மை ஒரு தூய்மையைத் தந்து பெருமை கொள்கிறது. தாய், தந்தையர்கள் தொழில் நிமித்தமாக அங்கே வாழ்ந்ததனால் அவர் அங்கே தோற்றம் பெற்றார். ஆனால் தன் தாய்மண்ணில், தமிழ் மண்ணில் அவர் தவழ்ந்தார். தமிழ் மண்ணை அள்ளி, அணைந்து, உண்டு உவந்து விளையாடி மகிழ்ந்தார்.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் தனது கல்விப் பயணத்தை ஆரம்பித்தார். அங்கு கருக்கொண்ட கல்வி விஞ்ஞானப் பட்டதாரியாக (பி.எஸ்.சி) பிரசவமாயிற்று. தந்தை தொடங்கிய பணி கௌரவமிக்க ஆசிரியப் பணி. பின்னாட்களில் அரசியல் ஞானியாக பரிணாமம் பெற்ற அந்தப் பெருந்தகை அறிவியல் போதிக்கும் ஆசானானார்.

அந்த ஆசிரியப்பணி தொடர்கிற காலப்பகுதியில் சோதனையொன்றை அவர் எதிர்கொள்கிறார். தன் சொந்தச் சகோதரன் நோய்ப் படுக்கையுற்ற செய்தி அறிகிறார். அண்ணன் அருகில் நின்று அவருக்கு ஆறுதல் கூற இந்தத் தம்பி மனங்கொள்கிறார். அதிபரை நாடி இந்தத் துயரச் செய்தியைப் பகிர்ந்து விடுப்புப் பெற விழைகிறார். “விடுப்புத்தர முடியாது. சொல்லால் அறைகிறார் அதிபர். அந்தக் கணம் அவர் அகமெலாம் நெருப்பு மூள்கிறது. நீதிக்கான போராட்டம் அன்றே கால்கொள்கிறது. தூக்கியெறிகிறார் பதவியை! துடித்துக் கொண்டு பறக்கிறார் அண்ணனை நாடி. உத்தரவு கொடுக்க மறுத்த அதிபர் உறைந்து போகிறார்!

எல்லாம் நன்மைக்கே என்பது தமிழர் கோட்பாடு. அப்படித்தான் இதுவும் தந்தைக்கு நன்மையாகவே முடிகிறது. சட்டக்கல்லூரி தன் இருகரம் கூப்பித் தந்தையை அழைக்கிறது. முடிந்தது என நினைத்த கல்வி இங்கு மீண்டும் தொடங்குகிறது. அன்று அறிவியல் ஆசான். இன்றோ சட்டத்தரணி. சிவில் வழக்குகளில் கொடிகட்டிப் பறக்கிறார். திறமையின் உச்சம் தந்தை இப்போது இராணி அப்புக்காத்தாகிறார்.

தந்தையின் திறமையான சட்டவாதம் தந்தையின் பெயரை உயர்த்தி நிற்கிறது. செல்வம் தந்தை செல்வாவைத் தேடி வருகிறது. தலைநகரிலே வாசஸ்தலமொன்று சொந்தமாகிறது. கடினமான உழைப்பு தோட்டங்கள் இரண்டு தந்தைக்குச் சொந்தமாக்கிறது. தன் சொந்த வாழ்வில் இப்போது தந்தை செல்வந்தர்.

இவ்விடத்தில் ஒரு விடயத்தை உருக்கமாக உரைக்கிறேன். அரசியலைத் தந்தை தவிர்த்திருந்தால் இன்று அவர் பரம்பரை இலங்கையில் எண்ணிப்பேர் சொல்லும் கோடீஸ்வரர் வரிசையில் இடம் பிடித்திருக்கும். சட்டத் துறையிலும் தர்மம் காத்து நின்ற பெரும் கனவான்.

கொடியோடும், முடியோடும் அரசாண்ட பெரும் புகழுக்குரிய தன்னினம் இரண்டாம் தரப் பிரசை என்ற இழிநிலைக்கு இறங்குவதோ? இது தகுமா! அடுக்குமா! தந்தையின் நெஞ்சைக் குடைந்து கொண்டிருந்தது.

ஐம்பதுக்கு, ஐம்பது என்ற சமவுரிமைக் கொள்கையோடு அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள் தலைமையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தொழிற்பட்ட காலம். தந்தையின் அறிவு, ஆற்றல் நேர்மை, திறமை ஆகிய பண்புகளை யெல்லாம் அறிந்து கொண்ட அமரர் பொன்னம்பலம் அவர்கள் தந்தையை தன்னோடு இணைத்துக் கொள்ள விருப்பம் கொண்டார். தமிழ் இனத்தைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்த தந்தை அவர்கள் அவரது கட்சியில் இணைகிறார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

#### அரசியல் பிரவேசம்

தனது 49வது அகவையில் அரசியல் களத்தில் தந்தையவர்கள் கால் பதிக்கிறார்கள். சோல்பரி அரசியல் யாப்பிற்குகமைவாக சுதந்திரத்திற்கு முன் 1947இல் நடை பெற்ற முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெறுகிறார். அப்போது டி.எஸ். சேனநாயக்கா பிரதமராகிறார். அவர் தலைமையில் ஒலிவர் குணதிலகா, ஜே.ஆர. ஜெயவர்த்தனா, டட்லி சேனநாயக்க, எஸ். டபிள்யு, ஆர்.டி.பண்டார நாயக்கா போன்றோர் அமைச்சர்களாகிய வேளையில் தமிழர்களான சி. சுந்தரலிங்கம், சி. சிற்றம்பலம் ஆகியோரும் அந்த அமைச்சரவையில் பங்கு பெறுகிறார்கள்.

#### பேரினவாதத்தின் முதல் கொடுமை

சிங்களப் பேரினவாத மென்று நாம் இப்போது பேசுகிறோமே அந்தப் பேரினவாதத் தின் முதல் தலைவன் டி.எஸ்.சேனநாயக்கா 1948.08.21 அன்று பாராளுமன்றத்திலே பிரஜாவுரிமைச் சட்டத்தைச் சமர்ப்பிக்கின்றார். இந்திய பாகிஸ்தான் குடியுரிமைச் சட்டத்தினால் நமது தொப்புள்கொடி உறவுகளான தோட்டத் தொழிலாளர்களான தமிழர்கள் தங்கள் குடியுரிமையை இழக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். தமிழன் குடியுரிமையைப் பறித்தெடுக்கும் சட்டத்திற்கு எதிராக தந்தையவர் களும், கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கம் அவர்களும், மிக நீண்ட நேரம் உரையாற்றி னார்கள். இந்தப் படுபாதகமான சட்டத்திற்கு அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் துணை நின்றார். அந்தப் பச்சைத் துரோகத்திற்குப் பரிசாக பொன்னம்பலம் அவர்களுக்கு மந்திரிப் பதவி வழங்கப்படுகிறது. சிங்களப் பேரினவாதம் போட்ட எலும்புத் துண்டைப் பொறுக்கியவர் தமிழ் மக்களால் அண்மையில் நடை பெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் மக்களால் தூக்கியெறியப்பட்ட தமிழ்த் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பாட்டன் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இழிநிலை கண்டு இடிந்து போனார் தந்தையவர்கள். தன்நினைப்பிற்கும், பொன்னம்பாலம் நிலைக்கும் ஒத்துவர முடியாது என்று உணர்கிறார். இருவருக்கும் இடையிலே திரை வீழ்கிறது. உறவு முறிகிறது. நிலை கெட்ட மனிதனின் நிலைகண்டு நெஞ்சு பொறுக்க முடியாத தந்தையவர்கள், வன்னிய சிங்கம் அவர்களோடு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசிலிருந்து விலகுகிறார்கள்.

#### இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தோற்றம்

இனியென்ன செய்வது? அடுத்து என்ன ஆகவேண்டும்? என்ற கேள்விகளுடன் கொள்ளுப்பிட்டி, அல்பிறட் கவுஸ் கார்டன், 18ம் இலக்க தந்தையின் இல்லத்தில் தந்தையின் தலைமையில் கூட்டம் நடைபெறுகிறது.

டாக்டர் பரமநாயகம், ஜே.ஆர். பீட்டர், டாக்டர் திருவிளங்கம், டாக்டர் நாகநாதன், ஜேம்ஸ்ரெட்ணம், எஸ்.டி.சிவநாயகம், அ. அமிர்தலிங்கம், வி.நவரெட்ணம் ஆகியோர் அக் கூட்டத்தில் பங்குகொள்கிறார்கள். வாரா வாரம் வியாழக்கிழமைகளில் சந்தித்து தமிழ்ப் பேசும் மக்களின் எதிர்காலம் குறித்து ஆலோசனை நடத்துவார்கள். மாலை நேரத்தில் அவர் வழங்கும் சுவையான சிற்றுண்டி, சொக்கிளேற் கேக்குகளுடன் அடிக்கடி தேனீர் குடித்துக் குடித்து நடுநிசி வரையும் அக்கலந்துரையாடல் நடைபெறும். எப்போதும் மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பளிக்கும் பெரும் குணம் படைத்த தந்தையவர்களின் எல்லோருடைய கருத்துக்களையும் கேட்பின் இலங்கைத் தமிழப்பேசும் மக்களுக்குப் பாதுகாப்பும், கௌரவமும் அளிக்கக் கூடியது 'சமஷ்டி அரசியலே என்று திட்ட வட்டமாக அறிவித்து தன்கருத்தை வெளிப்படுத்தினார். அவருடைய தீர்க்க தரிசனமான கூற்றை அனைவரும் ஏற்றுக் கொள்கிறார்கள். இலங்கைத் தமிழர்க்கு மிகவும் அளப்பரிய அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்தாக இலங்கைத் தமிழரசுக் கட்சி உதய மாகிறது. கட்சியின் சின்னமாக வீடும், மூவர்ணத் தில் - பச்சை, மஞ்சள், சிவப்பு ஆகிய வர்ணங்களோடு கொடியும் அன்று முடிவாகிறது.

### ஆரம்பக் கூட்டம்

கொழும்பு, மருதானை மத்திய வீதியில் அமைந்துள்ள அரசாங்க இலிகிதர்களின் அலுவலகத்தில் அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் சுமார் நூறுபேர் கலந்து கொண்டதாக அறியமுடிகிறது.

### முதலாவது பொதுக்கூட்டம்

தமிழரசுக் கட்சியின் முதலாவது பொதுக் கூட்டம் யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னன் சங்கிலியனுடைய இராஜதானியாகிய நல்லூரில் நடத்துவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்படுகிறது. நல்லூர் முத்திரைச் சந்தியெனும் இடத்தில் சிறி கைலாசநாதர் கோயில் முன்றலில் மேடை அமைக்கப்பட்டிருக் கிறது. அந்த மேடையை நோக்கி ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. மேடை மீது தலைவர்கள் ஏறியது தான் தாமதம் கூட்டம் நடத்த முடியாத அளவிற்குப் பெரும் குழப்பம் ஏற்படுகிறது. மேடையை நோக்கிவந்தவர்கள் பெரும் குழப்பம் விளைவிக்கிறார்கள். கற்கள், செருப்புக்கள் வீசப்படுகின்றன. அப்போது வீசப்பட்ட செருப்புக் கள் ஏ.கே. இராமலிங்கம் என்பவரது வீட்டில் மிக நீண்ட காலமாக வைக்கப்பட்டிருந்தது. அங்கு கத்தியும் வீசப்பட்டிருக்கிறது. அந்தக் கத்தி வீச்சிலிருந்து தந்தையவர்கள் மயிரிழை யில் உயிர் தப்பினார். திரு. வேலுப்பிள்ளை என்பவர் கத்தியைப் பிடித்து பெரும் அபாயத்திலிருந்து தந்தையைக் காப்பாற்றினார் என்ற செய்தி நமையெல்லாம் மெய்சிலிர்க்க வைக்கிறது. இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதலாவது பொதுக்கூட்டம் நடைபெற முடியாமல் குழப்பத்தில் முடிந்திருக்கிறது. இப்படித்தான் தமிழர்களது காப்பரணனான இலங்கைத் தமிழரசுக் கட்சி உதயமாயிற்று.

1949 மார்கழித்திங்கள் 18ம் நாள் தந்தை செல்வா தலைமையில் ஆரம்பமான இலங்கைத் தமிழரசுக் கட்சி இன்று தமிழ்மக்கள் மத்தியில் வேரூன்றி, விழுதூன்றி ஆல விருட்சமாக வியாபித்து விளங்குகிறது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வளர்ச்சிப் போக்கில்தான் எத்தனை எதிர்ப்புக்கள், சோதனைகள், வேதனைகள் அத்தனை சவால்களையும் எதிர்கொண்டு தான் அரசியல் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டன.

### கட்சி எதிர்கொண்ட முதலாவது பொதுத் தேர்தல்

1952இலே இ.த.க. முதல் முறையாக தேர்தல் களத்திலே குதிக்கிறது. ஆனால் அந்தத் தேர்தலிலே தந்தையவர்கள் வெற்றி வாய்ப்பை இழக்கிறார். அதே நேரம் அமரர் வன்னியசிங்கம் வடபகுதியிலும், அமரர் ஆர். இராஜவரோதயம், கிழக்கில் திருமலையிலும் வெற்றி பெறுகிறார்கள்.

வெறும் தேர்தலை மாத்திரம் நோக்காகக் கொண்ட கட்சியல்ல தமிழரசுக் கட்சி. தமிழ் மக்கள் கட்சியல்லவா! தொடர்ந்தும் தந்தை தலைமையில் மக்களுக்குள் கட்சி கொண்டு செல்லப்படுகிறது. கட்சியோடு மக்கள் ஒன்றா கிறார்கள். ஈழத்தமிழரின் ஏகோபித்த ஆதரவைக் கட்சி பெறுகிறது.

1956இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஈழத்தமிழரின் தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெறுகிறது. தந்தை செல்வா அவர்கள் மிக அதிகப்படியான வாக்குகளால் அமோக வெற்றியைப் பெறுகிறார்.

14.04.1951இல் திருமலையில் கட்சியின் முதலாவது மாநாடு நடைபெற்றபோது தலைவராகத் தெரிவாகிய தந்தையவர்கள் இரண்டாவது மாநாடு வவுனியாவில் நடை பெறுகிறபோது கட்சியின் தலைமைப் பொறுப்பை வேறு ஒருவரிடம் ஒப்படைக்க விருப்பம் கொண்டபோதும் மக்களின் ஏகோபித்த விருப்பிற்கமைய மீண்டும் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**தந்தையோர் ஒப்பற்ற தலைவர்**

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் "எனது நண்பரகள்" என்ற நூலில் தந்தை செல்வநாயகம் அவர்கள் பற்றி எழுதும் போது" அவரது எண்ணமெலாம் ஒன்றே ஒன்று. அது நாடு செழித்து, தமிழ்மொழி வளர்ந்து, மக்கள் நல்வாழ்வு வாழவேண்டும் என்பதே. இந்த ஒரே நோக்கத்திற்காக அவர் பல்லாண்டுகள் இரவு, பகலாக உழைத்து வருகிறார்" என்று குறிப்பிட்டிருக்கிறார். தொடர்ந்து அவர் தனது கட்டுரையில் "அவரது அரிய தொண்டுகளைப் பார்த்தும், கேட்டும் அறிந்து வந்திருக்கிறேன். அவற்றையெல்லாம் தொகுத்து ஒரு சொற்றொடரிலே கூறவேண்டும் மாயின் அவர் ஓர் ஒப்பற்ற தலைவர்.

தந்தை செல்வா அமைதியின் உறை விடம். அவர் புனித உதடுகள் மெல்லத் திறக்கும் மெதுவான குரல். ஆனால் உறுதியான வார்த்தைகள். அந்த வார்த்தைகளுக்குத்தான் எத்தனை சக்தி! தளர்வான நடை ஆனால் தளராத, நெஞ்சுரம், தமிழன் பெருமையோடு மார்தட்டி பேசுகின்ற மாபெரும் தலைவன்.

**பேரினவாதத்தின் இரண்டாவது கொடுமை**

தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையைப் பறித்த அந்தக் கொடூரக் கரங்கள் தமிழனின் மொழியுரிமையில் கைவைக்கத் தொடங்குகின்றன. 1956இல் சிங்களம் மட்டும் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது. குடியுரிமைச் சட்டம் வந்தபோது பேசினார். இப்படியான பறிப்புக்கள் தொடரும். இன்று தோட்டத்தில் வாழும் தமிழர்க்கு நாளை நமக்கென்று குறிப்பிட்டார்.

**தமிழரசுக் கட்சி களமிறங்கும் முதலாவது அகிம்சைப் போர்**

1956இல் தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து காலிமுகத் திடலிலே சத்தியாக்கிரகப் போராட்டம் தொடங்குகிறது. தந்தை செல்வா தலைமையில் கட்சிப் பிரமுகர்கள் உட்பட தெரிவு செய்யப்பட்ட சுமார் 100 பேரளவில் போராட்டம் தொடங்குகிறது. தன்னையொறுத்து தன்னின மீட்சிக்காகப் போராடும் அந்த தமிழர்கள் மீது சிங்களக் காடையர்கள் ஏவி விடப்படுகிறார்கள். அ.அமிர்தலிங்கம், கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கம் இரும்பு மனிதன் நாகநாதன் உட்பட பலர் தாக்கப்படுகிறார்கள். தந்தையவர்களின் மகன் அவர் முன்னிலையில் அடித்து பேரையாற்றில் வீசப்படுகிறார். அத்தனை அக்கிரமங்களையும் பொறுமையோடு பார்த்துக் கொண்டிருக்கும் தந்தையை இரும்பு மனிதன் டாக்டர் நாகநாதன் தனக்கேயுரிய தற்காப்பு வல்லமையால் பாதுகாத்துச் கொண்டி ருக்கிறார். அ. அமிர்தலிங்கம் அவர்களின் தலையிலிருந்து குருதி கொட்டுகிறது. போராட்டம் குழப்பப்படுகிறது. செங்குருதி வழிந்தோடிய அந்த நிலையில் அமரர் அமிர்தலிங்கம் அவர்கள் பாராளுமன்றத்திலே உரையாற்றுகிறார். முழு உலகமும் கண்டித்த அகோரத் தாக்குதலாக தமிழர் போராட்ட வரலாற்றில் அந்தப் போர் பதிவாகிறது.

தொடர்ந்து 1958இல் பாரிய இனக் கலவரம் மூண்டது. உயிர்களும், உடைமைகளு மாகப் பாரிய அழிவை தமிழர்கள் எதிர் கொண்டார்கள். சிங்களச் சிறி எதிர்ப்புப் போராட்டம் மட்டக்களப்பில் தந்தை தலைமையில் நடை பெற்றது. தந்தை உட்பட அநேகர் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு சிறையிலே அடைக் கப்படுகிறார்கள். அந்த வகையில் "திருமலை யாத்திரை" எனும் பெரும் போராட்டம். தமிழ் நாலா திசையிலுமிருந்து ஆயிரக்கணக்கானோர் பங்கெடுத்த பெரும் போராட்டமாக விரிந்து வரலாற்றில் பதிவு பெறுகிறது.

1961இல் மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பமாகிறது. அந்த சட்ட மறுப்புப் போராட்டத்தில் அரசை எதிர்த்து தபால் முத்திரையை தந்தை செல்வா வெளியிடு கிறார். தமிழர் மத்தியில் மிகப்பெரியளவில் விற்பனையாகியது என்பது குறிப்பிடத்தக்கது.

போர்க் களமாடிய ஏறத்தாழ 74 பேர் பனாக்கொடை இராணுவ முகாமில் 6 மாதங் களாக சிறை வைக்கப்பட்டார்கள் என்பது கவனிக்கத் தக்கது.

தந்தை தொடர்ந்த அகிம்சைப் போரின் உக்கிரம் பொறுக்க முடியாமலும் தந்தை செல்வாவின் தலைகுனியாத நெஞ்சுரம் கொண்ட தலைமைக்கும் தலை குனிந்த சிங்களத் தலைமைகள் ஒப்பந்தங்களைத் தந்தையோடு மேற்கொண்டார்கள்.

பண்டா - செல்வா, டட்லி - செல்வா என்ற பெயரில் உருவாகி கிழித்தெறியப்பட்ட ஒப்பந்தங்கள் இலங்கை அரசியல் வரலாற்றில் பெரிதாக இப்போதும் பேசப்படுகின்றன. இங்கு ஓர் முக்கிய விடயமுண்டு. டட்லி - செல்வா ஒப்பந்தம் உருவாகியபோது அமைச்சுப் பதவியொன்று வழங்கப்பட்டது. தந்தை பதவிமோகம் கொண்டவராக இருந்திருந்தால் அப்பதவியை ஏற்றிருப்பார். அப்பதவியை ஏற்கமறுத்த தந்தை அமரர் திருச்செல்வம் அவர்களிடம் அப்பதவியை ஒப்படைத்து உயர்ந்து நின்றார்.

## 1972 குடியரசு யாப்பு

முடியரசு என்ற நிலையை மாற்றி குடியரசு என்ற உயர் நிலையை உருவாக்க அப்போதைய சிறிமாவின் அரசு அரசியல் நிர்ணய சபையை கொல்வின் ஆர்.டி.சில்வா தலைமையில் உருவாக்கியது. சோல்பறியாப்பில் எழுதப்பட்டிருந்த ஏனைய இனத்தவர் பாதுகாப்பு பறிக்கப்பட்டது. அதைப் பொறுக்க முடியாத தந்தையவர்கள் குறைந்த பட்சமாக தமிழர் சார்பில் ஆறு அம்சக் கோரிக்கையச் சமர்ப்பித்தார்.

சமவுரிமை பெறவேண்டும் என்ற கோட்பாடுடன் கொல்வின் தலைமையில் செயற்பட்ட அக்கட்சி கொல்வின் தலைமையில் நடைபெற்ற அரசியல் யாப்பில் சேர முடியாது என்று நிராகரித்தார்.

ஈழத் தமிழர் அரசியல் வரலாற்றின் திருப்புமுனை, தமிழரசுக் கட்சி கூடி அடுத்தது என்ன? என ஆராய்ந்தது. தந்தை தன் பாராளுமன்றப் பதவியை இராஜினாமாச் செய்வதென்று முடிவானது. தந்தை பதவியைச் துறந்தார். தமிழினம் எழுச்சி கொண்டது.

தமிழர் தேசமெல்லாம் தந்தையை உச்சிமோந்து, கரம்பற்றி, கட்டியணைத்து, மாலைகள் அணிவித்து மரியாதை கொடுத்து ஆர்ப்பரித்து நின்றது.

அந்த இடைத்தேர்தலை முகம்கொள்ள முடியாது சிறிமாவோ அரசாங்கம் திகைத்தது. அப்போதும், உரத்த குரலில் உலகம் பேசியது. சிறிமாவோ அரசு இவ்விடயத்தில் செவிடானது.

தந்தையோ தமிழருக்குப் பலம் சேர்க்க தமிழர் ஒற்றுமைக்காக உழைக்கப் புறப்பட்டார். தந்தையை விரோதிகளாகப் பார்த்தவர்கள் வீட்டுப் படியேறினார். ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவரை தேர்தலில் எதிர்த்துக் களம் கண்ட செந் தமிழர் கட்சித்தலைவர் வி. பொன்னம்பலம், உட்பட சௌவியமூர்த்தி தொண்டமான், கே.டபிள்யு. தேவநாயகம் எல்லோரையும் ஓரணியில் திரட்டினார். இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணியாக உதய சூரியன் அடையாளத்தில் தமிழர் ஒற்றுமையின் அணியாகத் தந்தையின் தலைமையில் உருவானது.

## வட்டுக்கோட்டைத் தீர்மானம்

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கான அங்கீகாரத்தைத் தமிழ் மக்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான மாநாடாக அந்த வட்டுக் கோட்டை மாநாடு அமைந்தது. இனிமேல் ஈழத்தமிழர்க்கான நிரந்தரத் தீர்வாக, உறுதியான ஒரே தீர்மானமாக "தமிழர் தப்பிப் பிழைப்பதற்கான ஒரே வழி தனியாகப் பிரிவதுதான்" என்று முடிவானது.

அப்போது தந்தை சொன்னார் "இது வில்லங்கமான காரியம்தான், அகிம்சை வழியில் அதனை அடைந்திடுவோம்" என்று உறுதி கொண்டார்.

தனி நாட்டுத் தீர்மானம் தங்களுக்குப் பொருத்த மில்லையென்று தொண்டமான், தேவநாயகம் கூட்டணியைத் தவிர்த்துக் கொண்டார்கள். அப்போது காலம் கடந்து நடைபெற்ற இடைத்தேர்தலில் தனிநாட்டுத் தீர்மானத்தை முன்வைத்துப் போட்டியிட்ட தந்தையை மிகப்பெரியளவில் மக்கள் வெற்றி பெறவைத்தார்கள். அரசாங்கம் அதிர்ந்தது!

தந்தையின் தலைமையில் அகிம்சைப் போர் தொடர்ந்தது. தந்தை தலைமையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரோடு கூடிநின்ற தலைவர்கள் எல்லாம் நீதிமன்ற நடவடிக்கையைத் தடுக்கும் போரிலே குதித்தார்கள். நீதி மன்றம் நடைபெறுகின்றபோது அதனுல்ளே சென்று துண்டுப் பிரசுரங்கள் வழங்கினார்கள். அப்போது தந்தையுட்பட அமிர்தலிங்கம் ஆகிய தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். ஜீரர்கள் இல்லாத நீதிமன்றம் *(Trial at Bar)* மேற் சொன்ன நீதிமன்றில் தலைவர்கள் நிறுத்தப் பட்டார்கள். பிரபல்யமிக்க சட்ட வல்லுநர்களான ஜீ. ஜீ.பொன்னம்பலம், திருச்செல்வம், புள்ளநாயகம் உட்பட நூற்றுக்கணக்கான சட்டத்தரணிகள் அவர்களுக்காக ஆஜரானார்கள். தொடர்ந்து பல நாட்களாக விசாரணைகள் நடைபெற்றன.

உலகமே உற்று நோக்கியது. அது வரையில் இலங்கை சந்திக்காத வழக்காக முழு இலங்கையும் ஆரவாரப்பட்டது. சிறிமாவோ அரசாங்கம் கலைந்தது. பெரும்பரபரப்பாக நோக்கப்பட்ட வழக்குக்கான தீர்ப்பு வெளியா கியது. "சிறிமாவோ அரசாங்கம் அமுல்படுத்திய அவசர காலச் சட்டம் செல்லுபடியற்றது."

தலைவர்கள் விடுதலையானார்கள். அதிர்ந்தது நாடு! தமிழின் சட்ட வல்லுமை கொடிபோட்டு நின்றது. அகிலமே வாய்பிளந்து போனது!

அரசாங்கம் கலைந்தது. தமிழன் போராட்ட வரலாற்றில் இவ்வத்தியாயம் பொன்னெழுத்துக் களால் பொறிக்கப்பட்டது.

## தந்தை நோய்வாய்ப் படுகிறார்

முதலொரு தடவை நோயுற்று அதிலி ருந்து மீண்டு நல்ல உடல் ஆரோக்கியத்தோடு செயற்பட்ட தந்தையவர்கள் சுகவீனமுறுகிறார். நினைவிழந்த நிலையில் யாழ் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறார். அவர் மிகவும் இரசித்து மகிழ்ந்த நாதஸ்வர இசை அவர் அனுமதிக்கப்பட்ட விடுதியில் இசைக்கப்படுகிறது. யாருமே அனுமதிக்கப் படவில்லை. அலையலையாக அங்கு செல்லும் மக்கள் நேர்த்தியோடு கோயிலை வலம் வருவதுபோல் தந்தை பிழைக்க வேண்டும் என்ற நேர்த்தியோடு மருத்துவ மனையைச் சுற்றிச் சென்றார்கள்.

அப்போதிருந்த சிறிமாவோ அரசாங்கம் விசா எதுவுமின்றி இந்தியாவிலிருந்து நரம்பியல் நிபுணர் இராமமூர்த்தியை வரவழைத்து வைத்தியம் பார்த்தது நமது தலைவர்க்கு அரசாங்கம் வழங்கிய பெரும் மரியாதையாக இதைக் கொள்ளலாம்.

எது நடக்கக் கூடாது என்று உலகத் தமிழினம் நினைத்ததோ அது நடந்து விட்டது. 26.04.1977 இந்தத் திகதியை எழுதுவதற்கு என் கரம் நடுங்குகிறது.

எழு ஞாயிறு மறைந்தது ஈழத்தமிழ் தேசம் இருண்டது. திரு.சா. ஜே.வே. செல்வநாயகம் அமரரானார். மண்ணுலகிற்கு விடை பகர்ந்து விண்ணுலக வாழ்வை ஏற்றார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்துள் மகிமை பெற்றார்.

ஒரு நாள் காலை 7.00 மணி தொடங்கி இரவு 11.00 மணி வரை இறுதி நாள் ஊர்வல மொன்று நடைபெற்ற தென்றால் இலங்கை நாட்டில் அது தந்தை செல்வா அவர்களுக்கு மாத்திரமே! தீயோடு தந்தை கலப்பதற்கு முன் அங்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் இந்திய, இலங்கைத் தலைவர்கள் உரையாற்றி னார்கள். அப்போது அமரர் பிரேமதாசா அவர்கள் "இலங்கை நாடு ஈன்றெடுத்த மிக் பெருந்தலைவர். அரசியலைத் தூய்மைப்படுத்திய தூய்மையாளன் அப்படியொரு புகழ்மிக்க கனவானுக்குக் கரம்கூப்பி தலை வணங்குகிறேன்" என்று போற்றியுரைத்தார். மரணத்தை வென்ற மாமனிதன் தந்தை செல்வா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அ. கண்ணேராஜ்**
சிரேஸ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானங்கள் துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

# தந்தை செல்வாவின் தீர்க்க தரிசனமிக்க அரசியல் ஞானமும் இன்றைய அரசியல்வாதிகளும்

பொதுவாக ஒரு தேசத்தை உருவாக்கியவரையே தந்தை (Father of the Nation) என்னும் அடைமொழியினால் விளிக்கின்றோம். இங்கு S.J.V. செல்வநாயகம் அவர்களை தந்தை செல்வா என்று விளிப்பது, தமிழ்த் தேசியத்தை வடிவமைத்தவர் இவரே என்பதினாலேயாகும். இவ்வடைமொழியில் இருந்தே இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றில் இவரின் பங்களிப்பு மகுடம் வைத்துக் காட்டப்படுகின்றது. அவரின் இழப்பு, தமிழ்தேசியம் தனது அரசியல் வராலற்றுப் பாதையில் தடம்புரண்டதின் தொடக்கப் புள்ளியாகப் பார்க்கப்படக் கூடியது. 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் தமிழ் தேசியத்தின் தனிநாட்டுக்கான வரலாற்றுப் பாதை மௌனிக்கப்பட்டது. அதன்பின்னர், தனிப்பட்ட அரசியல் இலாபங்களுக்காக மீண்டும் உணர்ச்சி வச அரசியலினைத் தூண்டுகின்ற இக்காலத்தில், தந்தை செல்வாவின் தீர்க்க தரிசனமிக்க அரசியல் ஞானத்தினை விளங்கிக்கொள்வது காலத்தின் தேவையாகும்.

இலங்கைத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இருபெரும் அரசியல் கட்சிகளினைத் தோற்றுவித்தவர் என்கின்ற பெருமையினை இவர் பெறுகின்றார். அவற்றில் ஒன்று, இலங்கை தமிழரசுக் கட்சி. இது 1949ஆம் ஆண்டில், இலங்கைத் தமிழ் காங்கிரசில் இருந்து பிரிந்த எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் உருவாக்கப்பட்டது. இப்பிரிவு, மலையகத் தமிழர்களின் குடியுரிமையைப் பறித்த, குடியுரிமைச் சட்டத்தை ஏற்றுக்கொண்டது தொடர்பான கருத்து வேறுபாடு தொடர்பில் ஏற்பட்டிருந்தது. மற்றையது, 1972ஆம் ஆண்டு இலங்கையில் முக்கிய தமிழ்க் கட்சிகளான, தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பவை சேர்ந்து தமிழர் கூட்டணி என்னும் கூட்டமைப்பை உருவாக்கினர். இதில் கூட்டுத் தலைமைகளில் ஒருவராக எஸ்.ஜே.வி. செல்வநாயகம் இருந்தார். 1976 இல் இவ்வமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணி எனப் பெயர் மாற்றம் பெற்றது. இங்கு கவனிக்கவேண்டிய விடயம் யாதெனில், தமிழர் நலன் என்பதற்காக பிரிந்து சென்று தனிக்கட்சியை ஆரம்பிக்கவும். அதேவேளை, தமிழர் நலனுக்காகக் கூட்டுச் சேர்ந்து கட்சிகளை உருவாக்கவும் அவரினால் முடிந்திருக்கின்றது.

அடுத்து தனது பதவிக் காலத்தில், இரு பெரும் ஒப்பந்தங்களினை அக்காலப் பகுதிகளில் பதவியில் இருந்த பிரதமர்களுடன் மேற்கொண்டிருந்தார். ஒன்று, பண்டா செல்வா - ஒப்பந்தம் ஆகும். இவ்வொப்பந்தம் இலங்கையில் அப்போதைய பிரதமர் எஸ். டபிள்யு. ஆர்.டி பண்டாரநாயக்காவுக்கும், தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்திற்கும் இடையில் 1957ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டது. மற்றையது, டட்லி - செல்வா ஒப்பந்தம் ஆகும். இது அப்போதைய பிரதமர் டட்லி சேனநாயக்கா அவர்களுக்கும் எஸ். ஜே.வி. செல்வநாயகத்திற்கும் இடையில் 1965ஆம் ஆண்டு கைச்சாத்தானதாகும். இவை தவிர 1960 இல் அப்போதைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவுடனும் ஓர் எழுத்தில் இல்லாத ஒப்பந்தம் இருந்ததாகக் கூறப்படுகின்றது. இங்கு புரிந்து கொள்ள வேண்டிய விடயம் யாதெனில், தனது பதவிக் காலத்தில் ஆட்சியதிகாரத்தில் இருந்த மூன்று பிரதமர்களுடனும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் செயற்படக்கூடிய அரசியல் ஆளுமை அவரிடம் இருந்திருக்கின்றது என்பதே ஆகும்.

இவை தவிர, இவரது தலைமையின் கீழ், தமிழரசுக் கட்சியின் திருமலை மாநாட்டுத் தீர்மானம் முக்கியத்துவமிக்கது. 1956ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம், திருகோணமலை நகரில் நடாத்தப்பட்ட கட்சியின் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தையே இப்பெயரால் அழைக்கின்றனர். 1956ஆம் ஆண்டு, யூன் மாதம் இலங்கை அரசாங்கத்தினால், தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து இம்மாநாடு நடாத்தப்பட்டது. திருமலை மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானமானது, "தீங்கிழைப்பதாக அமைந்துள்ள ஒற்றையாட்சி முறை அகற்றப்பட்டு, தமிழ் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் பிரதேசங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாகவும், ஒன்று அல்லது மேற்பட்ட பிரிவுகளைக் கொண்டதும், நாட்டின் ஒருமைப்பாட்டை உறுதி செய்வதும், வெளியார் தலையீட்டிலிருந்து இலங்கையின் பாதுகாப்பை உறுதி செய்வதும், சுய நிர்ணய உரிமையும், தன்னாதிக்கமும் உள்ளதும், பகுத்தறிவுக்கு ஏற்றதுமான இணையாட்சி முறையில் ஜனநாயக யாப்பு முறைக்குட்பட்ட ஒன்று அல்லது மேற்பட்ட மொழிவழி அரசுகள் உருவாக்க வேண்டும்" என்று அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. உண்மையில் ஒற்றையாட்சிக்கு மாற்றான ஒரு சமஷ்டிப் பண்புடைய, இந்திய மானிலங்களை ஒத்ததொரு ஆட்சியமைப்பை இத் தீர்மானம் கோரியிருந்தது எனலாம். உண்மையில் இத் தீர்மானம் தனிச் சிங்கள மொழிச் சட்டத்தினைத் தொடர்ந்து ஏற்பட்டிருந்த கொந்தளிப்பு நிலையில், இலங்கையின் ஒருமைப்பாட்டை குலைக்காமல் இவர் சிந்தித்திருந்தார் என்பது இங்கு நோக்கத் தக்கது. உண்மையில், உத்தேச அரசியல் யாப்பில் ஒற்றையாட்சிக்கும் சமஷ்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாட்சிக்கும் இடையில் ஒரு ஆட்சிமுறையைக் கண்டுகொள்ள வேண்டிய சூழ்நிலை தற்போதும் எதிர்பார்க்கப்படும் நிலையில், இன்றைக்கும் பொருந்தக் கூடியதொரு தீர்க்க தரிசனம் மிக்க தீர்மானமாகவே இது பார்க்கப்படக்கூடியது. காரணம், இன்று அரசியல் யாப்பு ரீதியாக சமஷ்டி சாத்தியமில்லாததொரு நிலைமையே உள்ளது. தவிர, இலங்கையின் ஒருமைப்பாடு பாதிக்கப்படாமல் இருப்பதிலும் இத்தீர்மானம் கவனம் செலுத்தியிருந்தது என்பது இங்கு குறிப்பிடக் கூடியது.

அடுத்ததாக, வட்டுக்கோட்டைத் தீர்மானம் தொடர்பாக நோக்குவோமாயின், யாழ்ப்பாணத்தில், வட்டுக் கோட்டையில், 1976ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின், கட்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இதுவாகும். எஸ்.ஜே.வி. செல்வநாயாகம் தலைமையில், அனைத்து தமிழ் கட்சிகளின் தலைவர்களும் இணைந்து வட்டுக்கோட்டை என்னும் இடத்தில் ஒரு பிரகடனம் செய்தனர். இப்பிரகடணத்தில். "இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய பாரம்பரிய, சுதந்திரம் மற்றும் இறையாண்மை கொண்ட தமிழர் தாயகம் வேண்டும். அதில் ஒரு தேசிய இனமாக தமிழரின் அரசியலை அவர்களே தீர்மானித்துக் கொள்ளும் தன்னாட்சி உரிமை வேண்டும். அதற்கான முழுமூச்சான பயணத்தை அஞ்சாத அர்ப்பணிப்புக்களோடு நாம் முன்னெடுக்க வேண்டும்". இத்தீர்மானம் இங்கு தமிழ் மக்கள் ஒரு அரசாக இல்லாவிட்டாலும், அவர்கள் இறைமையுள்ள மக்கள், சுய நிர்ணயத்திற்கு உரித்தானவர்கள் என்பதை ஒரு கோட்பாடக உருவாக்கியவர் தந்தை செல்வா எனலாம். இன்றும் தந்தை செல்வா காட்டிய வரையறைக்கு உட்பட்டே தமிழ் மக்களினுடைய இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் பற்றி பேசப்படுவது அவரின் தீர்க்கதரிசனம் மிக்க அரசியல் ஞானத்தினையே காட்டுகின்றது.

இன்றைய காலகட்டத்தில், சில அரசியல்வாதிகள் யதார்த்த சூழலை விளங்கிக் கொள்ளாமல், வெறும் கைதட்டல்களுக்காக உணர்ச்சிவச அரசியலை மேற்கொள்பவர்களாக உள்ளனர். அல்லது சூழ்நிலைக் கைதிகளாக இருந்து தமது அரசியலைச் செய்கின்றனர். இவர்கள் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் சொற்பிரயோகங்களைப் பற்றிய தெளிவினைப் பெற்றிருப்பது அவசியமானதொரு விடயமாகும். இன்றைய காலகட்டத்தில் ஒற்றையாட்சிக்கு மாற்றீடானதொரு எந்த விடயத்தினையும் சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்வதாக இல்லை. அம் மக்களை அச்சம் கொள்ளத்தக்க வகையில் அரசியலில் வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்ளாதிருப்பது காலத்தின் தேவையாகும். இத்தகைய பண்பட்ட அரசியல் ஞானத்தினாலேயே எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தனது காலத்தில் ஆட்சியதிகாரத்தில் இருந்த மூன்று பிரதமர்களுடனும் இணைந்து செயற்பட முடிந்தது. இதுவே உண்மையில் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் அரசியல் ஞானத்தினைப் பறைசாற்றுவதாக உள்ளது. உண்மையில் இன்றைய அரசியல்வாதிகளின் பேச்சு மற்றும் கையாளுகின்ற மொழி என்பன தெற்கில்வாழும் சிங்கள சமூகத்தின் பீதி மனப்பான்மைக்கு விடையளிப்பதாக இல்லை என்பதனை சமகால அரசியல் வாதிகள் புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில், அரசியல் என்பது சாத்தியமானவற்றைச் சாதிக்கின்ற கலை ஆகும். அத்தகையதொரு சிறந்த புரிதல் தந்தை செல்வாவிடம் இருந்தது என்பதனை யாரும் மறுப்பதற்கில்லை. அதனாலேயே, இன்றுவரை இலங்கை அரசியல் வரலாற்றில் தந்தை செல்வாவினைப்போல நேர்மையானவரோ, நிகரானவரோ என எவரையும் சொல்ல முடியாது என்கின்றனர்.

தந்தை செல்வா சமயத்தினை அரசியலுக்காகப் பயன்படுத்தியவர் அல்லர். எடுத்துக்காட்டாக, 1952 ஆண்டுத் தேர்தலில் தந்தை செல்வா இந்து சமயத்தைச் சாராதவர் என்ற வகையில் தீவிர பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டபோது, இதனை முறியடிக்கும் வகையில், வீ.நவரத்தினம் அவர்களால் முன்வைக்கப்பட்டிருந்த நல்லை ஆத்தினத்திற்கு அழைத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று, அதனைப் படம் பிடித்து எதிர்ப்பிரச்சாரம் செய்யலாம் எனக் கூறப்பட்டதை, “சாட்டுக்காகச் சமயத்தை அரசியலுக்கு பாவிப்பதற்கு நான் விரும்பவில்லை” எனத் திட்டவட்டமாக மறுதலித்திருந்தார். இங்கு சமயத்தினையும் அரசியலையும் வெவ்வாறாக தந்தை செல்வா நோக்கியிருந்தார் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். இன்றைய இலங்கை அரசியலில் சில அரசியல்வாதிகள் மதத்தலைவர்கள் ஊடாகத் தங்களது கருத்துக் களை முன்வைப்பதையும், சில மதத்தலைவர்கள் தமது எல்லைகளுக்கு அப்பால் அரசியலில் ஈடுபடுவதையும், அவர்களின் கருத்துக்களை மறுதலிக்க சில அரசியல்வாதிகள் பயப்படுவதையும், மதவாத அமைப்புக்களிற்கு ஊடாக சில அரசியல்வாதிகள் தமது கருத்துக்களை முன் வைப்பதும், இனவாதங்களைத் தூண்டுகின்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதையும் நடைமுறையில் காண்கின்றோம். இவ்வாறான செயற்பாடுகளுக் கொல்லாம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு மதத்தை ஒரு ஊடகமாகப் பயன்படுத்துகின்ற நிலையே அவதானிக்கப்படுகின்றது. இத்தகைய பண்புக ளைத் தந்தை செல்வா தனது வாழ்நாளில் கைக்கொள்ளவில்லை. இன்றைய இலங்கை அரசியல் வாதிகளுக்கு மிகவும் தேவையான தொரு நற்பண்பாக இதனைக் கைக்கொள்ள வேண்டும்.

சொத்துச் சேர்ப்பதற்காக அரசியல் நடாத்துதல், இன்று அரசியலில் காணப்படுகின்ற தொரு விடயம். இன்றைய சில அரசியல்வாதிகள் பெரும் பணத்தினைச் செலவழித்து அரசியலில் வெற்றி பெறுகின்றனர். உண்மையில் மக்களிற் குச் சேவையாற்றுவதற்காகவா? இப்பணத்தைச் செலவழிக்கின்றனர் என்கின்ற வினாவினை எழுப்புவோமாயின். உண்மையில் இல்லை. அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவும், அதன்மூலம் வருவாய்களைப் பெற்றுக்கொள் வதுமே பெரும்பாலான அரசியல் வாதிகளின் நோக்கமாகவுள்ளது. தேர்தலில் வெற்றிபெற்றுச் சிறிது காலத்திலேயே பெரும் செல்வந்தர்களாக இன்றைய அரசியல்வாதிகள் மாறி விடுகின்றார்கள். அல்லது அவர்களின் பினாமிகளின் பெயரில் பெரும் செல்வத்தைச் சேர்ப்பதற்கான ஒரு வழியாகவே தற்போது அரசியல் நோக்கப்படுகின்றது. சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளைச் செய்வதற்கான தொரு வழி அரசியல். தேர்தலில் வெற்றி பெற்ற அரசியல்வாதி சிறிது காலத்திலேயே பெரும் செல்வந்தர். இது எப்படிச் சாத்தியம்? எனவே, இங்கு அரசியல் என்பது தவறாகச் செல்வத்தினைச் சேர்பதற்கானதொரு தொழிலாகப் பார்க்கப்படுகின்றது. ஆனால் தந்தை செல்வாவின் வாழ்க்கை இதற்கு எதிர் மாறானது. தந்தை செல்வா தன்னிடம் இருந்த சொத்தை விற்றே அரசியல் நடத்தியிருந்தார். இன்றைய அரசியல்வாதியின் வார்த்தையில் தந்தை செல்வாவை பிழைக்கத்தெரியாதவன் என்றே அழைக்கக்கூடும். அந்தவகையில், தற்காலச் சூழலில் பிழையானதொரு நடத்தை நிஜமாகியிருக்கிறது. ஆனால் தந்தை செல்வா இதற்கும் அப்பாற்பட்டே தன்னுடைய அரசியல் வாழ்வை வாழ்ந்து காட்டியவர்.

இவை மட்டுமன்றி, ஏனைய இனங்களி னதும் சுயநிர்ணய உரிமைகளை மதித்தல், பதவிகளைச் துச்சமாக மதித்தல், அஹிம்சை வழியில் ஒத்துழையாமை மற்றும் சாத்வீகப் போராட்டம், சமரச அரசியல் என்பன அவரிடம் இருந்த நல் அரசியல் பண்புகள். இன்று இத்தகைய பண்புகள் சமகால அரசியல்வாதிக ளிடம் குறைந்த மட்டத்திலேயே காணப் படுகின்றது. இவை ஆரோக்கியமானதொரு அரசியலுக்கு நல்லதல்ல. தந்தை செல்வாவிடம் காணப்பட்ட இத்தகைய செயற்பாடுகளை சமகால அரசியல் வாதிகள் தங்களை வழிநடாத்துகின்ற நற்பண்புகளாக அடையாளம் காணுதல் வேண்டும். உண்மையில் அரசியல் வாதிகள் மட்டுமன்றி, சாதாரண மக்களும் நல்வழியில் செல்ல இத்தகைய பண்புகள் வழிகாட்டியாகத் திகழ்கின்றன.

தந்தை செல்வா தமிழர் உரிமைக்காக இறுதிவரை சாத்வீகப் போராட்டத்தின்பால் நின்றவர். இவரது தீர்க்கதரிசனமிக்க அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானமே தமிழர்களுக்கு தலைமை தாங்குவதற் கான தகுதியைப் பெற்றுக் கொடுத்திருந்தது. தந்தை செல்வாவின் தீர்க்கதரிசனமிக்க அரசியல் ஞானத்தினை அவரது அரசியல் எதிரிகள்கூட குறைகூறியது கிடையாது. காரணம், அவரது சொல்லும், செயலும் ஒன்றாகவே இருந்தன. இப்பண்பை இன்றைய அரசியல் வாதிகளிடம் காண்பது அரிது. தாம் எதைச் செய்யக் கூடாது என்று மேடைகளில் பேசுகின்றார்களோ, அதைத் தாமே செய்கின்றனர். இதுவே, இன்றைய அரசியல்வாதிக்கும் தந்தை செல்வாவிற்கும் இடையிலான பிரிகோடு எனலாம். உண்மையில் தமிழ் இனத்தைப் பற்றிச் சிந்திக்கின்ற அரசியல்வாதி தந்தை செல்வாவின் அரசியல் ஞானத்தினை விளங்கிக்கொள்ள வேண்டும். அன்றில், பிழைப்பிற்காக அரசியல் நடத்தலாமே அன்றி, உரிமைக்கான அரசியல்வாதியாக நிற்க முடியாது. அத்தகையவர்கள் கால ஓட்டத்தில் மக்களால் தூக்கி எறியப்படுவர். உண்மையில், தந்தை செல்வாவைப்போல் ஒரு அரசியல்ஞானியே தற்போதைய நிலையிலும் தமிழ் மக்களிற்குத் தேவை. ஆனாலும் அவ்வெற்றிடம் இன்னும் நிரப்பப் படாமலே உள்ளது என்பதே யதார்த்தம்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**கி. துரைராசசிங்கம்**

பொதுச் செயலாளர்,

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

# நடந்தது என்ன....?

இலங்கை ஒரு தீவு. இது பல்வேறு ஆட்சிப் புலங்களைக் கொண்டிருந்தது. அவற்றை அரசர்கள் அல்லது அப்பிராந்தியத்தின் தலைவர்கள் ஆட்சி செய்தனர். அவற்றுக்கென தனித் தனியான இறைமை இருந்தது. 16ம் நுற்றாண்டில் அந்நியராட்சி படிப்படியாக இலங்கையைக் கவ்வியது. பழைய ஆள்புலங்கள் மாறின. இறுதியாக 1833ல் தீவு முழுவதும் ஒரே ஆட்சி நிருவாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. இருப்பினும் மக்களின் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட்டன. அரசியல் சீர்திருத்தங்கள் இடம்பெற்றன. தீவைச் சேர்ந்தவர்கள் ஒரு நாட்டின் குடிமக்களாகக் கணிக்கப்பட்டனர். 1948 பெப்ரவரி 04ல் இலங்கை சுதந்திரம் அடைந்ததாக அறிவிக்கப்பட்டது. இறுதிக் கால அந்நியர்களாக அக்காலம் வரை ஆட்சி செலுத்தியவர்கள் ஆங்கிலேயர்கள். உண்மையில் அவர்களது யூனியன் ஜக் கொடி இறக்கப்பட்டு சுதந்திர இலங்கையின் கொடி ஏற்றப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு நடைபெற வில்லை. உத்தியோகபூர்வமான தேசியக் கொடி தீர்மானிக்கப் படவில்லை. ஏற்கனவே கட்டி வைக்கப்பட்ட சிங்கக் கொடியோடு சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது.

சுதந்திர தினத்திற்கு முன்பே 1948ல் தேசியக் கொடிக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. ஆறு அமர்வுகள் இடம்பெற்றன. இறுதியாக 1951ல் பெரும்பான்மை ஆதரவைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று தேசியக் கொடி தீர்மானிக்கப்பட்டது. ஒரே மனதாகத் தீர்மானிக்கப்பட வேண்டிய இந்த விடயம் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டதில் இருந்தே பெரும்பான்மை சிறுபான்மை என்ற வியாதி நாட்டில் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்தத் தீவில் தமிழர்கள் சிறுபான்மையினரல்ல. அவர்கள் வரையறுக்கப்பட்ட நிலத்திலே தனித் தேசியமாக வாழ்ந்தவர்கள். சுதந்திரத்தின் முன்பும் இந்த அடையாள அங்கீகாரம் வலியுறுத் தப்பட்டது. ஆனால், போக்குக் காட்டப்பட்டதே ஒழிய வழங்கப்படவில்லை. சோல்பரி யாப்பில் சிறுபான்மையினருக்கான சில பாதுகாப்புக் கவசங்கள் ஏற்படுத்தப்பட்டன.

அ. உறுப்புரை 29ல் இன, மொழி, மத அடிப்படையிலான பாராபட்சமான சட்டங்க ளுக்குத் தடை விதிக்கப்பட்டது.

ஆ. ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களை தெரிவு செய்யும் தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டன.

இ. அரச நியமனங்கள் தொடர்பில் பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

ஈ. எதேச்சாதிகார சட்டங்களைத் தடுக்க மூதவை உருவாக்கப்பட்டது.

எனினும், பேரினவாதத் தலைவர்கள் இந்த ஏற்பாடுகளை வெவ்வேறு விதமாக முறியடித்தார்கள்.

சோல்பரி அரசியலமைப்புக்கு முன்பிருந்தே இந்த மனநிலை இருந்தது. 1826ல் இருந்து கண்டியச் சிங்களவர்கள். தமது தனித்துவத்தை வலியுறுத்தினார்கள். அவ் வேளைகளிலெல்லாம் நமது தமிழ்த் தலைமைகள் இவ்விதமான ஒரு சிந்தனையில் இருக்கவில்லை. யாரும் வலியுறுத்தாமலேயே 1883ல் நல்லதொரு அதிகாரக் கட்டமைப்பு ஏற்பட இருந்தது. அப்போது இலங்கை ஐந்து மாகாணங்களாக வரையறுக்கப்பட்டிருந்தது. நிருவாகச் செலவைக் குறைப்பது தொடர்பில் சட்டவாக்கற் கழகத்தில் *(Legislative Council)* இதற்கென தெரிவுக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அத்தெரிவுக் குழு நிர்வாக அலகுகளை மூன்றாக வகுத்தது. (1) கண்டியை மையமாகக் கொண்ட கண்டிய அலகு, (2) கரையோரத்தை உள்ளடக்கிய கரையோர அலகு. (3) வடக்குக் கிழக்கை இணைத்த தமிழர் பிரதேசம். தீர்மானம் ஒரே மனதாக நிறைவேற்றப்பட்டது. ஆளுநர் சேர் ஜேம்ஸ் றொபர்ட் லொங்டன் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதே விடயங்களை இன்னும் சிறப்பாக வலியுறுத்தி தனியான அறிக்கை ஒன்றும் அவருக்குக் கொடுக்கப்பட்டது. அதைக் கொடுத்தவர் அன்றைய வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களின் அரச அதிபரா யிருந்த து.கு.டக்ஸன் *(J.F.Duckson)*. ஆளுநர் இந்தத் தீர்மானத்தை பிரித்தானிய குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு அனுப்பி வைத்தாரா? இல்லையா? என்பது தெரியவில்லை. அப்படி இருந்திருந்தால் கண்டியர் வலியுறுத்திய சமஷ்டி அன்றே ஏற்பட்டிருக்கும். இதற்கு மேலாக டொனமூர் குழுவின் பரிந்துரையில் பிராந்திய சபைகளும் உள்ளடங்கியிருந்தன அவை நடைமுறைக்கு கொணரப்படாமை துர்ப்பாக்கியமே.

நாட்டிலே பெரும்பான்மை ஆட்சியை நிலைநாட்டுவதில் சிங்களத் தலைவர்கள் தெளிவாகவே இருந்து வந்துள்ளனர். 1936ம் ஆண்டு தேர்தலின் பின்னர் ஏழு நிருவாகக் குழுக்கள் அமைக்கப்பட இருந்தன. சிங்களத் தலைவர்கள், ஐரோப்பிய அரசியற் தலைவர் களுடன் பேசி அவர்களுக்கு மூன்று மந்திரிப் பதவிகள் தருவதாக வாக்குறுதி அளித்தார்கள். குழுக்கள் அமைக்கப்பட்டன. குழுக்களின் தலைவர்கள் மந்திரிப் பதவியைப் பெறுவதே நடைமுறை. ஆனால் சிங்களவர் தவிர்ந்த எவருமே குழுத் தலைவர்களாக நியமிக்கப்பட வில்லை. தனிச் சிங்கள மந்திரி சபை அமைக்கப் பட்டது.

1931ம் ஆண்டின் டொனமூர் அரசியல் அமைப்பு சிறுபான்மையினருக்கு தீங்கிழைக்கும் என்றனர் தமிழ்த் தலைவர்கள். சேர் பொன். இராமநாதன் அவர்கள் "டொனமூர் என்பது தமிழர்களின் முடிந்த கதை – *donoughermore means tamils no more*" என்றார். இதன் பிரதிபலிப்பையே மேலே கண்டோம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலங்கையின் முதலாவது இனக்கலவரம் 1915ல் இடம்பெற்றது. கண்டியச் சிங்களவர்களும், இந்திய முஸ்லீம்களும் மோதிக் கொண்டனர். ஆம், அன்றைய இலங்கையில் முஸ்லீம்கள், (1) இந்திய முஸ்லீம்கள் (2) இலங்கை முஸ்லீம்கள் என இரண்டு பட்டிருந்தனர். இலங்கை முஸ்லீம்கள் என்போர் மிக நீண்ட காலத்திற்கு முன்பே இலங்கையில் வணிகத்துக்காக வந்த அரேபியரின் வாரிசுகள். இந்திய முஸ்லீம்கள் என்போர் பிற்காலத்தில் இந்தியாவில் இருந்து வந்தவர்கள். மேற்குறித்த கலவரம் இதில் குறிப்பிட்ட இந்திய முஸ்லீம் களுடன் தான் ஏற்பட்டது. கலவரத்தின் போது இலங்கை முஸ்லீம்கள் பாதிக்கப்படவும் இல்லை, அவர்கள் தமது வியாபாரப் போட்டி காரணமாக இந்திய முஸ்லீம்களுக்கு உதவ முன்வரவுமில்லை.

இக்கலவரத்திலே பிரித்தானிய அரசு சிங்களவர்களுக்கு எதிராகச் செயற்பட்டது. சிங்களத் தலைவர்கள் ஏற்கனவே சுயாட்சியை வலியுறுத்தியவர்கள். கலவரம் நடந்த காலம் முதலாம் உலக யுத்த காலம். சுயாட்சிக் கோரிக் கையினால் எதிர்மனப்பான்மை கொண்டிருந்தனர் பிரித்தானியர். எனவே சிங்களத் தலைவர்கள் ஆட்சியைப் பிடிப்பதற்காக செயற்படுவதாக குற்றச்சாட்டு எழுந்தது. ஜேர்மனியர்களுக்கு ஆதரவாக செயற்படுகின்றார்கள் எனவும் கூறப்பட்டது. எனவே சிங்களத் தலைவர்களுக்கு எதிராக அவசரகாலச் சட்டம் அதுவும் சுட்டுக் கொல்லும் இராணுவச் சட்டம் *(Martial Law)* பிரகடணப்படுத்தப்பட்டது.

*D.S.*சேனாநாயக்க, *F.R.*சேனாநாயக்க, *D.P.*ஜெயதிலக, வேர்ட் சில்வா, *F.R.*பண்டாய நாயக்க, ஆதர் ஏ.டயஸ், *E.A.P.*விஜயரட்ண, *A.E.*குணசிங்க, *DR. C.A.*ஹேவவிதாரண என்போர் கைது செய்யப்பட்டனர். மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது. சேர் பொன்.இராமநாதன் அவர்கள் பிரித்தானியாவுக்கு விரைந்தார். இராணுவச் சட்டத்தின் வலி தின்மையை வாதிட்டு நிரூபித்தார். நீதிமன்றம் ஏற்றது. இராணுவச் சட்டம் நீக்கப்பட்டது. சேர் பொன்.இராமநாதன் அவர்கள் நாடு திரும்பினார். சிங்களத் தலைவர்களால் கௌரவிக்கப்பட்டார். என்ன நடந்தது...?

1921ல் இலங்கைத் தேசிய காங்கரஸில் தேர்தல் தொடர்பான முடிவுகள் எடுக்கப் பட்டன. கொழும்பு மத்தி தமிழர்களுக்கென ஒதுக்கப்பட்டது. இதற்கென ஒப்பந்தங்களும் இடம்பெற்றன. ஆனால் கடைசி நேரத்தில் சிங்களத் தலைவர்கள் தமிழ்த் தலைவர்களின் காலை வாரினர். சேர் பொன்.அருணாசலம் அவர்களுக்கு வழங்கப்படவிருந்த கொழும்பு மத்தியில் ஜேம்ஸ் பீரிஸ் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. சேர் பொன்.அருணாசலம் அவர்கள் இலங்கைத் தேசிய காங்கிரஸை விட்டு வெளியேறினார். தமிழகம் ஒன்று தான் தமிழருக்கான தீர்வு என வலியுறுத்தினார். அந்தச் செயற்பாடுகள் அதன் பின் அப்படியே தூர்ந்துவிட்டன.

சுதந்திர இலங்கையில் தமிழர்களுக்கு சமவுரிமை கொடுப்பதாக சிங்களத் தலைவர்கள் வாக்குறுதி அளித்தனர். சுதந்திர தினத்தன்று நன்றி தெரிவிக்கும் பேச்சு இடம்பெற்றது. மூதவை சார்பில் சேர் ஒலிவர் குணதிலக உரையாற்றினார். சுதந்திர இலங்கையின் பாராளுமன்றத்தைத் திறந்து வைத்த குளோசெஸ்டர் *(Gloucester)* பிரபுவும் அங்கு இருந்தார். இலங்கை பன்முகத் தன்மை கொண்ட ஒரு நாடு நாங்கள் சிறுபான்மை யினரையும் அரவணைத்துக் கொண்டு ஆட்சி நடத்துவோம் என்றார். என்ன நடந்தது...?

சுதந்திரம் கிடைத்த கையோடு 1948ல் குடியுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து 1949ல் இந்திய பாக்கிஸ்தானிய வதிவிட குடியுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து, 1951ல் இலங்கைப் பாராளுமன்ற தேர்தல்கள் திருத்தச் சட்டம் வந்தது. எல்லாச் சட்டங்களும் ஒரு விளைவை ஏற்படுத்தின. 211,915 ஆக இருந்த இந்திய வாக்காளர் தொகை 3191 ஆகக் குறைந்தது. 07 தமிழ்ப் பிரதிநிதிகளின் பராளுமன்றப்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிரவேசம் தடுக்கப்பட்டது. அன்றைய நிலையில் 15 இடங்களை வென்ற இடதுசாரிகளின் வலுவும் குறைக்கப்பட்டது. ஒட்டுமொத்தத்தில் பெரும் பான்மை மேலும் பெரும்பான்மை பெற்றது. சிறுபான்மையினருக்கான இடங்களையும் பெரும்பான்மையினரே அபகரித்துக் கொண்டனர். 1956 ஜூலை 05ல் சிங்களம் மட்டும் சட்டத்துக்கான சட்டமூலம் பாராளுமன்றத்திற்கு வந்தது. சோல்பரி அரசியலமைப்பின் உறுப்புரை 29ஐ மீறுகின்ற ஒரு செயல் இது. தமிழ்த் தலைவர்கள் எதிர்த்தார்கள். தந்தை செல்வா தலைமையிலே காலி முகத்திடலில் சத்தியாக்கிரகம் இடம் பெற்றது. தலைவர்கள் சிறையிலடைக்கப் பட்டார்கள். மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமலேயே சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேறியது. தமிழரசுக் கட்சியின் அறவழிப் போராட்டங்களால் சட்டத்தைக் கொண்டு வந்த பண்டாரநாயக்க தந்தை செல்வாவுடன் ஒப்பந்தம் செய்தார். இதுவே பண்டா செல்வா ஒப்பந்தம். 1957 ஆடி 26ல் இது ஆக்கப்பட்டது.

வடக்கு கிழக்கில் பிராந்திய சபைகள், வடக்குக் கிழக்கில் தமிழே நிருவாக மொழியும், நீதிமன்ற மொழியும், குடியேற்றங்கள் பிராந்திய சபைகளின் கட்டுப்பாட்டில் இருக்கும். ஐக்கிய தேசியக் கட்சி இதை எதிர்த்தது. J.R.ஜெயவர்த்தனா கண்டி நோக்கிப் பாத யாத்திரை புறப்பட்டார். புத்த பிக்குகள் பிரதமர் பண்டாரநாயக்காவின் வதிவிடத்தின் முன் சத்தியாக்கிரகம் செய்தனர். ஒப்பந்தம் கிழிக்கப்பட்டது.

இதன் பின் 1965ல் டட்லி செல்வா ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. மாவட்ட சபை களுக்கான சட்டமூலம் வரையப்பட்டது. பண்டாரநாயக்கா காலத்தில் வரையப்பட்ட தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்துக்கான ஒழுங்குவிதிகள் உருவாக்கப்பட்டன. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா விகாரமகாதேவி பூங்காவிலே சத்தியாக்கிரகம் செய்தார். ஒழுங்குவிதிகளைத் தடுப்பதாக சபதம் எடுத்தார். டட்லி செயற்பாடு களைக் கைவிட்டார்

பிரதமர் டட்லி சேனாநாயக்க திருக் கோணேஸ்வரத்துக்கு வந்தார். சிவபெருமானைத் தரிசித்தார். அறங்காவலர்கள் மனுக் கொடுத் தார்கள். கோணேஸ்வரத்தை புனித நகராக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். பிரதமர் அருகிலே இருந்த அமைச்சரிடம் தன்னால் புறக்குறிப்பிட்ட அந்த மனுவைக் கொடுத்தார். தொடர்ந்து அமைச்சர் திருச்செல்வம் அவர்கள் இவ்விடயம் தொடர்பில் திரு. E.R.சச்சிதானந்தம் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழுவொன்றை அமைத்தார். வர்த்தமானிப் பிரகடனம் வெளி யிடப்பட்டது. சேருவில புத்த பிக்கு வெகுண் டெழுந்தார். இச்செயற்பாட்டை நிறுத்தும்படி பிரதமரை வேண்டினார். பிரதமரும் அவ்விதமே செய்தார்.

இலங்கையின் வரலாற்றில் தமிழர் தம் அரசியல் தொடர்பில் தந்தை செல்வாவினது காலத்திலும், அதற்கு முன்பும் இவ்விதமான நிகழ்வுகளே இடம்பெற்று வந்தன. இந்த வரலாற்றுப் பக்கங்களை தமிழர்கள் மனங்கொள் வதும், தமது அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல் வதும் நாம் எச்சரிக்கையுடன் வாழ வழிவகுக்கும். எமது செயற்பாடுகளை இந்தப் பாடங்களின் அடிப்படையில் எவ்வாறு கையாள்வது என்பதற் கும் இவை கருவிகளாக அமையும். எனவே தமிழர் அரசியல் என்பது. மிகவும் கடுமையானது. இனவாதம், மதவாதம் என்பவற்றால் தொடர்ச்சி யாகச் சீரழிக்கப்பட்டுக் கொண்டு வருவது. இந்தப் பொறிகளில் இருந்து விடுபடுவதற்கான மார்க்கங்களை நிதானமாகவும், பக்குவமாகவும் கையாள வேண்டும்.

அதிகம் இழந்துவிட்டோம். ஆனால் அறம் எமது பக்கமே உள்ளது. அவசரப்படாது. ஆத்திரப்படாது, பொறுப்புணர்ச்சியோடு ஒரு தலைமையின் வழியில் நடந்து செல்லுவதே எமது வெற்றிக்கு வழி. தந்தை செல்வாவின் கோட்பாடுகளை உள்வாங்கியவர்களாக இவற்றை செய்து முடிக்க வேண்டும்.

- க.பரராசசிங்கம்

# இப்படியும் ஒரு மனிதரா...?

1961ம் ஆண்டின் முற்பகுதி என ஞாபகம். அதற்கு முந்திய வருடம் நாட்டில் நடந்துமுடிந்த பொதுத் தேர்தலில் வெற்றியைத் தமதாக்கிய சிறிமாவோ பண்டாரநாயக்க அரசாங்கம், நாட்டின் சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்த காலம்.

ஒரு நாள் கொழும்பு கல்வியமைச்சுக்கு நான் சொல்லவேண்டிய தேவை, அவசரத்தையும் உடனழைத்துக் கொண்டு வந்தது. கொழும்பு 02 மலாய வீதி, கல்வித் திணைக்களம். உள் நுழையும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதற்காக, நுழைவாயிலுக்கு பொலிஸ் காவல் போடப்பட்டிருந்தது. திணைக்களக் கடிதம், அல்லது யாராவது அரசியல்வாதி ஒருவரின் துணையுடன் தான் உள் நுழைய முடியும்.

எங்கள் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.எம்.இராசமாணிக்கம் அவர்கள் கொழும்புக்கு வந்துள்ளாரா என்பது பற்றியும் தெரியாது. பாராளுமன்ற வளாகத்திற்குப் போனால் இது பற்றிப் அறியலாம் என்னும் எண்ணம் தோன்ற, பிற்பகல் நான்குமணியளவில் பாராளுமன்றக் கட்டிடத்திற்கு வந்தேன். அங்கு எனக்கு நண்பரொருவரும் உதவிக்குக் கிடைத்தார். அவர் களுதாவளையைச் சேர்ந்த கனகரெத்தினம் என்பவர். கிழக்குப் பல்கலைக் கழகத்தின் தற்போதைய பதிவாளர் பகீரதன் அவர்களின் பெரிய தந்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்ற வளாகத்தின் வெளி மண்டபம் ஒன்றில் பல்வேறு சமூகங்களையும் சேர்ந்த மக்கள் கூடிநிற்பது தெரிந்தது. அவர்கள் பற்றி விசாரித்த போது, தத்தம் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரைச் சந்திக்க வந்து திரண்டிருப்பவர்கள் என்பது புரிந்தது. மேலும், அவர்களில் பலர் காகிதங்களில் ஏதேதோ எழுது வதையும், பின் அவற்றை மடித்து அங்கு வரும் உள்ளகச் சேவையாளர்களிடம் கொடுப்பதையும் கண்டேன். இது, அவர்கள் சந்திக்க வந்துள்ள பாராளுமன்ற உறுப்பினருக்குத் தங்கள் வரவை யும், தேவையையும் தெரிவித்து அனுப்பும் ஓலை என்பதும் விசாரிப்பில் வெளிவந்தது.

எங்கள் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் வந்துள்ளாரா? என்பதை அறிந்து கொள்ள, ஓலை அனுப்பும் செயலில் இறங்கத் தீர்மானித்தேன். யாராவது தமிழரசுக்கட்சி உறுப்பினருக்கு ஓலையொன்றை அனுப்பி, அவர் மூலம் எங்கள் உறுப்பினர் வந்துள்ளமை பற்றி அறிந்து கொள்ளலாமல்லவா...?

ஓலையை அனுப்ப எண்ணினேன். ஆனால் அங்கு காகிதம் பெறுவது கடினமாக இருந்தது. அங்கு பார்வையாளர்களின் ஓலை களைக் காவிச் செல்லும் உள்ளகச் சேவையாள் ஒருவரை அணுகி, ஒரு துண்டுக் காகிதம் தரமுடியுமா எனக் கேட்டேன். அவர் என்னைப் பார்த்துச் சிரித்து, அதோ உங்கள் கைகளில் உள்ள பத்திரிகையின் ஓரத்தைக் கிழித்து, அதில் எழுதுங்கள் என்று வழிகாட்டினார். அப்படி நடப்பது வழக்கம் போலும்...!

மேற்கொண்டு அதிகம் யோசிக்காது வீரகேசரி செய்தித்தாளின் ஓரம் நீளமாகக் கிழிக்கப்பட்டது. அதில் எழுதப்பட்ட வாசகம்:- "ஐயா! நான் பட்டிருப்புத் தொகுதியைச் சேர்ந்தவன். எங்கள் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் இங்கு வந்துள்ளாரா? என்பதை அறிய விரும்புகின்றேன். தயவுகூர்ந்து தெரியப் படுத்துங்கள்." என்று எழுதி மடித்து அந்த உள்ளகச் சேவகனிடம் கொடுத்து, யாராவது பெடரல் பார்ட்டி எம்.பி ஒருவரிடம் இதைக் கொடுங்கள் என்று கூறினேன்.

ஓலை உள்ளே சென்றுவிட்டது. பதில் வரக்கூடும் என்ற நம்பிக்கை சிறிதும் இருக்க வில்லை. எழுதிக்கொடுத்த காகிதமோ, கிட்டத் தட்ட காகிதப் குப்பை. அதைப் பெற்றவர், சீற்றத்துடன் எம்.பி.மார் என்றால், இவ்வளவு "சீப்" என்று ஆக்கிவிட்டார்களா? என்று சீறிப் பாயவும் கூடும் ஆகவே, அப்படியொரு விரும்பத் தகாத காட்சி உருவாக முன், அங்கிருந்து வெளியே நழுவிவிடலாம் என்றும் தோன்றியது.

கொஞ்சம் பொறுங்கள். பார்த்துவிட்டுச் செல்வோம் என்றார் நண்பர் கனகரெத்தினம். அவருக்கென்ன..? காகிதம் கொடுத்தனுப்பியவன் நான் தானே! வாங்குவது பொல்லடியோ, சொல்லடியோ வாங்கவேண்டியவனும் நான் தானே சற்று நேரத்திற்குள் எங்கெங்கோ எப்படி எப்படியோவெல்லாம் சிந்தனைகள் ஓடி மறைந்தன.

அதே வேளை...! அங்கே...! ஆம் நான் ஓலைகொடுத்தனுப்பிய உள்ளகச்சேவகர் வந்து கொண்டிருந்தார். அவருக்கு சற்றுத் தள்ளி... அதோ... அந்த ஒல்லியான உயர்ந்த மனிதர்....! ஆம்... நான் எழுதிக் கொடுத்ததும், வீரகேசரி பத்திரிகையின் அருகில் கிழித்ததுமான நீண்ட ஓலையை அப்படியே ஏட்டுச்சுவடியை ஏந்துவது போல இரு கைகளிலும் ஏந்திக்கொண்டு, கால் தூக்காத மெல்லிய நடையில் முன்நோக்கி வந்துகொண்டிருந்தார் தந்தை செல்வா.

யாராவது பெடரல் பார்ட்டி எம்பியிடம் கொடுங்கள் என்று நான் கூறியனுப்பினேன். ஒரேயடியாகத் தலைவரிடமே அவர் கொடுத்து விட்டார் என்பது புரிந்தது. அதோ அவரது கைகளிலிருக்கும் காகிதத்துண்டு....! சந்தேக மில்லை நான் அனுப்பியது தான்.

ஆதலால் அவர் என்னைத் தேடித்தான் வருகிறார் என்பது தெரிகிறது. அவர் முன் சென்று.... அந்தக் காகிதத்தை அனுப்பியது நான் தான் என நான் கூறவேண்டியது அவசர தேவையாக இருந்தது.

அவர் எத்தனை பெரிய மனிதர்....! பெரிய அரசியல் கட்சி ஒன்றின் தலைவர். நாடே தலைவணங்கும் நல்ல உள்ளம் கொண்டவர்.

வடக்குக் கிழக்கு தமிழ் மக்களுக்கு, அரசியல் ரீதியாக நல்ல வழிகாட்டத்தோன்றிய உதய சூரியன். சத்தியம், சாத்வீகம், அகிம்சை என்னும் முப்பொருள்களை முன் நிறுத்தும் மூவர்ணக் கொடியை உருவாக்கி அதன் கீழ் இந்த நாட்டுத் தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டு போராடினால் தான் எமது உரிமைகளைப் பாது காக்கலாம் என்று அன்றே உபதேசம் செய்த அரசியல் முன்சிந்தனையாளர்.(தீர்க்கதரிசி)

இவர் முன் நான்..? வந்துகொண்டிருக்கும் மனிதத் தெய்வத்தின் பாதங்களில் சாஸ்டாங் கமாக விழுந்துவிடலாமா... அவர் நெருங்க நெருங்க எனக்கு உதறலெடுத்தது. திடீரென ஏற்பட்ட உணர்ச்சிப் பெருக்கு என்ன செய்வ தென்றே தோன்றவில்லை. சிந்தித்து முடிவெடுப் பதற்கு இடையில்... இதோ வந்துவிட்டார், இந்த நேரம்பார்த்து நண்பர் கனகரெத்தினமும் என்னை சற்று முன்னாகத் தள்ளிவிட, நான் அவர் முன் சென்று குனிந்து வணங்கி, அவரது கைகளில் இருந்த காகிதத்தை நோக்கியபடி, அதை அனுப்பியது நான் தான் ஐயா, என்று நாக்குழறக் கூறினேன்.

அவரது உதட்டில் மெல்லியதொரு நகைக்கீறல் தோன்றக் கண்டேன். "இராசமாணிக்கம் அவர்கள் இப்போது உள்ளே இல்லை. சிறிது நேரத்தில் அவரது பேச்சு இருக்கிறது. கட்டாயம் வருவார்." எனக்கூறி அந்தக் காகிதத் துண்டை என்னிடமே தந்து, அருகில் நின்ற உள்ளகச் சேவகரைச் சைகையால் அழைத்தார்.

சேவகன் முன்னே வந்து, பாராளு மன்றத்துக் கூட்டங்கள் நடைபெறுவதை பொதுமக்கள் இருந்து பார்வையிடும் கலரிக் குரிய இரண்டு நுழைவுச் சீட்டுக்களை என்னிடம் கொடுத்தான்.

"சென்று கூட்டத்தைப் பாருங்கள்" என்று கூறிவிட்டுப் போகத்திரும்பியவரின் முன்னே நாங்கள் இருவரும் போய்க் குனிந்து, நன்றிகள் ஐயா என இருவருமே வணங்கினோம்.

அவர் கால்கள் தூக்காத அதே மெல்லிய நடையில் உள்ளே செல்வதையும் பார்த்துக் கொண்டு நின்றுதான், பொதுமக்கள் கலரிக்குப் போகத் திரும்பினோம்.

அவரின் பொன்னான கைகள்பட்டுச் சிரித்த அந்தக் காகிதத் துண்டைப் பத்திரமாகக் வீட்டுக்கு கொண்டுவந்து எனது புத்தகப் பொக்கிஷங்களுள் நீண்டகாலம் வரை பாது காத்து வைத்திருந்தேன். 1978இன் சூறாவளியில் தான் அது தொலைந்தது.

தேர்தல் காலத்தில் அங்கும் இங்கும் ஓடியலைந்து, சார்ந்து நிற்கும் தலைவரது பெயருக்குக் களங்கம் ஏற்படாதவாறு, ஏச்சுக் களையும் பேச்சுக்களையும் தாங்களே வாங்கி, மென்று விழுங்கி வெறும் வயிற்றோடு வேலைகள் செய்த, தொண்டர்களையெல்லாம், தேர்தல் வெற்றிக்குப் பின் ஆதரிக்கின்ற, அன்புகாட்டுகின்ற அருளான அரசியல்வாதிகள் அருகியிருந்த காலச் சூழ்நிலையில் தான், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் என்னும் பேரருளா ளனை தற்செயலாக நான் கண்டேன்.

எங்கள் தொகுதி பாராளுமன்ற உறுப்பி னர்கூட, எனது எதிரியொருவன். மூட்டிவிட்ட கோளினால் என்னைக் களட்டித் தூர வீசிவிட்டது வேறுகதை. ஆனால் அன்று என் நெஞ்சில் புகுந்த தந்தை செல்வா, அங்குதான் பூசை புனற்காரங்களுடன் நீண்டகாலம் வாழ்ந்தார்.

தந்தை செல்வா எடுத்த காரியங்களில் இப்படிச்செய்யா விட்டால் இதுதான் நடக்கும் என்று கூறிய எந்தவொரு முன்னுணர்வுக் கூற்றும் பொய்த்ததேயில்லை. ஆனால் அவர் தொடங்கிய முயற்சிகளும், முற்போக்கு நடவடிக் கைகளும் வெற்றியளிக்காமைக்குச் சிங்கள அரசியல் தலைர்களே காரணம் என்று எவருக்கும் கூறத்தோன்றும். ஆனால் தந்தை செல்வாவின் அரசியல் கோரிக்கைகள், போராட்டங்கள் யாவற்றின் பின்னடைவுக்கும் தமிழ் அரசியல்வாதிகளே காரணம் என்பதும் மறுக்க முடியாது உண்மை.

பிரித்தானியர் கையாண்ட பிரித்தாளும் சூழ்ச்சியையே சிங்களத் தலைவர்களும் கையாண்டனர். எந்தவொரு கோரிக்கையையும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவழிப்பட்டு நின்று தமிழ்த் தலைமைகள் போராடியதற்கு வரலாறு இல்லை. தந்தை செல்வா ஓர் உரிமைப் போராட்டத்தைத் தொடங்கினால், அவரை நட்டாற்றில் விட்டுவிட்டு சிங்கள அரசுகளுக்கு வால் பிடித்ததே வரலாறு அரைமந்திரி, முழு மந்திரி பதவிகளுக்கும், அரச திணைக்களங்களின் அபார கவனிப்புக் களுக்கும் ஆசைப்பட்டு சொந்த இனத்தின் எதிர்காலத்தையே சூனியமாக்கிவிட்ட தமிழ்த் தலைவர்கள் வந்து வந்து மடிந்து போனார்கள். அற்ப சலுகைகள் கூட அவர்களுடன் மறைந்து விட்டன. தமிழினத்தின் எதிர்காலத்தைத் தமிழினமே கவனிக்காத ஒரு சூனிய நிலையினைக் கண்டு தான் "தமிழ் மக்களை இனிக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்" என்றார் தந்தை செல்வா.

இவருக்கு முன் அரசியல் வானில் பெரும் புகழீட்டிய சேர் பொன் அருணாசலம், சேர் பொன் இராமநாதன் போன்ற எவருடனும் இணைத்துக் கொள்ளப்படாத "தந்தை" என்னும் அடைமொழி இவர் பெயருடன் இணைக்கப் பட்டமை, இன்னும் எத்தனை எத்தனையோ உயர்பண்புகளை உள்ளடக்கியிருக்கும் என்பது உண்மை.

நெஞ்சம் நெகிழ்ந்து நேசக்கரம் நீட்டிய தமிழர் தந்தை செல்வா அவர்களின் செயல் களால் குளிர்வடைந்த இந்த ஏழையும் இப்படியும் ஒரு மனிதரா...? என்று வாய் பிழந்து நின்றதில் வியப்பென்ன...?





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- பா. அரியநேரத்திரன் மு.பா.உ
அம்பிளாந்துறை, கொக்கட்டிச்சோலை.

# அன்று தந்தைசெல்வா, நேற்று தலைவர் பிரபாகரன், இன்று சம்மந்தன் ஐயா மௌனங்களும் தொடர்ச்சியும்

1898 மார்ச் 31ம் திகதி மலேசியா, ஈப்போ நகரில் பிறந்து ஆசிரியராய், சட்டவல்லுனராய் திகழ்ந்த தந்தை செல்வா அவர்களின் வாழ்க்கை வரலாறு அரசியல் பணி அவரால் முன் எடுத்த அகிம்சைப் போராட்டங்கள் பற்றி பலர் பல விதமாக அவரின் ஆளுமை அரசியலை கட்டுரைகளாக வரைந்துள்ளனர். அவை எல்லாவற்றையும் மீண்டும் நான் எழுதமுற்படவில்லை. அவரால் எமது இனத்தின் விடுதலைக்காக பல்வேறு செயல்பாடுகளை செய்தமையை நாம் பெருமையாகவும் எமது இனவிடுதலையின் அத்திவாரமாகவும் நாம் அதனை பார்கின்றோம்.

1944ல் அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சியின் மூலமாக அரசியல் பணிக்கு உள் நுழைந்த தந்தை செல்வா அவர்கள் 1949ல் மலையக மக்களின் வாக்குரிமை பறிப்புக்கு அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் ஆதரவு வழங்கிய காரணத்தால் அந்த கட்சியில் இருந்து விலகி 1949 டிசம்பர் 18ம் திகதி கொழும்பு மருதானை எழுதுவினைஞர் சங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டடத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் இலங்கை தமிழரசு கட்சியை அங்குரார்ப்பனம் செய்து வைக்கின்றார்.

இலங்கை தமிழரசு கட்சி 1949 டிசம்பர் 18ல் ஆரம்பித்த தந்தை செல்வா இந்த கட்சியை தொடங்குவதற்கு சரியாக இரண்டுவருடம் ஏழு மாதங்களுக்குமுன்பே 1947 யூன் 1ம் திகதி தமது சொந்தப்பணத்தில் கொழும்பு பண்டார நாயக்கா மாவத்தையில் "சுதந்திரன்" என்ற பெயரில் ஒரு அச்சகத்தையும் "சுதந்திரன்" என்ற பெயரில் வாராந்த பத்திரிகையும் நடாத்தினார்.

இலங்கை தமிழரசு கட்சி 1949 டிசம்பர் 18ல் ஆரம்பித்த போது தமது சுதந்திரன் அச்சகத்தையும் சுதந்திரன் பத்திரிகையும் இலங்கை தமிழரசு கட்சியின் உத்தியோகபூர்வ பத்திரிகையாக மாற்றியமைத்தார். இலங்கை தமிழரசுக்கட்சி உருவாக்கிய அன்றே வடக்கு கிழக்கு இணைந்த தமிழரின் தாயகத்திற்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு சமஷ்டி அடிப்படையிலான தீர்வு என்பதே இலங்கை தமிழரசு கட்சியின் கோரிக்கை என்பதை தந்தை செல்வா தெட்டத் தெளிவாக வலியுறுத்தினார்.

இதன் காரணமாகவே இலங்கை தமிழரசு கட்சி "சமஷ்டிக்கட்சி" எனவும் அழைக்கப்பட்டது. சாதி, மதம், வர்க்கம், என்பவற்றை நிராகரித்து தமிழ் தேசிய விடுதலைக்காக தந்தை செல்வா அன்று தொடக்கம் 1976மே 14ம் திகதிவரை பலதரப்பட்ட அகிம்சை ரீதியான போராட்டங்களையும், பல ஒப்பந்தங்களையும் இலங்கையில் மாறிமாறி ஆட்சி செய்த இலங்கைத்தலைவர்களுடன் செய்தார். ஆனால் தந்தை செல்வாவின் அகிம்ஷை ரீதியான போராட்டங்களை உதாசீனம் செய்த சிங்களத்தலைமைகளின் போக்கை கண்டு மனம் நொந்த தந்தை செல்வா 1976மே 14ம்திகதி வட்டுக் கோட்டை தொகுதியில் பண்ணாகம் ஊரில் "தமிழீழம் தான் தீர்வு" என்ற தீர்மானத்தக்கு வந்தார்.

1972ல் இலங்கை தமிழரசு கட்சி மாணவர் இயக்கங்கள், தொழில் சங்கங்கள், பலதரப்பட்ட தமிழ் அரசியல் கட்சி பிரமுகர்கள் இணைந்து "தமிழர் கூட்டணி" என்ற பெயரில் ஒரு அமைப்பு உருவாக்கப்படுகிறது.

அந்த அமைப்புத்தான் 1976 மே 14ம் திகதி வட்டுக்கோட்டையில் "தமிழர் விடுதலைக் கூட்டணி" என்ற பெயர் மாற்றப்பட்டு இந்தக் கூட்டணியின் தலைவர்களாக தந்தை செல்வா ஜீ.ஜீ. பொன்னம்பலம் மலையக தலைவர் தொண்டமானும் பொதுச் செயலாளராக அ. அமிர்தலிங்கமும் நியமிக்கப்பட்டு இந்த கட்சியின் சின்னமாக உதயசூரியன் சின்னமும் அந்த மகாநாட்டில் அறிவிக்கப்படுகிறது.

வட்டுக்கோட்டையில் தந்தை செல்வா தலைமையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இதுதான்.

ஒவ்வொரு நாட்டுக்கும் உள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திர இறைமையுள்ள மத சார்பற்ற சோஷலிச தமிழீழம் அமைக்கப்படும்.

தமிழீழத்தில் பிரதேசத்தில் வாழும் அனைவரும் தமிழீழ பிரஜைகள் ஆவர்.

இலங்கையில் எப்பகுதியில் வாழும் தமிழ்பேசும் மக்களும் இலங்கை மூதாதையர் களை கொண்ட உலகில் எப்பகுதியில்வாழும் தமிழ் பேசும் மக்களும் அங்கீகரிக்கப்படுவார்கள். இதுதான் வட்டுக்கோட்டை தீர்மானத்தின் சுருக்கம்.

இந்த தீர்மானத்திற்கான பொதுத் தேர்தலாக தமிழர் விடுதலை கூட்டணி 1977 யூண் 24ம் திகதி இடம் பெற்ற தேர்தலை மையமாகவைத்து வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து தமிழ் தொகுதிகளிலும் வட்டுக் கோட்டை தீர்மானத்துக்கு தமிழ் மக்கள் வாக்குகளை அள்ளி கொடுத்தனர். ஆனால் மட்டக்களப்பு கல்குடா தொகுதி தவிர்ந்த அனைத்து தொகுதிகளிலும் தமிழர் விடுதலை கூட்டணி அமோக வெற்றி பெற்று இலங்கை பாராளுமன்றத்தில் முதலாவது எதிர்கட்சி தலைவராக அ. அமிர்தலிங்கம் நியமிக்கப்பட்டார்.

இதில் வேதனை என்னவெனில் 1976. மே 14ல் வட்டுக்கோட்டை தீர்மானத்தை

ஏகமனதாக நிறை வேற்றிய தந்தை செல்வா 1977 யூன் 24ம் திகதி வடக்கு கிழக்கு மக்கள் தமிழக கோட்பாடுக்கு வழங்கிய அமோக ஆதரவை தன் கண்ணால் பார்கும் முன் சரியாக இரண்டு மாதங்களுக்கு முன் 1977 ஏப்ரல் 26ல் இறையடி சேர்ந்தார். தந்தை செல்வா அவர்கள் தமிழீழதிற்கான அங்கிகாரத்தை வடகிழக்கு மக்கள் வழங்கியதை கண்ணால் காணாமலே கண்மூடிவிட்டார் இது பெரும் துயரமாகும்.

தந்தை செல்வாவினால் முன்னடுக்கப்பட்ட "அ" என்ற அகிம்ஷை, போராட்டமும் தந்தை செல்வாவின் மரணத்துடன் மௌனமாகிவிட்டது, அந்த தந்தை செல்வாவின் அகிம்ஷைப் போராட்டம் "ஆ" என்ற ஆயுதப் போராட்டமாக தலைவர் பிரபாகரன் முன் எடுத்தார்.

**தலைவர் பிரபாகரன்**

1954 நவம்பர் 26ல் யாழ்ப்பாணம் வல்வெட்டி துறையில் வேலுப்பிள்ளை பார்வதி தம்பதியினருக்கு மகனாக அவதரித்த பிரபாகரன் தமது ஆரம்ப கல்வியை மட்டக்களப்பு அரசடி தமிழ் கலவன் பாடசாலையில் (தற்போதய மட்டக்களப்பு மகாஜன கல்லூரி தரம் 1 வகுப்பு தொடக்கம் தரம் 3 வகுப்புவரை கல்விபயின்றார்.

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையை சேர்ந்த பிரபாகரனின் தந்தை காணி உத்தியோகத்தராக அப்போதய காலப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கடமை புரிந்தமையால் அவரும் அவரின் குடும்பத்தாரும் மட்டக்களப்பு தாமரைக்கேணியில் வாடகை வீட்டில் வசித்தனர். அதனால் பிரபாகரன் என்ற குழந்தை மட்டக்களப்பு மகாஜன கல்லூரியில் கல்வி பயின்றது.

அதன்பின் பிரபாகரன் யாழ்ப்பாணம் சிதம்பரக்கல்லூரியில் கல்விபயின்றார். 1971ம் ஆண்டு 17 வயதில் தமிழ் மாணவர் பேரவையில் இணைந்து செயலாற்றி 1973ல் கடல்வழியாக தமிழ் நாடு சென்று பின்னர் "புதிய தமிழ் புலிகள்" என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கினார்.

1974 ஜனவரி 10ம் திகதி யாழ் தமிழராய்ச்சி மாநாடு படுகொலைக்குப்பின் தமிழ் இளைஞர்கள் மத்தியில் விடுதலை போராட்ட உணர்வு தீவிரமடைந்தது. 1976மே, 5ம் திகதி வவுனியா பூந்தோட்டத்தில் "புதிய தமிழ் புலிகள்" என்ற பெயரை தமிழீழ விடுதலைப் புலிகள்" என்ற பெயராக தலைவர் பிரபாகரன் உத்தியோகபூர்வமாக மாற்றினார்.

இவ்வாறு பிரபாகரனால் தமிழீழ விடுதலைப்புலிகள் தோற்றம் பெற்ற காலத்தில் பல்வேறு தமிழ் இளைஞர்கள் பலதரப்பட்ட பெயர்களில் விடுதலைப் போராட்ட அமைப்புக் களாக சுமார் 36 விடுதலை இயக்கங்கள் தோற்றம் பெற்றன.

அனைத்து ஆயுத இயக்கங்களும் ஆரம்பத்தில் வங்கி கொள்கை, கரந்தடி தாக்குதல் அணியாகவே இயங்கின. அனைத்து இயக்கங்களும் இலங்கை இந்திய ஒப்பந்தம் அதனூடான 13வது அரசியல் அமைப்பு பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட காலப்பகுதியான 1989 யூலை 29ம் திகதி வரையுமே 35 விடுதலை இயக்கங்களில் செயல்பாடுகள் இலங்கை இராணுவத்துக்கு எதிராக இருந்தது.

1989 யூலை 29க்குப்பின் தமிழீழ விடுதலைப்புலிகள் தவிர்ந்த அனைத்து இயக் கங்களும் தமது செயல்பாடுகளை நிறுத்திக் கொண்டன. சில தமிழ் இயக்கங்கள் அரசியல் கட்சிகளாக இலங்கை அரசியல் பதிவு செய்து அரசியல் நீரோட்டத்தில் இணைந்து கொண்டனர்.

ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் கரந்தடி தாக்குதல் அணியாக இருந்து மரபுப் படையணியாக நான்கு படையணிகளை கொண்டு செயல்பட்டது.

1. தரைப்படை
2. கடற்படை
3. வான்படை
4. தற்கொலை அணி (கரும்புலிபடையணி)

இதில் ஆண் போராளிகளும் பெண் போராளிகளும் அளப்பரிய தியாகங்களை செய்து விடுதலைக்காக தம் உயிரை ஈர்த்தனர்.

2000ம் ஆண்டு தொடக்கம் 2008ம் ஆண்டு வரை வடக்கு கிழக்கு தாயகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70 வீதமான நிலப்பரப்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து ஒரு நடைமுறை அரசை நிர்வகித்த பெருமையும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு உண்டு.

இலங்கை அரசினால் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதி இராணுவக்கட்டுப்பட்டுப் பகுதி என வரையறுத்து கூறப்பட்டதும் இரண்டு கட்டுப்பாட்டு பகுதிகளிலும் புலிகளும், இராணுவமும் சோதனை சாவடிகளை அமைத்து அந்தந்த பகுதிக்கு செல்பவர்களை சோதனை செய்த வரலாறுகளும் உண்டு. இந்த ஆயுதரீதியான தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தலைமை ஏற்று நடத்திய தலைவர் பிரபாகரனால் வடக்குகிழக்கு மக்களுக்கான நிரந்தர தமிழீழம் கிடைக்கும் என நாம் மட்டுமல்ல உலகமும் நம்பி இருந்தது.

ஆனால் உலக வல்லரசுகளின் துணையுடன் இலங்கை அரசு 2006ல் கிழக்குமாகாணம் திருகோணமலை மாவிலாற்றில் தொடங்கிய போர் மட்டக்களப்பு மாவட்டம் வாகரை படுவான் கரை, மன்னார், கிளிநோச்சி, முல்லைத்தீவு, முள்ளிவாய்க்காலுடன் அந்த ஆயுதப் போராட்டம் மௌனமானது.

தந்தை செல்வா முன்னெடுத்த "அ" என்ற எழுத்துடன் ஆம், அகிம்ஷை 1976 மே 14ல் வட்டுக்கோட்டை தீர்மானத்துடன் மௌனமானது. தலைவர் பிரபாகரனை முன்னெடுத்த "ஆ" என்ற எழுத்துடன் ஆம் ஆயுதப்போர 2009 மே, 19ல் முள்ளிவாய்க்கால் அவலத்துடன் மௌனமானது.

சம்பந்தன் ஐயா தற்போது "இ" என்ற எழுத்துடன் ஆம் இராஜதந்திர போர் இப்போது இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது.

**இரா. சம்பந்தன் ஐயா**

1933 பெப்ரவரி 10ம் திகதி திருகோணமலையில் இராஜவரோதயம் தம்பதியினருக்கு மகனாக அவதரித்தவர்தான் சம்பந்தன் சட்டத்தரணியாக வாதாடும் திறமை கொண்டவராக பதவி வகித்தவர்.

சம்மந்தன் ஐயா பாடசாலையில் கல்விபயிலும் காலத்தில்தான் தமது 18 வயதில் 1951 ஏப்ரல் 13ம், 14ம், 15ம், திகதிகளில் திருகோணமலையில் 1வது இலங்கை தமிழரசு கட்சி மாநாடு தந்தை செல்வா தலைமையில் இடம் பெற்றது.

இந்த மாநாட்டில் மாணவனான சம்மந்தன் பார்வையாளராக கலந்து கொண்டார். இந்த மாநாட்டில் இலங்கை கைதமிழரசு கட்சியின் சமஷ்டிக் கொள்கை மாணவனான சம்மந்தன் ஐயாவை மிகவும் கவர்ந்தது.

தந்தை செல்வாவின் கொள்கை பற்று உணர்வு இளைஞனான சம்மந்தன் ஐயா முழுமையாக ஏற்றுக் கொண்டு இலங்கை தமிழரசு கட்சியின் அகிம்சை போராட்டங்களில் கலந்து கொண்டார்.

1961 ஏப்ரல் 17ம் திகதி இலங்கை தமிழரசு கட்சியின் அகிம்சைரீதியான தமிழரசு தபால் சேவை போராட்டம் இடம் பெற்றபோது அப்போது பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசு 48 மணிநேர ஊரடங்கும் அவசர காலச்சட்டத்தையும் பிறப்பித்து சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கான இளைஞர் களையும், இலங்கை தமிழரசு கட்சி உறுப்பினர் களையும் கைது செய்தனர்.

இதில் திருகோணமலையில் சம்மந்தன் ஐயாவும் 1961 ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்ட சில நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டார்.

1961 தொடக்கம் இலங்கை தமிழரசு கட்சி தந்தை செல்வா தலைமையில் முன்னெடுத்த பல அகிம்சை ரீதியான போராட்டங்களில் இளைஞனாகவும் சட்டத்தரணியாகவும் இருந்து சம்மந்தன் ஐயா பங்குபற்றியுள்ளார்.

1977 யூன் 24ம் திகதி இடம்பெற்ற பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணி சார்பாக சம்மந்தன் ஐயா தமது 44 வது வயதில் முதல் முறையாக பாராளுமன்றத்தேர்தலில் போட்டியிட்டு திருகோணமலை தொகுதியில் அமோக வெற்றியீட்டினார். இந்த தேர்தலானது தந்தை செல்வாவின் வட்டுக்கோட்டை தீர்மானமான தமிழீழத்திற்கான அங்கீகாரத்தை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பெறும் தேர்தலாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழ்தேசிய கூட்டமைப்பு கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் முயற்சியால் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒப்புதலுடன் பல கட்ட பேச்சு வார்த்தைகளின்பின் 2001 அக்டோபர் 21ம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப் பட்டு தமிழ் தேசிய கூட்டமைப்பு போட்டியிட்ட 1வது தேர்தல் 2001 டிசம்பர் 9ம் திகதியாகும் இந்த தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணியின் சின்னமான உதய சூரியன் சின்னத்தில் போட்டி யிட்ட போது திருகோணமலை மாவட்டத்தில் இரா.சம்பந்தன் ஐயா அதிகப்படியான வாக்கு களை பெற்று வெற்றியீட்டினார். 2004 ஏப்ரல் 2ம் திகதி தமிழ் தேசிய கூட்டமைப்பு இரண்டாவது தேர்தலை சந்திக்கும் போது ஏற்கனவே போட்டியிட்ட தமிழர் விடுதலை கூட்டணியின் சின்னத்தை தர ஆனந்த சங்கரி மறுத்துவிட்டார்.

இதனால் வன்னியில் இடம்பெற்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் இடையில் நடந்த கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் தலைமை இலங்கை தமிழரசு கட்சியில் வீட்டுச்சின்னத்தில் அந்த தேர்தலில் போட்டியிடுமாறு பணித்தனர். அந்த தேர்தலில் வடக்குகிழக்கில் இருந்து 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு இரா. சம்மந்தன் ஐயாவை தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவராக ஏகமனதாக தெரிவு செய்தனர். அந்த 22 பாராளுமன்ற உறுப்பினர்களில் நானும் ஒருவனாக தெரிவானேன். 2004 ஏப்ரல் தொடக்கம் இன்றுவரையும் தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவராக இரா. சம்பந்தன் ஐயா தொடர்ந்தும் பணியாற்றுகிறார்.

2009 மே 19ம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் மௌனத்திற்குப்பின் இரா. சம்பந்தன் ஐயா தலைமையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு முழுநேர அரசியல்பணியை முன் எடுப்பதை காணலாம்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் 2004 மே 14 மௌனத்திற்குபின் இடம்பெற்ற 2010, 2016 பொதுத் தேர்தல்களிலும் இரா. சம்மந்தன் ஐயா திருகோணமலை மாவட்டத்தில் வெற்றி பெற்ற பாராளுமன்ற உறுப்பினராக திகழ்கிறார்.

2015 ஜனவரி 8ம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் தற்போதய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவையும் 2015 ஆகஸ்ட் 17ம் திகதி பொதுத் தேர்தலில் தற்போதய நல்லாட்சி அரசையும் தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசியல் தீர்வை பெறுவதற்காக ஆதரவு வழங்கி செயல்பட்டாலும் தற்போதய அரசாங் கத்தில் எதிர்கட்சி தலைவராக இரா. சம்பந்தன் ஐயா செயல்படுகிறார்.

சர்வதேச அரங்கில் எமது இனத்திற்கு நடந்த இனப்படுகொலைக்கான ஒரு நீதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் இரா. சம்மந்தன் ஐயா தலைமையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு செயற்படுவதை மறுதலிக்க முடியாது. இருந்தும் "சாண் ஏற முழம் சறுக்கும்" என்ற பழ மொழிக்கு அமைவாக நாம் எதிர்பார்த்த அரசியல் தீர்வு மற்றும் சர்வதேச நீதிமன்ற விசாரனை என்பன ஆமைவேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தாலும் தந்தை செல்வாவால் ஆரம்பித்த எமது விடுதலை போரட்டமும் தலைவர் பிரபாகரனால் முன் எடுக்கப்பட்ட தியாக ஆயுதம் ஏந்திய போரட்டமும் மௌனிக் கப்பட்டதும் தற்போது சம்பந்தன் ஐயாவின் தலைமையில் இராஜதந்திர போராட்டமாக வலுப்பெற்றுள்ளது என்பாதை மறுக்கமுடியாது.

சம்மந்தன் ஐயாவை பொறுத்தமட்டில் தந்தைசெல்வாவின் அகிம்சை போரட்டத்தில் அவருடன் பங்குபற்றிய அனுபவமும், தலைவர் பிரபாகரன் காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கத்தின்பின் அவருடன் பழகிய அனுபவ மும் கொண்ட ஒருதலைவராக இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவராகவும் அரசியல் செயல்பாடுகளை வழிநடத்தும் தலைவராகவும் இருப்பது எமக்கு பெருமையே, ஒரு இனத்தின் விடுதலை என்பது நிரந்தரமான மௌனமல்ல அந்த மௌனத்திலும் தொடர்ச்சி உண்டு.

றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
சிரேஷ்ட விரிவுரையாளர், மொழித்துறை,
கிழக்குப் பல்கலைக் கழகம், இலங்கை

# தந்தை செல்வாவின் சமூக நோக்கு

'ஓர் இனம் அழியாமல் இருப்பதற்கு பல ஏதுக்கள் தேவை. ஒன்று அந்த இனத்தின் எண்ணுத்தொகை குறையாமல் இருப்பது. இன்னொன்று அந்த இனம் வசிக்கும் பிரதேசம் பறிபோகாமல் இருப்பது'

1951இல் திருகோணமலையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் முதலாவது தேசிய மகாநாட்டில் (14.04.1951) உரையாற்றிய தந்தை செல்வா மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

தந்தை செல்வா (1898–1977) அரசியல் தலைவராக, தமிழினத்தின் பெருந் தலைவராக, ஏறத்தாழ மூன்று தசாப்தங்களாக தமிழரசுக் கட்சியை வழி நடத்திய பெருமகனாக, மத பேதமற்று மக்களை நெறிப்படுத்திய வழிகாட்டியாக, எதிர்கொள்ளவிருக்கும் சவால்களை முன்னறிவிக்கும் தீர்க்கதரிசியாக, தன்னை விரும்பியோர்களால் மட்டுமன்றி விமர்சித்தோராலும், எதிர்த்தோராலும், கபடமாய் ஏமாற்றியோராலும் கூட வியக்கப்பட்ட தலைவராக வாழ்ந்தவர். அவரது காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பது அவ்வாறு வாழ்ந்தோரின் பெரும் பேறு.

இலங்கைத்தீவில் வாழும் சகல இன மக்களும் சுயகௌரவத்துடனும் தனித்துவத் துடனும் வாழ வேண்டும் என்ற கொள்கையுடையவராக வாழ்ந்தவர் தந்தை செல்வா. எந்த இனத்தினருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் பாதிக்கப்படுகின்ற இனம் தன் உரிமையை வென்றெடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பதில் அவர் நம்பிக்கையும் கொண்டிருந்தார்.

அவரது சமூக நோக்கு பரந்தது. தன் சமூகத்தின் மட்டில் அவர் கொண்டிருந்த பற்றும் அதன் காரணமாக அவர் மேற்கொண்ட நேர்மை யான அரசியல் நடவடிக்கைகளும் வரலாற்று முக்கியத்துவம் உடையவை. தமிழினத்தின் விடிவிற்காக இலங்கையில் ஆட்சிக்குவந்த பெரும்பான்மையினத் தலைவர்களுடன் தான் வாழ்ந்த காலத்தில் பொருத்தமான சந்தர்ப்பங்க ளிலெல்லாம். பொறுமையுடனும் விடாமுயற்சியு டனும் ஆயினும் ஆணித்தரமாகவும் உறுதியு டனும் பேச்சுவார்த்தைகளில் அவர் ஈடுபட்டார்.

1936 இல் தந்தை அரசியலில் ஆர்வம் கொள்ளத் தொடங்கினார் எனக் குறிப்பிடப்படு கின்றது. டாக்டர்.எஸ்.பொன்னையா (இலங்கைப் பாதுகாப்புப் படையில் மேஜராகப் பணியாற்றி யவர்) மற்றும் வல்லிபுரநாதன் (வடமராட்சியைச் சேர்ந்தவர்: நொத்தாரிசாகப் பணியாற்றியவர்) ஆகியோர் தமிழ்ப்பகுதிகளுக்கு தனியரசு கோரி பிரித்தானியாவிற்கு அனுப்பிய விண்ணப் பத்தினைத் தந்தை திருத்திக் கொடுத்திருந்தார் எனக் கூறப்படுகின்றது. அதன் பின்னர் 1944இல் கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கூட்டத்தில் அவர் கலந்து கொண்டார்.

1947இல் நடைபெற்ற தேர்தல், தந்தை யின் அரசியல் பிரவேசத்திற்கு அங்கீகாரம் அளித்தது. தமிழ்க்காங்கிரஸ் சார்பில் போட்டி யிட்டு காங்கேசன்துறைத் தொகுதியில் அவர் வெற்றி பெற்றார். தான் அரசியலுக்கு வருவ தற்கு முதலில் விரும்பவில்லையெனவும் தமிழ் மக்கள் பிரதிநிதிகளாக அரசாங்க சட்டசபையி லிருந்த சிலர் தமிழ்மக்களுக்குத் துரோகம் செய்துவிட்டமையால் அத்தகையோரை அரசி யலிலிருந்து அகற்றி தமிழ் மக்களின் நலன்களில் அக்கறையுள்ள தலைமைத்துவத்தை அளிப்பதற் காகவே அரசியலில் இறங்கியதாகவும் குறிப் பிட்ட அத்தேர்தல் வெற்றியின் பின்னர் தந்தை கூறினார்.

1948 டிசம்பர் 10இல் இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தில் பேசும்போது தந்தை குறிப்பிட்ட ஒரு விடயம் முக்கியமானது. 'இன்று இந்தியத் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப் படுகிறது. நாளை மொழிப்பிரச்சினை வரும் போது இலங்கைத் தமிழ் மக்களுக்கும் இதே கதி நேரிடும்.' என்று அவர் கூறியது பிற்காலத் தில் நடந்தது வரலாறு.

1950களின் நடுப்பகுதியில் தந்தை சுகவீனமுற்றபோது அரசியலில் இருந்தும் ஓய்வு பெறுமாறு வலியுறுத்தப்பட்டபோது தமிழினம் இக்கட்டான ஒரு சூழலில் இருக்கும் போது தான் விலகுவது பொருத்தமானதல்ல எனவும் அவர் நிராகரித்திருந்தார்.

'சிங்களம் மட்டும்' சட்ட மூலத்தை எதிர்த்து 1956இல் (1956.06.05) சத்தியாக்கிரகப் போராட்டத்தில் அவர் பங்குபற்றினார். சாத்வீகமாக பேராட்டத்தினை அவர் அதிகம் விரும்பினார்.

1960 ஜூலையில் நடைபெற்ற தேர்தலில் எதிர்க்கட்சிப் பதவியை வகிக்கும் சந்தர்ப்பம் தந்தை செல்வாவிற்குக் கிட்டியபோது அதனை ஏற்குமாறு வற்புறுத்தப்பட்டபோதும் அதனை மறுத்து அந்தப் பதவியைக்கொண்டு தமிழ் மக்களின் எந்த உரிமையையும் பெற்றுவிட முடியாது எனக் குறிப்பிட்டு தமிழரசுக் கட்சியை விடக் குறைந்த ஆசனங்களைப் பெற்ற லங்கா சமசமாஜக் கட்சித் தலைவராக இருந்த என். எம். பெரேரா எதிர்க்கட்சித் தலைவராவதற்கு தந்தை செல்வா உதவினாரென அறிய முடிகின்றது.

1960 டிசம்பர் 26இல் தமிழரசுக் கட்சியின் செயற்குழு கூடியபோது வவுனியாவைச் சேர்ந்த ஏ.சிற்றம்பலம் தனியரசு பிரேரணையை முன் மொழிந்தார். சிங்கள மக்களினதும் சிங்கள தலைமையிதும் ஒத்துழைப்பு இதற்கு எப்போதுமே கிடைக்காது என்றும் அவர் வாதாடினார். அவ்வேளை தந்தையின் நிலைப் பாடு இவ்வாறிருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது.

தனிநாட்டுக் கோரிக்கை ஆயுதப்

போருக்கு இட்டுச்செல்லும் எனவும், ஆயுதப்போர் பிரச்சினையைத் தீர்க்காது எனவும், பலாத்காரம் பலாத்காரத்தையே வளர்க்கும் எனவும் அவர் கூறினார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

உடுவிலில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் பதினொராவது மகாநாட்டில் அரசாங் கத்திடமிருந்து தமிழருக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை என்பதை தந்தை செல்வா ஏற்றுக் கொள்கிறார். ஆயினும் சமஷ்டியை திரும்பவும் வலியுறுத்தினார். தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி அம் மகாநாட்டில் தனிநாடு கோரும் பிரேரணையைக் கொண்டுவர எத்த னித்தபோது அதனை தந்தை தடுத்து விட்டார். இது குறித்து பத்திரிகையாளரிடம் விளக்கிய போது அவர் பின்வருமாறு கருத்துச் சொன்னதாகக் குறிப்பிடப்படுகின்றது.

'தனிநாட்டுக் கோரிக்கையை நாங்கள் நிராகரிக்கவில்லை. அவசரப்படதீர்கள்: பொறுத் திருங்கள், சமஷ்டி பாதைக்கு சிங்களத் தலைவர் களைத் திருப்ப அவகசம் தாருங்கள் என்று மட்டுமே கூறினோம்' என அவர் குறிப்பிட்டதாகக் கூறப்படுகின்றது. மேலும் சமஷ்டி அடிப்படையில் ஐக்கிய இலங்கையை உருவாக்குவதற்கான எல்லாச் சந்தர்ப்பங்களும் நிராகரிக்கப்பட்டதன் பின்புதான் தனிநாட்டுக் கோரிக்கை முன்வைக் கப்படுதல் வேண்டும் எனவும் ஆணித்தரமாகக் கூறினார்.

இத்தகைய நிகழ்வுகள் தன் சமூகத்தின் மீது அவர் கொண்டிருந்த அக்கறையையும், இலங்கை அரசியலில் பெரும்பான்மைத் தலை வர்களால் தமிழ் மக்களுக்கான நியாயமான உரிமைகளைக் கொடுத்துவிட முடியாத நிலைமை குறித்த அவரது தீர்க்கதரிசமான எதிர்வு கூறலை யும் எடுத்துக்காட்ட ஆதாரங்களாக அமைபவை.

தமிழர் மீது கொண்ட கரிசனையைப் போலவே ஏனைய சிறுபான்மைச் சமூகத்தினர் மட்டிலான அவரது கரிசனையும் அபரிமிதமா னதாக அமைந்திருந்தது. தமிழ்க்காங்கிரஸின் பிளவின் பின்னர் 1949 டிசம்பர் 18இல் மருதா னையில் தந்தை செல்வாவின் தலைமையில் தமிழ் பேசும் சமூகத்தின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பான முடிவுகளை எடுப்பதற்காகக் கூட்டம் கூடியபோது பல்வேறு விடயங்கள் அங்கு முன்வைக்கப்பட்டன. இலங்கை தமிழரசுக் கட்சி அங்கு தோற்றம் பெற்றது. தந்தை தனது உரையில் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் தொடர்பாகவும் மலைநாட்டுத் தமிழர் பிரச்சினை தொடர்பாகவும் கூட கருத்துத் தெரிவித்தார்.

'இந்த நாட்டில் இருக்கிற சிறுபான்மை இனங்களின் தானைத் தளபதியாக நாங்கள் எல்லோரும் அடையாளம் காணும் தந்தை செல்வா' என்று தந்தை செல்வா பிறந்த நூற் றாண்டு தின விழாவில் *(31.03.1997)* அப்போது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளராகவிருந்த ரவூப் ஹக்கீம் சிறப்புரை யாற்றியபோது குறிப்பிட்டிருந்தார். முஸ்லிம் மக்கள் மத்தியிலும் மதிக்கப்பட்ட தலைவராக தந்தை செவ்வா வாழ்ந்தமையையும் முஸ்லிம் களின் உரிமைக்காகவும் அவர் குரல் கொடுத் தவர் என்பதையும் யாவரும் அறிவர். தமது பிரதேசம் தொடர்பாகத் தீர்மானம் எடுப்பதற்கு அவர்களுக்குப் பூரண சுதந்திரம் உண்டென்றும் அவர் குறிப்பிட்டார்.

குடியுரிமைச் சட்டங்களும் அரசாங்கத் தின் நிதி உதவியுடன் நிகழும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் கிழக்கிலங்கை முஸ்லிம்களுக்கு ஆபத்தை விளைவிப்பதனையும் இத்தகைய போக்குகளுக்கு எதிராகத் தமிழ் பேசும் சமூகத்தினர் ஒன்றிணைந்து போராட வேண்டியதன் அவசியத்தையும் காலம்கருதி அவர் வலியுறுத்தினார். தமிழ்பேசும் மக்களின் ஒற்றுமை முக்கியமானதென அப்போதே அவர் குறிப்பிட்டார்.

தமிழரசுக் கட்சியின் முதலாவது மகாநாடு திருகோணமலையில் நடைபெற்றபோது அங்கு ஏழு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முதலாவது தீர்மானம் இலங்கையில் தமிழ் பேசும் இனத்துக்கென அரசியல் சுயாதீன உரிமையைக் கோருவதாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது தீர்மானம் இந்தியத் தமிழரின் பிரஜாவுரிமை பற்றியது. இலங்கை அரசாங்கம் இந்தியத் தமிழரின் பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் பறித்து விட்டதெனவும் இதற்கு எதிராக ஆணித்தரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டது.

ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம் இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்களின் தொகையைக் குறைத்துவிடும் என வாதிட்ட தந்தை, இவ்வொப் பந்தத்தினைக் கண்டித்து அறிக்கையினையும் வெளியிட்டார்.

சமூகத்திலுள்ள குறைகளைக் களைந் தாலேயே நினைப்பதை சாதிக்க முடியும் எனக் கூறும் அவர் தமிழ் மக்கள் அரசியல் சுதந்திரம் பெறுவதற்கு அச் சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர் களாகக் கருதப்படுவோருக்கான உரிமைகளை முதலில் வழங்க வேண்டும் எனவும் வலியுறுத் தினார். தமிழ்ச் சமூகம் தனக்குள்ளேயே குறிப் பிட்ட சில பகுதியினரை தீண்டத்தகாதவர்களென ஒதுக்கி வைத்துக் கொண்டு தமிழ் மக்களுக்கு நியாயமான உரிமையையும் சுதந்திரத்தையும் தரவேண்டும் எனக் கோருவது நியாயமற்றதென தந்தை செல்வா ஆரம்பம் முதலே குறிப்பிட்டு வந்தார். 1957 ஜூலையில் மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் தேசிய சிறப்பு மகாநாட்டில் தீண்டாமையை ஒழிப்பதற்கு அகிம்சை வழியிலான இயக்கம் ஆரம்பிக்கப்பட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. தமிழ் மக்களின் விடிவிற்கான போராட்டத்தின் ஓர் அம்சமாக தீண்டாமை ஒழிப்பு தமிழ்ப் பிரதேசமெங்கும் முன்னெடுக்கப்பட்டது. சமூக விடுதலை சாத்தியமாவதற்கு தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டியது அவசியம் என்பது உணர்த்தப்பட்டது.

'தேநீர்க் கடைப் பிரவேசம்' இதில் ஒரு நடவடிக்கையாகும். யாழ்ப்பாணத்திலுள்ள தேநீர்க்கடை உரிமையாளர்களின் மகாநாடு 1958இல் நடத்தப்பட்டபோது உணவுச்சாலைக ளிலும், தேநீர்க்கடைகளிலும் சாதிபேதம் பாராட் டுவதைக் கைவிடுமாறு உருக்கமான வேண்டு கோளை விடுத்ததாகவும் அது ஏற்றுக் கொள்ளப் பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

தமிழரிடையே சாதியால் ஒடுக்கப்பட் டோரைவிட மலையகத் தமிழரின் நிலை இன்னும் கேவலமாக இருக்கிறதென்றும் அவர்கள் அரசியலில் தீண்டத்தகாதவர்களாய் இருக்கிறார்கள் என்றும் பிறிதோர் சந்தர்ப்பத்தில் தந்தை குறிப்பிட்டார். இவை அவரது சமூகவுணர் வையும் உயர்நோக்கையும் தெளிவுறுத்துகின்றன.

தனிப்பட்ட எவரையும் போற்றுவதை தந்தை செல்வா விரும்பியவரல்லர். கட்சி, இலட்சியங்கள் இவற்றில் பற்று வைக்குமாறும் அவற்றைப் போற்றுமாறும் அவர் கூறினார். 1975இல் (1975.02.06) காங்கேசன்துறை உப தேர்தலில் வெற்றியீட்டியபோது இளைஞர் களுக்கு அளித்த அறிவுரையாக இது அமைந்தது. இது அவரது சமூக நோக்கை வெளிப் படுத்துகின்றது.

'சிங்களம் மட்டும்' சட்டத்தினால் தமிழ் அரசாங்க ஊழியர்கள் பாதிக்கப்படக் கூடிய சந்தர்ப்பம் உருவானதால் அது குறித்தும் தந்தை கவனம் செலுத்தினார். குறித்த சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர் அரச ஊழியர்களாக இணைந்தோர் ஆங்கிலத்தில் தொடர்ந்து தொழில் செய்யக் கூடிய பகுதிகளுக்கு மாற்றப்பட வேண்டும் எனவும் அத்தகையோருடன் ஆங்கி லத்திலேயே உரையாட வேண்டும் எனவும் சிங்கள திறமைப் பரீட்சை உத்தியோகத்தை உறுதிப்படுத்துவதற்கு காரணமாக்கப்படக் கூடா தெனவும் சம்பளம் மற்றும் பதவி உயர்வுகளுக் காக இலகுவான சிங்கள திறமைப் பரீட்சையை நடத்தலாம் எனவும் தமிழரசுக்கட்சி சார்பான ஆலோசனை முன்வைக்கப்படுவதற்கு தூண்டு கோலகத் தந்தை இருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. இதன் மூலம் தொழிலாளர் வர்க்கத்தின் நலன்களைப் பேணுவதில் அவர் கொண்டிருந்த நோக்கு புலப்படுகின்றது.

பிறிதொரு சந்தர்ப்பத்தில் ஸ்ரீமாவோ தலைமையிலான அரசாங்கம் லேக் ஹவுஸைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பேற்க நடவடிக்கை எடுத்தது. குறிப்பாக ஐக்கியதேசியக் கட்சியையும் சேனநாயக்கா குடும்பத்தையும் இந்நிறுவனம் ஆதரித்து வந்தமையே அரசின் இந்நடவடிக்கைக்குக் காரணமெனவும் கூறப்பட்டது. அரசின் இந்நட வடிக்கையினை எதிர்த்து தமிழரசுக்கட்சி சார்பாக தந்தை செல்வா அறிக்கையினை விடுத்தார். இவ்வறிக்கையின் இறுதிப் பகுதி சில முக்கிய குறிப்புக்களைக் கொண்டிருந்தது. தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் மக்களுக்கும் லேக் ஹவுஸ் இழைத்த அநீதிகள் சுட்டிக் காட்டப்பட்டிருந்தன. தமிழ்பேசும் மக்களுக்கு உரிமைகள் வழங்கப் படுவதை அது எப்போதும் எதிர்த்து வந்துள்ளது எனவும் குறிப்பிடப்பட்டது. எனினும் பத்திரிகை யின் வாயை அடைப்பதல்ல தீர்வு என்பதை அவ்வறிக்கையில் தந்தை குறிப்பிட்டிருந்ததாக அறியமுடிகின்றது. இந்நிகழ்வு அவரது உயரிய நோக்கை வெளிப்படுத்துகின்றது.

'தந்தை செல்வா தனது வாக்கை தன் வாழ்நாளில் செயலாக்கியும் வாழ்ந்தார் என்ப தற்கு அல்லது தன் செயல்களையே வாக்காக்கி வழங்கினார் என்பதற்கு அதே ஆண்டு நடைபெற்ற சம்பவத்தினை ஆதாரமாகக் காட்ட முடியும். 1975 ஜனவரியில் இரா.ஜனார்த் தனனுக்கும் தந்தை செல்வாவிற்கும் இடையே நடைபெற்ற சந்திப்பின்போது தந்தை செல்வா தனது சுயசரிதையினை எழுதவேண்டியதன் அவசியத்தை இரா.ஜனார்த்தனன் வலியுறுத்திய போது தமிழரசுக்கட்சியின் வெள்ளிவிழா மலரின் பிரிதியொன்றினை அவருக்கு அளித்து 'இதுதான் என் சுயசரிதை' என்று தந்தை குறிப்பிட்டதாக அறிய முடிகின்றது.

தனது மக்களின் அரசியல், சமூக முன் னேற்றத்திற்காக 'தமிழரசுக் கட்சி'யின் ஊடான அர்ப்பணிப்புடனான சேவையை அவர் வழங்கி யமையின் மூலம் தன்னைத் தனித்த ஒருவராக அடையாளப்படுத்துவதை விரும்பாமல் கூட்டு முயற்சியின் மகத்துவத்தை அவர் குறிப்பால் உணர்த்தினார். எத்துறையாயினும் அத்துறையில் தாம் ஒருவரே சாதிக்கும் அல்லது தாங்கும் சக்தியாக இருப்பதாக இறுமாப்புக் கொள்வோர் மத்தியிலே தந்தை வேறுபட்ட நோக்குடையவரக வாழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

சமூக நோக்குடையோர் தம்மை முதன் மைப்படுத்துவதை விரும்புவதில்லை என்பதற்கு இச்சம்பவங்கள் எடுத்துக் காட்டுகளாகின்றன. இத்தகைய தனி மனித ஆளுமைகளே அவரை தனித்துவம் மிக்க ஆளுமையுடைய தலைவராக உயர்த்துவதற்கும் காரணிகளாயமைந்தன.

அரசியல் இலாபங்களுக்காகவும் தலை மைத்துவத்தைத் தக்க வைத்துக் கொள்வதற் காகவும் மதம் மாறி சிறுபான்மைக்குள் பெரும் பலம் வாய்ந்திருந்த இந்து மதத்தினை அவர் பின்பற்ற எத்தனிக்கவில்லை என்பது முக்கிய மான விடயமாகும்.

புரட்டஸ்தாந்து கிறிஸ்தவராக அவர் இருந்தபோதும் ஏனைய சமயங்களையும் சமய வழிபாடுகளையும் அவ்வச் சமயங்களைப் பின்பற்றுவோரையும் மதித்து நடக்கும் சமூகப் பண்பு மிக்கவராக அவர் வாழ்ந்தார். இளமைக் காலத்தில் தான் வாழ்ந்த தெல்லிப்பளையிலும் அதன் அயல் கிராமங்களிலும் இந்துக் கோயில் களின் திருவிழாக்களில் பங்குகொள்வதையும் அவர் வழக்கமாகக் கொண்டிருந்தார் எனக் குறிப்பிடப்படுகின்றது. குறிப்பாக இசை மீதான அவரது ஆர்வம், மத எல்லைகளைக் கடந்து கோவில்களில் நடைபெற்ற இசைக் கச்சேரிகளில் முன் வரிசை இரசிகராக மாறச் செய்தது. காரைக்குறிச்சி அருணாசலத்தின் நாதஸ்வர இசை இரசிகரான தந்தை யின் இறுதிக் காலத் தில் நினைவு தப்பிய சந்தர்ப்பத்தில் அவரால் விரும்பப்பட்ட அவ்விசை தொடர்ச்சியாகப் பல நாட்கள் இசைக்கப்பட்டது.

அவரது சமூக நோக்கு பரந்திருந்தமை யினாலேயே இவ்வாறு நிகழ்ந்தது. இவற்றிற் கெல்லாம் உச்சமாக அவரது இறுதி ஊர்வலமும் இறுதிச் சடங்கும் இடம்பெற்றது. அன்னாரின் பூதவுடல் அடங்கிய பேழை சந்தனக் கட்டை அடுக்கிய சிதையில் வைக்கப்பட்டதும் பிஷப் அம்பலவாணர் சிதைக்குத் தீ மூட்டினார். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவச் சூழலில் அசாதாரண நிகழ்வாகும். ஆயினும் அது நடந்தது.

தந்தையின் சுயசரிதையைத் தான் எழுதுவதற்குத் தூண்டுகோலாக அமைந்தது ஒரு கிறிஸ்தவரை இந்துக்கள் தலைவராக மட்டுமல்ல தந்தையாகவும் ஏற்றதே என்பதை ஆழமாகச் சிந்தித்ததன் விளைவே என 'தந்தை செல்வா - ஓர் அரசியல் வாழ்க்கைச் சரிதை' என்னும் நூலை எழுதிய ரி. சபாரத்தினம் குறிப்பிட்டுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியைத் தொடர்ந்தும் தானே வகிப்பதற்கு தந்தை விரும்பவில்லை. தலைமைப் பதவி அடிக்கடி மாற்றப்பட வேண்டும் என்ற கருத்துடையவராக அவர் விளங்கினார். இதன் மூலம் சமத்துவமானதும் சுதந்திரமானதும் ஜனநாயகமானதுமான தலைமைத்துவத் தெரிவிற்கும் அவர் வழி வகுத்தார்.

சமஷ்டி முறையினைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்த தந்தை செல்வா, அகிம்சை வழியிலேயே அதை சாத்தியப்பாடுடையதாக்கவும் விரும்பினார். ஆனால் காலம் வேறுவிதமான முடிவிற்கு வருவதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தது. தமிழ் இளைஞர்களின் எழுச்சியும் தமிழ்த் தலைமைகளின் மீது அவர்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கையீனமும் புதிய வழியை நோக்கி அவர்களைச் செயற்பட வைத்தது.

சிங்களத் தலைவர்களை சமஷ்டிப் பாதைக்குத் திருப்பும் முயற்சி தோல்வியடைந்தால்? வாலிபர்கள் வெற்றி பெறுவார்கள் என்றும் அப்போது சிங்கள மக்களை வேண்டுமென்றே தவறான வழியில் இட்டுச் சென்ற சிங்களத் தலைவர்கள் பதில் சொல்ல வேண்டி வரும் என்றும் சிங்களத் தலைவர்கள் தமது செயல்களின் விளைவுகளை அனுபவிக்காவிடினும் அவர்களைத் தெரிவுசெய்த பாவத்துக்காக சிங்கள மக்கள் துன்பப்பட நேரிடும் எனவும் தந்தை ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்.

1975 பெப்ரவரியில் நடந்த காங்கேசன் துறை உப தேர்தலின் பின்னர் தமிழரசுக் கட்சியின் இலட்சியமான சமஷ்டி ஆட்சிக் கோரிக்கை தோல்வி கண்டுவிட்டதை முதன் முதலாக ஒப்பக்கொண்டதாகக் கூறப்படுகின்றது. அதன் பின்னர் 1976இல் (1976.05.14) தமிழர் கூட்டணியின் முதலாவது மகாநாடு வட்டுக் கோட்டையில் தந்தை செல்வாவின் தலைமையில் நடைபெற்றபோது இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கு சுதந்திரமான இறைமையுள்ள சோஷலிச தமிழ் ஈழம் அமைய வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டு தீர்மானமாக அது நிறைவேற்றப்பட்டது. இதனையடுத்து தமிழர் கூட்டணியின் பெயர் தமிழர் விடுதலைக் கூட்டணி என மாற்றப்பட்டது. அதன் செயலளர் நாயகமாக அ.அமிர்தலிங்கம் தெரிவு செய்யப்பட்டார்.

1977 ஏப்ரல் 26இல் தந்தை செல்வா இவ்வுலகை நீத்தார். தான் வாழ்ந்த காலத்தில் வெவ்வேறுபட்ட சமூகத்தினரை அவர் மதித்து நடந்தார். அவர்களது பிரச்சினைகளுக்காகவும் குரல் கொடுக்க அவர் தயங்கவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக தனது சமூகத்தின் விடிவிற்காக இறுதி வரை தளராமல் போராடினார். சூழல் மாற்றத்திற்கும், கால நிர்ப்பந்தத்திற்கும், புதிய தலைமுறையினரின் அபிலாஷைகளுக்கும், மக்களின் ஆணைக்கும் ஏற்ப பொருத்தமான முடிவுகளை எடுக்கவும் விட்டுக்கொடுக்கவும் அவர் முன்வந்தார். தலைமைத்துவத்தை அடுத்த தலைமுறைக்கு கையளித்து சமூக முன்னேற்றத்திற்கான புதிய பாதைக்கு வழி வகுக்கும் வகையில் வழி விட்டார். அவரது வரலாறு தனி மனித வரலாறல்ல. ஒரு சமூகத்தின், ஒரு இனத்தின் வரலாறு. கட்சிகளாகவும், அணிகளாகவும் பிரிந்து போனாலும் இன்றும் பல்வேறு சமூகத்தினராலும் மதிக்கத்தக்க வகையில் நினைவு கூரப்படும் தலைவராகவும் அவர் திகழ்கின்றார்.


உசாத்துணை:


- சபாரத்தினம்.ரி, 2006, 'தந்தை செல்வா : ஓர் அரசியல் வாழ்க்கைச் சரிதை', குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.
- குணரத்தினம் வெ.செ & சம்பந்தன் ஐ.தி

(தொகுப்பாசிரியர்கள்), 2004, 'ஒப்பற்ற தலைவர் தந்தை செல்வா', சுடரொளி வெளியீட்டுக் கழகம், ஐக்கிய இராச்சியம்.

- ரவூப் ஹக்கீம், 1997, 'முஸ்லிம்களின் அரசியல் தனித்துவத்தை அங்கீகரித்த தமிழர் தலைவர் தந்தை செல்வா', (தமிழர் விடுதலைக் கூட்டணியினால் ஏற்பாடு செய்யப்பட்ட தந்தை செல்வா நூற்றாண்டுத் தொடக்க விழாவில்(31.03.1997) ரவூப் ஹக்கீம் ஆற்றிய உரை)







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வே. தவராஜா
தலைவர், மட்/மண்முனை வடக்கு, பிரதேசக்கிளை,
இலங்கைத் தமிழரசுக் கட்சி,

# தந்தை செல்வா அவர்கள் எதிர் கொண்ட சோதனைகள்!

ஈழத்து அரசியல் வரலாற்றில் தந்தையென்று மக்களால் அழைக்கப்பட்ட மிகவும் பெருமைக்குரிய ஒரேயொரு தலைவனென்றால் அமரர் சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்கள்தான்!

எப்படியானதொரு உறவு அது. சாதாரண உறவல்ல!
ஊனோடும், உயிரோடும் கலந்த உறவு!
என்றுமே பிரிக்கமுடியாத உறவு!
உதிரத்தின் உதிரமான உயிர்கொடுக்கும் உறவு!
முப்பது ஆண்டுகால அரசியல் வாழ்வு!
முழுத்தமிழனத்தையும் கட்டியாண்ட வாழ்வு!
தமிழர்களுள் ஊடுருவி நிலைத்து விட்ட புனிதமான வாழ்வு!
அதனால்தான் நா தடக்காமல் அனைவரும் தந்தையென்று உச்சரித்தார்கள்!
தந்தை தமிழர்க்குத் தெய்வம்.

தனக்கென்று வாழாமல் தான் சார்ந்த சமூக மேம் பாட்டிற்காக வாழ்ந்து உயிர் துறந்த உத்தமர்கள் கைகூப்பிப் தொழும் தெய்வத்திற்கு ஒப்பானவர்கள்.

ஆம்; தந்தை நாம் கைகூப்பித் தொழும் தெய்வம். தன்னுடைய வாழ்வில் தந்தையவர்கள் ஏராளமான சோதனைகனை எதிர் கொண்டார். துவண்டு போகாமல் தணிந்து நின்று எதிர்கொண்டு உயர்ந்து நின்றார். அவ்வாறு தந்தையவர்கள் சந்தித்த சோதனைகளை எடுத்தியம்பிட விளைவதே என் ஆக்கத்தின் நோக்கம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### ஆரம்ப வாழ்வு

*1898.03.31* மலேசியாவிலே தூய்மை யென்றழைக்கப்படும் ஈப்போ எனும் நகரில் பிறந்தார்.

தம்பியிருவர், தங்கையொருவரென தாய், தந்தையரோடு மகிழ்ச்சியாக வாழ்த்து வந்தார். மூத்தமகன் அகவை நான்கை எட்டிய வுடன் பிள்ளைகளின் கல்விபற்றி தந்தையின் தந்தையார் விசுவநாதன் வேலுப்பிள்ளை சிந்திக்கத் தொடங்கினார்.

செல்வந்தர்கட்கும், செல்வாக்குமிக்க அரசியல் பிரபல்யங்களுக்குமே அங்கே பாடசாலைகள் இருந்தன.

### சொந்தமண்

எனவே நான்கு பிள்ளைகளையும், தாய் ரியர் அன்னம்மா கணபதிப்பிள்ளை அவர்களுடன் தங்களது சொந்தமண்ணான தெல்லிப்பளைக்கு அனுப்பி வைத்தார்.

பிஞ்சு வயதிலே தந்தையைப் பிரிந்து வாழும் துர்ப்பாக்கிய நிலையைத் தந்தையவர்கள் அனுபவித்தார்கள்!

### ஆரம்பக்கல்வி

அன்னை மண்ணிலே ஆரம்பிக் கல்வி. அங்கேதான் தமிழர் பண்பாடு, கலாசாரங்கள், மனித விழுமியங்கள் பயின்றார். தந்தையொரு நடிகன். பெண்வேடம் தரித்து நடித்தார். நாதஸ்வர இசையிலே நாட்டம் கொண்டு அதில் நனைந்தார்.

### இரண்டாம் நிலைக்கல்வி

யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி இண்டாம் நிலைக் கல்வியை வழங்கிட, இன்ரர் சயன்ஸ் பரீட்சையில் சித்தியடைந்தார்.

### ஆசிரியப்பணி

1917 இல் தனது 19 ஆவது வயதில் தனது சகோதர்களின் படிப்பிற்காக ஆசிரியப் பணியேற்றார்.

### பி. எஸ்.சி.விஞ்ஞானப் பட்டதாரி

ஆசிரியப்பணி புரியும் காலத்தே வெளிவாரி மாணவனாகத் தோற்றி விஞ்ஞானப்பட்ட தாரியானார்.

### தகப்பனாரின் இறப்பு

இக்காலப் பகுதியில் மலேசியாவிலே தகப்பனார் நோய்வாய்ப்படுகிறார். அங்கே தகப்பனாரோடு சில காலம் கழித்தார். மீண்டும் இங்கே வந்து சில நாட்களில் அவர் மரணச் செய்தி கேட்டு சோகத்தில் நனைந்தார்.

தனது 20 ஆவது வயதில் குடும்பச் சுமையேற்றார்.

### மீண்டும் ஆசிரியராக இணைவு

கொழும்பு சென். தோமஸ் கல்லூரியில் மீண்டும் ஆசிரியராக இணைகிறார். தனது தம்பி இராஜசுந்தரம் நோய்ப்படுக்கை யுறுகிறார். தம்பியைப் பார்க்க அனுமதி கேட்கிறார். அனுமதி மறுக்கப்படுகிறது.

தந்தை அங்கேற்ற ஆசிரியப்பணி துறக்கிறார். பதினைந்தாவது வயதில் தம்பி மரணிக்கிறார். இப்படியே சோதனையே தந்தைக்கு வாழ்வாகிறது!

### தொடரும் ஆசிரியப்பணி

கொழும்பு வெஸ்லியில் ஆசிரியப்பணி தொடர்கிறது. அங்கு பணிபுரியும் காலத்தே சட்டக்கல்லூரியில் சேர்கிறார்.

### நியாய துரந்தர்.

*1924* இல் அவரது *26* ஆவது அகவை யில் உயர் நீதிமன்றில் வழக்கறிஞராகப் பதவிப் பிரமானம் எடுக்கிறார்.

### இராணி அப்புக்காத்து

*1930* களில் இலங்கையில் மிகப்பெரிய வழக்கறிஞராகத் திகழ்கிறார்கள். அக்காலப் பகுதில் தான் இராணி அப்புக்காத்தாக உயரத்தப்படுறார்.

## நிறைவேறாத ஆசை

சட்டத்துறையில் கொடி கட்டிப் பறந்த காலமது. அப்போது அவருக்கு ஒரேயொரு ஆசை. என்றாவது ஒரு நாள் உயர் நீதி மன்ற நீதிவானாக ஆக வேண்டுமென்பதே.

அதற்குள் விதி வேறுவிதமாக எழுதப் படுகிறது. அரசியலுக்குள் அவர் இழுத்து வரப்படுகிறார். கனவாகிப் போகின்றது அவர் கொண்ட இலட்சியம்!

நீதி மன்றத்திடம் நாம் நீதியைத்தான் கேட்கிறோம். நீதி மன்றம் நீதியைச் செய்ய உதவுவது தான் எமது தொழில் என்று சட்டத் துறைக்கு ஒரு வியாக்கியானம் கொடுத்தார்.

## அரசியல் பிரவேசம்

தமிழர் இருப்பை இல்லாதொழிக்க சிங்கள பேரினவாதம் தன்னைப் பலப்படுத்து வதை உணர்ந்து அதனை எதிர்கொள்ள வேண்டு மென்ற எண்ணத்தை 1930களில் தந்தை கொண்டிருந்தார்.

தந்தைக்குள் கொழுந்து விட்டெரியத் தொடங்கிய தமிழினவுணர்வை அடையாளம் கண்டு அவரை அரசியலுக்குள் இழுத்து வந்தவர். சிவசுப்பிரமணியம் எனும் பெரியவர்.

1944 ஐப்பசி 27ம் நாள் அகில இலங்கைத் தமிழ் காங்கிரால் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் அதன் தலைவர் அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களோடு கலந்து கொண்டார். சோல்பரி கமிஷன் முன் ஜீ. ஜீ. பொன்னம்பலம் சாட்சிய மளித்த போது தந்தை அருகிருந்துதவினார்.

1947 தேர்தலில் தந்தையவர்கள் வெற்றி வாகை சூடினார். ஆனால் 1948 இல் மீண்டும் சோதனை! டி. எஸ். சேனநாயக்கா வின் ஐ. தே. க ஆட்சி 1948.8.20 இல் இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தைக் கொண்டுவந்தது. அதனை தமிழர்கள் அனைவரும் எதிர்த்தனர். தமிழர் ஒற்றுமையைக் கண்டுகொண்ட டி.எஸ் தமிழரின் பலத்தை சிதைக்க நினைத்தார். ஜீ. ஜீ. பொன்னம்பலம் அமைச்சுப் பதவிக்கு விலை போனார். தந்தையின் நெஞ்சில் வேல் பாய்ந்தது.

## உதிரம் கொப்பளித்தது

காங்கிரசில் செல்வநாயகம் குழு, பொன்னம்பலம் குழு என்று இரு அணிகள் தோன்றின. தொடர்ந்து 1949ல் இந்திய-பாக்கிஸ்தான் பிரசா உரிமைச்சட்டம் பொன்னபலம் குழு கையுயர்த்தியது. செல்வநாயகம் குழு எதிர்த்தது. செல்வநாயகம் குழுவை, பொன்னம்பலம் வெளியேற்றினார்.

தமிழினத்தின் விடிவைத் தேட வந்த இடத்தில் விரிசல்! நிலைகெட்ட மனிதனின் ஈனச்செயல் கண்டு நெஞ்சு பொறுக்காது நிலை தடுமாறினார்.

## தமிழரசுக் கட்சி பிறந்தது.

நம்பிய மக்களை நட்டாத்தில் விடமுடியுமா? தந்தையும் அவரது அணியினரும் பல நாட்களாகச் சிந்தித்தார்கள். 1949.12.18 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சி பிறந்தது. சொல்ல முடியாத துன்ப, துயரங்களை பொன்னம்பலம் கொடுத்தார்.

ஏன்? தந்தையின் உயிருக்கே உலை வைக்க பாதகர்கள் முனைந்தார்கள். சோதனையே வாழ்வாகக் கொண்ட தந்தைக்கு அத்தனையும் பூ மாலைகளே! இலங்கைத் தமிழரசுக் கட்சி மக்களிடையே வேரூன்றத் தொடங்கியது.

## தேர்தலில் தோல்வி.

1952 இல் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தந்தைக்கு வெற்றி நழுவிப் போயிற்று. தேர்தலை ஆட்சேபித்து வழக் கொன்றைத் தாக்கல் செய்தார்.

தேர்தல் வழக்கில் தீர்ப்பும் தந்தைக் கெதிராகவே முடிந்தது. வழக்குச் செலவுத் தொகையாக 40,000 ரூபா கட்டும்படியும் தீர்ப்பு அமைந்தது.

பட்டகாலே படும் கெட்ட குடியே கெடும் என்பது போல தந்தையின் வாழ்வு சோதனை மேல், சோதனை என்றாகியது. ஆனால் தேர்தல் முடிவும் வழக்குத் தீர்ப்பும் இலட்சிய வேட்கை யைத் தூண்டினவேயல்லாமல் தணிக்கவில்லை.

**போர்க்களங்கள்:**

காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட தன் அணியினர் மீது நடத்தப்பட்ட கொடுரத்தாக்குதல்கள், தன்மகனை தூக்கி அடித்து நொறுக்கி பேரையாற்றில் தூக்கி வீசிய காட்சிகளை கண்டு பொறுமை காத்தார். அடுத்தடுத்து நடந்த அட்டூழியங்களையெல்லாம் பாரத்து எப்படிப் பொறுமைகாத்தார் என்பது இப்போது நமக்கு வியப்பாகின்றது. ஈழத்துக் காந்தியென்று ஏன் தந்தையை அழைத்தார்கள் என்பது இப்போது விளங்குகின்றது.

**சிங்கள சிறி எதிர்ப்பு:**

சிங்கள ஸ்ரீ எழுத்தின் மீது தார்பூசி, அதன்மேல் தமிழ் ஸ்ரீ யை எழுதினர். அப்போரில் தந்தை மட்டக்களப்பில் ஈடுபட்டார். கைது செய்யப்பட்டார். நீதி மன்றில் ரூபா 10 அபராதம் விதிக்கப்பட்டது. தந்தையவர்கள் அதனை மறுத்தார். மட்டக்களப்பு சிறையில் ஒரு வாரம் அடைக்கப்பட்டார்.

**1961 சத்தியாக்கிரகம்**

தமிழரசுக் கட்சி தபால் சேவை நடாத்தியது. பொலிஸ் படை அமைத்தது. முடிக்குரிய காணி பகிர்ந்தளிப்புப் போன்ற மிக உக்கிரமான அறவழிப் போராட்டம் மூன்று மாதங்களாகத் தொடர்ந்தது.

தந்தையோடு ஏனைய தலைவர்களும் பனாங்கொடை இராணுவ முகாமில் அடைக்கப் பட்டனர். தந்தையை மட்டும் அவரது வீட்டுக்கு அனுப்பிட அப்போதைய பிரதமர் சிறிமாவோ விரும்பியும் தந்தை சம்மதிக்கவில்லை. பின்பு வீட்டுக்காவலில் சிறை வைக்கப்பட்டார்.

**பாக்கின்சன் நோய்**

பனாகொடை தடுப்பு முகாமில் இருக்கும்போதே தந்தை இந் நோயினால் பாதிக்கப்பட்டார். வீட்டுக்காவலிலிருந்து சிகிச்சை பெற இலண்டன் செல்ல விரும்பவில்லை. என்றாலும் வைத்தியர்களின் வற்புறுத்தலால் அவர் சென்றார். மூளையில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையின் பின் ஓரளவு தேறினாலும் அவர் நடையும், பேச்சும் பாதிக்கப்பட்டேயிருந்தது.

**1972 குடியரசு யாப்பு!**

இலங்கையை குடியரசு நாடாக மாற்றும் வகையில் புதிய யாப்பு வரையப்பட்டது. அதிலே தந்தையர்வர்கள் தமிழினம் சார்பாக குறைந்த பட்சக் கோரிக்கையாக 6 அம்சக் கோரிக்கைகளைச் சமர்ப்பித்தார்.

ஆனால் அது நிராகரிக்கப்பட்டது. அரசியல் யாப்புச் சபையிலிருந்து வெளியேறினார். தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்தார். இன்னும் இருக்கக் கூடிய ஒரேவழி தமிழின ஒற்றுமை. தன்னை எதிர்த்தவர்கள் என்றும் பாராமல் அனைவரது வீடு சென்று ஒற்றுமை கண்டார்.

உதய சூரியன் அடையாளத்தோடு தமிழர் விடுதலைக் கூட்டணி தந்தார். 3 ஆண்டுகளின் நடைபெற்ற தேர்தலில் அமோக வெற்றி பெற்றார். 1976 இல் வட்டுக்கோட்டை மாநாட்டில் தனித்தமிழ் நாடே ஒரே வழியென்று கண்டார்.

அதற்காக அகிம்சை வழியில் பயணிக்க முனைப்புக் காட்டிய வேளையில் மீண்டும் நோயுற்றார். யாழ் பொது மருத்துவமனையில் 34 நாட்களாக நோயோடு போராடினார்!

**முடிவாகிப்போன முடிவு**

காலத்தை வென்று காவியம் படைத்த நாயகனை காலன் கவர்ந்து சென்றான். பேரிடி விழுந்தது! தமிழினம் பேதலித்தது! பெருந்துயரம் நிலை கொண்டது! சோதனையும், வேதனைகளையும் வாழ்வாக்கி மூன்று தசாப்த காலம் தமிழினத்தை வழிகாட்டி கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்து நின்ற சா.ஜே.வே. செல்வநாயகம் நமக்கெல்லாம் தந்தையானார்.

**இறுதி நிகழ்வு.**

காலை 7 1/2 மணியாவில் தொடங்கிய அவரது இறுதிப்பயணம் 25 மைல்களைத் தாண்டி இரவு10 1/2 மணிபோல் யாழ் விளையாட்டரங்கை அடைந்தது. அங்கு துயரம்

தோந்த நிலையில் மூன்று இலட்சம் மக்கள் அமைதியாக நின்றார்கள்.

**தீயோடு சங்கமம்**

சந்தனக் கட்டைகளால் ஆக்கப்பட்ட சிதையிலே தந்தையின் பொன்னுடல் வைக்கப் படுகின்றது. தென்னிந்திய திருச்சபை ஆயர் கொள்ளி வைக்கிறார்.

தந்தையே! தந்தையே! தந்தையே! என்ற அவலக் குரல் ஆகாயத்தை முட்டி மோதுகிறது!

புகை கிளம்புகிறது!
தீச் சுவாலை துள்ளி எழுகிறது!
அப்போது நீங்கள் சாகவில்லை!
எங்களோடு வாழ்கிறீர்கள்!
அசரீரி கேட்கிறது!
வளர்க தந்தையின் அரசியல் பணி!
வாழ்க தந்தை நாமம்!

## இலங்கை இந்திய ஒப்பந்தமும் மாகாண சபையும்

- *1987 யூன் 29ல் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி, இலங்கை ஜானதிபதி. ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இருவரும் கைச்சாத்திட்டனர்.*
- *1987 செப்டம்பர் 8ம் திகதி இந்த ஒப்பந்தம் 522/9ம் இலக்கம் அதிவிசேட வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது.*
- *1988 நவம்பர் 19ல் இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபை தேர்தல்*
- *2006 யூன் 14ல் இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து சரியாக 18 வருடங்களுக்குப்பின் மக்கள் விடுதலை முன்னனி (JVP) வழங்குத்தாக்கல்.*
- *2006 அக்டோபர் 16ல் வடக்கு கிழக்கு இணைப்பு சட்ட பூர்வமாக இல்லை என்றும் சில விடயங்களை கூறி வடக்கு மாகாணம் தனியாகவும் கிழக்கு மாகாணம் தனியாகவும் பிரிப்பு.*
- *2008 மே 10ல் முதலாவது கிழக்கு மாகாணசபை தேர்தல்.*
- *2012 செப்டம்பர் 24ல் இரண்டாவது கிழக்கு மாகாண சபை தேர்தல்.*
- *2013 செப்டம்பர் 22ல் முதலாவது வட மாகாண சபை தேர்தல்.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.சுகுமாரன்
மட்டக்களப்பு

# தந்தை செல்வாவின் ஒப்பந்தங்களும் அதன் வழிவந்த உத்தேச இடைக்கால அரசியலமைப்பு முன்மொழிவின் சமஷ்டி பண்புகளும்

தமிழ் மக்களாலும் பிறராலும் "தந்தை செல்வா" என அன்புடன் அழைக்கப்பட்ட சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் விஸ்வநாதன் வேலுப்பிள்ளை, தாய் ஹரிமிற் அன்னம்மா கணபதிப்பிள்ளைக் குமாக 1898 ஆண்டு மார்ச் 31ந் திகதி பிறந்தார்.

இவர் சுயாட்சி, வடக்கு கிழக்கு தமிழர் தாயகம், சமஷ்டி ஆட்சிமுறை, உள்ளக சுயநிர்ணய உரிமை, வடக்கும் கிழக்கும் தமிழ் பேசும் மக்களது பாரம்பரிய வாழ்விடம், மொத்தத்தின் தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்னும் கோட்பாடுகளை உருவாக்கிய உத்தமர். அகிம்சை, சத்தியம் என்னும் வழிகாட்டலிலே இதற்காக போராடினார்.

இந்த வழிகளை அடைவதற்காக பல்வேறு முன்னெடுப்புக்களை மேற்கொண்டார். இதன் நிமிர்த்தம் பல்வேறு ஒப்பந்தங்களை செய்தார். இவற்றுள் பண்டா செல்வா ஒப்பந்தம் டட்லி-செல்வா ஒப்பந்தம் இரண்டும் அடிப்படையானவை. இதிலிருந்து இவ் ஒப்பந்தங்களை அடிகோலியதாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுடனான "சந்திரிகா-நீலன்" தீர்வுப்பொதி பின்வந்த தலைவர்களால் மேற்கொள்ளப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்போதைய உத்தேச இடைக்கால அரசியல் அமைப்பில் இனப்பிரச்சினை தீர்வை நோக்கியதாக செய்யப்பட்டுள்ள விதந்துரைகளில் பெரும் பாலானவை

பண்டா-செல்வா, டட்லி-செல்வா ஒப்பந்தம் மற்றும் நீலன்-சந்திரிகா பொதி ஆகியவற்றை உள்ளடக்கியதாக அதன் திருத்த வடிவமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. தந்தையினால் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் அரச தலைவர்களுடன் செய்யப்பட்டதாக காணப்பட உத்தேச திருத்தம் அரசியலமைப்பு ரீதியாக ஏற்படுத்தப் படவுள்ளமை மிகப் பெறுமதியானதாகும்.

**தந்தையின் அரசியல் பிரவேசம் :**

பிரித்தானியரால் சோல்பரி பிரபு தலைமையிலான ஆணைக்குழு 1944ல் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதற்கு முன்னர் கொழும்பில் வழக்கறிஞர்கள் கலந்து கொண்ட அரசியல் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இக்கலந்துரையாடல் கூட்டத்திற்கு தந்தை செல்வா தலைமை தாங்கியதன் ஊடாக அரசியலுக்குள் உட்புகுந்தார். பின்னர் 1944ல் உருவாக்கப்பட்ட தமிழ் காங்கிரஸ் கட்சியின் உபதலைவராக தெரிவு செய்யப்பட்டார். தொடர்ந்து 1947ல் பொதுத் தேர்தலில் காங்கேசன்துறை தொகுதியில் சேர்.பொன். இராமநாதனின் மருமகனான திரு.சு.நடேசனை எதிர்த்து போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1947 தேர்தலில் அமோக வெற்றி பெற்ற தமிழ் காங்கிரஸ் அரசுக்கு முட்டுக் கொடுத்தது. எனினும் தந்தை இருமனதுடன்தான் அதில் அங்கம் வகித்துள்ளார் என்பது பின்னர் தெரிய வந்தது.

1948.02.04ந் திகதி சுதந்திர தினத்தையொட்டி வீரகேசரியில் தந்தை எழுதிய கட்டுரை இதற்கு சான்று பகிர்கின்றது.

“ஒரே ஏக சர்க்காரின் கீழ் தமிழர்களுக்கு எதிர்காலத்தில் இடமில்லை என்பது எனது மனதில் தெளிவாக தெரிகின்றது. தமிழ் மாகாணங்களையும், சிங்கள மாகாணங்களையும் வெவ்வேறாக கொண்ட சமஷ்டி சர்க்காரில் அவர்கள் பிரவேசிக்க வேண்டும் அல்லது இலங்கையை இரு சுதந்திர டொமினியங்களாக பிரிவினை செய்யும்படி செய்ய வேண்டும். ஆனால், அதே நேரத்தில் ஒரு பொது சாம்ராஜியத்திலோ குடியரசிலோ அவர்கள் அங்கமாக விளங்க வேண்டும். இது இவ்வித பிரிவினை, பாசைக் குழுக்களைச் சுற்றி வட்டமிடும் இலங்கை வகுப்பு பிரச்சினையை தீர்க்கவும் ஒரு சிறந்த மார்க்கமாகும்” எனக் குறிப்பிட்டுள்ளார்கள். இது அவரது முழு உள்ளக்கிடக்கைகளையும் எடுத்துக் காட்டுகின்றது.

இக்காலகட்டத்தில்தான் அரசுக்கு ஆதரவு தெரிவிப்பதானால், நிபந்தனையின் கீழ் ஆதரிக்க வேண்டும் என்ற கொள்கையை தந்தை செல்வா முன்மொழிந்தார். இதில் சிங்களமும், தமிழும் அரச கருமமொழியாக இருக்க வேண்டும். சிங்கள குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும். இந்திய வம்சாவழியினருக்கு குடியுரிமை வழங்க வேண்டும். தேசிய கொடியில் தமிழர்களின் சின்னத்திற்கு இடமளிக்க வேண்டும். வடகிழக்கில் ஆட்சி மொழியாக தமிழ் விளங்க வேண்டும் என்பனவே தந்தையின் நிபந்தனைகளாக இருந்தன. சோல்பரி திட்டத்தை ஏற்று அரசுக்கு ஆதரவு தெரிவித்த தமிழ் காங்கிரஸ் தலைவர் G.G.பொன்னம்பலம் இனை பெரிதாக எடுக்கவில்லை என கூறப்படுகின்றது.

இந்திய வம்சாவழியினருக்கு எதிரான குடியுரிமை மறுப்புச் சட்டத்தை தொடர்ந்து காங்கிரசில் இருந்து வெளியே வந்த தந்தை 1948 டிசம்பர் 18ந் திகதி தமிழரசுக்கட்சியை உருவாக்கி சமஷ்டி கொள்கையை மக்கள் முன் வைத்து செயற்படத் தொடங்கினார். இதன்வெளிப்பாடாக வடக்கு-கிழக்கு முழுவதும் சத்தியாக்கிரகங்கள், கடையடைப்பு, பணி பகிஷ்கரிப்பு, மறியல் போராட்டம் என அகிம்சை வழி எதிர்ப்பு பணிகள் ஆரம்பிக்கப்பபட்டன. மக்கள் கூட்டம் தந்தையின் பக்கம் அணிதிரண்டனர். இக்காலத்தில் கொண்டு வரப்பட்ட தனி சிங்கள மொழிச் சட்டம் மற்றும் சிங்கள காடையர்களால் அவிழ்த்து விடப்பட்ட கலவரங்கள் முதலியவற்றினால் சமஷ்டி போராட்டம் உக்கிரமடைந்தது.

இதன் நிமிர்த்தம் 1957.07.26ந் திகதி பண்டா - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்டா – செல்வா ஒப்பந்தம்**

**பகுதி - அ**

வளர்ந்து வரும் நாட்டில் நெருக்கடியை ஏற்படுத்தி வந்த கருத்து வேற்றுமைகளைத் தீர்க்கும் முயற்சியாக, அகில இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் பிரதமரோடு அவை தொடர்பான பேச்சு வார்த்தைகளை நடத்தினார்கள்.

உரையாடலின் தொடக்கத்திலேயே அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சில கோரிக்கைகளைப் பிரதமர் ஏற்பது சாத்தியமற்றதென்பது தெளிவாகியது.

சமஷ்டி அரசியல் அமைப்பையோ, பிரதேச சுயாட்சியையோ ஏற்படுத்துவது பற்றிப் பேசவோ, அல்லது உத்தியோக மொழிச் சட்டத்தை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவோக அரசாங்கத்தின் நிலையில் தன்னால் இயலாது என்று பிரதமர் கூறினார்.

இலங்கைத் தமிழரசுக்கட்சி தனது அடிப்படைக் கொள்கைகள், நோக்கங்கள் எவற்றையும் கைவிடாத வகையில் ஓர் இடைக்கால ஒழுங்குக்கு வர இயலுமா என்பதை ஆராயும் கேள்வி பின் எழுந்தது.

அரசாங்கத்தின் பிரதேச சபைகள் மசோதாவை ஆராய்ந்து, அதன் கீழ் இலங்கைத் தமிழரசுக் கட்சி கருத்திற் கொண்டிருக்கும் சில விடயங்களை நியாயமாக உள்ளடக்கக்கூடியதாக ஏற்பாடுகள் செய்ய இயலுமா என்று பார்க்குமாறு பிரதமர் ஆலோசனை கூறினார். அங்கு ஏற்பட்ட உடன்படிக்கை ஓர் தனியான பத்திரத்தில் தரப்படுகின்றது.

மொழி விடயத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சி சம அந்தஸ்துக் கோரிக்கையை வலியுறுத்தியது. ஆனால் இவ்விடயத்தில் பிரதமரின் நிலையை உத்தேசித்து இடைக்கால ஏற்பாடாக ஓர் உடன்படிக்கைக்கு வந்தனர். தமிழ் ஒரு தேசிய மொழியாக அங்கீகரிக்கப்படுவதும், வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிர்வாக அலுவல்கள் தமிழில் நடைபெறுவதும் முக்கியமானவை என்று அவர்கள் சுட்டிக் காட்டினர்.

தான் முன் குறிப்பிட்டது போல, உத்தியோக மொழிச் சட்டத்தை அழிக்கக்கூடிய நடவடிக்கையும் எடுப்பது சாத்தியமற்றது என்று பிரதமர் கூறினார்.

கருத்துப் பரிமாறலின் பின், இயற்ற உத்தேசிக்கப்படும் சட்டத்தில் இலங்கையின் தேசிய சிறுபான்மையோரின் மொழியாகத் தமிழை அங்கீகரிக்க வேண்டுமென்றும், உத்தியோக மொழியின் நிலையைப் பாதிக்காத வகையில் வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாகத் தமிழே இருக்கும் வகையில் பிரதமரின் நாலு அம்சத்திட்டத்தில் ஏற்பாடு இருக்க வேண்டுமென்றும், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசுவோரல்லாத சிறுபான்மையோருக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்று இருதரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

இந்திய வம்சாவழியினருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்குவது பற்றியும், குடியுரிமைச் சட்டம் பற்றியும் தமது கருத்துக்களை இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் பிரதமருக்கு எடுத்து விளக்கி, விரைவில் இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டு மென்று வற்புறுத்தினர்.

இப் பிரச்சினை விரைவில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று பிரதமர் அறிவித்தார்.

இம் முடிவுகளின் காரணமாகத் தமது உத்தேச சத்தியாக்கிரக நடவடிக்கையைக் கைவிடுவதாக இலங்கைத் தமிழரசுக்கட்சி அறிவித்தது.

**பகுதி - ஆ**

1. பிரதேச சபைகளின் எல்லைகள் - சட்டத்திலேயே அட்டவணையாகச் சேர்க்கப்பட்டு வரையறுக்கப்பட வேண்டும்.

2. வடமாகாணம் ஒரு பிரதேச சபையாகவும் - கிழக்கு மாகாணம் இரண்டு அல்லது கூடிய பிரதேச சபைகளாகவும் அமையும்.

3. மாகாண எல்லைகளையும் தாண்டி இரண்டு அல்லது மேற்பட்ட பிரதேச சபைகள் இணைவதற்குச் சட்டத்தில் விதி இடம் பெறும். பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்கு அமைவாக, ஒரு பிரதேச சபை தன்னைப் பிரித்துக் கொள்ளவும் இடம் இருக்கும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிரதேச சபைகளுக்குப் பொதுவான குறிப் பிட்ட நோக்கங்களுக்கு, அவை சேர்ந்து செயல்படச் சட்டத்தில் இடம் இருக்கும்.

4. பிரதேச சபை உறுப்பினர் நேரடியாகத் தெரிவு செய்யப்படுவர். அதற்கான தொகுதி களை வகுப்பதற்குத் தொகுதி நிர்ணயக் குழுவோ, குழுக்களோ அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்த மாவட்டங்களின் பாராளுமன்ற உறுப்பினர் - பிரதேச சபைத் தலைவராவதற்குத் தகுதி பெறுவது பற்றி ஆலோசிக்கப்படும். அரசாங்க அதிபர்கள் பிரதேச ஆணையாளர்களாக நியமிக்கப் படுவது ஆலோசிக்கப்படும். பெரிய பட்டினங்கள், கேந்திர நகரங்கள், மாநகர சபைகள் ஆகியவற்றை மேற்பார்வை செய்யும் அதிகாரங்கள் ஆராயப்படும்.

5. அதிகாரங்கள் பாராளுமன்றத்தினால் வழங்கப்பெற்றுச் சட்டத்தில் வரையறுக்கப் பட வேண்டும். விவசாயம், கூட்டுறவு, காணியும் காணி அபிவிருத்தியும், குடியேற் றம், கல்வி, சுகாதாரம், கைத்தொழில், மீன்பிடித்துறை, வீடமைப்பு, சமூகசேவை, மின்சாரம், தண்ணீர்த் திட்டங்கள், நெடுஞ்சாலைகள் ஆகியவை உள்ளடங்க குறிப்பிட்ட விடயங்கள் - பிரதேச சபை களின் அதிகாரத்திற்கு உட்பட்டிருக்க வேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டது. வேண்டிய அதிகார எல்லைகள் சட்டத்திலேயே வரையறுக்கப்படும்.

6. குடியேற்றத் திட்டங்களைப் பொறுத்தவரை, தமது அதிகார எல்லைக்குட்பட்ட காணிகள் வழங்கப்பட வேண்டிய குடியேற்ற வாசிகளைத் தெரிவு செய்வதும், அத்திட்டங் களின் படி வேலைக்கமர்த்தப்படும் ஆட்களைத் தெரிவு செய்வதும் பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்டதாக இருக்கும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. இப்போது கல்லோயா அபிவிருத்திச் சபையினால் நிர்வகிக்கப்படும் பிரதேசத்தின் நிலை ஆராயப்பட வேண்டும்.

7. சட்ட மூலத்தில் பிரதேச சபைகளையொட்டி உள்ளூராட்சி அமைச்சருக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை மாற்றித் தேவையான இடத்தில் பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கும் பொருட்டு அவ்விதிகள் திருத்தப்படும்.

8. பிரதேச சபைகளுக்கு மத்திய அரசாங்கம் மொத்தமாக நிதி வழங்கும். அத்தொகை கணக்கிடப்பட வேண்டிய கொள்கை - பின் ஆராயப்படும். பிரதேச சபைகளுக்கு வரி விதிக்கவும், கடன் வாங்கவும் அதிகாரம் இருக்கும்.

எஸ்.டபிள்யு.ஆர்.டீ.பண்டாரநாயக்கா
*26.07.1957*

எஸ்.ஜே.வி.செல்வநாயகம்
*26.07.1957*

இவ் ஒப்பபந்தத்தினை ஐ.தே.கட்சி கடுமையாக எதிர்க்கத்தொடங்கியது. ஐ.தே. கட்சியின் தலைவர்களில் ஒருவரான *J.R.*ஜெயவர்த்தனா கடவுளின் ஆசிர்வாதம் பெறுதல் என்னும் தோரணையில் இவ் ஒப்பந்தத்தினை எதிர்ந்து கண்டி யாத்திரியை மேற்கொண்டார். பௌத்த குருமாரும் ஒன்று திரண்டு பண்டாரநாயக்காவின் வீட்டுக்கு முன் சத்தியாக்கிரக போராட்டம் செய்தனர். பண்டாரநாயக்காவின் மந்திரிசபை உறுப்பினர்கள்

கூட பலர் இதனை எதிர்க்கத் தொடங்கினர். இதனால், SWRD. பண்டாரநாயக்கா ஒப்பந் தத்தை கிழித்தெறிந்தார். இதன் எதிரொலியாக 1958ல் மிகப்பெரிய இனக்கலவரம் நாடெங்கும் கொழுந்து விட்டெரிந்தது. தமிழர்கள் பலர் கொல்லப்பட்டும் உடமைகள் அழிக்கப்பட்டும், சூறையாடப்பட்டும் நிர்கதியாகினர். இறுதியாக 1959.09.25ந் திகதி பண்டாரநாயக்கா பிக்கு ஒருவரால் சுடப்பட்டு பின்னர் காலமானார்.

மறுபுறத்தில் இனக்கலவர தாக்கங் களாலும், தந்தை செல்வாவின் 4 அம்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாலும், பாராளு மன்றத்தில் சிங்கள மொழியை நீதிமன்ற மொழியாகக் கொண்ட மசோதா நிறைவேற்றப் பட்டதாலும் தமிழ் பிரதேசங்களில் கொந்தளிப்பு நிலை காணப்பட்டது. இதன் காரணமாக 1961.02.20ந் திகதி தொடக்கம் தொடராக ஒரு மாதத்திற்கு சத்தியகிரகப் போராட்டம் ஆரம்பிக் கப்பட்டது, இதனால் பலதலைவர்கள் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். சுதந்திரன் பத்திரிகையும் தடைசெய்யப்பட்டது.

இதன் பின்னர் ஐ.தே.கட்சி 1965ல் ஆட்சி அமைத்தது. இவ் ஆட்சிக்கு தமிழரசு கட்சி நிபந்தனைகளின் அடிப்படையில் ஆதரவு தெரிவித்தது. இதன் நிமிர்த்தம் டட்லி-செல்வா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

## டட்லிசேனநாயக்கா – செல்வநாயகம் ஒப்பந்தம்

திரு.டட்லிசேனநாயக்கா அவர்களும், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களும் 24.03.1965ஆம் திகதி சந்தித்துத் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக நடாத்திய பேச்சுவார்த்தைகளுக்கமைய, ஒரு நிரந்தர அரசாங்கத்தை அமைக்கும் நிமித்தம் - கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று திரு.டட்லி சேனநாயக்கா ஒப்புக்கொள்கின்றார்.

1. வட, கிழக்கு மாகாணத்தில் தமிழில் நிர்வாகம் நடப்பதற்கும், அவற்றைத் தமிழிலேயே பதிவதற்கும், தமிழ்மொழி விசேட விதிகளுக்கமைய உடனே நடவடிக்கைகள் எடுக்கப்படும். தமிழ் பேசும் குடிமகன் நாடு முழுவதிலும் தமிழிலேயே காரியமற்ற உரிமையுள்ளவன் என்பதே. தன் கட்சியின் கொள்கை என்பதையும் திரு.டட்லி சேனநாயக்கா விளக்கினார்.

2. வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள சட்ட பூர்வமான நடவடிக்கைகளை நடாத்தவும், அவற்றைப் பதிவதற்குத் தமிழே நீதிமன்ற மொழியாக இருப்பது தான் - தன் கட்சியின் கொள்கை என்று திரு.டட்லி சேனநாயக்கா ஏற்றுக்கொள்கிறார்.

3. இரண்டு தலைவர்களின் பரஸ்பர சம்மதத்தின் பேரில், மக்கள் பாலுள்ள அதிகாரங்களுக்கேற்ப - இலங்கையில் மாவட்ட சபைகள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும் தேசிய நன்மை கருதி, சட்டங்களுக்கமைய - மாவட்ட சபைகளுக்கு மேலான அதிகாரங்கள் அரசாங்கத்துக்குண்டென்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.

4. இலங்கைப் பிரஜை காணிப் பங்கீடுகளில் காணி பெறும் வண்ணம் காணி அபிவிருத்தி விதிகள் திருத்தி அமைக்கப்படும். குடியேற் றத்திட்டங்களில் காணிகள் வழங்கப் படும்போது வட-கிழக்கு மாகாணங்களில் கீழ்காணும் விடயங்கள் முதன்மையாகக் கவனிக்கப்படும் எனவும் திரு.டட்லி சேனநாயக்கா ஏற்றுக்கொண்டார்.

(அ) வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள காணிகள், அம் மாகாணங்களிலுள்ள காணியற்ற வர்களுக்கே முதலில் வழங்கப்படல் வேண்டும்.

(ஆ) இரண்டாவதாக வட, கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கே வழங்கப்படல் வேண்டும்.

(இ) மூன்றாவதாக - இலங்கையின் ஏனைய பகுதிகளிலுள்ள தமிழ் பேசும்

இனத்தவர்களுக்கே முதலிடங் கொடுத்து ஏனையர்களுக்கும் வழங்கலாம்.

டட்லி சேனநாயக்கா
*24.03.1965*
எஸ்.ஜே.வி. செல்வநாயகம்
*24.03.1965*

டட்லி - செல்வா ஒப்பந்தத்திற்கு அமைய பல எதிர்ப்புக்கு மத்தியில் "தமிழ்மொழி விசேட உபயோகச் சட்டம்" 1966ல் ஏற்படுத்தப்பட்டது. இச்சட்டம் ஏற்படுத்தப் பட்டாலும் அதை நடைமுறைப்படுத்தவில்லை. ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட ஏனைய விடயங்களும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. திருகோணமலை கோணேசர் கோயில் பிரதேசத்தினை புனித பிரதேசமாக்குவதில் அரசு எதிர்ப்புக்காட்டியது. இதனால் 1968ல்" தமிழரசுக்கட்சி அரசாங்கத்திற்கு வழங்கிய ஆதரவை நிறுத்திக் கொண்டு வெளியேறியது.

தொடர்ந்து 1972ல் முதலாவது குடியரசு யாப்பு உருவாக்கப்பட்டது. இது முற்றுமுழுதாக பௌத்த சிங்கள மக்களின் நலன்சார்ந்த அரசியலமைப்பாகக் காணப்பட்டது. இதனால், தமிழர்களுக்கு சோல்பரித் திட்டத்தில் இருந்த அற்பசொற்ப சலுகைகள் கூட இல்லாதொழிக்கப் பட்டது. முற்றாக ஒற்றையாட்சி அரசியலமைப் பாகவே இது காணப்பட்டது. அத்துடன், பல்கலைக்கழக தரப்படுத்தல் சட்டம் ஏற்படுத்தப் பட்டது. இவைகள் எல்லாம் வடக்கு - கிழக்கில் பெரும் பதட்டங்களை உருவாக்கியது.

இவைகளைக் கருத்தில்கொண்டு தமிழரசு கட்சியினால் 06 அம்சக்கோரிக்கை முன்வைக்கப்பட்டது. பின்னர் தமிழர் கூட்டணி அமைக்கப்பட்டது. 6 அம்சக் கோரிக்கையையும் சிறிமா அரசு தட்டிக்கழித்தது. முடியாத கட்டத்தில் வட்டுக்கோட்டை தீர்மானம் எடுக்க வேண்டிய கட்டத்திற்குள் தந்தை செல்வா தள்ளப்பட்டார். இத்தீர்மானத்தின் பின்னர் 1977 தேர்தலில் தமிழர் கூட்டணிக்கு அமோக வெற்றி கிடைத்தது. ஐ.தே.கட்சி 5/6 பெரும் பான்மையுடன் இப்பொதுத் தேர்தலில் வெற்றியீட்டியது.

இவைகளினால் பெரும் இனக் கலவரம் தூண்டிவிடப்பட்டது. தமிழ் மக்கள் குடியிருப் புக்கள், சொத்திழப்புக்கள், உயிரிழப்புக்களை சந்தித்தனர். அரசாங்கமே இதன் பின்புலத்தில் இருந்து செயற்பட்டது. வெற்றிபெற்ற *J.R.*ஜெயவர்த்தனா இரண்டாவது குடியரசு யாப்பினைக் கொண்டு வந்தார். இதிலும் தமிழ் மக்களுக்கு எந்த நிவாரணங்களும் வழங்கப்பட வில்லை. தீவிரவாத சிந்தனைகள் மேலும் முனைப்பு பெற்றன.

எனினும் தீர்வு முயற்சிகளாக திம்பு மாநாடு, மாவட்ட அபிவிருத்திச்சபை முறைமை, மாகாண சபை திருத்தம் முதலிய தீர்வுகளை நோக்கிய நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டாலும் அவை தமிழர்களின் அபிலாசாலைகளை பூர்த்தி செய்யவில்லை. மாறாக ஆயுத போராட்ட வடிவம் வலுப்பெற்றது.

1995ல் போர் உக்கிரமடைந்ததால் பொதுஜன ஐக்கிய முன்னனி (சந்திரிகா பண்டாரநாயக்கா) தீர்வுக்கான அரசியலமைப்பு பொறிமுறை ஒன்றை முன்வைத்தது. இத்தீர்வு பொதியானது பண்டா செல்வா, டட்லி-செல்வா ஒப்பந்தங்களை அடிகோலியதாக அமைந்திருந் தது. இத்தீர்வு யோசனை சந்திரிகா-நீலன் யோசனை என அழைக்கப்பட்டன. திரு.இரா. சம்பந்தன், திரு.நீலன் திருச்செல்வம் போன்ற தமிழ் தலைவர்களின் பங்களிப்பு இதை தயாரிப்பதில் இருந்தது. இத்தீர்வு யோசனை முன்னேற்றகரமானது என குறிப்பிடப்படுகின்றது.

**பொதுசன முன்னனியின் தீர்வுத் திட்டம்**

இத்தீர்வுத் திட்டத்தில் கீழ்வரும் முக்கிய அம்சங்கள் காணப்பட்டன. இதனை,

பிராந்திய ஒன்றியம், அதிகார பங்கீடு, பிராந்திய சட்டத்துறை, பிராந்திய நிர்வாகத்துறை, பிராந்திய நீதித்துறை, பிராந்தியங்களுக்கான ஏனைய விடயங்களென வகைப்படுத்த முடியும். இவற்றில் பிராந்திய ஒன்றியமும், அதிகாரப் பங்கீடும் மிக முக்கியமானதாகும்.

**பிராந்திய ஒன்றியமும் அதிகார பங்கீடும்.**

இதில் இலங்கை குடியரசு கலைக்கப்பட முடியாத பிராந்தியங்களின் ஒன்றியமாக இருக்கும் இதன்படி ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு பிராந்திய சபை அமைக்கப்படும். இதில் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில்,

1. மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் வாழும் மக்கள் வடமாகாணத்துடன் இணைந்திருக்க விரும்புகின்றார்களா? இல்லையா? என்பதை அறிய இவ்விரு மாவட்ட மக்களிடம் மட்டும் சர்வசன வாக்கெடுப்பு நடத்ததல்.
2. சர்வசன வாக்கெடுப்பின் மக்கள் இணைந்திருக்க விரும்பினால் இவ்விரு மாவட்டமும் இணைந்து வடக்கு கிழக்கு பிராந்தியம் ஒன்றாக இருக்கும்.
3. அம்பாறை மாவட்டத்தை மையமாகக் கொண்டு தென்கிழக்குப் பிராந்தியம் ஒன்றாகவும் இருக்கும்.
4. தென்கிழக்கு பிராந்தியத்தில் அம்பாறை மாவட்ட சிங்கள மக்கள் இணைந்திருக்க விரும்புகிறார்களா? இல்லையா? என்பது தொடர்பில் அவர்களிடத்தில் மட்டும் சர்வசன வாக்கெடுப்பு நடக்கும்.
5. அவர்கள் சம்மதித்தால் கிழக்குப் பிராந்தியத்துடன் இருக்க முடியும். இல்லையேல் ஊவா மாகாணத்துடன் சேரலாம் அல்லது அம்பாறைத் தொகுதி தனிப் பிராந்தியமாக மாறும்.
6. அதிகார பங்கீடு அதிகாரங்கள் மத்தியரசு, பிராந்திய சபைகளுக்கும் இடையில் பகிரப்படும்.
7. ஒதுக்கிய நிரல், பிராந்திய நிரல், என இரு நிரல்களில் மட்டும் அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன.
8. பிராந்திய நிரலில் மிக முக்கியமான 46 விடயங்கள் காணி, பிராந்திய பொலிஸ் சேவை உட்பட காணப்படுகின்றது.

**ஏனைய விடயங்கள்**

1. பிராந்திய சட்டத்துறை காணப்படும். தேர்தல்கள் மூலமாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கபப்படுவர். பிராந்திய சட்டம் இயற்றும் அதிகாரம் முழுமையாக உண்டு. பிராந்திய சட்டமா அதிபரும் காணப்படுவார்.
2. பிராந்திய நிருவாகத் துறையின் பெயரளவு நிருவாகியாகவே ஆளுநர் காணப்படுவார். முதலமைச்சர் தலைமையினை அமைச்சரவை நிருவாகத்திற்குப் பொறுப்பாக இருப்பர். ஆளுநர் கூட முதலமைச்சரின் ஆலோசனையின் பெயரிலேயே நியமிக்கப்படுவர்.
3. பிராந்திய நீதிமன்றம் காணப்படும். அதுமட்டுமன்றி பிராந்திய நீதிச்சேவை ஆணைக்குழு காணப்படும். இவைகள் பிராந்தியத்தில் உள்ள நீதி துறைசார்ந்த அதிகாரங்களைக் கொண்டிருக்கும்.
4. பிராந்தியங்களுக்கான காணி, நீர் நிலைகள், கனிப்பொருட்கள் விடயத்தில் கூடிய அதிகாரம் உண்டு.
5. பிராந்திய பொலிஸ் ஆணைக்குழு பிராந்திய பிரதிபொலிஸ் மா அதிபர் காணப்படுவர். பிராந்திய சட்டம் ஒழுங்கைப் பெறுவதில் கூடிய அதிகாரங்கள்.
6. மத்திய அரச அனுமதியுடன் வெளிநாட்டின் கடன்கள் மற்றும் நன்கொடைகளை ஏற்றுக்கொள்ள முடியும்.
7. இவை தவிர கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடி, கைத்தொழில், வீதி, போக்குவரத்து, உள்ளூராட்சி முதலிய பல விடயங்கள் பிராந்திய நிரலில் சேர்க்கப்பட்டுள்ளது.

எனவேதான் இத்தீர்வுத்திட்டம் எமக்கு கிடைத்த முதல்கட்டமாக ஏற்றுக்கொள்ளக்கூடியது என கூறப்படுகின்றது.

### உத்தேச இடைக்கால அரசியலமைப்பில் சமஷ்டி பண்புகள்

பாராளுமன்றம் அரசியல் அமைப்புச் சபையாக மாற்றப்பட்டு பல்வேறு படிமுறைகளைத் தாண்டி தற்போது உத்தேச இடைக்கால அரசியலமைப்பு ஒன்றினை முன்வைத்து அதன் அடிப்படையில் தீர்வு நோக்கி நகரும் தன்மை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உத்தேச இவ் அரசியலமைப்பு சமஷ்டி பண்புகளைக் கொண்டதா? இல்லையா? என்பதில் இரு வெவ்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும் இதன் உண்மைத் தன்மையை நாம் ஆராய்ந்து உணர முடியும்.

### சமஷ்டியின் வரைவிலக்கணம்

மத்திய அரசி ஒன்றின் தலைமையின் கீழ் அதன் அரசியலமைப்புக்கு உட்பட்ட வகையில், பல சிறிய அரசுகள் அல்லது மாநிலங்கள் தமது சுதந்திரம், சமத்துவம் என்பவற்றை இழந்துவிடாத வகையில், அதிகார பன்முகவாக்கல் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட பொதுவான நோக்கில் ஒன்றுபட முன்வரும் பொழுது இணைந்து மேற்கொள்கின்ற உடன்படிக்கையே சமஷ்டியாகும் என கூறப்படுகின்றது.

இதன் அடிப்படையில் சமஷ்டி யாப்பு உட்கொண்டிருக்க வேண்டிய விடயங்களும், ஆட்சி முறையின் பண்புகளும் முக்கியமானது. இவைகள் இரண்டும் உத்தேச இடைக்கால அரசியலமைப்பில் காணப்படுகின்றவை என ஆராய்ந்து பார்க்கின்ற போது "ஆம்" என்ற விடைக்கு நாம் வரவேண்டியுள்ளது.

1. சமஷ்டி ஆட்சிமுறையில் இறைமை பிரிக்கப்பட்டிருக்கும். உத்தேச அரசியலமைப்பிலும் மக்கள் இறைமையானது மத்தியரசு மாகாணசபை, உள்ளூராட்சி மன்றம் என மூன்று இடங்களில் இறைமை பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்றது. இங்ஙனம் இறைமை பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதனால் உள்ளக சுயநிர்ணய உரிமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

2. சமஷ்டி பண்புகளின்படி, வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீளப்பெற முடியாதவையாக இருத்தல் வேண்டும். இங்கு இவ்வளவு காலமும் இருந்த ஒத்திசைந்த பட்டியல் நீக்கப்பட்டு, முற்றுமுழுதாக மத்தியரசு பட்டியல், மாகாண அரசுப்பட்டியல் என இரண்டாக அதிகாரங்கள் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. ஆனால்,. இங்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. ஆகவே, மீளப்பெற முடியாத நிலை காணப்படுவதனால் இது சமஷ்டி பண்பு கொண்டது என கூறமுடியும்.

3. சமஷ்டி பண்புகளில் ஒன்றாக, யாப்பானது வரையப்பட்டதாகவும், நெகிழாத் தன்மை உடையதாகவும் இருத்தல் அவசியமானது. இங்கும் அரசியலமைப்பாக வரையப்பட்டும், அதிகாரங்கள் நெகிழ முடியாத வகையில் மூன்று மன்றங்களுக்கு வழங்கப்பட்டும் இருப்பது சமஷ்டி பண்புக்குரியதுதான்.

4. சமஷ்டி அமைப்பு ஒன்றில் ஈரங்க மன்றம் காணப்படுதல் அவசியம். உத்தேச வரைபில் செனட்சபை உடாக ஈரங்க மன்றம் ஏற்படுத்தப்பட்டிருப்பதும் இவை எல்லா மாகாணங்களுக்கும் சம பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருப்பதும் இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டிய விடயமாகும். (இந்தியாவில் கூட மாநிலத்திற்கு மாநிலம் பிரதிநிதித்துவத்தில் சம விகிதாசாரம் இல்லை. இதனால் தான் அதை ஒரு அரைகுறை சமஷ்டி என குறிப்பிடுகின்றார்கள்.) அதுமாத்திரமன்றி செனட்சபை அதிகாரங்கள் கூட மிக முன்னேற்ற

கரமானதாகக் காணப்படுகின்றது. இதனால் இது சமஷ்டி பண்பைக் கொண்டுள்ளது.

5. மேலும் மாகாண அலகிற்கு சட்டமியற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதில் ஆளுநர் தலையீடுகளைச் செயற்றமுடியாத நிலையும் காணப்படுகின்றது. இதுவும் சமஷ்டி பண்புக்குரிய முக்கிய அம்சமாகும்.

6. சமஷ்டி அமைப்பபில் மக்கள் இருவகையான சட்டங்களுக்கு அடிபணிவினை வழங்க வேண்டியவர்கள். இங்கும் மாகாணங்களுக்கு சட்டம் இயற்றும் அதிகாரங்கள் காணப் படுவதால். மத்தியரசின் சட்டங்களுக்கும் மாகாண சபையின் சட்டங்களுக்குமாக இரு சட்டங்களுக்கு மக்கள் அடிபணிவினை வழங்க வேண்டிய நிலை தோன்றும். எனவே இது கூட சமஷ்டி தன்மையை பிரதிபலிக்கின்றது.

7. சமஷ்டி பண்பில் மத்தியரசுக்கும், மாநில அரசுக்கும் நிதி, நிருவாக விடயங்களில் வேறுபட்டு காணப்படும் தன்மை இருத்தல் வேண்டும். இங்கு உத்தேச அரசியல மைப்பின் மாகாண ஆளுநரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு பெயரளவு நிருவாகியாகக் காணப்படுகின்றார். ஆகவே நிருவாக அதிகாரம் ஆளுநரை விட்டு அமைச் சரவைக்குச் செல்கின்றது. இதுவும் சமஷ்டி பண்பையே பிரதிபலிக்கின்றது.

8. சமஷ்டியின் அடுத்த பண்பாக நாம் காணக் கூடியது மத்திய அரசும், மாநிலங்களும் தங்களது தத்துவங்களை பிரயோகிக்கக் கூடிய வழிவகைகள் காணப்படுவதாகும். உத்தேச அரசியலமைப்பில் “இலங்கை தத்துவங்களை பிரயோகிப்பதற்கு ஏற்புடை யதான மத்திய மற்றும் மாகாணங்களைக் கொண்டுள்ள சுதந்திரமும், இறைமையும் தன்னாதிக்கமும் கொண்டுள்ள “ஒருமித்த நாடு” என்னும் (ஏகியராஜய) குடியரசாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஒற்றையாட் சியின் இருந்து வேறுபடும் தன்மையையே காட்டுகின்றது. எனவே தான் சமஷ்டி பண்பை கொண்டுள்ளது என கூறமுடியும்.

9. சமஷ்டி அமைப்பில் மத்திய மாநில அரசுக்கிடையிலான அரசியலமைப்பு ரீதியாகவுள்ள பிணக்குகளை தீர்ப்பதற்காக அரசியலமைப்பு நீதிமன்றம் ஏற்படுத்தப் பட்டிருக்கும். இடைக்கால உத்தேச அரசியலமைப்பிலும் அரசியலமைப்பு நீதிமன்றம் விதந்துரைக்கப்பட்டிருப்பது சமஷ்டி நோக்கிய தன்மையை கோடிட்டுக் காட்டுகின்றது.

10. இவைகள் தவிர அரச கருமமொழி காணி அதிகாரம், காணி நியாய சபை, தனியார் காணி உரிமை, குடியேற்றத்திட்ட ஆலோச னைகள், பொலிஸ் அதிகாரம், மாகாண பொலிஸ் ஸ்தாபித்தல், மாகாணங்களின் அதிகாரத்தை பேணப்பெறுவதில் உள்ள இறுக்குமான கடப்பாடு, மாகாண பகிரங்க சேவைக்கான சுதந்திரமான அதிகாரம், அடிப்படை உரிமைகள், உயிர்வாழும் உரிமைகள், வலித்து காணாமல் ஆக்கப்படு தலை இல்லாது செய்யும் உரிமை, வழக்கு தொடர்வதற்கான உரிமை, நிதி ஆணைக்குழு, நிதி ஒதுக்கீடு முதலிய விடயங்களில் இன்றுள்ளதை விட முன்னேற்றகரமாக விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆகவே, பண்டா-செல்வா, டட்லி-செல்வா ஒப்பந்தங்களை உள்ளடக்கிய இவ்உத்தேச அரசியலமைப்பு முன்மொழிவானது பெரும்பாலும் சமஷ்டி நோக்கிய பண்புகளை கொண்டிருக்கின்றது என்பதில் ஐயமில்லை.

உசாத்துணைகள்


1. அரசியல் விஞ்ஞானமும் தத்துவார்த்தமும் நடைமுறையும் - க.பிரபாகரன்

2. இலங்கையின் அரசியல் முறைமை - முகுசீன் நயீசுத்தீன்

3. அரசறிவியல் - வே.குணரெத்தினம்

4. இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் தீர்வு யோசனைகளும் - சி.அ.சோதிலிங்கம்

5. இலங்கை தமிழர்களின் அரசியல் போராட்டமும் தந்தை செல்வாவும் - சி.வி. விவேகானந்தன்

6. சமஷ்டி கோரிக்கையில் தமிழரசுக்கட்சி - டி.பி.எஸ்.ஜெயராஜ்

7. வீரகேசரி வெளியீடு நேர்காணல் 13 ஜனவரி 2018 - இரா.சம்பந்தன்

8. இலங்கை இன முரண்பாடுகளின் வரலாறு - ஜீ. நடேசன்

9. ஒற்றையாட்சியில் காங்கிரசும், சமஷ்டி நோக்கிய தமிழரசுக்கட்சியும் - சி.க. சிற்றம்பலம்

10. உத்தேச இடைக்கால அரசியலமைப்பு அறிக்கை.

11. பண்டா-செல்வா, டட்லி-செல்வா ஒப்பந்தங்கள்.


## வடக்கு கிழக்கில் தமிழர்கள் வாழ்ந்த நிலப்பரப்பு

» 1833ம் ஆண்டு 26,500 சதுர மீற்றராக காணப்பட்டது.

» 1976ம் ஆண்டு 15,000 சதுர மீற்றராக காணப்பட்டது.

» 2012ம் ஆண்டு 11,000 சதுர மீற்றராக காணப்பட்டது.

» 2019ம் ஆண்டு...?



# ஒரு வழிப்பாதை

கதிரவன் த.இன்பராசா

நேர்வழி நின்று நேர்மையாய்
நிதானம் தவறாச் சிந்தனையால்
தேரொன்றைச் செதுக்கி உருவாக்கி
திருவிழாக் கொண்டாடத் தந்தார்கள்

வருடா வருடம் திருவிழா
வருடத்திற் கிடையிலும் சிலவிழா
வருகுது போகுது தேர்மட்டும்
உருளுமில்லை..... உயரதுமில்லை.

தந்தையின் வயிற்றுவார் ஒருபக்கம்
தமையனின் வயிற்றுவார் மறுமக்கம்
முந்தியொரு மாதிரி அசைந்தது.
முறுக்கிடும் மீசையும் முளைத்தது

தேரைச் சுற்றிக் கயிறுகட்டி
திசையெட்டும் எட்டுக் கூட்டங்கள்
ஊரைப் பிரித்துத் தலைவராகி
ஊளையிட்டுச் சிரித்தார்கள்.
புதையிது புதையிது சில்லு
புரளப் பாக்குது தள்ளு...
சிதைந்து போகுது சிற்பம்
சிரிக்காத 'சீரியன்ஸ்சா' நில்லு...

பற்றிப் பிடித்தான் மூத்தவன்
பல்லைக் கடித்தான் இளையவன்
சுற்றிப் பிடித்தான் வடக்கிலே
சறுக்குப் போட்டான் கிழக்கிலே

'தேர் ஒரு நாளும் ஓடாது ராசா
ஊரைப் பிரிச்சிட்டான் மந்திரி
பாருங்கள் இருப்பிடம் தூளாகும்
பாராள முடியா பல்லியும் சொல்லுது'



அப்பாட சொல்கேளாப் பிள்ளையை
ஆண்டவன் வந்தும் காப்பாற்ரேலா
தப்பேதும் இருந்தால் திருத்துவோம்
அப்பாவின் பாதையில் செல்லுவோம்

சிதைந்த தேரைத் திருத்தனும்
சீராய் வடத்தைக் கட்டனும்
புதைந்த தேரை உயர்த்தனும்
பிடி..... பிடி..... ஒன்றாய் இழுக்கனும்...

கோயில் தலைவர் சொற்படி
கொடுக்கு கட்டுங்கள் மிடுக்காக
தேரும் உருளும் பாருங்கள்
தேசம் மலரும் கேளுங்கள்.

மகேந்திரன் என். ஆர்
திருகோணமலை.

# தந்தை செல்வாவின் வழியில் தமிழ் தேசிய கூட்டமைப்பினர்

கடந்தகால, நிகழ்கால, எதிர்கால நிகழ்வுகளை விரிந்த நோக்கில் முன்பின் விளைவுகளை உணர்ந்து சர்வதேச, தேசிய, பிராந்திய நிலைப்பாட்டின்படி பார்க்கும் பொழுது தமிழ் தேசிய கூட்டமைப்பினர் செல்லும் பாதை சரியானதே. தந்தை செல்வா இன்றிருந்தால் இத்தகைய முடிவையே எடுப்பார்.

தமிழ் மக்கள் ஒன்றுபட்டிருந்தாலும். தமிழ்த் தலைமைகள் மத்தியில் என்றுமே ஒற்றுமை இருந்ததில்லை. அதனால்தான் நாம் சுதந்திரமடைந்து எழுபது வருடங்கள் சென்றும் இன்னும் இன்னும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு சரியான தீர்வைக்காண முடியாமல் உள்ளது.

அப்படித்தான் பெரும் தலைவர்கள் மத்தியில் ஒற்றுமை நிலவினாலும் அதற்கு அடுத்த மட்டத்தில் இரண்டாம் இடத்தில் உள்ள தலைமைகள் ஒன்றுபட்டுச் செயல்பட முட்டுக்கட்டையாக இருந்து வந்துள்ளதை தமிழர் அரசியல் வரலாற்றின் மூலம் அறியக்கிடைக்கின்றது.

ஜீ.ஜீ. பொன்னம்பலம் அகில இலங்கைத் தமிழ் காங்கிரசை உருவாக்கிய பொழுது சட்டவாதி திரு. வைகுந்தவாசன் இன அடிப்படையிலான கட்சி வேண்டாம் என்றும் தேசிய அடிப்படையிலான பெயரைக் கொண்ட கட்சியே வேண்டும் என்றார். தந்தை செல்வா இலங்கை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சமஷ்டிக் கட்சி (*ceylon federal party*) என்ற பெயரில் ஒரு படி தேசியரீதியில் கட்சி அமைந்தாலும் எல்லா மக்களும் வாழக்கூடிய முறையில் இன தனித்துவத்தைக் காட்டுவதற்காக இலங்கை தமிழரசுக்கட்சி என்று சமஷ்டிக் கட்சியை அழைத்தனர்.

நாடு சுதந்திரம் பெற முன்பே சேர் மானிங் கவர்ணராக இருந்த பொழுதே பிரித்தாளும் தந்திரத்தால் தமிழ் மக்களின் இன விகிதாசாரத்திற்கு ஏற்றபடி பிரதிநிதித்துவம் வழங்கப் படவில்லை. அப்பொழுதே ஏகாதிபத்திய சிந்தையுள்ள ஆளும் சிங்கள தலைமைகளின் முன்னோடிகளான சேர் பறன் ஜெயதிலகா, எப். ஆர். சேனநாயக்கா போன்றவர்கள் மத்தியில் இன, மத வாதம் தலைதூக்கி விட்டது. அதனால் தான் இராமநாதன் சகோதரர்கள் தனிவழி செல்ல நேரிட்டது.

இலங்கையில் இரு மொழிபேசும் மக்கள் வாழ்வதால் இனப்பிரச்சினைக்கு எப்பவோ சுமுகமான தீர்வைக் கண்டிருக்க முடியும். இவ்வளவு காலம் தேவையில்லை. ஏகாதிபத்திய சிந்தையுள்ள சிங்கள தலைமைகளை நம்பி நம் தலைமைகள் சென்றதால் அதனால் ஏற்பட்ட ஏமாற்றத்தால் இடதுசாரித் தலைமைகளைத் கூட நம்மவர்கள் நம்ப மறுத்துவிட்டனர்.

இணைந்த வடக்கு- கிழக்கில் திருகோணமலையை காப்பாற்ற தமிழ் பல்கலைக் கழகம் அங்கு நிறுவப்பட வேண்டும் என வலியுறுத்தியவர் தந்தை செல்வா.

தன்கையே தனக்கு உதவி என்ற அனுபவ வாக்கைக் கொண்டு தந்தை செல்வா சகல தமிழ் பேசும் மக்களையும் சைவர்கள் (இந்து) கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், ஏன் விரிந்த நோக்குள்ள சிங்கள சகோதரர்களையும், மலையக உழைக்கும் மக்கள் என்று ஓரணியாக இலங்கை தமிழரசுக் கட்சியில் இணைத்தக் கொண்டார். இதை விரும்பாத ஆளும் பேரினவாத சக்திகள் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ள ஒரு சிலரை விலை கொடுத்து பதவிகள் கொடுத்து வாங்கி ஒற்றுமையை சீர்குலைத்து வந்ததன் விளைவுதான் இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும் அதன் தலைமைக்கும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

ஆளும் தலைமை, கூட்டு எதிரணி இவை இரண்டு பேரினவாத சக்திகளும் சேர்ந்து தமிழ் தேசிய கூட்டமைப்பையும் அதன் தலைமையையும் அழிப்பதற்காக தமிழ் பேசும் மக்களுக்குள்ளேயே பல தில்லுமுல்லுகளைச் செய்து வருகின்றனர். இதற்கு நம்மவர்கள் சிலரும் ஆளாகின்றனர். ஆனால் தமிழ்தேசிய கூட்டமைப்புச் செல்லும் பாதை சரியானதே.

சர்வதேச சமூகத்தையோ, சர்வதேச ஸ்தாபனங்களையோ, இந்திய மத்திய அரசையோ, ஏனைய முற்போக்கு சக்திகளையோ நாம் எதிர்த்து தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பெறமுடியாது. அதனால்தான் தமிழ் தேசிய கூட்டமைப்பு தற்போதைய ரணில், மைத்திரி அரசை பகைக்காது படிப்படியாக நல்லெண்ணத்தை கட்டி வளர்த்தது சர்வதேச பிராந்திய சக்திகளின் நல்லாதரவுடன் (70) எழுபது வருட காலமாகப் போகும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முயன்று வருகின்றனர்.

தமிழ் பேசும் இஸ்லாமிய மக்களை எடுத்துக்கொண்டால் மிக நெடுங்காலமாக தமிழ் மக்களுடன் ஒன்றாக பல வகைகளிலும் இணைந்து வாழ்ந்து வருபவர்கள். அவர்களை பிரிந்து வருபவர்கள் ஏகாதிபத்திய சிந்தையுள்ள ஆளும் தலைமைகளின் ஒரு சில திடீர் என உருவாக்கப்பட்ட முஸ்லீம் தலைமைகளேயன்றி சாதாரண இஸ்லாமிய மக்கள் அல்ல.

தந்தை செல்வா எல்லா மக்களும் மனித உரிமைகளுடன் வாழ வேண்டும் என்ற கொள்கை உடையவர். கிழக்கு மாகாணம் தொடர்ந்து தமிழ்பேசும் மக்களின் மாகாணமாக இருக்கவேண்டும் என விரும்பியவர். 1948 ஆம் ஆண்டு முதன் முதலாக பட்டிப்பளை ஆறு ஓடிய மட்டக்களப்பு தமிழகத்தின் தென் கோடியில் குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பொழுது கிழக்கின் பெரும் தலைவர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கிய *M.M.*இப்ராகிம் ஹாஜியார், கேட் முதலியார். *M.S.* காரியப்பர் போன்றோர்கள் அரசுக்கு ஆதரவாக செயல்பட்ட பொழுது கூறினார். இதனால் கிழக்கு மாகாணத்திற்கு எதிர் காலத்தில் பெரும் ஆபத்து விளையும் என்று கூறினார். இன்று மட்டக்களப்பு தமிழகம் பிரிக்கப்பட்டு அப்பாறை இன்று திகாமடுல்ல ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது யாரால் நம்மவர்கள் பணம், பதவிக்காக நிலத்தை காட்டிக் கொடுத்து தான் கண்ட மிச்சம்.

இதை இனவாதம் என்று கூறலாம் ஒருமொழி பேசும் மக்கள் வாழும் வடக்கு, கிழக்கு இணைப்பதுதான் இனவாதமா? கிழக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால் வடக்கே தென்னமர வாடி கிழக்கே வங்காள விரிகுடா, தெற்கே குமுண (பூமுனை) குமுக்கன் ஆறு கடலுடன் கடக்கும் இடம்வரை மேற்கே பொல நறுவ இத்தகைய எல்லைகளைக் கொண்ட கிழக்கு மாகாணம் திட்டமிட்ட குடியேற்றங்களால் சீரழிந்து போயுள்ளது. இதற்கு மூலகாரணம் நம்மவர்களின் சுயநல பதவி பண ஆசைகளே.

தந்தை செல்வாவோ அல்லது இலங்கை தமிழரசுக் கட்சியோ ஏன் இன்றைய தமிழ் தேசிய கூட்டமைப்பினரோ சரி பௌத்த. சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல. "நீங்களும் வாழுங்கள் எங்களையும் வாழ விடுங்கள்" என்பதுதான் அவர்களின் தாரக மந்திரம்.

தந்தை செல்வா இலங்கை தமிழரசுக் கட்சியை உருவாக்கிய போது அதன் சிரேஷ்ட தலைவர்களாக கேட் முதலியார் *M.S.* காரியப்பர் *M.M.*முஸ்தபா, மசூர் மௌலான *M.E.H.*முகமதலி போன்றவர்கள் இருந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து M.C அகமது, மன்னார் கபூர், டொக்டர் உதுமான்லெப்பை, காசிம் போன்றவர்கள் இருந்தார்கள்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமை பதவியை கிழக்கு மாகாணத்தை சேர்ந்த *S.M.* இராசமாணிக்கம் *N.R.* இராஜவரேதயம் போன்றவர் அலங்கரித்தார்கள். சொல்லின் செல்வன் C. இராஜதுரை அவர்கள் சிரேஷ்ட உபதலைவராக பல காலம் இருந்து கிழக்கு மாகாணத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியை கட்டி வளர்க்க அரும்பாடுபட்டார்.

இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமையையும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களையும் ராஜினாமாச் செய்து போட்டு மக்களின் போராட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும் எனக் கூறுபவர்கள் வேறு யாருமல்ல. பேரினவாத சக்திகளின் கையாட்கள் தாங்கள் பதவியில் குந்தியிருப்பதற்காக மக்களைத் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு எதிராக தட்டிவிடும் சுயநலப் பேர்வழிகளே என்பதை மக்கள் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும்.

சர்வதேச சமூகம் இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பு செல்லும் பாதையை நன்கு புரிந்து கொண்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஆதரவாக இருக்கும் இவ்வேளையில் நம்மவர்கள் சிலர் பதவி ஆசைக்காக மக்களை பகடைக்காயாய் பாவிக்க முனைந்து வருகின்றார்கள். தமிழன் என்பதற்காக எல்லாரையும் நம்ப முடியாது. இது கடந்த கால படிப்பினை தமிழனுக்குள் போட்டியும், பொறாமையும் அதிகம். அதனால்தான் இவ்வளவு காலமாக தமிழ் மக்கள் தொடர்ந்து கஷ்டங்களை அனுபவிக்க காரணம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒன்றுதான் தமிழ் பேசும் மக்ளுக்காக இதயசுத்தியுடன் குரல் கொடுத்துப் போராடிவரும் ஒரு விடுதலை இயக்கம் பிரபல சட்டநிபுணர் *E.R.S.R.* குமாரசுவாமி அவர்களின் சட்டவாத குறுக்கு விசாரணைக்கு களைக்காது குரல் கொடுத்த இலங்கை தமிழரசுக் கட்சித்தலைவர் திரு. சி.மு. இராசமாணிக்கம் காட்டிய வழியில்தான் இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பு தன் பாதையில் செல்கின்றது.

பௌத்த சிங்கள மக்கள் நல்லவர்கள் அவர்களை கெடுப்பவர்கள் ஏகாதிபத்திய சிந்தையுள்ள பதவி ஆசை பிடித்த ஆளும் தலைமைகளே. இதே போலத்தான் தமிழ், இஸ்லாமிய மக்களும், பொதுவாக மக்களை குறை கூறமுடியாது. அரசியல்வாதிகளே இன, மத,மொழி, பிரதேச வாதம் ஊட்டி மக்களைக்

கெடுத்து வருபவர்கள். இன்று சாதாரண மக்களை எடுத்துப்பார்த்தால் இந்த இன, மத ஒற்றுமை தெரியும் படிப்பிலும் மொழியிலும், ஆன்மீக இலக்கிய வழிகளில் எல்லா மக்களும் ஒற்றுமையாக செயல் படுவதைக் காணலாம்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தமட்டில் சகல தமிழ் மக்களும் இனி வரும் காலத்திலாவது ஒன்று பட்டு தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு வாக்களித்தால் நிச்சயம் ஒரு தமிழன் கிழக்கு மாகாணத்தில் முதலமைச்சராக வருவார். இதில் இன சனம் உறவினர் என்று மாற்றுக் கட்சியில் போட்டியிடும் கூட்டத்திற்கு வாக்களிப்பதால் தான் நாம் கிழக்கு மாகாணத்தை இழக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவும் அதன் அங்கத்துவ நாடுகளும் இலங்கை அரசுக்கு மீண்டும் இரண்டு வருடகால அவகாசம் கொடுத்திருப்பது விளையாட்டுக்காக அல்ல. தமிழ் மக்களின் மனித உரிமைகளைப் படிப்படியாக வழங்க வேண்டும் என்பதற்காக அது தவறும் பட்சத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்கு இலங்கை விவகாரம் கொண்டு வரப்படும். அங்கே ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் தங்களின் *(VETO)* ரத்துச் செய்யும் அதிகாரத்தைப் பயன்படுத்தி இலங்கை அரசை காப்பாற்ற செய்யலாம்.

இவ்விடையத்தில் தான் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் மிக விழிப்பாக இருந்து ரஷ்யா, சீனா போன்ற நாடுகளின் அரசத் தலைவர்களை நேரிடையாக சந்தித்து தமிழ் மக்களின் மனித உரிமைகள் மீறல்களை எடுத்த விளக்க வேண்டும்.

போராளிகளை விட ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களை கொண்டு குவித்துப் போட்டு இறைமையுள்ள நாடு நாம் எதையும் செய்வோம் என்று இலங்கை அரசுத் தலைவர்கள் கூற முடியாது. இலங்கை இறைமையுள்ள நாடாக பிரகடனப்படுத்தப்படுவதற்கு தமிழ் பிரதிநிதிகளான ராஜன் செல்வநாயகம், தியாக ராஜா, அருளம்பலம் போன்ற பாராளுமன்ற உறுப்பினர்களும் கையெழுத்திட்டுள்ளனர். இல்லையேல் இறைமையுள்ள நாடாக ஆக்கி யிருக்க முடியாது. எப்படி கூட்டு எதிர்க்கட்சியினர் தமிழ் மக்களின் உரிமைகளுக்கு எதிராக செயல்படுகின்றார்களோ அதேபோல் தமிழ் மக்கள் மத்தியிலும் தமிழ் தேசிய கூட்டமைப் பினருக்கு எதிரான சக்திகள் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய பேர்வழிகளினால் தமிழ் மக்களுக்கு ஒரு சாபக்கேடு காலத்திற்குக் காலம் இருந்து வருகின்றது. எழுபது வருடங்கள் இனப்பிரச்சினை தீர்க்க முடியாமல் இருப்பதற்கு நம்மத்தியில் உள்ள இத்தகைய கூட்டங்களும் ஒரு காரணம் இவர்கள் எல்லாம் பேரினவாதிகளின் கையாட்கள் என்பதை தமிழ் மக்கள் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும்.

எவர் என்ன சொன்னாலும் தற்போதைய தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமை இந்த சலசலப்புக்களுகெல்லாம் அஞ்சாது துணிவுடன் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற அரசுக்கு ஆதரவு வழங்கி வருவது தவறல்ல. ஏனெனில் படிப்படியாக ஒருசில நல்ல காரியங்கள் நடை பெற்று வருவதை நாம் மறுக்கமுடியாது. ஆகவே அவசரப்படாது பொறுத்திருந்து பார்ப்போம்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத் தில் இஸ்லாமிய சகோதரர்கள் எவ்வித பங்களிப்பும் செய்யாவிட்டாலும் மனிதன் என்ற வகையில் அவர்களும் மனித உரிமைகள் பெற்று தமிழ், சிங்கள மக்களைப் போல சமத்துவத்துடன் வாழ வேண்டும். அதே வேளை ஏகாதிபத்திய சிந்தனையுள்ள ஆளும் தலைமை களால் உருவாக்கப்பட்ட முஸ்லீம் தலைவர்கள் என்று சொல்லப்பட்டவர்கள் இஸ்லாமிய மக்களின் உரிமைகளை கடந்த எழுபது வருட காலமாக பெற்றுக் கொடுக்க முன்வரவில்லை.

சரி பெற்றுக் கொடுக்கா விட்டாலும் அம்மக்களின் உரிமைக்காவது போராடியிருக்க முடியாதா? இப்பொழுது தமிழ் மக்கள் எவ்வளவோ தியாகங்களைச் செய்து சர்வதேச பிரச்சினையாக தமிழ் மக்களின் பிரச்சினை கொண்டு வரப்பட்டுள்ள இவ்வேளையில்

வடக்கையும்- கிழக்கையும் இணைக்கக் கூடாது அப்படி இணைத்தால் இஸ்லாமியர்கள் என்ற வெறும் மத அடையாளம் இல்லாமல் போய்விடும் என்று பேரின வாதிகள் திடீர் முஸ்லிம் தலைவர்கள் கூறுகின்றார்கள். தென்னிலங்கையில் சிங்கள மக்களுடன் இஸ்லாமியர்கள் வாழமுடியும் என்றால் மொழியால் ஒன்றுபட்ட தமிழ் மக்களுடன் ஏன் வாழ முடியாது?

ஆகவே பழையதை கிளறிக் கொண்டிருப்பது நாகரிகமல்ல. சகல தமிழ் பேசும் மக்களும் இந்த நாட்டில் சகல உரிமைகளும் பெற்று தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்றால் தந்தை செல்வா வழியில் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் செல்லும் பாதையை பலப்படுத்த வேண்டியது சகல தமிழ் பேசும் மக்களின் முக்கிய கடமையாகும்.

## தந்தை செல்வாவின் தமிழ் உணர்வு :

1948 பெப்ரவரி 4ல் இலங்கை சுதந்திரமடைந்த அன்று இலங்கையின் தேசிய கொடியில் சிங்கமும், பௌத்த மத சின்னமும் உள்ளதை எதிர்த்த தந்தை செல்வா அன்றைய நாளில் சங்கிலிய மன்னனின் சின்னமான நந்தி கொடியை தமது வாகனத்தில் ஏற்றி பயணத்தை மேற்கொண்டார்.









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தந்தையே உம் பணி வாழ்க!

**செல்வன்.யோ.கொபி**
மட்/சந்திவெளி சித்தி விநாயகர், வித்தியாலயம்.

இன்னலுற்ற தமிழனின் விடுதலைக்காய்
இன்னும் ஒருவரும் வரவில்லையே - என
இரந்து கேட்கும் தமிழர் தேசத்தில்
இயற்கையாய் அவதரித்தார் தந்தை செல்வா,

வேலுப்பிள்ளை அன்னம்மா ஆகியோருக்கு
வேங்கைப் புயலாய் அவதரித்த முதல்மகனாம்
தமிழ் பேசும் மக்களை ஒன்றிணைத்த
தமிழர் சக்தியாய் உருவெடுத்த தந்தையே!

ஆடம்பரமற்ற எளிமையான வாழ்வுதனில்
அஹிம்சைப் போராட்டத்தில் குதித்த நீரோ
அறவழியில் போராடி தமிழர் உரிமைதனை
அன்பாக வென்றுதர முனைந்த தந்தையே!



தமிழனுக்குத் துணையின்றி தவிக்கும் தருவாயில்
தமிழரசுக் கட்சியின் தலைவனாக வந்தவரே!
தமிழர் உரிமையினை ஈன்றெடுக்க
தயங்காது சட்டசபை சென்ற தந்தையே!

பண்டா - செல்வா ஒப்பந்தம் மூலம்
சமஷ்டி ஆட்சி வேண்டும் - என
சக இனத்தவருடன் போராடி - தன்
வாழ்வையே அர்ப்பணித்த தந்தையே!

உமது குறிக்கோள் நிறைவேறியிருந்தால் - இன்று
இத்தனை இழப்புக்களும் சேதங்களும்
ஈழத்தில் தலைதூக்கியிருக்காதே - உமக்காய்
இன்றுவரை தவிக்கின்றது தமிழர் தேசம்.

தமிழர் உரிமைக்காய் போராடி
தயங்காது உழைத்த உம் இழப்பால்
தவிக்கின்றது தமிழர் தேசம் என்றும்
தமிழர் உள்ளவரை மறவாதே உம் புகழ்

தமிழ் பேசும் மக்களையோ - இனி
கடவுள் தான் காப்பாற்றட்டும் - என்றும்
கூறிய தந்தையே உம் கூற்று - இன்று
தீர்கக தரிசனமான நிதர்சனக் கூற்றே!

தவிக்கின்றோம் உம்மைப் போன்ற
தன்மானமிக்க தலைவனுக்காய்
தமிழினம் தலைநிமிர தயங்காது
அவதரியுங்கள் தமிழர் தேசத்தில்.

தமிழினத் தலைவர் தந்தை செல்வா ஐயாவே - உம்
திருவுடலே எம்மைவிட்டு மறைந்தாலும்
புகழுடல் என்றும் மறையாது
புகழ்கின்றோம் உம்மை என்றும் உம் பணி வாழ்க!!!

---

பாடசாலை மட்டக் கவிதை போட்டியில் இடைநிலைப் பிரிவின் மாவட்ட மட்டத்தில் 1ம் இடம் பெற்ற கவிதை

செல்வன். ஆ. ஜெயலக்ஷன்
மட்/புதூர் விக்கினேஸ்வரா, வித்தியாலயம்.

# இலங்கையின் ஒப்பற்ற தலைவர் தந்தை செல்வா

தொ தொல்புரத்தைச் சேர்ந்த சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளைக்கும் அன்னம் மாவுக்கும் மூத்தமகனாக எமது செல்வநாயகம் மலேசியாவின் மிகவும் தூய்மையான நகரமான இல்போ நகரில் 1898 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி பிறந்தார். அவருக்குப் பின் வேலுப்பிள்ளை தம்பதியருக்கு இரண்டு புத்திரர்களும் ஒரு மகளும் பிறந்தார்கள். வேலுப்பிள்ளை தம்பதியினர் தமது மழலைச் செல்வங்கள் கல்வி கற்று மேன் மக்களாக விளங்க வேண்டும் என ஆசைப்பட்டார்கள்.

அக்காலகட்டத்தில் பாடசாலைகள் குறைவு. இருந்த சில நல்ல பாடசாலைகளும் அரச குடும்பத்தினரையும் பெரிய பணக்கார குழந்தைகளையுமே அனுமதித்தன. எனவே வேலுப்பிள்ளை தம்பதியினர் தமது மழலைச் செல்வங்களை கல்வி கற்பதற்காக மலேசியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பினார்கள். அப்பொழுது எமது கதாநாயகன் செல்வநாயத்திற்கு வயது நான்கு. தனது இரண்டு சகோதரர்களுடனும் ஒரு சகோதரியுடனும் மலேசியாவில் இருந்து கொழும்புக்கு கப்பலில் வந்திறங்கினார் பாலகன் செல்வநாயகம். அப்பொழுது கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு புகையிரத சேவை ஆரம்பிக்கப்படாமையினால் மீண்டும் கப்பலிலேயே

காங்கேசன் துறைக்கு வந்து தமது சொந்த ஊரான தெல்லிப்பழைக்கு வந்தார். அங்கு அமெரிக்க மிஷன் பாடசாலையில் 5 ஆம் வகுப்பு வரை கல்வி பயின்றார். இந்த அமெரிக்க மிஷன் பாடசாலை தான் பின்பு யூனியன் கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டது கவனத்திற்குரியதாகும். சிறுவயதிலேயே செல்வநாயகம் பெண் வேடம் பூண்டு நாடகங்களில் நடித்தாராம்.

ஐந்தாம் வகுப்பிற்குப் பின்னர் செல்வ நாயகம் யாழ்ப்பாணம் சென்று சென்.ஜோன்ஸ் கல்லூரியில் சேர்ந்து சீனியர் கேம்பிரிட்ஜ் பரீட்சைக்குப் படிக்கத் தொடங்கினார். பின்னர் மாமனார் எஸ்.கே.பொன்னுசாமியின் உதவியுடன் கொழும்பு சென்.தோமஸ் கல்லூரியில் சேர்ந்து தமது கல்வியைத் தொடர்ந்தார்.

சென்.தோமஸ் கல்லூரியில் ஏறத்தாழ ஒன்றரை வருடம் கல்வி கற்று இன்டர் சயன்ஸ் பரீட்சையில் தேறிய செல்வநாயகம் தனது தம்பிமாரைப் படிப்பிப்பதற்காக 1917 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார். ஆசிரியராக இருந்து கொண்டே இலண்டன் பல்கலைக்கழக பி.எஸ்.ஸி. விஞ்ஞானப் பட்டப் பரீட்சைக்கு வெளிவாரி மாணவனாகத் தோற்றி அடுத்த ஆண்டே அதாவது 1918இல் சித்தி எய்தினார்.

இத்தருணத்தில் மலேசியாவிலிருந்த அவரது தந்தையார் சுகவீனமுற்றிருந்தமையால் அவரைப் பார்க்க மலேசியா சென்று சுமார் ஒரு மாதம் வரை தங்கியிருந்து மீண்டும் திரும்பினார். ஆனால் என்ன பரிதாபம் செல்வநாயகம் இலங்கை திரும்பி வந்த ஓரிரு வாரங்களிலேயே அன்னாரது தந்தையார் மலேசியாவில் காலமானார்.

அதனால் குடும்பப் பொறுப்பு அனைத்தும் இளைஞரான செல்வநாயகத்தின் மேல் சுமத்தப் பட்டது. தமது பிற்காலத்தில் இலங்கைத் தமிழ் இனத்தின் பொறுப்பெல்லாவற்றையும் சிரமேற் கொண்ட தமிழ்த் தந்தைக்கு தந்தையில்லாத குடும்பத்தின் பொறுப்பைச் சுமப்பதா பெரிய காரியம்! இரண்டு தம்பிமாரையும், அருமைத் தங்கையையும் அரவணைத்துக் கொண்டு கொழும்பு சென்ற். தோமஸ் கல்லூரியில் தமது ஆசிரியப்பணியைத் தொடர்ந்தார்.

எனினும் அன்னாருக்கு சோதனை தொடர்ந்தது. யாழ்ப்பாணத்தில் அவரது இளைய சகோதரருக்கு கடும் சுகவீனம். அவரைப் பார்ப் பதற்கு தெல்லிப் பழைக்குச் செல்ல லீவு கேட்டார். லீவு மறுக்கப்பட்டது. ஆசிரியர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு தெல்லிப் பழைக்குச் சென்றார்.

தம்பியை நன்கு பராமரித்தும் என்ன செய்வது பலன் இல்லாமல் போய்விட்டது. அருமைத் தம்பி இராஜசுந்தரம் தமது பதினைந் தாவது வயதில் காலமானார். தம்பியின் இறுதிச் சடங்கு முடிந்து மீண்டும் கொழும்பு வந்த செல்வநாயகம், வெஸ்லி கல்லூரியில் ஆசிரிய ரானார். எஸ். ஜே.வி ஆசிரியனாக இருந்த காலத்தில் நல்லாசிரியன் என்ற பெயரைப் பெற்றோர், ஆசிரியர், மாணவர்களிடம் பெற்றார். பிற்காலத்தில் நல்ல நேர்மையான சட்டத்தரணி என்று பெயரும் புகழும் பெற்றாரோ, அரசியலில் நுழைந்த பின்னர் எவ்வாறு உலக மக்கள் அனைவராலும் தமிழ் பேசும் மக்களின் தன்னிகரில்லாத் தலைவன் என்றும், பெயரும் புகழும் பெற்றதில் எவ்வித ஆச்சரியமும் இருக்க முடியாது என்பது திண்ணம்.

அந்தக் காலத்தில் செல்வா ஆசிரியராக உலா வந்த போது அன்னாரது நடை, உடை, பாவனையைப் பின்பற்றிய மாணவர்கள் பலர். அதிகம் ஏன்? அவரது நடு உச்சித் தலைவாரும் பழக்கத்தைக் கூட வெஸ்லிக் கல்லூரி மாணவர் கள் கொண்டிருந்தார்கள் என்றால் பாருங்களேன்.

1918 ஆம் ஆண்டு விஞ்ஞானப் பட்ட தாரியான செல்வநாயகம் ஆசிரியராக இருந்த போதே சட்டக்கல்லூரியில் சேர்ந்து 1924 ஆம் ஆண்டு சித்தி எய்தி சிவில் சட்டத்துறையைத் தேர்ந்தெடுத்து சட்ட வல்லுநரானார். அத்தொழி லில் தனது முழுக் கவனத்தையும் செலுத்தினார். அப்போதெல்லாம் தமது வாழ்நாள் இலட்சியம் சுப்பிரீம் கோர்ட்டுக்கு நீதியரசராவதே என்று கூறுவது உண்டு. எஸ்.ஜே.வி புகழ்பெற்ற சட்டத் தரணியாக இருந்த காலத்தில் அன்னாரது யூனியராக இருந்து பிற்காலத்தில் பிரபல சட்டத்தரணிகளாகிய சிலரை இங்கு பார்ப்பது சாலச் சிறந்ததாகும்.

பிரதம நீதியரசர் பதவி வகித்த நெவில் சமரகோன், எஸ். சர்வானந்தா, இன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தந்தை எட்மண்ட் விக்கிரமசிங்க, வி. நவரட் ணராஜா, சி.இரங்கநாதன் என்போர்.

இவ்வாறு புகழ்பூத்த சட்டத்தரணியாக இருந்த செல்வா அரசியலில் நுழைந்தது அவரது போதாத காலமாக இருக்கலாம். ஆனால் அந்த நிகழ்ச்சி ஈழத்து தமிழனத்தின் தவப் பேறாகும்! 1944 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27ம் திகதி கொழும்பு சைவமங்கையர் கழக மண்டபத்தில் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அகில் இலங்கைத் தமிழ் காங்கிரஸ் அங்குராற்பணக் கூட்டத்தில் செல்வா கலந்து கொண்டார். தொடர்ந்து சோல்பரி கமிஷன் முன் ஜி.ஜி.சாட்சியமளித்த போது செல்வா அவர்கள் அருகிலிருந்து தம்மாலியன்ற பங்களிப்பை வழங்கினார்.

1947 இல் நடைபெற்ற பொதுத் தேர்த லில் எஸ்.ஜே.வி யின் பங்களிப்பு அளப்பரியது. தமிழ் காங்கிரஸ் யாழ். குடா நாட்டில் ஏழு வேட்பாளர்களும் கிழக்கு மாகாணத்தில் இரண்டு வேட்பாளர்களுமாக மொத்தமாக ஒன்பது வேட்பாளர்களை நிறுத்தியது. தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் ஜி.ஜி.க்கு அடுத்தபடியாக எஸ்.ஜே.வி தான் பிரதம பேச்சாளர். தமக்கே உரித்தான மெல்லிய உடல்வாகுடன் மென்மை யாக ஆறுதலாக ஆனால், உறுதியாக நிறுத்தி, நிறுத்தி அவர் பேசிய உரைகள் அனைவரையும் பெரிதும் கவர்ந்தன.

அந்தத் தேர்தலில் எஸ்.ஜே.வி காங்கேசன்துறையில் போட்டி போட்டு வெற்றி பெற்றார். யாழ்.குடாநாட்டில் ஆறு தொகுதிகளில் தமிழ் காங்கிரஸ் பெருவெற்றி ஈட்டியது. எஸ்.ஜே.வி யின் யூனியராகக் கடமையாற்றிய கோப்பாய்க் கோமான் கு.வன்னியசிங்கம் கோப் பாய்த்தொகுதியில் பெரும்வெற்றி ஈட்டினார்.

1948 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி இலங்கைத் தமிழருக்கு ஒரு கரிநாள். அன்றுதான் இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டத்தை எதிர்த்து தமிழ் காங்கிரஸ், இலங்கை இந்தியக் காங்கிரஸ், லங்கா சமசமாஜக் கட்சி, சில சுயேச்சை உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

எனினும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து யூ.என்.பி.டி.எஸ்.சேனநாயக்கா அரசு தமிழரைப் பலவீனப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டது. அதன் முதற்படியாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மந்திரிப் பதவிகள் வழங்கப்பட்டன.

1948ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜி.ஜி.க்கு கைத்தொழில் அபிவிருத்தி கடற்றொழில் அமைச்சு வழங்கப்பட்டது. ஜி.ஜி.யுடன் கே. கனகரெத்தினம் (உதவி மந்திரிப்பதவி), சி.இராமலிங்கம், வி.குமாரசாமி போன்றோர் அரசுடன் இணைந்தனர். செல்வநாயகம், வன்னியசிங்கம், சிவபாலன் ஆகியோர் அரசுடன் இணைய மறுத்து விட்டனர்.


1948ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜி.ஜி அமைச்சராகி அரசுடன் இணைந்தனர். அன்றி லிருந்து தமிழ் காங்கிரஸ் ஜி.ஜி.குழு, செல்வநாயகம் குழு என இரண்டாகப் பிரிந்து வேறு வேறாகப் பிரிந்து கூட்டங்களும் நடத்தத் தொடங்கினர். அக்கால கட்டத்தில் சென்ட்ரராக இருந்த இ.எம்.வி.நாகநாதன், செல்வநாயகம் குழுவில் இணைந்து கொண்டார். தொடர்ந்து தமிழரசுக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டதும் தன்னி கரில்லாத் தலைவராக தந்தை எஸ்.ஜே.வி விளங்கியதும், பின்னர் நடந்த அனைத்துத் தேர்தல்களிலும் அன்னாரின் கட்சி வெற்றி பெற்றதும் அனைவரும் அறிந்ததே.

பெரியவர் செல்வநாயகம் தமிழர் விடுதலைக்காக, தமிழ் மக்கள் அமைதியாக தமது தாயகத்தில் சுதந்தரமாக வாழ வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக இறுதிவரை ஒரு சத்தியாக்கிரகியாக, ஊழலற்ற வாழ்க்கையைக் கடைப்பிடித்தார். அமரர்.செல்வநாயகத்தின் தீர்க்கதரிசனமான பண்டா, செல்வா ஒப்பந்தத் தையோ அல்லது பண்டா, டட்லி ஒப்பந்தத் தையோ மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் நிறைவேற்றி இருந்தால் எத்தனை பொருள்

இழப்புக்கள், உயிர்ச் சேதங்கள், அனர்த்தங்கள் இந்த அழகிய, சிறிய நாடு தவிர்த்திருக்கும்.

அன்னார் தான் காலமாகும் முன் தமது 79 ஆவது வயதில் "கடவுள் தான் இனி தமிழ் பேசும் மக்களைக் காப்பாற்ற வேண்டும்." என்றார். தந்தையின் கூற்று எத்தனை தீர்க்க தரிசனமான கூற்று! அக்கூற்று நிதர்சனமான கூற்றாக இன்று மாறியிருப்பது தமிழ் பேசும் மக்களின் துரதிர்ஷ்டமே!

பாடசாலை மட்டக் கட்டுரைப் போட்டியில் இடை நிலைப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற கட்டுரை



செல்வி. கு. கோகுலவாணி
மட்/பட்/பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயம்

# தந்தைசெல்வா ஒரு தீர்க்கதரிசி

தந்தை செல்வா 1898 ம் ஆண்டு மார்ச் 31ம் திகதி மலேசியாவிலுள்ள இப்போ நகரில் பிறந்தார். இவருடைய முழுப்பெயர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் ஆகும். இவருடைய தந்தை பெயர் ஜேம்ஸ் விஸ்வநாதன் வேலுப்பிள்ளை. இவர் தான் அவர்களுடைய குடும்பத்தின் மூத்தமகன் ஆவார்.

மலேசியாவில் படிப்பதற்கு வசதி இல்லாததால் தன் தாயுடன் தன் கிராமமான தெல்லிப்பளைக்கு அனுப்பினார் வேலுப்பிள்ளை. தெல்லிப்பளையிலுள்ள அமெரிக்க மிஷன் பாடசாலையில் பாலர் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை செல்வநாயகம் படித்தார். செல்வநாயகத்திற்கு நாடகத்திலும் இசையிலும் அதிக ஆர்வம் உண்டு. ஐந்தாம் வகுப்பிற்கு பின்பு அவர் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியல் ஐந்து ஆண்டுகள் கற்றார். சென் ஜோன்ஸில் படித்துக் கொண்டிருக்கையில் மாமனாரான எஸ்.கே. பொன்னையாவின் பொறுப்பில் தந்தை செல்வா விடப்பட்டார். கல்வியில் தந்தை செல்வா காட்டிய ஆர்வத்தை உணர்ந்து கொண்ட எஸ்.கே.பொன்னையா செல்வாவை சென். தோமஸ் கல்லூரியில் சேர்த்தார். சென் தோமஸ் கல்லூரியில் ஒன்றரை ஆண்டுகள் கற்று இன்ரர் சயன்ஸ் பரீட்சையில் செல்வா சித்தியெய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1917ல் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராக சேர்ந்தார். அங்கே கற்பிக்கும் போது லண்டன் பல்கலைக்கழக பி. எஸ். சி விஞ்ஞானப் பரீட்சைக்கு வெளிவாரி மாணவனாகத் தோற்றி 1918 ம் ஆண்டு சித்தி யெய்தினார். செல்வாவின் 20 ஆவது வயதில் அவர் தந்தை இறந்துவிட்டார். சென். தோமஸ் கல்லூரியிலே அவருக்கு ஆசிரியர் வேலை கிடைத்தது.

1947இல் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாகினார். தந்தை செல்வா 1927ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். சுப்ரீம் கோர்ட்டு நீதியரசராவதைத் தன் இலட்சியமாகக் கொண்டிருந்தார்.

1924 ஆண்டு சட்டத்துறையில் மற்றைய வழக்கறிஞர்கள் சென்ற கிரிமினல் சட்டப் பாதையில் நடக்காது சிவில் சட்டத்துறையைத் தேர்ந்தெடுத்தார். தந்தை செல்வா எதிலும் நேர்மையைக் கடைப்பிடிப்பவர். தந்தை செல்வாவின் நேர்மையை மெச்சி டாக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வா 1974ம் ஆண்டில் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தினார்.

1972ல் அரசியல் சட்டத்தை ஆட்சேபித்து அதே ஆண்டு அக்டோபர் 3ம் திகதி தந்தை செல்வா தனது எம்.பி பதவியை இராஜினாமா செய்தார். 1924ல் அப்புக்காத்தாகச் சத்திய பிரமாணம் செய்து கொண்டார். 1930 ம் ஆண்டுகளில் செல்வநாயகத்தின் புகழ் பரவ ஆரம்பித்தது. அந்த தசாப்தத்தின் பிற்பகுதியில் அப்பீல் கோர்ட்டில் தோன்றி வாதாட தொடங்கி னார். 1947ல் மகாராணியின் வழக்கறிஞர் ஆக்கப்பட்டார். பிரச்சனைகளை கூர்மையாக ஆழ்ந்து பகுத்தாய்வு செய்தல், சட்டக்கருத்துக் களை சரிவரப் புரிந்து கொள்ளுதல், கடின உழைப்பு, அர்ப்பண உணர்வு, சட்டப்பத்திரங் களை தயாரிக்கும் திறன், நேர்மை என்பன தந்தை செல்வாவிடமுள்ள சிறந்த பண்புகளாகும்.

1975 பெப்ரவரி 6ல் நடந்த காங்கேசன் துறை உபதேர்தலில் வெற்றி பெற்றார். 1950ம் ஆண்டு தமிழரசுக் கட்சியின் வளர்ச்சி ஆண்டு என்று தந்தை செல்வா பிரகடனம் செய்தார். 1951 தமிழரசுக் கட்சியின் மிகவும் முக்கியமான ஆண்டாகும். அவ்வருடம் கட்சியின் முதலாவது மாநாடு நடைபெற்றது. ஓராண்டுக்கு தந்தை செல்வா தலைவராக தெரிவு செய்யப்பட்டார். செல்வநாயகத்தின் அரசியல் உயர்ச்சிக்கு சமஷ்டி தீர்வு திட்டம் வழிவகுத்தது.

தமிழ் மக்கள் யாவரையும் ஒற்றுமைப் படுத்த, தமிழன் என்ற உணர்வை ஊட்டி தமிழ் தேசியத்தை உருவாக்குவதை தந்தை செல்வா தன் தலையாய பணியாக கொண்டவர். இந்தப் பணியை இலங்கையின் இரண்டாவது பாராளுமன்ற காலத்தில் அந்த இலட்சியத்தை அவரால் அடைய முடிந்தது.

1955 ஆம் ஆண்டில் வடக்கிலும் கிழக்கிலும் பல கூட்டங்களில் தமிழ் மக்களையும் தமிழ் மொழியையும் எதிர்நோக்கும் போராட்டத்தை விளக்கினார். அந்த நேரத்தில் தான் அவரை பாக்கின்சன் நோய் தாக்கியது. 1955 ஏப்ரல் திருமலை மகாநாட்டுக்கு முன்பு அவர் கடும் சுகவீனமுற்றிருந்தார். அரசியலில் இருந்து விலகுமாறு அவர் மீது அவரின் குடும்பத்தினர் வற்புறுத்தினர். தந்தை அதற்கு இணங்கவில்லை.

தந்தை செல்வா தேசிய உடையில் பற்றுள்ளவர். அவர் அரசியலுக்காக தேசிய உடையை தெரிவு செய்யவில்லை. "என்னைத் தமிழ் மக்கள் தலைவனாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் என்றுமே சொன்னதில்லை, சொல்லவும் மாட்டேன். நான் முன்வைத்துள்ள தீர்வை தமிழ் மக்கள் ஏற்க வேண்டும் என்றே கூறிவந்துள்ளேன். சாகும் வரை கூறுவேன். தமிழ் மக்கள் தன்மானத்துடன் வாழ்வதற்கு அத்தீர்வு வழிவகுக்கும் என்பது தந்தை செல்வாவின் உறுதியான நம்பிக்கையாகும்.

தமிழ்மக்களுக்காக போராடியவர்களில் தந்தை செல்வா முக்கியமானவர். 1952 ஆம் ஆண்டு தேர்தலில் தமிழ்மக்கள் தந்தை செல்வா வின் சமஷ்டித் தீர்வுக்கு தங்கள் ஆணையைக் கொடுத்தனர். தமிழரசுக்கட்சி வெற்றி பெற்ற

தொகுதிகளில் வட மாகாணத்தின் சார்பில் தந்தை செல்வா காங்கேசன் துறைத் தொகுதியில் வெற்றி பெற்றது. காலிமுகப் போராட்டமும் திருமலை யாத்திரையும் 1956ம் ஆண்டில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பலமுள்ள கட்சியாக தமிழரசுக் கட்சியை வளர்த்துவிட்டன.

அரசியல் சட்டத்தை திருத்தம் செய்வதற்கு பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றை நியமிக்க முன்வந்தார். சமஷ்டி அமைப்பை ஏற்படுத்துவது பற்றியும் பண்டாரநாயக்கா தந்தை செல்வாவிற்கு ஆதரவளித்தார். சிறுபான்மை தமிழர் மகாசபையின் அழைப்பை ஏற்று யாழ்ப்பாணம் போனார். மே 13ல் மட்டக்களப்பில் நடந்த பொதுக் கூட்டத்தில் தமிழ் மக்களை வெறும் வாய் சொல் வீரர்களாக சிங்கள மக்கள் கவனிப்பதாகவும் அந்நிலைமையை மாற்றி செயல் வீரர்களாக மதிக்கச் செய்ய வேண்டும் எனத் தந்தை செல்வா கூறினார். மே 13 இல் நடைபெற்ற கூட்டத்தில் தந்தை செல்வா தமிழ்மக்களின் கோரிக்கைகள் நியாயமானவை என்பதில் நம்பிக்கை வையுங்கள். ஒவ்வொரு தமிழனும் போராட்டத்தில் தீவிர பங்கு ஏற்க வேண்டும். போராட்டத்தில் இணையுங்கள். எந்த தியாகத்திற்கும் தயாராகுங்கள் என்ற கட்டளைகளை தமிழருக்கு கூறினார்.

1960 மார்ச் தேர்தலின் பின் தந்தை செல்வா தமிழரின் போராட்ட முறையில் ஒரு பெரிய மாற்றத்தை செய்தார். தமிழ் மக்கள் சுய மரியாதையுடன் வாழ வழி செய்யும் சுயாட்சி அரசை அமைக்கத் திட்டமிட்டார். சத்தியாக்கிரகத்தின் போது தந்தை செல்வாவிற்கு பாக்கின்சன் நோய் ஏற்பட்டது. அந்த நோய் தசையையும் நரம்புகளையும் தாக்கும் தன்மையுள்ளது. அதனால் தந்தையின் குரலும் உடல் அசைவும் பாதிக்கப்பட்டன. வைத்தியர்களினதும் மற்றவர்களினதும் வற்புறுத்தலின் பேரிலே நோயை குணப்படுத்த லண்டன் போக இணங்கினார். அங்கே அவருக்கு மூளைப் பகுதியில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. அதனால் அவரின் உடல்நிலை சிறிது முன்னேற்றம் அடைந்தது.

திருமலை மாநாட்டில் தந்தை செல்வா மீண்டும் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். தந்தை செல்வா தன் கருத்தை எவர்மீதும் திணிக்கமாட்டார். எல்லா நிலைப்பாடுகளையும் சுருக்கி கூறி தன் கருத்து எது என்பதையும் குறிப்பிட்டு முடிவை நீங்களே எடுங்கள் என்று மக்களிடம் கூறும் குணம் கொண்டவர். தந்தை செல்வா எல்லோரையும் மதிப்பவர். எல்லோருடைய மரியாதைக்கும் உரியவர். 1972 ஜனவரி 12 ல் இந்திய வெற்றியைக் கொண்டாடும் முகமாக வேறு அரசியல் கட்சிகளுடன் இணைந்து மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று தமிழ்க்கட்சி காங்கேசன் துறையில் நடத்தியது. தந்தை செல்வா அக் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். தமிழ் இனத்தின் அடிப்படை உரிமைகள் சிலவற்றையாவது அரசியல் அமைப்பில் இடம்பெறச் செய்ய வேண்டும் என்ற ஆவலில் பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்களையும் அரசியல் விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வா அவர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இலங்கை புதிய அரசியல் திட்டம் எனும் அடிமைச் சாசனத்தை இலங்கை தமிழ் தேசிய இனம் முற்றாக நிராகரிக்க வேண்டும் எனும் பிரகடனம் தந்தை செல்வாவின் மேற்பார்வையில் கவனிக்கப்பட்டது. தமிழ் மக்களின் உரிமைக்காக போராடினார். தமிழர் கூட்டணி என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. தலைவராக தந்தை செல்வா தெரிவானார். தந்தை செல்வா காங்கேசன்துறை தொகுதி பிரதிநிதிப்பதவியை 1972 செப்டெம்பர் 02ம் திகதி இராஜினாமா செய்தார்.

இவர் தமிழ் பேசும் மக்கள் 1972 அரசியல் திட்டத்தை நிராகரிக்கின்றனர் என்பதை அரசாங்கத்திற்கும் உலகத்திற்கும் காட்டுவதற்கு அப் பதவியில் இருந்து நீங்கினார். தமிழ் பல்கலைக்கழகம் ஒன்றை திருகோணமலையில்

அமைக்க வேண்டும் என்பது தமிழர் கூட்டணியின் நீண்ட கால கோரிக்கை அதில் தந்தை செல்வா தீவிரமாக இருந்தார். தந்தைக்கு மூதறிஞர் என்ற பட்டம் சூட்டப்பட்டது. காங்கேசன்துறை உபதேர்தலில் தந்தைக்கு பெரிய வெற்றி கிடைத்தது.

தனக்குள்ள இறைமையை பிரயோகித்து சுதந்திர தமிழீழத்தை அமைப்பேன் என நாட்டு மக்களுக்கும் உலகத்திற்கும் உறுதி அளித்தார். தந்தை செல்வாவின் வாழ்க்கை மூன்று கட்டங்களை கொண்டது. முதலாவது தமிழ் காங்கிரசில் இருந்தகாலம். இரண்டாவது சமஷ்டி கோரிக்கை முன்வைத்த காலம். மூன்றாவது 1975 தொடக்கம் 1977 ல் அவர் இறக்கும் காலம்.

தந்தை செல்வா காந்திஜி வகுத்த அகிம்சை வழியில் நடந்தவர். தமிழர் தமது பாரம்பரிய தாயகத்தில் தனி நாட்டை அகிம்சை போராட்டத்தின் மூலம் நிறுவவேண்டும் என்பது தந்தையின் நிலைப்பாடு. 1975 நடந்த காங்கேசன்துறை உபதேர்தலின் பின்பு தந்தை செல்வநாயகம் தன் சமஷ்டி தீர்வு தோல்வியுற்றுவிட்டதைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டார்.

தந்தை செல்வா வட்டுக்கோட்டைப் பிரகடனம் என்று இன்று எல்லோராலும் அழைக்கப்படும் தீர்மானத்தை முன் மொழிந்தார். வட்டுக்கோட்டை தீர்மானத்தின் பின்பு வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகத்தில் தமிழீழத்தை அமைப்பதில் தந்தை செல்வா கவனம் செலுத்தினார். பாராளுமன்றத்தில் 1976 நவம்பர் 19 இல் தமிழர் பிரச்சனை பற்றி தந்தை பேசினார். அதுவே அவரின் கடைசிப் பேச்சாக அமைந்து விட்டது. தமிழ் பேசும் மக்கள் அனைவருக்காகவும் போராடியவர் தந்தை செல்வா.

977ம் ஆண்டு ஏப்ரல் 26 தந்தை செல்வா இறந்துவிட்டார். இவர் இறந்தது தமிழ் மக்களுக்கு ஒரு பெரிய இழப்பாகும். தந்தை செல்வா காட்டிய வழியில் நாமும் கடைபிடித்து வாழ்வோம்.

பாடசாலை மட்டப்போட்டியில் மாவட்ட மட்டத்தில் சிரேஷ்ட கட்டுரைப் பிரிவில் 1ம் இடம் பெற்ற கட்டுரை

## தமிழ் தேசிய கூட்டமைப்பும் , பாராளுமன்ற தேர்தல்களும், தமிழ் தேசிய கூட்டமைப்பு

உருவாக்கமும்: 2001, அக்டோபர் 20.

| | பாராளுமன்ற தேர்தல்கள் இடம்பெற்ற திகதி | போட்டியிட்ட அரசியல் கட்சியும் சின்னமும் | கிடைக்கப்பெற்ற மொத்தவாக்குகள் (வட கிழக்கு முழுவதும்) | உறுப்பினர் எண்ணி-க்கை |
|---|---|---|---|---|
| 01 | 2000, அக்டோபர், 10 | த.வி. கூட்டணி சின்னம்: உதயசூரியன் | 160015 | 13 |
| 02 | 2001, டிசம்பர், 05 | இ.த.அ. கட்சி சின்னம் வீடு | 348164 | 15 |
| 03 | 2004, ஏப்ரல், 02 | இ.த.அ. கட்சி சின்னம் வீடு | 633654 | 22 |
| 04 | 2010, ஏப்ரல், 08 | இ.த.அ. கட்சி சின்னம் வீடு | 233190 | 14 |
| 05 | 2015, ஆகஸ்ட், 17 | இ.த.அ. கட்சி சின்னம் வீடு | 515963 | 16 |



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாடசாலை மட்டப் போட்டிகளது பெறுபேற்று விபரங்கள்

## மாவட்ட மட்டம்

| நிகழ்ச்சி | பிரிவு | மட்டம் மாவட்டம் | போட்டியாளரின் பெயர் | பாடசாலையின் பெயர் | நிலை |
|---|---|---|---|---|---|
| பேச்சு | இடை நிலை | கல்குடா<br>பட்டிருப்பு<br>மட்டக்களப்பு | 1. செல்வி.மோ.சுவேனியா<br>2. செல்வி.க.கிருத்திக்கா<br>3. செல்வன்.பு.தினேசன் | மட்/ககு/சந்திவெளி சித்தி விநாயகர் வித்தியாலயம்<br>மட்/பட்/மண்டூர் 14 அ.த.க பாடசாலை<br>மட்/மட்/புதூர் விக்கினேஸ்ரா வித்தியாலயம் | 01ம் இடம்<br>02ம் இடம்<br>03ம் இடம் |
| பேச்சு | சிரேஷ்ட நிலை | கல்குடா<br>கல்குடா<br>மட்டக்களப்பு மேற்கு | 1. செல்வி.த.பிரியங்கா<br>2. செல்வி.ச.நிபோஜா<br>3. செல்வி.பா.நிரோசனா | மட்/ககு/சந்திவெளி சித்தி விநாயகர் வித்தியாலயம்<br>மட்/ககு/வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலயம்<br>மட்/ககு/கொக்கட்டிச்சோலை இராம கிருஷ்ணா மகா வித்தியாலயம் | 01ம் இடம்<br>02ம் இடம்<br>03ம் இடம |
| கவிதை | இடை நிலை | கல்குடா<br>கல்குடா<br>பட்டிருப்பு | 1. செல்வன்.யோ.கொபி<br>2. செல்வன்.கோ.ரதீஸ்<br>3. செல்வி.ம.பினோஜா | மட்/ககு/சந்திவெளி சித்தி விநாயகர் வித்தியாலயம்<br>மட்/ககு/செங்கலடி மத்திய கல்லூரி<br>மட்/பட்/மண்டூர் 13 விக்னேஸ்வரா வித்தியாலயம் | 01ம் இடம்<br>02ம் இடம்<br>03ம் இடம |
| கவிதை | சிரேஷ்ட நிலை | பட்டிருப்பு<br>மட்டக்களப்பு<br>கல்குடா | 1. செல்வன்.த.எஜந்தன்<br>2. செல்வி.த.திலுக்ஷிதா<br>3. செல்வி.ச.நிலாந்தினி | மட்/பட்/மண்டூர் 13 விக்னேஸ்வரா வித்தியாலயம்<br>மட்/மட்/ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயம்<br>மட்/ககு/வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலயம் | 01ம் இடம்<br>02ம் இடம்<br>03ம் இடம |
| கட்டுரை | இடை நிலை | மட்டக்களப்பு<br>பட்டிருப்பு<br>மட்டக்களப்பு | 1. செல்வன்.அ.ஜெயலக்ஷன்<br>2. செல்வன்.வி.உமாபார்கவி<br>3. செல்வி.ரி.பிரம்மியா | மட்/மட்/புதூர் விக்கினேஸ்வரா வித்தியாலயம்<br>மட்/பட்/மண்டூர் 13 விக்னேஸ்வரா வித்தியாலயம்<br>மட்/மட்/புதூர் விக்கினேஸ்வரா வித்தியாலயம் | 01ம் இடம்<br>02ம் இடம்<br>03ம் இடம |
| கட்டுரை | சிரேஷ்ட நிலை | பட்டிருப்பு<br>மட்டக்களப்பு மேற்கு<br>மட்டக்களப்பு | 1. செல்வி.கு.கோகுலவாணி<br>2. செல்வி.உ.டிலேகா<br>3. செல்வி.ச.நிலக்ஷலா | மட்/பட்/பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலயம்<br>மட்/மமே/அம்பிலாந்துறை கலைமகள் மகா வித்தியாலயம்<br>மட்/மட்/விவேகானந்தா மகளிர் கல்லூரி, கல்லடி | 01ம் இடம்<br>02ம் இடம்<br>03ம் இடம |

# தந்தை சா.ஜே.வே.செல்வநாயகம் அவர்களது சிலை திறப்பு விழாவினையொட்டி திறந்த மட்டத்தில் நடத்தப்பட்ட கட்டுரை போட்டிகளின் பெறுபேறு

| பெயர் | கட்டுரையாளர் விலாசம் (முதல் 3 நிலைகளுக்கு உரியவை) | நிலை |
|---|---|---|
| திருமதி.சா.சத்தியபாமா | கடற்கரை வீதி, செல்வாநகர் கிழக்கு ஆரையம்பதி, 02 | 01 |
| திருமதி.கலைவாணி சதாசிவம் | "ஸ்ரீத்தாபவனம்" முதலாம் பிரிவு, மண்டூர். | 02 |
| திரு.கிருஷ்ணப்பிள்ளை ரவீந்திரன் | பிள்ளையார் கோவில் வீதி, கிரான்குளம் - 07, மட்டக்களப்பு. | 03 |
| பாராட்டுக்குரியவர்கள் | | |
| செல்வி.நடராஜா தர்சினி | மகிழடித்தீவு தெற்கு, கொக்கட்டிச்சோலை. | 04 |
| திருமதி.சுதாகினி டெஸ்மன் றாகல் | இல.104, எல்லை வீதி, செங்கலடி. | 05 |





Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வா வழியில் நாம்

**செல்வன். த. எஜந்தன்**
மட்/மண்டூர் 13, விக்கினேஸ்வரா வித்தியாலயம்.



தரணி போற்றும் தந்தை செல்வா
தமிழர் போற்றும் பெருஞ் சொத்து
வையகம் எங்கும் புகழ் பரவ
வாழ்ந்து காட்டிய பெருஞ் செல்வம்
செல்வா வழியில் நாம் இன்று

சமயத்தின் ஒற்றுமைப் பாலமாய்
தாய் மண்ணின் மைந்தராய்
தாய் மொழியை நேசித்து
மறைந்தும் மறையாது
மதிக்கப்படும் மாணிக்கம்.

சாதி வர்க்க பிரதேச
வேறுபாட்டைக் களைந்தெறிந்து
பேசும் மொழி ஒன்றென்று
நீதி நேர்மை வழி நின்று
சத்தியம் – அஹிம்சை, அன்பு காட்டி
தன்னலமற்ற சேவை செய்து
தலைவர்கள் பலரை உருவாக்கிய
தந்தை செல்வா வழியில் நாம்.

தேடிய சொத்து சுகபோகம்
தேசத்திற்காக விட்டொழித்தார்.
அரசியலின் விடிவெள்ளியாய்
அரும்பணியாற்றி
தாய் மொழியில் பற்றையும்
தாய் மண்ணில் உயிரையும் வைத்த
தந்தை செல்வா வழியில் நாம்.
மலையகத் தமிழரின் உரிமைக்காய்
உணர்வுடன் போராடி
இன்று மறுக்கப்பட்டது நீதி
இந்தியத் தமிழனுக்கு
நாளை ஈழத் தமிழனுக்கு
என்று அன்றே சொல்லிய
தந்தை செல்வா வழியில் நாம்.

நாடு செழித்து மொழி வளர்ந்து
நன்மைகள் பல செய்து
மக்கள் நல்வாழ்வு வாழ
மனதில் இருத்திப் பணி செய்த
மகான் வழி நாமும் செல்வோம்.

தமிழ் பேசும் மக்களின் உரிமையை
தீர்க்க தரிசனமாய், தீவிரமாய்
பறைசாற்றிச் சென்ற
மாண்புறு மனிதர் தந்தை செல்வா
வழியில் நாமும் இன்று.

அஹிம்சை சத்தியாக்கிரகத்தில்
அஞ்சல் சட்டத்தை மீறி
தபால் அதிபராக இருந்து
தமிழரசு ஆரம்பித்த
தபால் சேவைக்கு
சான்றாகக் கிடைத்தது
முத்திரை.

தமிழரின் உரிமைக்காய்
குரல் கொடுத்து
உணர்வை ஊட்டிய
மண்ணின் மைந்தரை
மறவோம் நாமும்.

பாடசாலை மட்டக் கவிதைப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் சிரேஷ்ட பிரிவில் 1ம் இடம் பெற்ற கவிதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகின்றோம்

தந்தை செல்வா திருவுருவச்சிலை நிர்மாணிப்புக்கான பலரின் கூட்டுச் செயல்பாடே இதுவாகும்.
அந்தவகையில்.....

1. நிதி உதவிகளை மனமுவந்து வழங்கிய மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச இலங்கை தமிழரசு கட்சிக்கிளை நிர்வாகிகள், உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், நன்கொடை யினர்கள், பற்றாளர்கள், வர்த்கர்கள், பொதுமக்கள்.
2. சிலை அமைப்பு நிலத்தை ஒதுக்கித் தந்த மட்டுநகர் மாநகரசபை முதல்வர், மாநகரசபை ஆணையாளர், சம்மந்தப்பட்ட வீதி அபிவிருத்தி சபை அதிகாரிகள்,
3. தந்தை செல்வாவின் திருவுருவச்சிலையை தத்துருவமாக செதுக்கிய சிற்பக் கலைஞர்,
4. அட்டைப்படத்தினை வரைந்து உதவிய திரு.கே.ஜீ.ரூபன் புஸ்பகுமார்,
5. பாடசாலை மாணவர்கள், மற்றும் திறந்தவெளி கட்டுரை போட்டிகளை ஒழுங்குப்படுத்தி நடத்தும் குழுவினர், அதற்காக நடுவம்புரிந்த உள்ளவர்கள், போட்டி நிகழ்வுகளை நடத்த ஒத்துழைத்த அதிபர், ஆசிரியர்கள், போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றிய மாணவர்கள் திறந்த போட்டியாளர்கள்,
6. மலர் வெளியிடுவதற்கான ஆக்கங்களை தந்துதவிய எழுத்தாளர்கள், அரசியல் தலைவர்கள், கட்டுரையாளர்கள்,
7. மலரை மிகவும் நேர்த்தியாக அழகாக அச்சிட்டு தந்த வனசிங்கா அச்சகம் ஊழியர்கள்,
8. விழாவை நடத்த சகல வழிகளிலும் ஒத்துழைத்த ஏற்பாடு செய்த அனைத்து உள்ளங்கள்,

அனைவருக்கும் இதயம் கனிந்த நன்றிகள்.

**- ஏற்பாட்டுக்குழு -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத் தமிழினத்தின்
கொள்கைத் தீபம்
எங்கள் தந்தை.

இன அழிப்பினை
எதிர்த்துச் செயற்பட்ட
அறவாளர் அவர்.

தமிழ்பேசும் மக்களின்
தன்னிகரற்ற தலைவர்.

அவர் வழியிற் செல்வோம்
அறவழியில் வெல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org